VISIT…

***

Kalevala - A Finland Epic in Tamil (part Ib)

Compiled by: Elias Lonnrot
Translated into Tamil by R.Sivalingam
Edited with an introduction by Asko Parpola
(in tamil script, TSCII format, v.1.7)

கலேவலா - பின்லாந்தின் தேசிய காவியம் (பகுதி 1ஆ)

தொகுப்பு: எலியாஸ் லொண்ரொத்
தமிழ் மொழிபெயர்ப்பு: ஆர். சிவலிங்கம் (உதயணன்)
நூல் அமைப்பும் அறிமுகமும்:
டாக்டர் அஸ்கொ பார்பொலா (பேராசிரியர் - இந்திய இயல்)

***

Etext Preparation: Ms. Sarala Sandirasegarane, Kanpur, India
Proof-reading: Udhayanan (Sivalingam Ramalingam), Helsinki, Finland
PDF file preparation: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.
This pdf file is based on TSCInaimathi font embedded in the file. Hence this file can be viewed and printed on all computer platforms: Windows, Macintosh and Unix without the need to have the font installed in your computer.
© Project Madurai 2002
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website: <http://www.tamil.net/projectmadurai>
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

Kalevala - A Finland Epic (part Ib)

(in tamil script, TSCII format)

Compiled by: Elias Lonnrot
Translated into Tamil by R.Sivalingam
Edited with an introduction by Asko Parpola

கலேவலா - பின்லாந்தின் தேசிய காவியம் (பகுதி 1ஆ)

தொகுப்பு: எலியாஸ் லொண்ரொத்
தமிழ் மொழிபெயர்ப்பு: ஆர். சிவலிங்கம் (உதயணன்)
நூல் அமைப்பும் அறிமுகமும்:
டாக்டர் அஸ்கொ பார்பொலா (பேராசிரியர் - இந்திய இயல்)

பொருளடக்கம்

	பாடல்கள்	அடிகள்
1.	வைனாமொயினனின் பிறப்பு	344
2.	வைனாமொயினனின் விதைப்பு	378
3.	பாடற்போட்டி	580
4.	ஜனோவின் முடிவு	518
5.	கடற்கன்னி	241
6.	சகோதரனின் பழிவாங்கல்	234
7.	வைனாமொயினனும் லொவ்ஹியும்	368
8.	வைனாமொயினனின் காயம்	282
9.	இரும்பின் மூலக்கதை	586
10.	சம்போவைச் செய்தல்	510
11.	லெம்மின்கைனனின் விவாகம்	402
12.	சத்தியம் தவறுதல்	504
13.	பிசாசின் காட்டெருது	270
14.	லெம்மின்கைனனின் மரணம்	460
15.	லெம்மின்கைனனின் மீட்சி	650
16.	மரண உலகத்தில் வைனாமொயினன்	412
17.	வைனாமொயினனும் அந்தெரோ விபுனனும்	628
18.	வைனாமொயினனும் இல்மரினனும் வடநாடு செல்லுதல்	706

கலேவலா

பாடல் 1 - வைனா மொயினனின் பிறப்பு

அடிகள் 1-102: பாடல் ஆரம்பம்.

அடிகள் 103 - 176: வாயுவின் கன்னிமகள் கடலின் நீர்ப் பரப்பில் இறங்கிக் காற்றாலும் அலைகளாலும் அணைக்கப்பட்டு நீரன்னை ஆகிறாள்.

அடிகள் 177 - 212: ஒரு பறவை நீரன்னையின் முழங்காலில் கூடு கட்டி அதில் முட்டைகளை இடுகிறது.

அடிகள் 213 - 244: முட்டைகள் கூட்டிலிருந்து உருண்டோடி உடைந்து பல துண்டுகளாகின்றன; உடைந்த துண்டுகள் பூமி, வானம், சூரியன், சந்திரன், முகில்களாக உருவாகின்றன.

அடிகள் 245 - 280: கடலில் மேட்டு நிலங்கள், வளைகுடாக்கள், கரைகள், ஆழ்ந்த பகுதி, ஆழமற்ற பகுதி ஆகியவற்றை நீரன்னை படைக்கிறாள்.

அடிகள் 281 - 344: நீரன்னையின் வயிற்றில் பிறந்த வைனாமொயினன், வெகுகாலம் அலைகளால் அலைகழிக்கப்பட்டு, முடிவில் கரையேறுகிறான்.

* இவ்வடையாளமிட்ட சொற்களை சொற்றொகுதியில் பார்க்க
** இவ்வடையாளமிட்ட சொற்களை விளக்கக் குறிப்புகளில் பார்க்க

எனதுள்ளத்தில் உள்ளுணர்வு இப்போ விழிக்கிறது
எனதுள்ளே உயிர்பெற்று எழுகிறது எண்ணமெல்லாம்
பாடலையான் பக்குவமாய்ப் பாடுவதற்கு வந்திட்டேன்
பாடலையான் பண்ணுடனே பலபேர்க்கும் பகருகிறேன்
சுற்றத்தின் வரலாற்றைச் சுவையாகச் சொல்வதற்கு
உற்றதொரு பேரினத்தின் பழங்கதையை ஓதுதற்கு ;
வார்த்தைகளோ வாயினிலே வந்து நெகிழ்கிறது
நேர்த்திமிகு சொற்றொடர்கள் நேராய்ச் சொரிகிறது
நாவிலே நயமாக நன்றாகப் புரள்கிறது
பாவாகிப் பற்களிடைப் பதமாய் உருள்கிறது.

அன்பான சோதரனே, அரியஎன்றன் தோழர்களே !
என்னோடே வளர்துயர்ந்த எழில்மிகுந்த நண்பர்களே !
இப்போது வந்திடுங்கள் இணைந்தொன்றாய்ப் பாடிடுவோம்
நற்சுவையாய்ச் சொல்லுதற்கு நல்லுள்ளத்தைத் தாருங்கள்
ஒன்றாகக் கூடியுள்ளோம் ஒன்றாகச் சந்தித்தோம்
நன்றாய் இருவேறு இடமிருந்து நாம் வந்தோம் ;
அரிதாகக் கூடிடுவோம அரிதாகச் சந்திப்போம்
அரிதாக ஒருவரினை ஒருவர்நாம் சந்திப்போம்
வறிதாகிப் போய்வீணே மயங்குகின்ற எல்லைகளில்
தெரியும்வட பால்நிலத்தில் செழிப் பிழந்த பூமியின்கண்.

கரத்தோடு கரம்சேர்த்துக் கனிவாகக் கைகோர்த்து
விரலோடு விரல்சேர்த்து விரலையழ காய்க்கோர்த்து
நன்றாய்நாம் பாடிடுவோம் நயம்திகழப் பாடிடுவோம்

ஒன்றிச்சீர் கொண்டவற்றை உவகையோடு பாடிடுவோம்
பொன்னான நல்லிதயம் படைத்தவர்கள் கேட்கட்டும்
இனிமையுறு நன்நெஞ்சம் இயைந்தவர்கள் அறியட்டும்
எழுச்சி மிகுந்தோங்கும் இளைஞர்களின் மத்தியிலும்
வளர்ந்துவரும் தேசீய மக்களவர் மத்தியிலும்
யாமறிந்து கொண்டுள்ள நல்லியல்புச் சொற்களையும்
நமதுளத்தில் ஊறுகின்ற நற்சுவைசேர் கதைகளையும்

முதிய*வைனா மொயினனரைக் **கச்சணியி லேயிருந்து
*இல்மரினன் ஊதுலையின் இயைஆழத் தேயிருந்து
*தூரநெஞ்சி னன்வாளின் தொடுகூர் முனையிருந்து
*யொவுகாஹை னன்குறுக்கு **வில்லினது வழியிருந்து
**வடபால் நிலத்துற்ற வயல்களிலே தானிருந்து
*கலேவலாப் பகுதியதன் கனவெளிக ளுடிருந்து.
என்தந்தை முன்பொருகால் இனிதிசைத்த பாடலிது
முன்னர்ஒரு கோடரிக்குப் பிடிசமைத்த நேரமதில்
என்அன்னை கற்பித்த எழிற்பாடல் தானிதுவாம்
**தறித்தண்டில் நூலதனைத் தான்சுற்றும் வேளையிலே

சிறுகுழந்தை யாய்நிலத்தில் செம்மையுறத் தான்தவழ்ந்து
அவள்முழங்கா லவைமுன்னே அழகாகத் தான்நகர்ந்து
**பால்தாடி கொண்டுள்ள பராரிக் குழந்தையதாய்
வாயில் **புளித்திட்ட பாலொழுக வந்திடுங்கால்.
*சம்போவின் சொற்களுக்குத் தனிப்பஞ்ச மொன்றில்லை
*லொவ்ஹியின் மாயங்கட் கெல்லையே ஒன்றில்லை:
வார்த்தைகளில் சம்போவும் வாகாய் முதிர்ந்ததுண்டு
மாயத்தால் லொவ்ஹியும் மறைந்தன்றோ போய்விட்டாள்
பாடலினால் *விபுனனும் பட்டிறந்து போய்விட்டான்
ஆடலினால் அழிந்திட்டான் ஆடவனாம் *லெ(ம்)மின்கைனன்

இன்னும் பலகதைகள் இருக்கின்ற தோதுதற்கு
மன்னும் இவைதவிர மாயவுரை யானறிவேன்
பாதையிலே பொறுக்கியது பாதிக் கதைமேலும்
புதர்களிலே பறித்தெடுத்தேன் மீதிக் கதையின்னும்
பற்றைகளில் நான்கொஞ்சம் பதமாகப் பெற்றிட்டேன்
கண்டுகொண்டேன் முளைகளிலே கதைவேறு கொஞ்சந்தான்
புல்முனையின் பசுமையிலும் புணர்ந்ததுண்டு சிற்சிலவே
சிறுப்பாதைப் பரப்பினிலும் சேர்ந்ததுண்டு சிலகதைகள்
நான்மந்தை களைமேய்த்து நடக்கும் இடையனென
சிறுவனெனப் புல்வெளியில் சென்றிட்ட போதினிலும்

தேன்வடியும் மேட்டுநிலச் சீர்சால் மடியினிலும்
பொன்னான குன்றின் புகழ்சார் முடியினிலும்
கருநிறத்து *முரிக்கி யதனை நனிதொடர்ந்தும்
புள்ளியுள்ள நல்லாவாம் *கிம்மோ அருகினிலும்.
குளிர்வந்து தந்ததுண்டு குணமார் சிலகதைகள்
கார்வந்து சொன்னதுண்டு கவினார் சிலகவிகள்
காற்றுவந்து கூறியது கவியொன்று கேட்டேன்யான்
கடலலையும் கூடவந்து கவிகூறக் கேட்டேன்யான்
புதுப்பாடல் புள்ளினங்கள் புகன்றுதர வும்பெற்றேன்

மரநுனிகள் மாயச்சொல் வகைசொல்ல வும்கேட்டேன்.

இவற்றையெல்லாம் பந்தாக இணைத்தொன்று சேர்த்திட்டேன்
நயத்துடனே ஒழுங்கமைத்து நற்பொதியாய்க் கட்டிவைத்தேன்
**சறுக்குகின்ற வண்டியிலே தான்பந்தை நான்வைத்தேன்
வண்டியையும் வீட்டுக்கு மகிழ்வூரக் கொண்டுசென்றேன்
களஞ்சியத்தில் வண்டியினைக் கவனமாய் விட்டுவைத்தேன்
சரக்கையெல்லாம் கூடத்தின் சரியான மேற்றளத்தில்
சிறுசெப்புச் சிமிழொன்றில் சேர்த்தேயான் வைத்திருந்தேன்.
பலகாலம் என்கதைகள் படுகுளிரில் தான்தங்கி
பல்லாண்டு மறைவாகப் பாங்கா யிருந்ததுண்டு.

என்கதையைப் படுகுளிரில் இருந்தெடுத்து விடலாமா?
உறைகுளிரில் இருந்தந்த உயர்பாட்டை மீட்பதுவா?
சிறுகுமிழை வீட்டுக்குள் சீரமையக் கொண்டுவந்து
ஆசனத்தின் நுனியினிலே அச்சிமிழைத் தான்வைத்து
சீரான கூரைமரத் தம்பத்தின் கீழாக
சிறப்புடைய முகட்டின்கீழ் செம்மையுற வைப்பதுவா?
சொற்களின் பெட்டகத்தைத் துணிவாய்த் திறந்தெடுத்து
கதைகளின் பெட்டகத்தைக் கவனமுடன் தான்திறந்து
பந்தாக விருந்தவதைப் பக்குவமாய்த் தான்கழற்றி
நான்பொதியின் நன்முடிச்சை நன்றாய் அவிழ்ப்பதுவா?

சிறப்பான பாட்டொன்று செம்மையுறப் பாடுவன்யான்
சீரான இசைக்கூட்டிச் செம்மையுறப் பாடுவன்யான்
**தானியத்து ரொட்டிசிறி தாயெடுத்து உண்டதன்பின்
**பார்லிப்பா னம்சிறிது பார்த்துப் பருகிவிட்டு;
பார்லியின் பானமது பருகுதற்கு இல்லையெனின்
மதுபானம் கூட வைத்திருக்க வில்லையெனின்
வறட்சியுற்ற வாயதனால் வளமாகப் பாடுவன்யான்
வெறும்நீரை யானருந்தி விருப்புடனே பாடுவன்யான்
எமதிந்த அந்தியினை இன்றே மகிழவைக்க
பேரான இப்பகலைப் பெரிதாய்ச் சிறப்பிக்க

நாளை வரும்பொழுதை நலமாக ஆக்கிவைக்க
புதிதாம் புலரியொன்றைப் பொன்னாய்த் தொடங்கிவைக்க.
இவ்விதமே கூறுகதை இனிதாக யான்கேட்டேன்
எவ்வாறு ஆனதென்றும் எளிதாய்த் தெரிந்துகொண்டேன்:
எங்களிடம் தனியாக இரவெல்லாம் வந்திருந்து
தனியாகப் பகலெல்லாம் தானே புலர்வகையில்.
தனியாகத் தோன்றினான் தகைவைனா மொயினனவன்
தோன்றியது நிலையான துய்ய கவிச்செல்வம்
அவனைச் சுமந்த அழகான நங்கையென்னும்
அன்னையாம் *வாயுமகள் அவளிடத்தி லேயிருந்து.

வாயுக்குக் கன்னி மகளொருத்தி யன்றிருந்தாள்
வனப்பெல்லாம் இயற்கைமகள் வளமாகத் தான்பெற்றாள்
தூய்மையுடன் பலநாள் துணிவோடு வாழ்ந்திருந்தாள்
திடமான கன்னிகையாய்ச் சீராக வாழ்ந்திருந்தாள்
வாயுவின் முன்றிலிலே வளமாய் விரிபரப்பில்

விண்வெளியின் விசாலித்து விரிந்த விளைநிலத்தில்.
நாளாக நாளாக நன்றாய் மனம்சலித்து
"ஐயகோ, வாழ்விதுவா?" அலுத்திட்டாள் இவ்விதமாய்
தனியாக எப்போதும் தானாகச் சுற்றிவந்து
கன்னிகையாய் எப்போதும் காலத்தைப் போக்கிவந்தாள்

வானத்து வெளியெல்லாம் வந்தாள் பவனியதாய்
வெறுமைமிகு விண்வெளியின் வீதியெல்லாம் தான்தவழ்ந்தாள்.
ஆனதனால் மெதுவாய் அங்கிருந்து கீழிறங்கி
அழகுமிகு நீரலைமேல் அவள்படிந்து நின்றிட்டாள்
தெளிவாக நீண்டு தெரியும் சமுத்திரத்தின்
திடமாம் மடியதனில் சேரவந்து வீழ்ந்திருந்தாள்.
அப்போ பெருங்காற்று அதிபலமாய்த் தோன்றியது
கிழக்கிருந்து காலநிலை கெட்டுச் சினந்தெழுந்து
சமுத்திரத்தை யேநுரையாய்த் தாக்கிக் கலக்கிவைக்க
திரைதிரை யாய்மோதிச் சீரழித்த தேயாங்கு.

காற்றவளைக் கீழ்மேலாய்க் கலக்கி யசைத்தாட்ட
பாவை யவள்துரத்தப் பட்டாள் நுரைதிரையால்
நீல நிறத்தோடு நீண்ட சமுத்திரத்தில்
வெள்ளைத் திரைபரந்து மிகுந்த கடற்பரப்பில்;
காற்றுவந்து கர்ப்பத்தில் கலந்தந்தக் கன்னிகையும்
சமுத்திரத்தின் நல்வலியால் தகைசால் பொலிவானாள்.

கனமாம் கருவொன்று கவினுதரம் தங்கியதால்
கனத்த வயிற்றோடு கன்னியவள் வாழ்ந்திட்டாள்
ஒன்று இரண்டல்ல உறுமெழுநூ றாண்டுகளாய்
மனித வரலாற்றில் மன்னுபொன்பான் வாழ்காலம்

ஆனாலும் ஓர்பிறப்பும் அங்கே நடக்கவில்லை
ஏதும் படைப்பொன்றும் இன்னும் நிகழவில்லை.
நீரன்னை யாகவவள் நெடுநாளாய்ச் சுற்றிவந்தாள்
நீந்திக் கிழக்கினிலும் நீந்தினாள் மேற்கினிலும்
நீந்தி வடமேற்கே நீந்திட்டாள் தெற்கனைத்தும்
வாயுக் கரையெல்லாம் வந்திட்டாள் நீந்தியவள்
பிரசவத்து நோவலியால் பெருந்துயரம் தான்கண்டு
கருவதனால் நேர்ந்திட்ட கடுந்துயரம் தான்கொண்டாள்
ஆனாலும் ஓர்பிறப்பும் அங்கே நடக்கவில்லை
ஏதும் படைப்பொன்றும் இன்னும் நிகழவில்லை.

அழுதாள் அரற்றினாள் ஆற்றா தலமந்தாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாளே இவ்விதமாய்:
"நானோவிந் நாளினிலே நலமிழந்த பாவியையோ
ஏழைச் சிறுமியென எங்கும் அலைகின்றேன்!
ஏதோ முடிவொன்றுக் கிப்போது வந்திட்டேன்
என்றென்று மேயிந்த எழில்வானத் தின்கீழாய்
கடுங்காற்று வந்து கதிகீழ்மேல் நின்றசைக்க
நுரைதிரை யிங்கெழுந்து நொந்தவென்னை யேதுரத்த
அகன்று பரந்திட்ட அந்நீர்ப் பரப்பினிலே
விரிந்து பரந்திட்ட வியன்கடலின் வீழ்மடியில்.

பவனத்தி லிருந்திருந்தால் பலனா யிருந்திருக்கும்
காற்றினது கன்னிகையாய் கனநலமாய் வாழ்ந்திருப்பேன்
இப்போது போல எங்குமலைந் தோயாமல்
நீரன்னை யாக நிலைகெட்டுப் போகாமல்:
இங்கே யிருப்பதுவோ இகல்குளிராய்க் காண்கிறது
நீரில் நடுங்கி நிதம்நலிந்து வாடுகிறேன்
எடுத்தே யெறியும் இவ்வலைமேல் வாழ்வதனால்
நெடிதாகி நீண்ட நீர்ப்பரப்பில் நீந்துவதால்.

ஓ,மா **முதுமனிதா, உயர்மா தெய்வமதே!
வானம் முழுவதையும் வலிதாங்கும் தற்பரனே!

தேவைப் படும்தருணம் தெரிந்திங்கு வந்திடுவாய்
கூவி யழைக்கையிலே குறைபோக்க வந்திடுவாய்
துயருற்ற பெண்ணெனது துன்பத்தைத் தீர்த்திடுவாய்
வயிற்றில் வரும்நோவின் வாதையைப் போக்கிடுவாய்
விரைவில் வருவாய் வெளிப்படுவாய் இக்கணத்தில்
தேவைமிகு நேரமிது திண்ணமாய் வந்திடுவாய்".

*** *** ***

காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
கணநே ரம்சில கடந்தே முடிந்தது
**நேராய்ப் பறக்கும் **தாரா வந்தது
வறிதாய் அங்கும் இங்கும் பறந்தது
கூடொன் றமைக்கும் இடத்தைத் தேடி
குடிலொன்று கட்டி வாழ்ந்திடல் நாடி.

கிழக்கே பறந்தது மேற்கே பறந்தது
கிளர்வட மேற்கொடு தெற்கும் பறந்தது
ஆயினும் அதற்கிட மொன்றும் கிடைத்தில(து)
அங்குவீண் போக்கிட மொன்றுங் கிடைத்தில(து)
கூடொன்று கட்டிக் குடியிருந் தாறிட
வீடொன் றமைத்து விரும்பிவாழ்ந் தோய்திட.

அந்தரந் தன்னிலே அகலா நின்றது
சிந்தனை செய்தது சீருற நினைத்தது

"நான்என் கூட்டைக் காற்றில் கட்டவா?
நல்ல வசிப்பிடம் அலையில் அமைக்கவா?
காற்றுவந் தேயதைக் கட்டொடு வீழ்த்தும்
கதறும் திரையதைத் திண்ணம் அழிக்கும்."

அப்போ தங்குநீ ரன்னையாம் பெண்ணாள்
அழகுநீ ரன்னை காற்றதன் கன்னி
கடல்மேல் தன்முழங் காலதைத் தூக்கி
கடலலை மேல்தன் தோளை உயர்த்தி
பொன்வாத் துக்குப் புகலிடம் தந்தாள்
பொலிவாம் ஓரிடம் வாழ்ந்திடத் தந்தாள்.

வனப்புறு வாத்தது வண்ணவான் பறவை
வானத்தி லூர்ந்துமே லந்தரம் நின்று
நீரன்னை தந்த முழங்கால் கண்டு
நீல நிறத்துநீர்ப் பரப்பதன் மேலே
புல்வளர் ஓர்திடல் புதிதென் றெண்ணி
பொன்வசந் தப்பரப் பென்றெண் ணியது.

பறந்துவாத் தந்தரம் பறவா நின்று
பவிசுறு முழங்கா லதில்மெது விறங்கி
வீட்டின் தேவையால் கூடொன் றமைத்து
இதப்பத மாயிருந் திட்டது முட்டை

எழில் பொன் முட்டை இட்டது ஆறு
இரும்பா லானது ஒன்றுடன் ஏழு.

*** *** ***
முட்டைகளை அப்பறவை முனைந்து அடைக்காக்க
முழங்கால் சூடாகி வெப்பமாய் மாறிற்று;
முதல்நாள் மறுநாளும் முழுதுமடை காத்ததது
மூன்றா வதுநாளும் விரைந்துஅடை காத்ததுவே
அப்போது அங்கிருந்த அழகுநீ ரன்னையவள்
நீரன்னை யான நெடுங்காற் றதன்கன்னி
மேலெல்லாம் வெந்நெருப்பால் வேகுவது போலறிந்து
தோலெல்லாம் தீப்பற்றிச் சுடுவதுபோ லேயுணர்ந்தாள்:
முழங்கால் முழுவதிலும் முண்டதீப் பற்றிவந்து
முற்றாய் நரம்புகளு முருகுவதா யாங்குணர்ந்தாள்.

அப்போ தவசரமாய் அசைத்தாள் முழங்காலை
உடலுறுப்பு அத்தனையும் உலுப்பினாள் ஒன்றாக
முட்டைக ளெல்லாம் முழ்கினவே நீரோடி
ஆழி அலைகளிலே அமிழ்ந்தனவே போராடி;
முட்டை யெலாம் மோதுண்டு முற்றாய் நொருங்கிடவே
சிதறினவே யாங்கு சிறுசிறிய துண்டுகளாய்.

அச்சிறிய துண்டுகளோ அமிழவில்லைச் சேற்றினிலே
நீரிற்போய்த் துண்டுகளும் நேராய் அழியவில்லை;

துண்டுகள் நற்பொருட்க ளாய்மாறித் தோன்றினவே
தூய பொருட்களெனத் துகளெல்லாம் மாறினவே:
முட்டை யொன்றன் கீழ்ப்பாதி முழுதாக மாற்றமுற்று
பூமியன்னை யாய்க்கீழே பொலிந்து விளங்கிற்று
உடைந்தமுட்டை தன்னுடைய உயர்வான மேற்பாதி
சுவர்க்கமாய் மேலெழுந்து தோன்றி ஒளிர்ந்ததுவே,
மேற்பாதி யிலிருந்த மிகுமஞ்சள் ஒண்கருவோ
மங்கள சூரியனாய் வந்து திகழ்ந்ததுவே,
மேற்பாதி யிலிருந்த வெள்ளைக் கருவதுவும்
நிலவாக வானில் நீள்பவனி வந்ததுவே,

முட்டையிலே பன்னிறத்தும் முண்டிருந்த புள்ளியெலாம்

வான வெளியினிலே வந்தனவே விண்மீனாய்,
முட்டையிலே கார்நிறத்தில் முன்பிருந்த யாவையுமே
வானில் முகில்களென மாறித் திகழ்ந்தனவே.

*** *** ***

கரைந்தது நேரம் கடந்தது காலம்
வருடங்க ளோடி மறைந்தன விரைவாய்
புதிய சூரியன் பொலிவுடன் எழுந்தான்
புத்தெழில் நிலவும் பொன்வான் திகழ்ந்தது.
இன்னும் நீந்தினள் எழில்நீ ரன்னை
கன்னிநீ ரன்னை காற்றதன் புதல்வி

புகார்நிறைந் திருந்த பொலிதிரை களின்மேல்
நுரைத்தெழுந் திட்ட நுண்திரை மடியில்
அவளின் முன்னால் அகன்ற நீர்ப்பரப்பு
அவளின் பின்னே அகல்தெளிந் திடுவான்.

அங்ஙனம் சென்ற ஆண்டொன் பதிலே
பத்தாவ தான பருவக் கோடையில்
கடலிலே யிருந்து காண்தலை தூக்கினள்
நீரிலே யிருந்து நெற்றியை யுயர்த்தினள்
அடுத்துத் தொடங்கினள் படைத்தற் றொழிலை
பிராணி வகைகளைப் பெரிதும் படைத்தனள்

உயர்ந்த தெளிந்த ஒளிர்கடல் மேலே
விரிந்து பரந்த வியன்கடல் மடியில்.

தூக்கிக் கரங்களைச் சுற்றிலும் திருப்பி
மேட்டு நிலங்களை வெளிவரச் செய்தனள்
அடியில் கால்களை அழுத்தமா யூன்றி
மீனினம் வாழும் மிகுகுழி பறித்தனள்
நீரின் அடியிலே நிறைவுடன் நீந்தி
ஆழியின் அடியில் ஆழம் படைத்தனள்.

பின்னர்ப் கத்தைப் பெருங்கரை திருப்பி
கரைகளைக் கொஞ்சம் கவனமாய்ச் செய்தனள்

நிலத்தினை நோக்கி நீட்டினாள் கால்களை
**வஞ்சிர மீன்வலை வீச்சிடம் வந்தது
தலையைத் திருப்பித் தரையை நோக்கினள்
கடலின் கரையில் வளைகுடா வந்தது.

நீந்தினள் மீண்டும் நிலத்திலே யிருந்து
அகன்றநீர்ப் பரப்பில் அமைதியும் கொண்டனள்;
நீரின் நடுவே பாறைத் தீவுடன்
கடலின் மறைவிற் கற்குன் றமைத்தனள்
கடலிலே நகரும் கப்பல்கள் மோதி
கடற்றொழி லாளர் காண்தலை யழிக்க.

தீவெலாம் தோன்றிச் சீராய் முடிந்தன
பாறைத் தீவுகள் பரவையில் தோன்றின
தூண்கள் வானிடைத் தோன்றி நிமிர்ந்தன
நாடுகண் டங்கள் நன்கே யமைந்தன
பாறைகள் மீதெலாம் பல்கின **சித்திரம்
வெற்பெலாம் கோடுகள் பெற்று விளங்கின;
வைனா மொயினன் வந்து பிறந்திலன்
நிலைபே றுடைக்கவி நிலம்பிறந் திலனே.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
தாயின் வயிற்றுள் தவழ்ந்து திரிந்தான்

முப்பது கோடை முழுதாம் பருவமும்
குளிர்தரும் அத்தகைக் கூதிர் காலமும்
புகார்நிறைந் திருந்த பொலிதிரை களின்மேல்
நுரைத்தெழுந் திட்ட நுண்திரை மடியில்.

சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
எங்ஙனம் எவ்விதம் இங்கே வாழ்வது
இருண்ட இந்த இகல்மறை விடத்தில்
நெருக்கம் நிறைந்த நிதவசிப் பிடத்தில்
சந்திரன் தண்ணொளி கண்டதே யில்லை
சூரியன் பேரொளி வந்ததே யில்லை.

இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்வித முரைத்தான்:
"நிலவே விடுவி, கதிரே கரைசேர்,
**தாரகைக் குலமே சதாவழி காட்டு
மனிதனை மர்ம வாயில்க ளிருந்து
அந்நிய மான அகல் கதவிருந்து
கொடியஇச் சிறிய குடம்பையி லிருந்து
குறுகி ஒடுங்கிய குடிலினி லிருந்து.
பயணியை இந்தப் பாரிடைக் கொணர்வாய்
மனிதக் குழந்தையை வளர்வெளிக் கருள்வாய்

வானக நிலவின் வண்ணம் காண
சூரியன் ஒளியைச் சுகித்துயான் நயக்க
தாரகைக் குலத்தைத் தனிமையில் நோக்க
வானநட் சத்திர வகையினைக் கற்க."

விண்மதி அவனை விடுவியா நிலையில்
கதிரவன் அவனைக் கைதரா நிலையில்
நாட்கள் எல்லாம் நரகமா யமைய
வாழ்வே சுமையாய் மாறிப் போகும்;
நகர்த்தி கோட்டைக் கதவம் திறந்தான்
மெதுவாய் மோதிர விரலினை யெடுத்து

எலுப்பின் பூட்டைச் சிறிதிடை விலக்கி
இடதுகாற் பெருவிரல் இட்டான் வெளியே
நகத்தினை வாயிலின் நனிவெளி நகர்த்தினன்

கதவின் வெளிமுழங் கால்களை வைத்தனன்.
கடலினை நோக்கிக் காண்சிரம் முன்வர
அவனது கரங்கள் அலைகளில் திரும்ப
இங்ஙனம் மானிடன் இருங்கடல் தங்கினன்
மாபெரும் வீரன் வளர்திரை தங்கினன்.

ஐந்து ஆண்டுகள் அங்கே இருந்தனன்
ஐந்தா றாண்டுகள் அவ்வா றிருந்தனன்
ஏழாம் ஆண்டோ டெட்டும் முடிந்தது
கடைசியில் நின்றனன் கடற்பரப் பினிலே
பெயரிலா மேட்டில் பின்பவன் நின்றனன்
மரங்களே யில்லா மண்ணதில் நின்றனன்.
முழங்கால் தரையிடை முழுமையாய்ப் பதித்து
கரங்களை ஊன்றி மெதுவாய்த் திரும்பி
நிலவைப் பார்க்க நின்றான் எழுந்து
செங்கதி ரோனைச் சீராய் நயக்க
தாரகைக் குலத்தைத் தனிமையில் நோக்க
வானநட் சத்திர வகையினைக் கற்க.

வைனா மொயினனின் வருபிறப் பதுவே
தொன்னிலைப் **பாவலன் தோன்றிய கதையே
அவனைச் சுமந்த அழகிய நங்கை
வாயு மகளாம் தாயிட மிருந்து.

கலேவலா

பாடல் 2 - வைனாமொயினனின் விதைப்பு

அடிகள் 1 - 42: வைனாமொயினன் மரங்களற்ற தரைக்கு வந்து, விளைநில மைந்தன் சம்ஸா பெல்லர்வொயினனை விதைக்கச் சொல்லுகிறான்.

அடிகள் 43 - 110 : முதலில் சிந்தூர மரம் முளைக்கவில்லை. பின்னர் முளைத்த மரம் ஓங்கி வளர்ந்து நாட்டையும் சூரியனையும் சந்திரனையும் மறைக்கிறது.

அடிகள் 111 - 224 : ஒரு சிறிய மனிதன் கடலிலிருந்து உதயமாகிச் சிந்தூர மரத்தை வெட்டி வீழ்த்திச் சூரியனையும் சந்திரனையும் மீண்டும் பிரகாசிக்கச்
செய்கிறான்.

அடிகள் 225 - 256 : மரங்களில் பறவைகள் பாடுகின்றன; புல்லினம், பூஞ்செடிகள், சிறுபழச் செடிகள் வளர்கின்றன; பார்லி மட்டும் வளரவில்லை.

அடிகள் 257 - 264 : வைனாமொயினன் நீர்க் கரையின் மணலில் சில பார்லித் தானியங்களைப் பெறுகிறான்; பறவைகளுக்குப் புகலிடமாக ஒரு மிலாறு மரத்தை மட்டும் தவிர்த்துவிட்டுக் காட்டை வெட்டி அழிக்கிறான்.

அடிகள் 265 - 284 : புகலிடத்திற்கு ஒரு மரத்தை விட்டதற்காக நன்றியுள்ள ஒரு கழுகு நெருப்பை உண்டாக்கி வெட்டிய மரங்களை எரிக்கிறது.

அடிகள் 285 -378 : வைனாமொயினன் பார்லியை விதைத்து, அதன் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் பெருக்கத்துக்குமாகப் பிரார்த்திக்கிறான்.

எழுந்தான் பின்னர் வைனா மொயினன்
இரண்டுகால் களையும் இத்தரை வைத்தான்
செறிகடல் சூழ்ந்த தீவக நிலத்தில்
மரங்கள்இல் லாத மண்ணதன் மேலே.
பல்லாண் டீழி பயின்றாங் கிருந்தான்
எப்போதும் ஆங்கே இருந்துவாழ்ந் திட்டான்
மொழிகளே யற்று மௌனமா யிருந்தான்
மரங்கள்இல் லாத மண்ணதன் மீதே.

சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
நீண்டகா லங்கள் நெடிதுசிந் தித்தான்: 10

இந்த நிலத்தில் எவர்தான் விதைப்பது
பயன்தரு பயிரை பாங்காய் விளைப்பது?
விளைநில மைந்தன் *பெல்லர் வொயினன்
*சம்ஸா என்னும் தனிச்சிறு வாலிபன்
நிலத்தில் அவனே விதைத்திடல் வேண்டும்
பயனுறப் பயிரைப் பண்ணலும் வேண்டும்.

விதைத்தலை நிகழ்த்த வெளிக்கிட் டானவன்
நிலத்திலும் விதைத்தான் சேற்றிலும் விதைத்தான்

வளர்கான் வெளியின் மணலிலும் விதைத்தான்
தேய்ந்து தேறிய குன்றிலும் விதைத்தான்.

**தேவ தாருவைத் திகிரியில் வைத்தான்
உவந்தின் **னொன்றை உயர்நிலம் வைத்தான்
கம்பம் **புல்லினைக் கரம்பையில் நட்டான்
நாற்றுச் செடிகளைத் தாழ்நிலம் நட்டான்.

**மிலாறுவைத் தாழ்ந்த விளைநிலம் வைத்தான்
சொரிந்த மண்ணிலே **சிறுமரம் வைத்தான்
**ஒருசிறு பழச்செடி உயர்புது மண்ணிலும்
ஒருசிறு **மரத்தை ஒளிர்பசுந் தரையிலும்
**பேரியைப் புனிதப் பெருமண் தரையிலும்
**அலரியை மேட்டிலும் அவன்நட் டிட்டான்

**சூரைச் செடியைத் தொடுவெறு நிலத்திலும்
**சிந்துர மரத்தைத் திடலிலும் நட்டான்.

மரங்கள் யாவும் வளர்ந்துயர்ந் திட்டன
நாற்றுச் செடிகள் நன்றாய் ஓங்கின;
மலர்ந்த முடியுடன் **மரமொன் றெழுந்தது
தேவ தாருவும் செறிந்து விரிந்தது
சதுப்பு நிலத்தில் மிலாறு தழைத்தது
சொரிந்தமண் ணிடையே **சிறுமர வினமும்
புதுமண் புலத்தில் **சிறுபழச் செடியும்
தொல்வெறு நிலத்துச் சூரைச் செடியும்

சூரைச் செடிகளின் சுவைமிகு பழங்களும்
சிறுசெடிப் **பழங்களும் திகழ்ந்தன கனிந்து.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிகழ்ந்ததை நோக்க நேரிலே வந்தான்
சம்ஸா என்பான் தானிடு விதைகளை
பெல்லர் வொயினன் பெய்திடு விதைகளை:
மரங்களத் தனையும் வளர்ந்ததைக் கண்டான்
நாற்றுச் செடிகளின் நளினமும் கண்டான்;
சிந்துர மரத்தில் செழுந்தழை இல்லை
தேவநற் றருவில்வோர் தெரியவு மில்லை.

அதன்விதி அதுவென அப்பால் சென்றனன்
தானே முளைத்துத் தழைக்குமென் றெண்ணினன்
முன்று இரவுகள் முழுமையாய் முடிய
முன்று பகல்களும் முனைந்துகாத் திருந்தான்.
ஒருமுறை பார்க்கப் போயினன் பின்னர்
வாரமொன் றகல வந்துநோக் கினனால்:
சிந்துர மரத்திற் செழுந்தழை இல்லை
தேவநற் றருவில்வோர் தெரியவு மில்லை.

கண்டனன் பின்னர்நற் கன்னியர் நால்வர்
ஐவர்நீர் எழுந்தனர் அவர்மணப் பெண்போல்;

புல்லினை வெட்டியே பொற்புற வைத்தனர்
பனிபடர் புல்லினைப் பாங்குற அள்ளினர்
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள தீவதன் கரையில்;
வெட்டிய புல்லதை விரைந்தொன் றாக்கினர்
கட்டியே குவித்துக் கவினுற வைத்தனர்.

**நீர்விலங் கொன்றந் நீரில் எழுந்தது
நேராய் எழுந்தது நின்றது அலைமேல்;
காய்ந்தவப் புற்களைக் கனலிடை யிட்டது
கனலதும் ஓங்கிக் கடுகதி எழுந்தது

அனைத்தையும் சாம்பரா யாக்கிய தக்கினி
சாம்பர்கள் சேர்ந்தன தகர்துக ளாயின.

துகளெலாம் சேர்ந்தொரு தொடர்திட் டாகியே
தோய்ந்துலர் சாம்பராய் தொட்டுயர்ந் திருந்தது.
ஆங்கிருந் ததுவொரு அழகிய செழும்இலை
செழுமிலை யிருந்ததோர் சிந்துர விதையொடு
அவற்றிலே யிருந்தொரு அரும்முளை வந்தது
பசுந்தளிர் செழுப்பொடு பாங்காய் வளர்ந்தன
எழில்நிலத் தேயொரு இதச்சிறு **செடியென
இரட்டைக் கிளைகளாய்ப் பிரிந்து வளர்ந்தது.

கிளைகள் வளர்ந்து கிளர்ந்து விரிந்தன
இலைகள் செழித்து எங்கும் செறிந்தன:
உச்சி உயர்ந்து ஒளிர்விண் நின்றது
வானில் இலைகள் வளர்ந்து விரிந்தன
முகில்களை மோதி முட்டி நிறுத்தின
ஆவிநீ ராவதை அடியோ லகற்றின
ஆதவன் ஒளிர்வதை அவைதடுத் திட்டன
விரிநில வொளியையும் விண்மிசைத் தடுத்தன.

முதிய வைனா மொயினன் பின்னர்
சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்

சிந்துர மரத்தைச் சிதைப்பவர் உளரோ
அகல்பெரு மரத்தை அழிப்பவர் உளரோ?
மானிட வாழ்வு சோகமா கிறதே
மீனினம் நீந்தச் சிரமமா கிறதே
ஆதவன் ஒளியும் அருகிப் போனதால்
தண்ணில வொளியும் தடுக்கப் பட்டதால்.

ஆயினும் அங்கொரு ஆளும் இல்லையே
விறல்நெஞ் சுடைய வீரன் இல்லையே
சிந்துர மரத்தைச் சிதைத்து வீழ்த்திட
உயர்ந்து நூறான உச்சியை ஒடிக்க.

முதிய வைனா மொயினனப் போது

இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"அன்னையே, பெண்ணே, அரிதெனைச் சுமந்த
இயற்கையின் மகளே, எனை வளர்த்தவளே!
தண்புன லிருந்தொரு சக்தியை யனுப்பு
தண்புனல் அமைந்த சக்திகள் அனேகம்
சிந்துர மரமிதைச் சிதைத்து விழுத்திட
தீயஇம் மரத்தைச் சிதல்சித லாக்க
உதய சூரியன் ஒளியினி லிருந்து
வண்ண நிலவதன் வழியினி லிருந்து."

ஆழியி லிருந்தொரு ஆடவன் எழுந்தான்
அலையிலே யிருந்தொரு ஆண்மகன் எழுந்தான்;
அவனோ பென்னம் பெரியஆ ளல்லன்
ஆயினும் சின்னஞ் சிறியனு மல்லன்:
நீளமோ மனிதன் நேர்பெரு விரலாம்
உயரமோ பெண்ணின் ஒருகைச் சாணாம்.

செப்பினா லான தொப்பிதோ ளதிலே
செப்பினா லான செருப்புகள் காலில்
செப்பினால் செய்து திகழும் கையுறை
கையுறை மீதில் கவின்செப் போவியம்

இடுப்பினைச் சுற்றிச் பட்டிசெப் பினிலே
பட்டியின் பின்புறம் **பரசுசெப் பினிலே
பரசின் பிடியொரு பெருவிரல் நீளம்
பரசின் அலகோ பகர்நகத் தளவு.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்:
பார்க்கப் புகுந்தால் பாங்குறு மனிதனே
தோற்றம் நோக்கித் துணிதலும் மனிதனே
நீளமோ மனிதன் நேர்பெரு விரலாம்
உயரமோ எருதின் ஒண்குளம் பளவு.

பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்:
"எவ்வகை இனத்தில் இயைந்தமா னுடன்நீ
எளியமா னுடனே, எத்தகை மனிதன்?
உயரிலா உடலிலும் உயர்ந்துளாய் சற்றே
சவத்தினைக் காட்டிலும் சற்றே சிறந்துளாய்?"

செறிகடல் தோன்றிய சிறுமகன் சொன்னான்
அலைகளில் எழுந்த அவன்விடை பகர்ந்தான்:
"நவில்வகை யாவினும் நானொரு மனிதன்
சிறுமா னுடன்தான் செறிபுனற் சக்தி
சிந்துர மரத்தைச் சிதைக்கவே வந்தேன்
அதனைத் துண்டிட் டழிக்கவே வந்தேன்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:

"எண்ணவே இல்லைநான் உன்னைப் படைத்ததும்
உன்னைப் படைத்து உனையனுப் பியதும்
வலிய சிந்துர மரம்விழற் கல்ல
மாபெரும் மரத்தை மாய்ப்பதற் கல்ல."

அவ்வித மாக அவன்பகர் வேளை
மீண்டும் பார்வையை வீசிய பொழுது
மனிதனோ முற்றிலும் மாறிடக் கண்டான்
வீரனோ புதியனாய் விளங்கிடக் கண்டான்.
பாதங்கள் தரையிற் பதிந்து நின்றன
தலையோ நிமிர்ந்து முகிலைத் தொட்டது
தாடியோ முழுங்கால் தன்னிலும் தாழ்ந்தது
தலைமயிர் குதிவரை தழைத்துநீண் டிருந்தது
இருவிழிக் கிடையே இடைவெளி ஆறடி
காற்சட் டையதும் காற்புறம் ஆறடி
முழங்காலின் பக்கமும் முழுமையாய் ஒன்றரை
இடுப்பின் சுற்றள விரண்டா யிருந்தது.

கைவிரல் கோடரிக் காம்பினில் வைத்து
அலகினைத் தீட்டி ஆக்கினன் கூர்மை
ஆறு கற்களில் அதனைத் தீட்டினன்
ஏழாம் கல்லிலும் இன்னும் தீட்டினன்.

எழுந்தான் நகர்ந்தான் எதிர்ப்புறம் வந்தான்
இன்னும் சுலபமாய் முன்னே நடந்தான்
அவன்காற் சட்டை அகன்ற உடையொடு
விரிந்தகாற் சட்டை பரந்த உடையொடு;
முதலடி எடுத்து முன்னே வைத்தான்
மென்மைகொண் டமைந்த மிகுமணற் பரப்பில்,
இரண்டடி வைத்து இன்னுமுன் வந்து
**ஈரல் நிறத்தில் இயைந்தமண் ணடைந்தான்,
முன்றாம் அடியை முயன்றுமேல் வைத்து
சிந்தூ ரத்தின் செறிவே ரடைந்தான்.

கோடரி கொண்டே கொடுமரம் தாக்கி
ஓங்கி வெட்டினன் உயர்கூ ரலகால்
ஒருமுறை வெட்டி இருமுறை வெட்டினன்
மூன்றாம் முறையும் முயன்றான் விரைவாய்;
அனற்பொறி கோடரி அலகில் எழுந்தது
சிந்துர மரத்தில் தீப்பொறி தெறித்தது,
நொந்து சரிந்து வந்தது சிந்துரம்
அடற்பெரு மரமும் ஆட்டங் கண்டது.

முயன்றஅவ் வாறமை மூன்றாம் முறையில்
சிந்துர மரத்தைத் தீர்த்துக் கட்டினன்
பெருவலி மரமும் பெயர்ந்து வீழ்ந்தது
நூறாம் கிளைகளைத் துணிபடச் செய்தது.
கிழக்கே அடிமரத் துண்டைக் கிடத்தினன்
வடமேற் கினிலே மரமேற் பகுதி
வடக்கே இலைதழை வந்துவீழ்ந் ததுவால்

கொம்பர்கள் வடக்கில் குவிந்துவீழ்ந் தனவே.

அவனொரு கிளையினை அங்கையி லெடுத்து
எல்லையில் லாத இன்பம் பெற்றான்;
உச்சி மரத்தை ஒடித்தான் எளிதாய்
முடிவிலா மாய வித்தையைக் கண்டான்;
இலையுறும் கிளையை எடுத்தான் தனித்து
திடமாம் அன்பைத் தொட்டெடுத் திட்டான்.
எஞ்சிய சிதைவுகள் எங்கும் சிதறின
மிஞ்சிக் கிடந்த மிகுமரத் துண்டுகள்
உயர்ந்த தெளிந்த ஒளிர்கடல் மேலே
பரந்து விரிந்த படரலை களின்மேல்
காற்று வந்துதா லாட்டிச் சென்றது
கடலலை எழுந்து கடத்திச் சென்றது
திறந்த நீரிலே செல்லும் தோணிபோல்
அலைகடல் மீது அலையும் கப்பல்போல்.

வடநா டவற்றை வாயு சுமந்தது;
வடநிலச் **சிறுபெண் மங்கையாங் கொருத்தி
சிறுசிறு துணிகளைச் செம்மையாய்த் தோய்த்தாள்
உடைகளைக் கழுவி உலரவும் வைத்தாள்
நீரின் கரையில் நிலைத்தபா றையிலே
நீண்ட கரையில் நிலவும் முனையில்.

மிதந்ததுண் டுகளை மெல்லியள் கண்டாள்
கைப்பை ஒன்றிலே கவனமாய்ச் சேர்த்தாள்
பையினை யெடுத்துப் படர்ந்தில் லடைந்தாள்
முன்றிலில் வைத்தாள் முழுநீள் பிடிப்பை
மாயவித் தைக்கு வலுசரம் செயற்கு
படைக்கலம் மந்திரப் பணிக்காய்ச் செய்ய.

சிந்துர மரத்தைச் சிதைத்தபோ தினிலே
தீயஅத் தருவும் தீர்த்தழிந் ததுவால்
கதிரவன் மீண்டும் கதிர்களைத் தந்தான்
திங்களின் நீள்நிலா திரும்பிவந் திட்டது
மேகம் நீண்டு மேலே மிதந்தது
வானவில் விண்ணில் வளைந்து நின்றது
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள தீவதன் கரையில்.

முழுதாய்க் காடுகள் முளைத்துத் தழைத்தன
வனங்கள் செழித்து வளர்ந்திட லாயின
தருக்களில் இலைகள், தரையினிற் புற்கள்,
மரங்களிற் பாடி மகிழ்புட் குலங்கள்,
பாடும் பறவைகள் பரவசப் பட்டன
மரத்தின் உச்சியில் **மணிக்குயில் கூவின.
பூமியிற் சிறுபழச் செடிகள் பொலிந்தன
வயல்களில் பொன்னிறப் பூக்கள் மலர்ந்தன
பல்லினப் புற்களும் பாங்காய் முளைத்தன
வளர்ந்தன பற்பல வடிவங் களிலே;

ஆயினும் பார்லி அங்கெழ வில்லை
அரிதாம் அப்பயிர் அதுமுளைத் திலதே.

முதிய வைனா மொயினன் அதன்பின்
எங்கும் நடந்தே எண்ணிப் பார்த்தான்
நீலக் கடலின் நீள்கரை தன்னில்
மாபெருங் கடலின் மடிவின் எல்லையில்;
ஆறுதானிய அருமணி கண்டான்
ஏழு விதைகளை எடுத்தனன் ஆங்கே
ஆழியின் எல்லை யாம்பரப் பிடத்தே
மணல் நிறைந்திட்ட வண்கரை மீது
அவற்றைக் **கீரியின் அருந்தோல் வைத்தான்
கோடை அணிலின் குறுங்கா லடியில்.

விதைகளை நிலத்தில் விதைக்கச் சென்றான்
சென்றான் தானியச் செழும்விதை தூவ
*கலேவலாப் பகுதியின் கற்கிணற் றருகே
*ஒஸமோ வின்வயல் உளவிளை விடத்தே.

மரமிசை யொருபுள் வாய்திறந் திசைத்தது:
"ஒஸமோவின் பார்லி ஒன்றுமே முளையா
கலேவலாவின் **பயிறும் கவினுற வளரா
மண்ணைக் கிளறிப் பண்செய் யாவிடில்
அடர்வன மரங்களை அழித்தி டாவிடில்
அழித்த மரங்களை எரித்தி டாவிடில்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
கூரிய அலகுக் கோடரி செய்தான்
விரிபெரும் பகுதியை வெட்டியே அழித்தான்
மண்ணைக் கிளறிப் பண்செய் திட்டான்
வியன்மர மனைத்தையும் வெட்டி வீழ்த்தினன்
தனிமிலா றொன்றே தவிர்ந்து நின்றது
பறவை யினங்கள் பாங்குறத் தங்க
குயில்வந் திருந்து கூவுதற் காக.

விண்ணிலோர் கழுகு வீச்சா யெழுந்தது
விண்ணகம் முழுவதும் மேவிப் பறந்தது
அதனைப் பார்க்க அவ்விடம் வந்தது:
"இம்மரம் மட்டுமேன் இங்குநிற் கிறது?
மிலாறு மரத்தையேன் வீழ்த்திட வில்லை?
எழிலுறு மரமிதை ஏன்வெட் டிடவி(ல்)லை?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"இம்மரம் மட்டுமிங் கிருப்பதன் காரணம்:
பறவைகள் வந்து பாங்காய்த் தங்க
வானக் கழுகு வந்துநன் கமர."

விண்ணகப் பறவை விறற்கழு குரைத்தது:
"இங்குநீ நல்லதோர் இருந்தொழில் செய்தனை:
மிலாறு மரத்தினை வெட்டா திட்டனை

உன்னதத் தருவை உயர்ந்திட விட்டனை
பறவைகள் வந்து பாங்குறத் தங்க
நானே வந்து நன்றா யமர."

விண்ணகப் பறவைதீ விரைந்துமுட் டிற்று
எரியினை யோங்கி எழுந்திட வைத்தது
வடக்கின் காற்று வன்கா டழித்தது
வடகீழ்க் காற்றும் மரங்களை யுண்டது
எல்லா மரங்களும் எரிந்து முடிந்தன
சாம்பலாய் மாறித் தகர்துக ளாயின.

அப்போ முதிய வைனா மொயினன்
ஆறு விதைகளை அள்ளினான் ஒன்றாய்
ஏழு விதைகளை எடுத்தான் கையில்
கீரித் தோலதன் கீழே யிருந்து
கோடை அணிலின் காலிடை யிருந்து
கோடைப் **பிராணியின் கொழுங்கா லிருந்து.

பிற்பா டவன்நிலம் வித்திடப் போனான்
தானிய மணிகளைத் தூவிச் சிதறி
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"விதைக்கப் போகிறேன் நான்இவ் விதைகளை
படைப்பின் பெரியோன் பணைவிர லிருந்து
சகலதும் வல்லோன் தன்கரத் திருந்து
இந்தப் புவிமிசை இவைமுளைத் துயர
வளர்ந்து செழித்து வளமுடன் பல்க.

புவியின் கீழெழில் பொலிமுது மகளே!
மண்ணின் மங்கை, மாநிலத் தலைவி!
முளையை வெளியே முளைத்துய ரச்செய்
செழித்து வரச்செய் திகழ்மண் துணையால்;
நிலத்தின் சக்தி நிதம்பொய்க் காது
இந்தப் பூமி இருக்கும் வரைக்கும்,
தந்தவன் அன்பு தரித்திருப் பதனால்
இயற்கையின் மகளின் இருந்துணை யதனால்.

மண்ணே, எழுவாய் வளர்துயி லிருந்து!
படைப்போன் புற்களே, படுக்கையி லிருந்து!
தண்டுகள் எழட்டும் தரையினைக் கிழித்து!
காம்புகள் கிளர்ந்து கடுகநின் றிடடட்டும்!
கதிர்மணி யாயிரம் கவினொடு வரட்டும்!
நூறுநூ றாகக் கிளைபடர்ந் திடட்டும்!
எனது உழவினில், எனது விதைப்பினில்,
எனது உழைப்பிற் கியையூ தியமாய்!

ஓ, மனு முதல்வ, உயர்மாதெய்வமே!
விண்ணகம் வாழும் மேல்வகைத் தந்தையே!
முகிற்குலம் புரக்கும் முதுகா வலனே!
நீராவி அனைத்தையும் நிதமாள் பவனே!
முகில்கள் யாவையும் குவிவுற வணைத்து

சந்திக்க வைப்பாய் தவழ்வான் வெளியில்,
இயக்குவாய் கிழக்கில் இருந்தொரு முகிலை
வடமேற் கொன்று வந்துதிக் கட்டும்
மேற்கி லிருந்து மிகுதியை அனுப்பு
அனுப்புதெற் கிருந்தும் அதிவிரை வாக
தொல்வா னிருந்து தூறல்கள் வரட்டும்
எழிலியி லிருந்துதேன் துளிகள் விழட்டும்
முதுபுவி முளைக்கும் முளைகளின் மீது
உயிர்பெற் றுயரும் பயிர்களின் மீது."

மானிட முதல்வன், மாபெருந் தேவன்
நிலைபெறும் சுவர்க் கமாள் நேசத் தந்தை
மேகம் மேலுறும் வியன்சபை யமர்பவர்
உயர்ந்து தெளிந்த உயர்மன் றுறைபவர்;
ஒருமுகில் கிழக்கிருந் துடன் வருவித்தார்
வடமேற் கிருந்தொரு மழைமுகில் படைத்தார்
இன்னொன்றை மேற்கே இருந்தும் அனுப்பினார்
அனைத்தையும் தெற்கிருந் தவர்விரை வித்தார்
அனைத்தையும் ஒன்றுசேர்த் தழுத்தித் தள்ளினார்
ஒன்றுடன் ஒன்றை உராயப் பிணித்தார்.
வானத் திருந்து மாரியைப் பொழிந்தார்
தேன்துளி தெளித்தார் திரள்முகில் அதனால்
முளைத்து வந்த முளைகளின் மேலே
உயிர்பெற் றுயர்ந்த பயிர்களின் மேலே.
கூர்முனை ஒன்று குதித்துமே லெழுந்தது
இளந்தூர் ஒன்று இதமாய் வளர்ந்தது
பசுமை வயலின் படர்நிலத் திருந்து
வைனா மொயினனின் கைவினைத் திறத்தால்.

இரண்டு நாட்கள் இனிது முடிந்தன
இரண்டாம் முன்றாம் இரவுகள் போயின
முழுமையாய் வாரம் ஒன்று முடிந்தபின்
நிலைபெறும் முதிய வைனா மொயினன்
வளர்ச்சியைப் பார்க்க வலமாய் வந்தான்
தானே உழுது தானே விதைத்த
ஊக்கத் துறுபலன் நோக்குதற் காக;
விரும்பிய வாறே விளைந்தது பார்லி
ஆறு வழிகளில் அகல்கதிர் செறிந்து
தண்டுகள் முத்திசை தாமே பிரிந்து.
முதிய வைனா மொயினனு மாங்கே
செலுத்தினான் பார்வை திரும்பினான் சுற்றி
குலவும் வசந்தக் கோகிலம் வந்தது
வளர்ந்த மிலாறினை வந்ததும் கண்டது:
"இம்மரம் மாத்திரம் ஏனிங்கு நின்றது?
மிலாறு மட்டுமேன் வீழாது நின்றது?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"இம்மரம் மட்டுமேன் இங்குநிற் கிறதெனில்
மிலாறு மட்டுமேன் வீழ்ந்திட விலையெனில்
உனக்காய் நீவந் துறைவதற் காக;

குயிலே குயிலே கூவுவாய் இப்போ
இனிய நெஞ்சால் இன்பமாய்ப் பாடு.
வெண்பொன் நெஞ்சால் மிகுபாட் டிசைப்பாய்
**ஈயநன் நெஞ்சால் எழிற்பா விசைப்பாய்
காலையில் பாடு, மாலையில் பாடு,
நண்பகல் ஒருமுறை நலமிகப் பாடு
என்விளை நிலமிரும் மகிழ்ச்சியில் திளைக்க
எனதுகா னகமெல்லாம் எழிலொடே வளர
தடமெல்லாம் தாழ்விலாச் செழிப்பினில் கொழிக்க
எனதுமா நிலமெல்லாம் எழில்வளம் பொலிய."

கலேவலா

பாடல் 3 - பாடற்போட்டி

அடிகள் 1 - 20: வைனாமொயினன் அறிவில் விருத்தி பெற்றுப் பிரபலமாகிறான்.

அடிகள் 21 -330: அவனுடன் போட்டிக்கு வந்த யொவுகாஹைனன், அவனை அறிவில் வெல்ல முடியாமல் போருக்கு அழைக்கிறான்.சினங் கொண்ட வைனாமொயினன் மந்திரப் பாடல்களைப் பாடி அவனைச் சேற்றில் அமிழ வைக்கிறான்.

அடிகள் 331 - 476: மிகவும் துயருற்ற யொவுகாஹைனன், தனது சகோதரி ஐனோவை வைனாமொயினனுக்கு விவாகம்செய்து தருவதாக வாக்களிக்கிறான். அதை ஏற்றுக்கொண்டு வைனாமொயினன் அவனை விடுவிக்கிறான்.

அடிகள் 477 - 524: மன வருத்தத்துடன் வீட்டுக்குச் சென்ற யொவுகாஹைனன், தனக்கு ஏற்பட்ட துரதிர்ஷடங்களைப் பற்றித் தாயாருக்குக் கூறுகிறான்.

அடிகள் 525 - 580: வைனாமொயினன் தனது மருமகனாக வரப் போவதை அறிந்து தாயார் மகிழ்ச்சியடைகிறாள். ஆனால் மகள்ஐனோ கவலைப்பட்டு அழுகிறாள்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
வாழ்நாள் முழுதும் வாழ்ந்தே வந்தான்
*வைனோ நிலத்து வனவெளி களிலே
கலேவலா எனும்புதர்க் கவின்சம வெளியில்.
தன்கதை பலப்பல தாழ்விலா திசைத்தான்
மந்திரப் பாடல்கள் மாண்புறப் பயின்றான்.
நாளும் பொழுதும் பாடியே வந்தான்
இரவோ டிரவாய் இசைத்தே வந்தான்
நீண்ட தொன்மையின் நினைவுக் கதைகளை
தொடக்க காலத் தூயநற் கதைகளை
எல்லாச் சிறாரும் இவைகற் றிலராம்
வீரர்கள் மாத்திரம் விளங்கிக் கொண்டனர்
தீமை நிறைந்து தெரியுமிந் நாட்களில்
வாழ்வே முடிவுறும் வறுங்கடை நாட்களில்.

பாடற் செய்திகள் பரந்து கேட்டன
வெளியே செய்திகள் விரைந்து கேட்டன
வைனா மொயினனின் வனப்புறு பாடல்
நாயகன் தந்த ஞானச் செல்வம்
செய்திகள் சென்று தெற்கிலே பரவி
வடநிலம் புகுந்தும் விளக்கம் தந்தன.

இருந்தா னிளைஞன் யொவுகா ஹைனன்
லாப்பு லாந்தின் இளைத்ததோர் பையன்
ஒருமுறை கிராமம் ஒன்றிடைச் சென்றான்
அற்புதப் பாடலை அங்கே கேட்டான்
பாடல்கள் பாடும் பாங்கினைக் கேட்டான்
எழில்மிகும் பாடல்கள் இசைப்பதைக் கேட்டான்

வைனோ என்னும் வளமுறு நாட்டில்
கலேவலா எனும்புதர்க் கவின்சம வெளியில்
அவைஅவன் அறிந்த அரும்பா டலிலும்
தந்தையின் பாட்டிலும் சாலச் சிறந்தவை.

அதனால் அகத்தே அல்லல் எழுந்து
நெஞ்சில் பொறாமை நிறைந்து வழிந்தது
வைனா மொயினன் எனும்வான் பாடகன்
தன்னிலும் சிறந்த தகையோன் என்பதால்;
அன்னையை நோக்கி அவன் புறப்பட்டான்
ஈன்ற குரவரை எதிர்கொள வந்தான்
புறப்படும் போதே புகன்றான் ஒருமொழி
மீண்டும் வருவது வெகுநிசம் என்றே
*வைனொலா நாட்டின் வதிவிடங் களிலே
எதிர்த்துவை னோவை எழிற்பாட் டிசைக்க.

தந்தை அவனைத் தடுத்துச் சொன்னார்
தந்தையும் தடுத்தார் தாயும் தடுத்தாள்
அவன்வை னோநிலம் அடைவது பற்றி
வைனோவை எதிர்த்து வாதிடல் பற்றி;
"எதிர்ப்புப் **பாடல்கள் எழுந்தாங் கேமிகும்
பாடல்கள் தோன்றிப் படுவாய் மயக்கில்
வாயும் தலையும் வளர்பனிப் புதையும்
இரண்டுகை முட்டியும் இதனால் மரக்கும்
கைகளை அசைத்தல் கடினம தாகும்
கால்களை நகர்த்தலும் கைகூ டாது."

இளைஞன் யொவுகா ஹைனன் சொன்னான்:
"எந்தையின் அறிவு ஏற்றமிக் குயர்ந்தது
தாயின் அறிவுமத் தகைசால் சிறந்தது
எனதறி வதைவிட இயல்பாற் சிறந்தது;
போட்டிநான் விரும்பிப் போட்டேன் என்றால்
மனிதர்கள் மத்தியில் வந்தெதிர்த் தேனெனில்
போட்டிப் பாணன்மேற் பொங்கிநான் பாடுவேன்
சொல்பவன் மீது சொற்களை வீசுவேன்
தேர்ந்த பாடகன் செருக்கறப் பாடுவேன்
தோற்ற பாடகனாக் குவேன் அவனை
பாதம் கல்லின் படுவணிப் புதையும்
மரத்தின் ஆடைகள் அரைத்தல மிருக்கும்
உள்ளம் பெரிய கல்லாய்க் கனக்கும்
தோள்களின் மீது தோன்றும் பாறைகள்
கல்லின் உறைகள் கைகளை முடும்
கடுங்கல் தொப்பி கொடுந்தலை யிருக்கும்."

புறப்பட் டேகினன் புகல்மொழி கேளான்,
வீரிய மழிந்த விலங்கினை எடுத்தான்
விலங்கதன் வாயினில் வெங்கனல் வந்தது
கால்களி லிருந்து கனற்பொறி யெழுந்தது
ஆங்கார விலங்கில் அணிகல மேற்றினன்
வன்னப் பொன்னிலாம் வண்டியின் முன்னே;

தானே வண்டியில் தருக்கோ டேறினன்
ஆசனத் தேறி அமர்ந்து கொண்டனன்
தாவும் பரிமேற் சாட்டை வீசினன்
மணிமனைச் சவுக்கால் மற்றதை அடித்தான்
புரவியும் பயணம் புறப்பட் டதுவே
பாய்பரி விரைந்து பறந்துசென் றதுவே.
தொடங்கிய பயணம் தொடர்ந்து நடந்தது
ஒருநாள் சென்றான் இருநாள் சென்றான்
முன்றாம் நாளும் முழுதும் விரைந்தான்
முன்றாம் நாளின் முடிவிலே பயணம்
வந்து சேர்ந்தான் வைனோ நாட்டில்
கலேவலா என்னும் கடும்புதர்ச் சமவெளி.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
பாதை வழியே படர்ந்துகொண் டிருந்தான்
அமைதியாய்த் தன்வழி அவன்வர லானான்
வைனோ என்னும் வளமுறு நாட்டில்
கலேவலா என்னும் கடும்புதர்ச் சமவெளி.

வந்தான் இளைஞன் யொவுகா ஹைனன்
நேருக்கு நேராய் நெடுவழி வந்தான்
ஏர்க்கால் ஏர்க்காலை இடித்துமுட் டியது
வளர்பரிக் கழுத்து வட்டப் பட்டியும்
இழுவைப் பட்டியும் பட்டியில் மோதின
இழுவை வளையம் வளையத் திடித்தது.

இங்ஙனம் ஆங்கே இரண்டும் நின்றன
நிலைத்து நின்றனர் நினைத்துப் பார்த்தனர்
வியர்வை ஏர்க்கால் மீமிசை வழிந்தது
ஏர்க்கால் களிலே எரிப்பொறி பறந்தது.
முதிய வைனா மொயினன் கேட்டான்:
"எந்த இனத்தை இயைந்தவன் நீதான்?
முட்டாள் தனமாய் முன்னே வந்தாய்
இவ்வழி விவேகம் இன்றியே வந்தாய்
வளைமரக் கண்ட **வளையம் முறித்து
இளமரத் தமைந்த ஏர்க்கால் உடைத்து
எனது வண்டியை இடித்து நொருக்கி
நான்படர் வண்டியை நாடிச் சிதைத்தது?"

அப்போ திளைய யொவுகா ஹைனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நான்தான் இளைஞன் யொவுகா ஹைனன்
எதுஉன் சொந்த இனம்அதை இயம்பாய்
எந்த இனத்தை இயைந்தவன் நீதான்
இழிந்தவன், இழிந்த பாங்கினில் இயைந்தோன்?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
தனது பெயரைத் தானே புகன்று
தொடர்ந்து மேலும் சொல்லுரை பகர்ந்தான்:

"இளைஞன் யொவுகா ஹைனன் நீயெனில்,
விலகிநில் வழியை விட்டுச் சற்றே,
என்னிலும் பார்க்க இளையவன் வயதில்".

அப்போ திளைய யொவுகா ஹைனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இளமை ஒருபொருட் டில்லைமா னுடரில்
இளமையும் முதுமையும் ஏதெனல் இல்லை
அறிவிற் சிறந்தோர் ஆரிங் கறியலாம்
ஆற்றலும் திறனும் ஆர்க்குள தறியலாம்
நிற்கலாம் பாதையில் நிகரில் அறிவினன்
மற்றவன் விலகி வழியினை விடலாம்;
முதிய வைனா மொயினன் நீயெனில்
நிலைபெறும் பாடகன் நீயே யென்றால்
பாடல் நாமே பாடத் தொடங்குவோம்
படித்த சொற்களைப் பகரத் தொடங்குவோம்
ஒருவரை ஒருவர் சோதனை செய்து
ஒருவரை ஒருவர் தோற்கச் செய்வோம்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"என்னைப் பற்றியான் எதுசொல வப்பா?
மாயம் தெரிந்ததோர் வளர்பா டகனாய்
என்றும் வாழ்ந்தேன் எனதுவாழ் நாளில்
இவ்விளை நிலத்தில் இந்நிலப் பரப்பில்
இல்லத்து வயலின் எல்லைப் புறத்தில்
வீட்டுக் குயிலினைக் கேட்டுக் கொண்டே;
ஆயினும் அவைகள் அங்ஙனம் இருக்க,
செப்புவாய் எனக்குச் செவிகள்தாம் கேட்க
உனக்கு தெரிந்தவை எனைத்து என்பதை
மற்றையோர் தமைவிடக் கற்றுக் கொண்டதை?"

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன்:
"சிலசங் கதிகள் தெரியும் எனக்கு
தெரியும் அவைகள் தெளிவாய் எனக்கு
அவற்றின் விளக்கமும் அறிவேன் நன்றாய்;
புகைத்துளை ஒன்று முகட்டில் இருந்தது
அடுப்பின் அருகே அனலும் இருந்தது.
நன்றாய் ஒருகடல் நாயும் வாழ்ந்தது
அங்கே சுற்றித் திரிந்ததப் புனல்நாய்
மருங்கே யிருந்த வஞ்சிர மீனையும்
வெண்ணிற மீனையும் விருப்போ டுண்டது.

வெண்ணிற மீனின் விரிவயல் மென்மை
வஞ்சிர மீனின் வளர்ப்பரப் பகன்றது
**கோலாச்சி மீன்பனிக் கொழும்புகார் மீதும்
சேற்றுமீன் குளிரிலும் சிந்தின முட்டை.
கூனிய கழுத்துறும் **மீனினம் ஒன்று
ஆழத்தில் இலையுதிர் காலத்து நீந்தும்
கோடையில் உலர்ந்தநன் மேடையில் சினைக்கும்

ஓரத்துக் கரையெலாம் உலாவியே திரியும்.

இதுவும் போதா தின்னமு மென்றால்
நுட்பச் செய்திவே றுளநன் கறிவேன்
இன்னொரு சங்கதி எனக்குத் தெரியும்:
**மானிடம் கொண்டே வடக்கில் உழுதனர்
பெண்பரி தெற்குப் பெரும்பகு தியிலும்
லாப்பில் **காட்டெரு தும்பயன் பட்டன;
*பிஸாமலை மரங்களைப் பெரிதும் அறிவேன்
அறிவேன் *அசுர மலைத்தேவ தாருவை
பிஸாமலை மரங்கள் பெரிதுயர்ந் துறுபவை
வளர்தோங் கசுர மலைத்தேவ தாருவாம்.
மூன்றுநீர் வீழ்ச்சிகள் முழுவலி யுடைத்தாங் (கு)
ஊன்று மூவேரிகள் உயர்சிறப் புடனுள
மூன்று உயர்ந்த முதுமலை தாமும்
வானக் கூரை வளைவின் கீழே:
*ஹமேஎனு மிடத்தில் *ஹல்லா நீர்ச்சுழி
*கரேலி யாவில் *காத்ரா வீழ்ச்சி
*வுவோக்ஸியை யாரும் வென்றது மில்லை
*இமாத்திரா யாரும் கடந்தது மில்லை."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"பிள்ளையின் அறிவு, பெண்ணின் புத்தி,
தாடி யுளோர்க்குத் தகுந்ததே யில்லை,
பொருத்தமே யில்லைப் புணர்மனை யுளார்க்கு
ஆழ்ந்த முலத்தின் அர்த்தம் சொல்வாய்,
நித்தியப் பொருட்களின் தத்துவம் சொல்வாய்!"

பின்னர் இளைய யொவுகா ஹைனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஒருசிறு **குருவியின் பிறப்புத் தெரியும்
அதுஒரு பறவை இனமெனல் புரிவேன்
**விரியன் பாம்பு விடப்பாம் புணர்வேன்
**நன்னீர் மீனை மீனென் றுணர்வேன்
இரும்பு கடினம் என்பதை யறிவேன்
கருமைச் சேறு கடும்உவர்ப் புணர்வேன்
கொதிக்கும் நீரோ கொடுந்துய ரிழைக்கும்
நெருப்பின் சூடு பெருங்கே டமைக்கும்.

புனல்தான் தொன்னாள் பூச்சு மருந்து
நீர்ச்சுழி நுரையே நேர்ப் பரிகாரம்
படைத்தவன் தான்பெரும் மந்திர வாதி
இறைவன் தான்பழம் மருத்துவ னாவான்.

நீரின் பிறப்பு நீண்மலை முடியில்
தீயின் பிறப்புத் திகழ்சொர்க் கத்தே
இரும்பின் முலம் துருவின் துகள்கள்
தாமிரம் கிடைப்பது மாமலை முடிவில்.

ஈரமேல் நிலமே வீறுகொள் பழம்பதி

அலரி மரமே முதல்வளர் தருவாம்
தேவதா ரடியே திகழ்முத லில்லம்
கல்லால் ஆனதே கலயமா தியிலே."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இன்னமும் நினைவில் இருப்பன வுளவோ
குதர்க்கம் யாவும் கூறி முடிந்ததோ?"

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன்:
"இன்னமும் நினைவில் இருப்பன கொஞ்சம்
அந்நே ரத்தை அகத்திடை மீட்கிறேன்
ஆழியை நான்உழும் அப்போ தினிலே
ஆழியில் ஆழம் அமைந்தஅந் நேரம்
மீனின் வளைகள் மிகத்தோண் டுகையில்
ஆழத்தின் ஆழம் அகழ்ந்தவே ளையிலே
ஏரிகள் யாவும் இயற்றிடும் நேரம்
பருவதம் யாவையும் பாங்குறப் பிரித்து
குன்றுகள் யாவையும் குவித்தவே ளையிலே.

வேறென்ன நானே ஆறாம் மனிதன்,
ஏழாம் விறல்சேர் ஏந்தலும் நானே
இந்த வையகம் தோன்றிய பொழுது
பைங்கால் பிறந்து பரவிய பொழுது
நீள்வான் இடைத்தூண் நிறுவிய பொழுது
சுவர்க்க வளைவுகள் தோன்றிய வேளை
நன்னிலா வானில் நகர்ந்தநே ரத்தே
செங்கதிர்க் குதவிகள் செய்தநே ரத்தே
தாரகைக் குலத்தைச் சமைத்தஅவ் வேளை
நீலவான் மீன்கள் நிறைத்தவந் நேரம்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"உண்மையில் நீதான் உரைத்தவை பொய்யே
அந்நே ரம்நீ அவனியில் இல்லை
ஆழப் பெருங்கடல் அன்றுழு கையிலே
கடலிற் குழிகள் குடைந்தவே ளையிலே
மீனின் வளைகள் மிகத்தோண் டுகையில்
ஆழத்தின் ஆழம் அகழ்ந்தபோ தினிலே
ஏரிகள் அனைத்தும் இயைந்தபோ தினிலே
பருவதம் யாவையும் பாங்குறப் பிரித்து
குன்றுகள் யாவையும் குவித்தவே ளையிலே.

உன்னைக் கண்டவர் ஒருவரு மில்லை
கண்டது மில்லைக் கேட்டது மில்லை
இந்த வையகம் தோன்றிய பொழுது
பைங்கால் பிறந்து பரவிய பொழுது
நீள்வான் இடைத்தூண் நிறுவிய பொழுது
சுவர்க்க வளைவுகள் தோன்றிய வேளை.
நன்னிலா வானில் நகர்ந்தநே ரத்தே
செங்கதிர்க் குதவிகள் செய்தநே ரத்தே

தாரகைக் குலத்தைச் சமைத்தஅவ் வேளை
நீலவான் மீன்கள் நிறைத்தவந் நேரம்."

அப்பொழு திளைய யொவுகள் ஹைனன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"கூர்மைஎன் அறிவில் கூடிடா வேளை
கிளர்வாட் கூர்மையைக் கேட்பது உண்டு;
ஓ,நீ முதிய வைனா மொயின!
பாரியவா யுடைப் பாடகன் நீயே
எங்கள்வாள் முனைகளே இனித்தீர்ப் பளிக்கும்
வாள்களின் வீச்சே வருவிறல் காட்டும்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"அச்சம் என்பதென் ஆண்மையில் இல்லை
உனதுவா ளினிலோ உன்னறி வினிலோ
கத்தி முனையிலோ கள்ளத் தனத்திலோ.
அதுவது இப்போ தப்படி யிருப்பதால்,
கடுவாள் வீரம் காட்டஎண் ணுகிலேன்
உன்னுடன் மோதி, ஓ,நீ இழிந்தவன்,
ஓ,இழிந் தவனே, உன்னுடன் மோதி."

அப்பொழு திளைய யொவுகா ஹைனன்
தன்வாய் கோணித் தலையைத் திருப்பி
கறுத்தத் தாடியைக் கையால் முறுக்கி
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே;
"எதிர்வாள் வீச்சை எவன்ஏற் கானோ
வன்வாள் முனையை மதிக்கான் எவனோ
அவனைப் பன்றியே ஆகப் பாடுவேன்
படுநீள் முகத்துப் பன்றி யாக்குவேன்
அத்தகு மனிதரை அங்ஙனம் செய்வேன்
அவனையவ் வாறே இவனையிவ் வாறே
அடர்எருக் குவியலில் அழியப் பண்ணுவேன்
முதுப்பசுத் தொழுவ முலையிற் போடுவேன்."

வைனா மொயினன் வஞ்சினங் கொண்டான்
வெஞ்சினத் தோடு வெட்கமு மடைந்தான்
அதனால் பாடற் கவனே தொடங்கினன்
அறிவுச் சொற்களை அவன்வெளி யிட்டான்;
பாடல்கள் குழந்தைப் பாடல்க ளல்ல
பிள்ளைப்பா வல்லது பெண்கேலி யல்ல
விறல்மிகும் தாடிகொள் வீரனின் பாட்டது
எல்லாப் பிள்ளையும் இசைக்கொணாப் பாட்டது
பாதிப் பையன்கள் பயின்றிடாப் பாட்டது
மூன்றிலோர் காதலர் மொழிந்திடாப் பாட்டது
தீமை நிறைந்து தெரியுமிந் நாட்களில்
வாழ்வே முடிவுறும் வறுங்கடை நாட்களில்.

முதிய வைனா மொயினன் பாடினன்
இப்புவி குலுங்கிற்(று) ஏரிகள் கலங்கின
தாமிர வெற்புகள் தலைநடுக் குண்டன

பெரும் பாறைகளோ பிளக்கத் தொடங்கின
குன்றுகள் இரண்டு கூறாய்ப் பறந்தன
சிகரம் சிதறித் தெரிகரை வீழ்ந்தன.

இளைய யொவுகா ஹைனனைப் பாடினான்:
உடைகளை நாற்றுச் செடிகளா யாக்கினான்
புரவியின் பட்டியை அலரியா யாக்கினான்
இழுவை**வார் அதைவளர் **சிறுமர மாக்கினான்;
பொன்னொளிர் வண்டிமேற் போந்தவன் பாடினான்
வாவியில் மரத்தினைப் போல்விழப் பாடினான்,
தளர்மணி தொங்கிய சாட்டையைப் பாடியே
நீரதன் கரையிலே நின்றபுல் லாக்கினான்,
வெண்சுட்டி முகத்தொடு விறற்பரி பார்த்தவன்
படிசுனை யருகுறும் பாறையா யாக்கினான்.
கனகமார் அவனது கைப்பிடி வாளினை
விண்ணகத் தொளிர்தரு மின்னலா யாக்கினான்,
வளமுறுங் கோலத்து வச்சிர தனுவதை
புனலின்மேற் பொலிவுறும் வானவில் லாக்கினான்,
அலர்சிறை பொருந்திய அம்புகள் அனைத்தையும்
விரைந்துவிண் பறந்திடும் பருந்துக ளாக்கினான்
கோணிய அலகுடை நாயினைப் பார்த்தவன்
நிலத்திலே கல்லென நிற்கவே சபித்தனன்.

பாடலால் தலைமிசைப் பதித்தநல் தொப்பி
மேலே எழுந்துவிண் மேகமாய் நின்றது,
மற்றொரு பாடலால் மலர்கரக் கையுறை
**குவளை மலரெனக் குளிர்புனல் நின்றது,
அவனணிந் திருந்த நீலமே லாடை
மேகக் கூட்டமாய் விண்மிசை யூர்ந்தது,
எழிலாய் இணைந்த இடுப்பின் பட்டி
விண்மிசை சிதறி விண்மீ னானது.

யொவுகா ஹைனனைத் தொடர்ந்தும் பாடினான்
சென்றான் அரைவரை சேற்றுச் சகதியில்
புதைந்தது இடுப்புப் பூட்டுச் சகதியில்
சென்றது **கக்கம் செறிமண் வரைக்கும்.

இப்போ திளைய யொவுகா ஹைனன்
தெரிந்து கொண்டனன் சீராய் உணர்ந்தனன்
தான்வந்த வழியைச் சரியாய் அறிந்தனன்
பயண மொன்றினைப் படுமனம் கொண்டதும்
பாப்போட் டியிலே பாடிட வந்ததும்
முதிய வைனா மொயினனை எதிர்த்ததும்.

நிலத்தில் காலைப் பெயர்த்துப் பார்த்தான்
முன்கால் தூக்க முடியவே யில்லை
அடுத்த காலையும் அசைத்துப் பார்த்தான்
அதுகற் காலணி இறுகிக் கிடந்தது.

பின்னர் இளைய யொவுகா ஹைனன்

வளர்நோ வறிந்தான் வருத்தப் பட்டான்
தொல்லைகள் கூடத் துயரம் உணர்ந்தான்.
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓ,உயர் ஞான வைனா மொயின!
நிலைபெறும் மாய நெறியறி முதல்வ!
மாயச் சொற்களை மீளப் பெறுவாய்
மந்திரப் பாடலை வாங்குவாய் திரும்ப
இந்தச் சிக்கலில் இருந்தெனை விடுப்பாய்
துன்பத் திருந்து தூக்கிநிம் மதிதா
அதிக பெறுமதி அளிப்பேன் உனக்கு
அரிதாம் பரிசுகள் அளிப்பேன் பற்பல."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"சரிதான் எனக்குத் தருவாய் எவ்வெவை
மாயச் சொற்களை மீளப் பெற்றால்
மந்திரப் பாடலை வாங்கிக் கொண்டால்
இந்தச் சிக்கலில் இருந்துனை மீட்டால்
துன்பத் திருந்துகை தூக்கியே விட்டால்?"

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன்:
"என்னிடம் தனுக்கள் இரண்டு உள்ளன
எழிலார் குறுக்கு இருஞ்சிலை இரண்டு
அவற்றிலே ஒன்று அடுகதித் தாக்கும்
மற்றொன் றோகுறி வைத்தே பாயும்
இரண்டு வில்லில்நீ ஒன்றைப் பெறுவாய்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"ஆ,உன் தனுக்களில் ஆசையே இல்லை
அவ்இழி சிலைகளில் அக்கறை இல்லை
என்னிட முண்டு எண்ணிலாச் சிலைகள்
சுவர்களொவ் வொன்றிலும் சொருகியுள் ளனவே
ஆப்புகள் அனைத்திலும் அனேகம்உள் ளனவே
மனித ரின்றியே வானெலாம் திரியும்
வேட்பவ ரின்றியே வெளித் தொழில் புரியும்."
இளைய யொவுகா ஹெனனைப் பாட
மேலும் சேற்றில் மிகஆழ்ந் திட்டான்.

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன்:
"என்னிடம் தோணிகள் இரண்டு உள்ளன
மங்கல மான மரக்கல மிரண்டு
கனமிலாத் தோணி கடுகதி செல்லும்
பெரும் பாரமேற்றும் பிறிதொரு தோணி
இரண்டி லொன்றை எடுத்துச் செல்வாய்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"அத்தோ ணிகளில் ஆசையே இல்லை
இரண்டில் ஒன்றையும் இல்லைநான் பெறுதல்
அவற்றில் என்னிடம் அநேகமுள் ளனவே
உருளையொவ் வொன்றிலும் உறும்தடைப் பட்டே
ஒவ்வொரு குடாவிலும் உறும்அடை பட்டு

சீறுகாற் றெதிர்த்தும் சிலதோணி செல்லும்
சீரறு நிலையிலும் சிலபட கேகும்."
இளைய யொவுகா ஹெனனைப் பாட
மேலும் சேற்றில் மிகஆழ்ந் திட்டான்.

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன் :
"என்னிடம் உள்ளன இருபொலிக் குதிரை
எழிலார் புரவிகள் இரண்டென் னிடமுள
ஒன்றன் கடுகதிக் கொப்பிணை யில்லை
இழுவையின் இலட்சணம் எனலாம் மற்றது
இரண்டி லொன்றைநீ யீங்குபெற் றகல்வாய்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"அட,உன் புரவியில் ஆசையு மில்லை
வெண்காற் குதிரைகள் வேண்டிய தில்லை
அவற்றில் என்னிடம் அனேகமுள் ளனவால்
தொட்டிகள் அனைத்திலும் கட்டிக் கிடக்கும்
நிறைந்தே தொழுவம் அனைத்திலும் நிற்கும்
தெளிபுனல் போலத் திரண்ட முதுகுடன்
பின்புறங் கொழுத்த பெருந்தசை யுடனே."
இளைய யொவுகா ஹெனனைப் பாட
மேலும் சேற்றில் மிகஆழ்ந் திட்டான்.

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன்:
"ஓ,நீ முதிய வைனா மொயின!
மாயச் சொற்களை மீளப் பெறுவாய்
மந்திரப் பாடலை வாங்குவாய் திரும்ப
பொன்தொப்பி நிறைகொள் பொற்கா சளிப்பேன்
அள்ளுமோர் தொப்பிகொள் வெள்ளிக ளளிப்பேன்
எந்தைபோ ரினிலே இவைகளைப் பெற்றார்
வெற்றிப் போரிலே பெற்றதிப் பொருள்கள்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"வெள்ளிகள் எதுவும் வேண்டவே வேண்டாம்
இழிந்தோய், உனதுபொற் காசுகள் ஏற்கேன்
அவைகள் என்னிடம் அனேகம் உள்ளன
களஞ்சியம் அனைத்தும் கனத்தே கிடப்பன
பெட்டிகள் அனைத்தும் பெருகவே உள்ளன
நிலாவொளி நிகர்ப்ப நிலைபெறும் பொன்னாம்
தொல்பக லோன்போல் தோன்றிடும் வெள்ளிகள்."
இளைய யொவுகா ஹைனனைப் பாட
மேலும் சேற்றில் மிகஆழ்ந் திட்டான்.

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன்:
"ஓ,நீ முதிய வைனா மொயின!
இந்தச் சிக்கல் இருந்தெனை விடுவிப்பாய்
துன்பத் திருந்து தூக்கிநிம் மதிதா
வீட்டு வைக்கோல் மிகுபோர் தருவேன்
அகல்மண் வயலெலாம் அடைக்கலம் தருவேன்
என்னுடை வாழ்வைமீட் டெடுப்பதற் காக

என்னைமீட் டெடுத்துக் கொள்வதற் காக."

முதிய வைனா மொயினன் மொழிந்தான் :
"வைக்கோற் போரிலே இச்சையும் இல்லை
இழிந்தமா னிடனே செழித்தமண் வயலிலும்;
மண்வயல் அனேகம் உண்டே எனக்கும்
எல்லாத் திசையிலும் இருப்பன அவைகள்
எல்லா வெளியிலும் இகல்போர் உளவாம்
எனது வயல்கள்தாம் எனக்குகந் தனவாம்
தானியக் குவியல்கள் சாலச் சிறந்தவை."
இளைய யொவுகா ஹைனனைப் பாட
மேலும் சேற்றில் மிகஆழ்ந் திட்டான்.

பின்னர் இளைய யொவுகா ஹைனன்
ஆற்றல் அனைத்தும் அழிந்த நிலையில்
தாடை வரைக்கும் தாழ்ந்தே நின்றான்
தாடியோ தீதுறும் தலத்திலே யிருக்க
வாயினை நிறைத்து வன்சே(று) ஆர்ந்திட
படுமரத் துண்டிலே பற்கள்போய் இறுக.

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன்:
"ஓ,உயர் ஞான வைனா மொயின!
நிலைபெறும் மாய நெறியறி முதல்வ!
மீண்டும் பாடுநின் மேனிலைப் பாடலை
இளைத்த எனக்கிவ் விகவாழ் வருள்வாய்
எனக்கு விடுதலை இதிலிருந் தருள்வாய்
நீரோடை வந்ததென் நிலக்காற் கீழே
மண்ணும் எரிச்சலைக் கண்களில் தந்தது.

புனிதநற் சொற்களை இனிதுமீட் டழைத்தால்
மந்திர சக்தியை வரமீட் டெடுத்தால்
தருவேன் உனக்குச் சகோதரி *ஐனோ
தருவேன் உனக்குத் தாயீன் தனையை
தூய்மையா க்குவள்நின் தொல்வாழ் விடத்தை
நிலத்தைப் பெருக்கி நலத்தைச் செய்வாள்
மரத்தின் தட்டை உலர்த்தி எடுப்பாள் ;
கழுவித் தருவாள் முழுமே லாடைகள்
நேர்த்தியாய் பொன்னுடை நினக்கவள் நெய்வாள்
தேன்பல காரம் செய்வாள் இனிப்பாய்."

முதிய வைனா மொயினன் முடிவில்
இவ்வுரை கேட்டு இன்பமே கொண்டான்
யொவுகா ஹைனனின் யுவதியைப் பெற்றால்
கடுமுது காலம் கவனிப் பாளென.

களிப்பெனும் கல்லில் கருத்தோ டமர்ந்து
உயர்கவிக் கல்லில் ஓய்தலைப் பெற்று
ஒருகணம் பாடினான் மறுகணம் பாடினான்
படர்மும் முறையும் பாடலை யிசைத்தான்
புனிதச் சொற்களை இனிதுமீட் டழைத்தான்

மாயச் சொற்றொடர் மீளவும் பெற்றான்.

இளைய யொவுகா ஹைனன் மீண்டான்
தாடையோ சேற்றைத் தவிர்வெளி வந்தது
தாடியோ தீதுறும் தலம்வெளி வந்தது
பாறையில் இருந்துமீள் பரியதும் வந்தது
வண்டியோ புனற்கரை மரத்தினால் வந்தது
சலக்கரைப் புதர்நீள் சாட்டையும் வந்தது.
சறுக்குவண் டியிலே சாடியே ஏறினான்
வண்டியில் ஏறி வளமாய் அமர்ந்தான்
முறிந்த மனத்துடன் விரைந்தே சென்றான்
இதயம் நிறைந்திடும் துயருடன் சென்றான்
அன்புறும் அன்னையின் அருகினை நோக்கியே
உயர்வுறும் ஈன்றவர் உறைவிடம் நோக்கியே.
பெரும்ஒலி யார்ப்பக் கடுகதி சென்றான்
அகல்இல் நோக்கி ஆவலாய்ப் போனான்
வருகளஞ் சியத்தே வண்டியை நொருக்கி
வாயிற் படியிலேர்க் காலினை யுடைத்தான்.

அன்னையென் பவள்ஆழ் சிந்தனை செய்தாள்
தந்தையார் இங்ஙனம் வந்தெதிர் சொன்னார் :
"வன்கா ரணத்தொடே வண்டியை உடைத்தாய்
ஏர்க்கால் உடைத்ததில் இயல்கருத் துண்டு
ஏனப்பா நூதனம் இவ்வண்டி ஓட்டம்
வெகுமுட் டாள்போல் வீடேன் வந்தாய்?"
இளைய யொவுகா ஹைனன் அப்போது
கண்ணீர் பெருக்கிக் கவலைப் பட்டான்
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
தொப்பியைத் தூக்கி அப்புறம் வைத்தான்
உதடுகள் உலர்ந்து உரத்துப் போயின
வாய்வரை நாசி வளைந்து வந்தது.
தயங்கி தயங்கித் தாயவள் கேட்டாள்
வருத்தத் தாலொரு வாய்வினாக் கேட்டாள்:
"எதற்கு அழுதனை? என்மகன் இயம்பு!
இரங்கிய தெதற்கென் இளமையின் பயனே!
உதடுகள் உலர்ந்து உரத்தது எதற்கு
வாய்வரை நாசி வளைந்தது மெதற்கு?"

இளைய யொவுகா ஹைனன் இயம்பினன் :
"அன்னையே, தாயே, எனைச்சுமந் தவளே!
நிகழ்வின் காரண நிலையொன் றுண்டு
மந்திர வேலைகள் வலிதில் நடந்தமை
கண்ணீர் சிந்தக் காரண மாயின
மாயவித் தைகளால் வாய்புலம் பிட்டது;
நானும் இதற்காய் நாளெலாம் அழுவேன்
வாழ்நாள் முழுவதும் வேதனைப் படுவேன்
சமர்ப்பணம் செய்தேன் சகோதரி ஐனோ
அன்னையின் மகளை அளிக்கவாக் களித்தேன்
வைனா மொயினனைப் பேணுதற் காக
பாடகன் வாழ்க்கைப் படுதுணை யாக

உறுநொய் துற்றோன் ஒருதுணை யாக
முலையில் கிடப்போன் பாதுகாப் பிற்காய்."

செங்கரம் இரண்டையும் தேய்த்தனள் அன்னை
அங்கை இரண்டையும் அன்னாள் தேய்த்தபின்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"அரியஎன் மகனே, அழுவதை நிறுத்து!
எதுவுமே காரணம் இல்லை அழற்கு
அதிகம் துன்புறற் கவசியம் இல்லை;
நான்நாட் களெலாம் நண்ணிய தொன்று
நாளெலாம் வாழ்வில் நச்சிய தொன்று
உயர்ந்தோன் எமது உறவினன் ஒருவன்
விறலோன் ஒருவன் வருவான் என்றே
வைனா மொயினன் மருமக னாக
உயர்பா டகனே உறவின னாக."
இளைய யொவுகா ஹைனன் சோதரி
செய்தியைக் கேட்டுச் சிந்தினள் கண்ணீர்
ஒருநாள் அழுதாள் இருநாள் அழுதாள்
வாயிற் படிகளின் வலமிருந் தழுதாள்
பெருந்துயர் கொண்டு பின்னரும் அழுதாள்
இதயத் துயரினால் ஏங்கியே அழுதாள்.
அவளது அன்னை அவளிடம் சொன்னாள்:
"என்னுயிர் ஐனோ, எதற்காய் அழுதாய்?
மாவலோன் ஒருவன் மாப்பிள்ளை யாவான்
உயர்ந்தோன் ஒருவனின் உயர்மனை யிருந்து
பல்கணி வழியே பார்வையைச் செலுத்தி
பேச்செலாம் பேசலாம் பீடத் தமர்ந்து."

இவ்விதம் அந்த எழில்மகள் இசைத்தாள்:
"அன்னையே, தாயே, எனைச்சுமந் தவளே!
அழுவதற் கெனக்கோர் அருங்கா ரணமுள
அழுதேன் எனது அழகுறும் குழற்கே
சடையாய் **வளர்ந்தஎன் தாழ்குழற் கழுதேன்
மென்மையாய் வந்தஎன் பொன்முடிக் கழுதேன்,
இளமையில் எல்லாம் ஒளித்தே யிருந்து
மறைவாகிப் போயின் வளர்ந்ததன் பின்னே.

எனதுவாழ் நாளெலாம் இதற்காய் அழுவேன்:
எல்லவன் ஒளியின் இனிமையைப் பார்த்து
விண்மதி ஒளியின் மென்மையைப் பார்த்து
வானத் தொளிரும் வண்ணம் பார்த்து.
இளமையில் இவற்றை இழத்தலும் வேண்டும்
வளர்சிறு வயதில் மறத்தலும் வேண்டும்
என்னுடைச் சகோதரன் இருந்தொழில் தளத்தில்
பரியுமென் தந்தையின் பலகணிப் பீடம்."

அன்னை யென்பவள் அவள்மகட் குரைத்தாள்
பிள்ளைக் கிவ்விதம் பிரியமாய்ப் பகர்ந்தாள்:
"தோய்மதி யீனத் துன்பம் தவிர்ப்பாய்
கண்ணீர் சொரியக் காரண மில்லை

எதுவித ஏதுவும் எழுதுயர்க் கில்லை
அல்லற் படுவதில் அர்த்தமும் இல்லை
கடவுளின் செங்கதிர் கதிர்களை ஒளிரும்
இகதலத் தெத்தகு இடத்திலு மிருந்து
மகிழ்பிதாச் சாளரம் மட்டிலு மல்ல
சோதரன் தொழிற்களத் தொன்றிலு மல்ல.
வளர்சிறு பழவகை மலையிலே யுண்டு
தனியொரு **பழவகை தரையிலும் உண்டு
அவற்றைநீ நன்குபோய் ஆய்ந்தெடுத் திடலாம்
புகுமிட மெங்கணும் போய்ப்பறித் திடலாம்
தந்தையின் வயல்வெளி தன்னிலென் றென்றும்
சகோதரன் **தீய்ந்நிலம் தங்குதற் கில்லை."

கலேவலா

பாடல் 4 - ஐனோவின் முடிவு

அடிகள் 1 - 30: வைனாமொயினன் யொவுகாஹைனனின் சகோதரி ஐனோவைக் காட்டில் சந்தித்து உரையாடுகிறான்.

அடிகள் 31 - 116: ஐனோ அழுதபடியே வீட்டுக்கு ஓடிப் போய்த் தாயாருக்குச் சொல்லுகிறாள்.

அடிகள் 117 - 188: தாயார் அழுகையை நிறுத்திவிட்டு, அலங்காரம் செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் இருக்கச் சொல்லுகிறாள்.

அடிகள் 189 - 254: ஐனோ மென்மேலும் அழுது ஒரு வயோதிப மனிதனை விவாகம் செய்ய முடியாது என்கிறாள்.

அடிகள் 255 - 370: ஐனோ கவலையில் காடுகளில் திரிந்து, ஒரு அபூர்வமான கடற்கரையை அடைந்து அதில் குளிக்கும் பொழுது அமிழ்ந்து போகிறாள்.

அடிகள் 371 - 434: அவளுடைய மரணச் செய்தியை ஒரு முயல் போய் வீட்டில் சொல்லுகிறது.
அடிகள் 435 - 518: அவளுடைய தாய் இரவு பகலாக அழுகிறாள்.

அதன்பின் இளமைப் பருவத்து ஐனோ
யொவுகா ஹைனனின் யெளவனச் சோதரி
துடைப்பம் பெறற்காய்த் தொடர்கா டடைந்தாள்
சென்றாள் **தூரிகை தேடிப் புதரிடை
ஒன்றைத் தந்தைக் கொடித்துச் சேர்த்தாள்
இரண்டாவ தொன்றை எடுத்தாள் தாய்க்காய்
மூன்றாவ தொன்றை முனைந்தாங் கெடுத்தாள்
தாழ்வில் செழுமைச் சகோதர னுக்காய்.

வீடு நோக்கிக் காலடி பெயர்த்தனள்
**பூர்ச்சம் புதர்கள் புணர்வழி யூடே
முதிய வைனா மொயினன் வந்தனன்
காரிகை யவளைக் காட்டிலே கண்டனன்
இலைதளை அடர்ந்த இருள்சோ லையிலே;
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"பிறருக் கல்ல பருவப் பெண்ணே,
எனக்குமட் டும்தான் இளங்கா ரிகையே
நித்தில ஆரம் நீகழுத் தணிவாய்
திகழ்மார் பதிலே சிலுவையை அணிவாய்
எழிலார் குழலை இணைத்துப் பின்னி
பட்டுத் துணியைப் பாங்குறக் கட்டு."

இனிவரும் சொற்களில் இளமகள் இசைத்தாள்:
"உனக்காக அல்ல ஒருவர்க்கு மல்ல
மார்பிற் சிலுவை மாண்போ டணிதல்
பட்டுத் துணியினால் பைங்குழல் பிணைத்தல்
**கப்பல் துணியில் அக்கறை இல்லை

கோதுமை ரொட்டிக் குறுதுய ரில்லை
கைத்தறித் துணிகளில் காலங் கழிக்கிறேன்
ரொட்டித் துகள்களில் திட்பமாய் வளர்கிறேன்
அன்புடை நெஞ்சத்(து) அப்பா அருகில்
மங்காப் பாசத்து மாதா துணையில்."

திருகிப் பிடுங்கினள் மார்பின் சிலுவையை
விரலணி விலக்கினள் விரல்களி லிருந்து
கழுத்தி லிருந்து கழற்றினள் மணிகள்
சிரசி லிருந்து செந்துணி விலக்கினள்
நிலத்தினி லிட்டனள் நிலத்துக் காக
சோலையில் எறிந்தனள் சோலைக் காக
விழிநீர் சிந்தி வீட்டை அடைந்தனள்
துன்புற் றழுதவள் தோட்டம் நடந்தனள்.

தந்தை பலகணி தன்மருங் கிருந்தார்
கோடரிப் பிடியைச் சீர்செய் தவராய்:
"எதற்காக அழுகிறாய், எளியஎன் மகளே?
எளியஎன் மகளே, இளமைப் பெண்ணே!"

"ஏங்கி அழுவதற் கேதுக் கள்ளுள
கவலைப் படற்கும் காரணம் உள்ளன
அதனா லேதான் அழுகிறேன் அப்பா
மிகவழு(து) அதனால் விண்ணப் பிக்கிறேன்
மார்பின் சிலுவை வறிதே கழன்றது
பட்டியி லிருந்தொரு படர்பூட் டவிழ்ந்தது
வியன்மார் பிருந்த வெள்ளிச் சிலுவையும்
இடுப்புப் பட்டியின் இயல்செப் பணியும்."

இருந்தான் சோதரன் எழில்வா யிற்கடை
வண்டிஏர் செதுக்கிய வண்ணம தாக:
"எதற்காக அழுகிறாய், எளியஎன் சோதரி?
எளியஎன் சோதரி, இளமைப் பெண்ணே!"

"ஏங்கி அழுவதற் கேதுக் கள்ளுள
கவலைப் படற்கும் காரணம் உள்ளன
அதனா லேதான் அழுகிறேன் சோதரா
மிகவழு(து) அதனால் விண்ணப் பிக்கிறேன்
விரலி லிருந்து விரலணி கழன்றது
கழுத்தி லிருந்து கதிர்மணி உதிர்ந்தது
விரலி லிருந்தஎன் வியன்பொன் மோதிரம்
கழுத்து மாலையின் கவின்வெண் மணிகள்."

இல்லின் கூடத்(து) இருந்தாள் சோதரி
பொன்னிலே கச்சணி பின்னிய வண்ணம்:
"எதற்காக அழுகிறாய், எளியஎன் சோதரி?
எளியஎன் சோதரி, இளமைப் பெண்ணே!"

"ஏங்கி அழுவதற் கேதுக் கள்ளுள
கவலைப் படற்கும் காரணம் உள்ளன

அதனால் அழுகிறேன் அருமைச் சோதரி
மிகவழு(து) அதனால் விண்ணப் பிக்கிறேன்
புருவத் திருந்து பொன்னணி கழன்றது
கூந்தலின் வெள்ளணி குலைந்து வீழ்ந்தது
நீலப் பட்டு நீள்விழி யிருந்து
சென்னிறப் பட்டும் சென்னியி லிருந்து."

முன்மணி மண்டபத்(து) அன்னை இருந்தாள்
பாலிருந் தாடை பகுத்த வண்ணமே:
"எதற்காக அழுகிறாய், எளியஎன் மகளே?
எளியஎன் மகளே, இளமைப் பெண்ணே!"

"தாயே, என்னைத் தனிசுமந் தவளே!
எனைவளர்த் தவளே, என்னுயி ரன்னாய்!
"ஏங்கி அழுவதற் கேதுக் கள்ளுள
கவலைப் படற்கும் காரணம் உள்ளன
எளியஎன் தாயே, இதனால் அழுகிறேன்,
மிகஅழு(து) இதனால் விண்ணப் பிக்கிறேன்
துடைப்பம் பெறற்காய்த் தொடர்கா டடைந்தேன்
சென்றேன் தூரிகை தேடிப் புதரிடை
ஒன்றைத் தந்தைக் கொடித்துச் சேர்த்தேன்
இரண்டாவ தொன்றை எடுத்தேன் தாய்க்காய்
மூன்றாவ தொன்றை முனைந்தாங் கெடுத்தேன்
தாழ்வில் செழுமைச் சகோதர னுக்காய்.
வீடு நோக்கிக் காலடி பெயர்த்தேன்
நற்புதர் வழியாய் நடந்தே வந்தேன்
குகைவழி வந்தகுரிசில் *ஒஸ் மொயினன்
தீய்ந்த நிலத்தில் *கலேவைனன் கூறினன்:
"எனக்காய் அணிவாய் எளிமைப் பெண்ணே
எனக்காய் மட்டும் எளிமைப் பெண்ணே
கழுத்தில் அணிவாய் கவின்மணி மாலை
திகழ்மார் பதிலே சிலுவையை அணிவாய்
எழிலார் குழலை இணைத்துப் பின்னி
பட்டுத் துணியினால் பாங்குறக் கட்டு."

சிறந்தஎன் மார்புச் சிலுவையைப் பெயர்த்தேன்
கழுத்தி லிருந்து கழற்றினேன் மாலை
நீல நூலினை நீள்விழி யிருந்து
சிவப்பு நூலினைச் சிரசினி லிருந்து
நிலத்திற் போட்டேன் நிலத்திற் காக
சோலையில் எறிந்தேன் சோலைக் காக
இங்ஙனம் நானே இயம்பினேன் பின்னர்:
"உனக்கா யல்ல ஒருவர்க்கு மல்ல
மார்பிற் சிலுவை மாண்போ டணிதல்
பட்டுத் துணியினால் பைங்குழல் பிணைத்தல்
கப்பல் துணியில் அக்கறை இல்லை
கோதுமை ரொட்டிக் குறுதுய ரில்லை
கைத்தறித் துணிகளில் காலங் கழிக்கிறேன்
ரொட்டித் துகள்களில் திட்பமாய் வளர்கிறேன்
அன்புடை நெஞ்சத்(து) அப்பா அருகில்

மங்காப் பாசத்து மாதா துணையில்."

பின்னர் இவ்விதம் அன்னையும் சொன்னாள்
பெற்றவள் மகளைப் பார்த்துப் பேசினாள்:
"அழுகையை நிறுத்துஎன் அன்புடைப் புதல்வி!
ஏக்கம் எதற்கென் இளமையின் பயனே!
உருகிய வெண்ணையை ஓராண் டுண்பாய்
பாங்குளோர் தமைவிடப் பசுமையாய் வருவாய்,
ஆண்டிரண் டினிலே அயில்வாய் **பன்றியை
வேறெவர் யாரிலும் மென்மையாய் வருவாய்,
உண்பாய் மூன்றில் ஒளிர்பா லேட்டை
ஏனைய யாரிலும் எழிலாய் வருவாய்.
மலையதி லுள்ள மண்டபம் சென்று
சீருடன் இருக்கும் சிறுஅறை திறப்பாய்
பெட்டக மீமிசை பெட்டக மாங்குள
பெட்டிக ளருகில் பெட்டிக ளிருக்கும்
திறப்பாய் மிகமிகச் சிறந்த பெட்டியை
மின்னும் முடியை மெதுவாய்த் திறப்பாய்
கனகத் தியற்றிய கச்சுகள் ஆறும்
நீலப்பா வாடை ஏழும் இருக்கும்
நிலவின் மகளால் நெய்தவை தாமவை
செங்கதி ரோன்மகள் செய்தவை தாமவை.
நற்சிறு பெண்ணாய் நானிருக் கையிலே
நளிர்இளம் பெண்ணாய் நானிருக் கையிலே
சிறுபழம் நாடிச் சென்றேன் வனத்துள்
பனிமலைச் சரிவிலே பழம்சில தேடினேன்
நிலாமகள் அப்போ(து) நெய்ததைக் கேட்டேன்
பெருங்கதி ரோன்மகள் பின்னிடக் கேட்டேன்
நீல நிறப்பொழில் நேர்பின் புறத்தில்
செழித்த பசும்பொழில் திகழ்பக் கத்தே.

மாதரின் பக்கம் வந்தேன் மெதுவாய்
அரிவையர் தமது அருகே நெருங்கி
நாரியர் தம்மிடம் நான்கேட் டேனால்
இனிவரும் சொற்களில் இயம்பினன் நானே:
'திங்களின் மகளே, நின்பொன் தருவாய்,
வெங்கதிர் மகளே, வெள்ளியைத் தருவாய்,
எதுவுமே யற்ற இச்சிறு மிக்கு
கனிவாய்க் கேட்கும் காரிகை எனக்கு.'

திங்களின் மகளும் செம்பொன் தந்தாள்
வெங்கதிர் மகளும் வெள்ளிதந் திட்டாள்
பொன்னை எனது புருவம் வைத்தேன்
வெள்ளியைச் சென்னி விளங்கவைத் திட்டேன்
மலரைப் போல மனையை நாடினேன்
தேடிவந் தேன்என் தாதையி னிடமே.

அணிந்துநான் பார்த்தேன் அந்நாள் மறுநாள்
தனிமுன் றாம்நாள் தரித்துப் பார்த்தேன்
புருவத் துப்பொன் பிரித்தே எடுத்து

சென்னிவெள் ளியையும் சேர்த்தே யெடுத்து
குன்றுயர் மாடம் கொண்டே சேர்த்து
பத்திர மாகப் பெட்டகத் திட்டேன்,
அன்று முதல்அவை அங்கே இருந்தன
இன்று வரைநான் எடுத்துப் பார்த்திலன்.
நயனத் தணிவாய் நல்லதோர் பட்டணி
பூணுவாய் புருவம் பொலிவுறு பொன்னணி
நித்தில ஆரம் நேர்கழுத் தணிந்து
பூணுக மார்பிற் பொன்மணிச் சிலுவை
மென்மையாய் செய்த மேலுடை அணிக
நுட்பமாய் நெய்த நூலா டையது
கம்பளி யதிலியை கனத்தபா வாடையும்
பாவாடை மேலொரு பட்டுப் பட்டியும்
பாங்குறப் பட்டிலே பண்ணுகா லுறையும்
எழிற்கா லணியும் இருகால் பூணுக;
கார்குழல் பின்னிக் கட்டிய பின்நீ
பட்டுப் பட்டி பாங்குறச் சூடுக
கனகநல் மோதிரம் கைவிரற் புனைந்து
பொன்னிலாம் வளையல்கள் பூணுக கைகளில்.

அவ்விட மிருந்து அகத்திடை வருக
களஞ்சியப் பக்கல் காலடி வைக்க!
உவகையில் திளைப்பர் உறவினர் எல்லாம்
திளைப்பர் இனத்தவர் செழுமென் னினைவில்;
பாதையில் பூப்போல் பவனிநீ வந்து
**சிறுபழம் போலே செம்மையுற் றுலவுவை
முன்னரை விடவும் முழுமெரு கொளிர்வாய்
அன்றிலும் பார்க்க அழகுடன் பொலிவாய்."

இவ்வித மொழிகளில் இயம்பினாள் அன்னை
மகளுக் கன்புடன் மாதா புகன்றாள் ;
ஆயினும் புதல்வி அதைமனம் கொண்டிலள்
மாதா மொழிகளை மகளோ கேட்டிலள்
அப்புறத் தோட்டத்து அழுது திரிந்தனள்
துன்பம் தோய்ந்து தோட்டம் நடந்தனள்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தாள் :
"நலமுறு நெஞ்சம் நயக்கும் உணர்வெது?
பாக்கியம் பெற்றோர் பயனுறு நினைவெது?
உறுநல நெஞ்சம் உணர்ந்திடு மிவ்விதம்
பாக்கியம் பெற்றவர் பாங்குறும் பேறிது
தொன்னீர் தோன்றிடும் துள்ளலைப் போலவும்
அல்லது மென்னீர் அலையது போலவும் ;
பாக்கியம் அற்றோர் பாங்குறும் உணர்வெது?
தனிநீள் வாலுடைத் தாரா நினைவெது?
பாக்கியம் அற்றோர் பாங்குறும் உணர்விது
தனிநீள் வாலுடைத் தாரா நினைவிது
பருவத முடியின் பனிக்கட் டியைப்போல்
கிணற்றிடைப் பட்ட கிளர்நீ ரதைப்போல்.

அடிக்கடி நானோர் அல்லலில் வீழ்கிறேன்
அல்லலின் பிள்ளையாய் அடிக்கடி தாழ்கிறேன்
எண்ணம் மிதிபடும் எளியபுல் லாயினன்
பேதையாய் தவழ்கிறேன் பெரும்புதர் நடுவில்
புற்றரை மத்தியில் போய்நான் திரிகிறேன்
தோப்பிலும் தூற்றிலும் தொடர்ந்தலைந் துழல்கிறேன்
கிளர்ந்தெழும் மனநிலை **கீலிலும் சிறப்பி(ல்)லை
என்னுளம் கரியிலும் இ(ல்)லையொரு வெளுப்பே.

அமையும்என் நிலையோ அருமையாய் இருந்திடும்
மென்மேல் என்நிலை மேன்மையுற் றிருந்திடும்
பிறப்பெடா திருந்தால் வளர்ந்திடா திருந்தால்
பெரிதாய் நானுருப் பெறாதிருந் திருந்தால்
இன்னல்கள் நிறைந்த இவைபோல் நாட்களில்
இன்பங்க ளற்ற இத்தகு பூமியில்;
ஆறாம் நிசிவய ததில்இறந் திருந்தால்
அன்றெட் டாம்நிசி வயதழிந் திருந்தால்
எனக்கெனத் தேவைகள் ஏற்பட் டிருக்கா(து):
தூயசாண் நீளத் துணியது ஒன்றும்
அகத்தினில் வாழ அருநிலப் பரப்பும்
அன்னை யவளின் அழுகைசிற் றளவும்
எந்தையின் கண்ணீர் இன்னும் சிறிதும்
சகோதரன் விழிநீர் சற்றும் இருக்கா(து)."

அங்ஙனம் ஒருநாள் மறுநாள் அழுதாள்
அன்னையும் பின்னர் அகங்கனிந் துசாவினள் :
"பேதாய், பொருமுவ தெதற்குப் பெண்ணே?
வியாகுலப் பெண்ணே, வீண்முறை யீடேன்? "

"நான்பே தைப்பெண் நான்அழல் இதற்கே
முழுப்பொழு தும்நான் முறையீ டிட்டேன்
பேறிலா எனைநீ பெறுமா றுரைத்தாய்
உன்னுயிர் மகளுக் குரைத்தாய் இதனை
முதியஆ டவற்கு வதுவைக் கிசைத்தாய்
வயதாம் மனிதர்(க்கு) வழிகாட் டென்றாய்
தொய்து தளர்ந்தோன் துணையென எண்ணி
முலையிற் கிடப்போன் மனைவியா கென்றாய்
ஆணையிட் டாயேல் அதுநன் றிதைவிட
ஆழக் கடலின் அலைகள் அடியில்
தொல்வெண் மச்சச் சோதரி யாகென
தவழ்மீன் குழுநடுச் சகோதர னாகென ;
நடுக்கடல் இதைவிட நன்றா யிருக்கும்
அலைக்கீழ் வாழ்வது அருமையா யிருக்கும்
வெண்மீ னதனின் அண்முசோ தரியாய்
மீனின் மத்தியில் மிகுசகோ தரனாய்
வயதே றியவன் மனைவியா காமல்
தொய்ந்து தளர்ந்தோன் துணையா காமல்
தளர்கா லுறையொடு தள்ளா டுபவர்க்(கு)
தடிமேல் வீழ்ந்து தடுமா றுபவர்க்(கு). "

மலைமிசை யுள்ள மண்டபம் சென்றாள்
மண்டபத் துள்ளே மங்கையும் போனாள்
பேர்மிகும் சிறந்த பெட்டியைத் திறந்து
மூடியைப் பின்னால் வேகமாய்த் தள்ளி
அம்பொன் கச்சுகள் ஆறையும் தேடி
நீலப்பா வாடைகள் ஏழையும் கண்டாள்
அவைகளை எடுத்து அணிந்தாள் அவளே
அலங்கார மெல்லாம் அருமையாய்ச் செய்தாள் ;
பொன்னணி யதனைப் பூண்டாள் நுதலில்
வெள்ளியால் ஆனதை மிலைந்தாள் குழலில்
நீலப் பட்டதை நீள்விழிக் கணிந்து
சிவப்பிலாம் இழைகளை சிரசிற்சூ டினளே.

களஞ்சியம் அகன்று கடிதினிற் போந்து
கழனிப் பரப்பெலாம் கடந்தப் பாலும்
சதுப்பிலும் மேட்டுத் தரையிலும் திரிந்து
கலங்கிமங் கொளியிற் காடெலாம் அலைந்தாள்
னோ போக்கிலே புதுப்பாட் டிசைத்தாள்
அலைந்து திரிகையில் அவள்இவை புகன்றாள் :
"இதயம் நிறைய இன்னல் இருக்குமால்
தலைவலி ஒன்றும் தனியாய் வந்தது
ஆனாலும் இன்னல் இன்னலா காது
வலியென வந்தது வலியா யிராது
அதிட்டம் அற்றநான் அழிந்திட நேர்ந்தால்
மிகுதுயர் பேதைநான் விலகவும் நேர்ந்தால்
இப்பெருந் துன்பங்க ளிடையிலே யிருந்து
இவற்றிலே யிருந்தகன் றெழுந்திட முடிந்தால்.

இதுதான் உவப்பாய் எனக்குறும் நேரம்
வியனுல கிருந்துநான் விடைபெற் றேக
*மரண உலகின் மடிமேல் நடக்க
*துவோனி உலகைத் தொடர்ந்திடும் நேரம்;
என்னுயிர்த் தந்தை இனியழ மாட்டார்
தூயதாய் எனக்காய்த் துயர்ப்பட மாட்டாள்
சோதரி முகத்தில் துளிநீர் இராது
சகோதரன் விழிநீர் தான்சிந் தாது
அகல்நீர் புரண்டுநான் அழிந்து போனாலும்
மீன்நிறை கடலில் வீழ்ந்துவிட் டாலும்
ஆழத் தலைகளில் அமிழ்ந்துபோ னாலும்
கருநிறச் சேற்றில்நான் கடிதமிழ்ந் தாலும்."

ஒருநாள் நடந்தாள் இருநாள் நடந்தாள்
முன்றா வதுநாள் முற்றும் நடந்தாள்
கடைசியில் வந்தவள் கண்டாள் அலைகடல்
முதுபுதர்க் கடற்கரை முகம்கொடுத் திட்டாள்
இராவெனும் பொழுதும் எதிர்கொள வந்தது
மயங்கிருள் வந்துமுன் மறித்துநின் றதுவே.

அழுதனள் கன்னி அந்திப் பொழுதெலாம்
இருளாம் இரவெலாம் ஏங்கித் தவித்தனள்

நீர்நனைந் திட்ட நெடுங்கரைப் பாறையில்
வான்விரி பரந்த வளைகுடா எல்லையில்;
புலர்மறு காலைப் பொழுதும் விடிந்தது
கடல்முனை நோக்கி கயல்விழி செலுத்தி
வன்கடல் முனைமும் மாதரைக் கண்டனள்
மூவரும் கடலில் மூழ்கிக் குளித்தனர்
ஐனோ நான்காம் அரிவையா யிணைந்தாள்
ஆங்கொரு மெல்லியள் ஐந்தாவ தாகினள்.

அணிமேற் சட்டையை **அலரிமேற் போட்டாள்
**அரசில்பா வாடை யதனை யிட்டனள்
காலுறை கழற்றிக் கழித்தாள் வெறும்தரை
பாதணி எடுத்தீர்ம் பாறையில் வைத்தனள்
மணிகளை விலக்கி மணற்றரை சிந்தினள்
மிகுபரற் கற்றரை விரலணி வைத்தனள்.

பாறை தெரிந்தது படுகடல் நடுவண்
பொன்போல் மின்னிப் பொலிவாய் ஒளிர்ந்தது
நினைத்தனள் பாறையை நீந்தியே யடைய
நச்சினள் பாறைப் பக்கம் சாரவே.

பாவையும் முடிவிலே பாறையைச் சார்ந்து
பாங்குற விருந்தனள் பாறையுச் சியிலே
பொலிவுற மிளிரும் பொற்பா றையிலே
எண்ணிலா வர்ணம் இயைந்தொளிர் பாறையில்;
பாறையும் மெதுவதாய்ப் பைம்புனல் தாழ்ந்தது
அலைகளின் அடியிலே ஆழ்ந்துபோ னதுவால்
பாவையும் பாறையும் படுபுனல் அடியில்
ஐனோவும் பாறையின் அடிமிசைச் சென்றனள்.

அந்த இடம்தான் **கோழியின் அழிவிடம்
அங்குதான் பேதை அப்பெண் ணிறந்தாள்
மரணித்த நேர மங்கையின் கூற்றிது
ஆழத் தமிழ்கையில் அவள்புகல் மொழிகள்:
"குரைகடல் நானும் குளித்திடச் சென்றேன்
நீரின் பரப்பிலே நீந்தமுற் பட்டேன்
அங்கே நானோரு கோழியாய் வீழ்ந்தேன்
அங்கே பறவையாய் அகாலத் திறந்தேன்
என்னுடைத் தாதை என்அன் பப்பா
என்றுமே இந்த இகமுள வரையில்
பிடிக்கவே மாட்டார் பிறழ்மீ னாங்கே
படர்ந்து செறிந்தஅப் படர்புனற் பரப்பில்.

கரையிலே நானும் கழுவிடப் போனேன்
குரைகடல் இறங்கிக் குளித்திடச் சென்றேன்
அங்கே நானொரு கோழியாய் வீழ்ந்தேன்
அங்கே பறவையாய் அகாலத் திறந்தேன்
என்னுடை அன்னை என்அன் பம்மா
என்றுமே இந்த இகமுள வரையில்
குளிர்புனல் அள்ளிக் கொள்ளாள் கலயம்

மனையின் அயலுள வளைகுடா வதனில்.

கரையிலே நானும் கழுவிடப் போனேன்
குரைகடல் இறங்கிக் குளித்திடச் சென்றேன்
அங்கே நானொரு கோழியாய் வீழ்ந்தேன்
அங்கே பறவையாய் அகாலத் திறந்தேன்
என்னுடைச் சோதரன் அன்புச் சோதரன்
என்றுமே இந்த இகமுள வரையில்
அடுப்போர்ப் புரவிக் காங்குநீர் வழங்கார்
கடலின் அயல்சார் கரைகளிற் சென்றேன்.

கரையிலே நானும் கழுவிடப் போனேன்
குரைகடல் இறங்கிக் குளித்திடச் சென்றேன்
அங்கே நானொரு கோழியாய் வீழ்ந்தேன்
அங்கே பறவையாய் அகாலத் திறந்தேன்
என்னுடைச் சோதரி அன்புச் சோதரி
என்றுமே இந்த இகமுள வரையில்
நனிநீ ரள்ளி நயனம் கழுவாள்
மனையின் அருகுள வளைகுடா வதனில்.
கடல்நீ ராகக் காணும் அனைத்தும்
என்னுடல் ஓடும் இரத்தமே யாகும்
கடல்மீ னாகக் காணும் அனைத்தும்
என்னுடல் எடுத்த இறைச்சியே யாகும்
கரையிலே காணும் தாவர மனைத்தும்
வாய்ப்பிலாப் பேதையின் வளர்விலா வெலும்பே
பூமியில் தோன்றும் புல்லின மனைத்தும்
சிதைந்த பேதையின் சிகையதே யாகும்."

*** *** ***

மடமகள் முடிவிலே மரித்தனள் இவ்விதம்
எழிலுறும் கோழியொன் றிறந்ததிவ் விதமே.
இச்செய்தி யிப்போயா ரெடுத்தேக வல்லார்
வாயாலே யாரிந்த வார்த்தைபோய்ச் சொல்வார்
பொற்பாவை சீரான புகழ்பெற்ற வீட்டில்
மடவாளின் கவினான வளர்தோட்டக் காட்டில்?
கரடிவந் திச்செய்தி கடிதேற்றுச் செல்லும்
வாய்கொண்டு இவ்வார்த்தை வடிவாகச் சொல்லும்
ஆனாலும் செய்திசொலக் கரடிவர வில்லை
அதுதொலைந் தாயிற்றாம் ஆன்கூட்ட மொன்றில்.

இச்செய்தி யிப்போயா ரெடுத்தேக வல்லார்
வாயாலே யாரிந்த வார்த்தைபோய்ச் சொல்வார்
பொற்பாவை சீரான புகழ்பெற்ற வீட்டில்
மடவாளின் கவினான வளர்தோட்டக் காட்டில்?

ஓநாய்வந் திச்செய்தி உடன்கொண்டு செல்லும்
வாய்கொண்டு இவ்வார்த்தை வடிவாகச் சொல்லும்
ஆனாலும் செய்திசொல ஓநாய்வர வில்லை
அதுதொலைந் தாயிற்றாம் மறிக்கூட்ட மொன்றில்.

இச்செய்தி யிப்போயா ரெடுத்தேக வல்லார்
வாயாலே யாரிந்த வார்த்தைபோய்ச் சொல்வார்
பொற்பாவை சீரான புகழ்பெற்ற வீட்டில்
மடவாளின் கவினான வளர்தோட்டக் காட்டில்?

நரியொன்று இச்செய்தி நனிகொண்டு செல்லும்
வாய்கொண்டு இவ்வார்த்தை வடிவாகச் சொல்லும்
ஆனாலும் செய்திசொல நரிவந்த தில்லை
அதுதொலைந் தாயிற்றாம் வாத்துக்கள் நடுவில்.

இச்செய்தி யிப்போயா ரெடுத்தேக வல்லார்
வாயாலே யாரிந்த வார்த்தைபோய்ச் சொல்வார்
பொற்பாவை சீரான புகழ்பெற்ற வீட்டில்
மடவாளின் கவினான வளர்தோட்டக் காட்டில்?

முயலொன்று பெறும்செய்தி மொழிகொண்டு செல்லும்
வாய்கொண்டு இவ்வார்த்தை வடிவாகச் சொல்லும்
செய்தியது முயல்கொண்டு சென்றங்கு சொல்லும்:
"மனிதரிடை இச்செய்தி மறைந்திட மாட்டாதே. "

முயல்வந்து செய்திகொடு முனைந்தோடிச் சென்று
**'முழுநீளச் செவி' யாங்கு கதைகொண்டு போந்து
வளைவான கால்கொண்டு வலுவிரைவி லோடி
**'சிலுவைவாய்' யதுவாங்கு சென்றுகடி தடையும்
பொற்பாவை சீரான புகழ்பெற்ற வீட்டில்
மடவாளின் கவினான வளர்தோட்டக் காட்டில்.

வந்தமுயல் *சவுனாவின் மண்டபத்து ளோடி
மண்டபத்து வளைவினிலே பருங்கியது வாடி.
குளியலறை மண்டபத்தில் கோதையர்கள் கூடி
தூரிகையும் கையுமாய் வரவேற்றார் நாடி:
"சமையலாய் மாறவா சடிதியிலே வந்தாய்
பூத்தபெரு விழிகளினைப் பொரித்திடவா வந்தாய்
இல்லத்து எசமானர் இரவுணவுக் காக
இல்லையேல் எசமாட்டி நல்லுணவுக் காக
அல்லையேல் அருமைமகள் சிற்றுணவுக் காக
அதுவுமிலை யேல்மகனின் பகலுணவுக் காக?"

பின்னர் மெதுவாகப் பேசிற்று முயலும்
கூர்**'வட்ட விழி' விரிவாய்க் கூறிற்றே யாங்கு:
"பெரும்பாலும் இவண்வந்து பிசாசுதான் கூடும்
பெய்யுகல மதிற்சேர்ந்து கறிகளாய் மாறும்;
இப்போது நானிந்தச் செய்திகொடு வந்தேன்
என்வாயால் நானிந்த மொழியியம்பு கின்றேன்.
அழிந்ததுவே இங்கோயோர் அழகினிலும் அழகு
ஆ, அழிந்து போனதொரு **தகரமார் பணியே

வீழ்ந்ததுவே வெள்ளியினால் ஆனதொரு பட்டம்
**வெறிதாழ்ந்து போனதொரு செப்பினரும் பட்டி

அலைகடலின் ஆழத்தில் அதுதாழ்ந்து போச்சே
அலைதிரையின் அடிநீரில் அதுமாண்டு போச்சே
வெண்மீனின் நல்லதொரு சோதரியே யாக
மீனினத்தின் நடுவணொரு சோதரனே யாக."

*** *** ***

அன்னை அறிந்து அல்லலுற் றழுதாள்
புனற்றடம் போலப் புரண்டது விழிநீர்
இதன்பின் அன்னை இயம்பத் தொடங்கினள்
திரமிகு மொழிகளில் செப்பிட லானாள்:
"தவப்பே றில்லாத் தாயீர் வேண்டாம்
என்றும் ஆயுளில் இச்செயல் வேண்டாம்
தங்கள் மகளிரைத் தாலாட் டாதீர்
அவரவர் பிள்ளையை ஆராட் டாதீர்
மனம்மா றானால் வதுவைசெய் யாதீர்
என்போல் அதிட்டம் இல்லா அன்னையாய்,
பெண்களைச் சீராய்ப் பெரிதுதா லாட்டி
சிறியகோ ழிகளை விருப்புற வளர்த்தேன்."

அன்னை அழுதாள் கண்ணீர் உருண்டது
வருபுன லாகப் பெருகி வழிந்தது
நீல நிறத்து நெடுவிழி யிருந்து
காணாப் **பாக்கியக் கன்னங் களின்மேல்.

ஒருதுளி உருள உருண்டதின் னொன்று
வருபுனலாகப் பெருகி வழிந்தது
காணாப் பாக்கியக் கன்னத் தின்வழி
மிதந்து பரந்த வியன்மார் பகத்தே.

ஒருதுளி உருள உருண்டதின் னொன்று
வருபுனலாகப் பெருகி வழிந்தது
மிதந்து பரந்த வியன்மார் பூடே
மேதகு நெசவார் மேலுடை மீதே.

ஒருதுளி உருள உருண்டதின் னொன்று
வருபுனலாகப் பெருகி வழிந்தது
மேதகு நெசவார் மேலுடை வழியாய்
சிவப்பினில் இயைந்த செழுங்கா லுறைமேல்.

ஒருதுளி உருள உருண்டதின் னொன்று
வருபுனலாகப் பெருகி வழிந்தது
சிவப்பினில் இயைந்த செழுங்கா லுறைவழி
பொன்னிறம் மின்னும் புதுக்கா லுறைமேல்.

ஒருதுளி உருள உருண்டதின் னொன்று
வருபுனலாகப் பெருகி வழிந்தது
பொன்னிறம் மின்னும் புதுக்கா லுறைவழி
படிமிசை நிலத்தில் பாதத் தின்கீழ்
தரையில்ஓ டும்நீர் தரைக்காய்ச் சேர்ந்தது

நீரா யோடுநீர் நீர்க்காய்ச் சேர்ந்தது.

ஓடி நிலத்தில் ஒன்றாய்ச் சேர்ந்தநீர்
**ஓடு மாறாக உருக்கொளத் தொடங்கி
நதிகள் முன்றாய் நன்றாய் வளர்ந்தது
அவள்அழும் செயலால் ஆங்குகும் விழிநீர்
தலையினி லிருந்து தவழ்ந்திடு கண்ணீர்
கண்மட லிருந்து கழிந்திடு கண்ணீர்.

தோன்றிற் றப்பா ஒவ்வொரு நதியிலும்
முன்று பயங்கர முழுநீர் வீழ்ச்சிகள்,
ஒவ்வொரு வீழ்ச்சியில் உயரும் நுரையிலும்
முன்று பாறைகள் முறையாய் எழுந்தன,
ஒவ்வொரு பாறை யுளமுனை தோறும்
பைம்பொன் இயைந்த பருவதம் வந்தது,
ஒவ்வொரு பருவத உச்சியின் மேலும்
முன்று மிலாறு மரங்கள் முளைத்தன,
ஒவ்வொரு மிலாறு மரமுடி யினிலும்
அம்பொன் குயில்கள் அமர்ந்தன முன்று.

குயில்கள் இனிதே கூவத் தொடங்கின:
ஒருகுயில் இசைத்தது :'காதல்,காதல்!'
மறுகுயில் விளித்தது :'அன்னே,அன்பே!'
முன்றாம் குயிற்குரல் :'இன்பம்,இன்பம்!'

'காரல், காத' லென் றிசைத்த கருங்குயில்
முன்றுமா தங்கள் முழுதும் இசைத்தது
காதலை யறியாக் காரிகைக் காக
ஆழியில் உறங்கும் அரிவைக் காக.

'அன்பே, அன்பே'யென் றழைத்த குயிலது
ஆறுமா தங்கள் ஆங்கிருந் திசைத்தது
அமைதியை இழந்த அன்பருக் காக
துன்பத்து முழ்கிய துணைவருக் காக.

'இன்பம், இன்ப'மென் றிசைத்த குயிலது
வாழ்நாள் எல்லாம் மணிக்குரல் தந்தது
இன்பம் இழந்த இணையிலாத் தாய்க்காய்
விழிநீர் நாளெலாம் விடுமன் னைக்காய்.

இனிவரும் சொற்களில் இயம்பினள் அன்னை
கிளர்குயிற் கூவல் கேட்டபின் மொழிந்தாள் :
"அரும்பே றிழந்த அன்னையெக் காலும்
நெடுநாள் கூவல் நின்றுகேட் டிடற்க
காதிலே குயிலின் கானம் வீழ்கையில்
என்னுளம் அடித்து எழுந்து மாய்கிறது
கண்ணீர் விழிகளில் கழிந்துபாய் கிறது
கன்னம் வழியாய்ப் புனல்கழி கிறது
**பயற்றம் விதையிலும் பருத்தநீர்த் துளிகள்
**அவரையைக் காட்டிலும் கொழுத்த நீர்த்துளிகள்;

குறுகுமென் வாழ்நாள் கொடுமுழத் தளவு
குன்றுமென் உயரம் குறுஞ்சாண் அளவு
மேனி முழுவதும் மிகுபல மிழந்தேன்
வசந்தக் குயிலிசை வந்துவீழ் கையிலே. "

கலேவலா

பாடல் 5 - கடற்கன்னி

அடிகள் 1-72 : வைனாமொயினன் மீன் பிடிக்கச் சென்று யொவுகாஹொனனின் சகோதரி ஐனோவை மீன் வடிவில் பிடித்துத் தோணியில் ஏற்றுகிறான்.

அடிகள் 73-133 : அவன் அந்த மீனை வெட்டப்போகும் சமயத்தில், அவள் நழுவி நீரில் குதித்துத் தான் யார் என்று சொல்கிறாள்.

அடிகள் 134-163 : வைனாமொயினன் அந்த மீனை மீண்டும் பிடிக்க முயன்று தோல்வியடைகிறான்.
அடிகள் 164-241 : மனமுடைந்து வீடு திரும்பிய அவனை, வடநாட்டு மங்கையை நேசிக்கும்படி அவனுடைய காலம் சென்ற தாய் ஆலோசனை கூறுகிறாள்.

செய்தி எங்கணும் செறிந்து சென்றது
பாரெலாம் புதினம் பரவிச் சென்றது
நீருக் கடியில் நித்திரை செய்த
அழகிய நங்கை அழிந்த செய்தியே.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
பரவும் செய்தியாற் பெரிதும் வருந்தினன்;
மாலையில் அழுதான் காலையில் அழுதான்
இரவுகள் எல்லாம் இரங்கி அழுதான்
வியனெழில் நங்கை வீழ்ந்தது கேட்டு
தூயவள் நீரில் துயில்வதைக் கேட்டு
சேற்றுக் கடலுள் சென்றதை யறிந்து
அலையின் அடியில் அமிழ்ந்ததை அறிந்து.

சுடுநெடு மூச்சும் துயருமாய்ச் சென்றான்
இதயம் நிறைய இன்னலைச் சுமந்து
நீலக் கடலின் நீண்ட கரைகளில்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
**"கனவின் சக்திநின் கனவினைப் புகல்க
காசினி நிறைந்தநின் காட்சியைப் புகல்க
*அஹ்தோ வாழும் அகமெங் குளது
*வெல்லமோ மகளிர்தம் நல்லுலா வெவ்விடம்?"

கனவின் சக்திதன் கனவினைச் சொன்னது
காசினி நிறைந்த காட்சியைச் சொன்னது:
"அஹ்தோ வாழும் அகமாங் குளது
வெல்லமோ மகளிர்தம் நல்லுலா வவ்விடம்
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள தீவதன் கரையில்

ஆழத் தடியினில் அலைகளின் கீழே
மிகுகருஞ் சகதி மேடையின் மேலே.
அதுவே அஹ்தோ அமைவசிப் பிடமாம்
வெல்லமோ மகளிர் நல்லுலா விடமாம்

அகலம் குறைந்ததோர் ஒடுங்கிய மாடம்
அளவில் சிறியதோர் குறுகிய கூடம்
பளிங்குக் கற்களின் படர்சுவர்ப் பக்கம்
கனத்துத் தடித்தகற் கட்டிகள் நடுவண்."

முதிய வைனா மொயினனப் போது
**தோணித் துறைக்குத் துரிதமாய்ச் சென்று
மீன்பிடிக் கயிற்றை விழியுறல் செய்து
மீன்பிடி முளையை மீளவும் நோக்கி
பருமுளை ஒன்றைப் பையிலே போட்டு
கரும்பொன் முளையைச் கைச்சாக் கிட்டான்.40
படகின் துடுப்பைப் பதமாய்ச் செலுத்தி
திண்ணமா யடைந்தான் தீவின் கரையை
புகார்படி கடலதன் புணர்முனை நுனியை
செறிபனிப் புகாருள தீவதன் கரையை.

மீன்பிடி முளையுடன் விழித்தாங் கிருந்தனன்
மீன்பிடி கயிற்றுடன் விழித்தாங் கிருந்தனன்
அசைத்தனன் கைவலை அதனைமுன் பின்னாய்
தூண்டில் இரையினைத் தூரத்து வீசினன்
அசைத்து முன்பின் அதனை நகர்த்தினன்;
செப்பின் பிடிகோல் செறிநடுக் குற்றது 50
வெண்பொற் கயிற்றினில் கிண்கிணி யோசை
பொன்னணிக் கோலினில் இன்னிசை யெழுந்தது.

பலநாள் கழிந்து ஒருநாள் நடந்தது
பலவிடி வகன்று ஒருவிடி வியன்றது
மீன்பிடி முள்ளை மீனொன் றெடுத்தது
தொங்கிய தம்மீன் தொடுமுள் முனையில்;
தோணியின் உள்ளே மீனை இழுத்தனன்
தோணித் தட்டிலே தூக்கிப் போட்டனன்.

தீரமாய்ப் பார்த்தனன் திருப்பிப் புரட்டினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:60
"உயர்மீ னினத்தில் ஒருவகை மீனிது
இதுபோல் மீனை என்றுமே பார்த்திலேன்!
**வெண்மீ னதைவிட மென்மையில் மிகுதி
**நன்னீர் மீனிலும் நன்கமை வெண்மை
**கோலாச்சி மீனிலும் குறைந்தது கருமை
மிகுசினை மீனெனின் மென்மையாய்க் காணேன்
ஆணென நோக்கிலும் அவ்வியை பில்லை
இதன்தலை மொட்டை இளம்பெண் ணல்ல
**அப்புவாழ் மகளெனின் அரைப்பட்டி எங்கோ!
இல்லப் பறவையா இல்லையே காதுகள்! 70
**ஆழிமீன் போல அதிகஒற் றுமைகள்
அலைகளின் அடியிலே உலாவரும் **மீனிது."

வைனா மொயினனின் வாள்இடுப் பினிலே
வெள்ளியின் நிறத்து மிகுகூர் மையது
பக்கத் திருந்து கத்தியை இழுத்தான்

விரியுறை யிருந்து வெண்முனைக் கத்தியை
கொழுமீன் கிழித்துக் கூறுகள் போட
தொடுமீன் வெட்டித் துண்டுதுண் டாக்க
உதய காலை உணவுடன் சேர்த்து
காலை யுணவாய்க் களிப்புடன் அமைக்க
நண்பகல் உணவாய் நன்றாய்ச் சமைக்க
இரவின் உணவாய் இனிதே யாக்க.

விரும்பினன் வஞ்சிர மீனினை வெட்ட
கத்தியால் கிழிக்கக் கருதி யிருந்தனன்;
விரைந்தது வஞ்சிர மீனும் கடலில்
எழில்மிகு மீனும் எகிறிப் பாய்ந்தது
செந்நிறத் தோணியின் திகழ்தட் டிருந்து
வைனா மொயினனின் வன்பட கிருந்து.
அப்போ ததுதன் அருஞ்சிர முயர்த்தி
துலங்கும் வலப்புறத் தோளையும் உயர்த்தி
ஐந்தாவ தாய்வரும் அலையதன் மேலே
ஆறாவ தாயுயர் அலையதன் மேலே
வியன்வலக் கரத்தை வெளியிலே காட்டி
இடதுகா லதையும் எடுத்துயர்த் தியது
ஏழாவ தாயுயர் எழிற்றிரை யதன்மேல்
உயர்ந்துபின் வந்த ஒன்பதாம் அலையில்.

அவ்வா றிருந்து இவ்வித மொழிகளில்
உரைத்தே அதுதான் உரைசெய லானது:
"ஓ,நீ முதிய வைனா மொயின!
இங்குநான் வந்தது இதற்கா யல்ல
மிளிர்வஞ் சிரமீன் வெட்டுதற் கல்ல
கொழுமீன் போலெனைக் கூறிடற் கல்ல
உனது காலை உணவுக் கல்ல
உதயகா லத்து உணவுக் கல்ல
பருவஞ் சிரமீன் பகலுண வல்ல
அரும்இர வுணவாய் ஆவதற் கல்ல."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"அவ்வா றாயின் எதற்காய் வந்தாய்?"

"இதற்கா யேதான் இங்குனை யடைந்தேன்
நேர்கை யணைப்பில் நின்கோ ழியதாய்
என்றுமுன் அருகில் இருப்பதற் காக
இல்லத் துணையென முழங்கா லிருக்க
படுக்கையை விரித்துப் பக்குவம் செய்ய
தலையணை யெடுத்துத் தனியாய் வைக்க
தோன்றுநின் சிறுகுடில் சுத்தம தாக்க
நிலத்தைப் பெருக்கி நலத்தைப் பேண
வீட்டுள் ளடுப்பை மூட்டிவைத் திருக்க
விளக்கினை ஏற்றி விளங்கவைத் திருக்க
தொடுபரும் ரொட்டிகள் சுட்டுவைத் திருக்க
அடர்தே னடைகளை ஆக்கிவைத் திருக்க
**பானக் கலயம் படிசுமந் தேக

உனக்காம் உணவினை ஒழுங்குசெய் தமைக்க.
வருநான் கடல்வாழ் வஞ்சிர மல்ல
விரிதிரை யடிவாழ் மீனின மல்ல
நானோர் இளம்பெண் நல்லிள அணங்கு
இளமை யொவுகா ஹைனன் சோதரி
வாழ்நாள் எலாம்நீ தேடிய மங்கை
வாழ்க்கை முழுதும்(நீ) மனங்கொளும் வனிதை.

ஏறும் வயோதிபத் திழிந்த மனிதனே,
மடத்தனம் மிகுந்த வைனா மொயினனே,
ஆதரிப் பதற்கு அறியாய் நீயே
வெல்ல மோவின் வியன்னீர் நங்கையை
அஹ்தோ பெற்ற அழகிய பிள்ளையை."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்:
"ஓ,நீ யொவுகா ஹைனனின் சோதரி
வருவாய் மீண்டும் மற்றொரு முறையே!"

வந்திலள் மீண்டும் மங்கை ஒருமுறை
வாழ்நாள் முழுக்க வரவே யில்லை
இப்போது திரும்பி இளங்கொடி சென்றாள்
மிகுபுனற் பரப்பில் விலகி மறைந்தாள்
படர்ஒளி விளங்கும் பாறைகள் உள்ளே
ஈரல் நிறத்துப் பாறைப் பிளவிடை.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
எண்ணினன் கருத்தில் இவற்றையப் போது
என்ன செய்வது எங்ஙனம் வாழ்வது;
பட்டுநூல் கொண்டொரு பருவலை பின்னினன்
நீரதன் குறுக்கிலும் நேரிலும் வீசினன்
வீசினன் **நீரிணை மீண்டும் வீசினன்
அமைதிநீர்ப் பரப்பிடை அசைத்தசைத் திழுத்தனன்
பருவஞ் சிரம்வாழ் பாறைகள் நடுவில்
வைனோ நிலத்திடை வயங்குநீர்ப் பரப்பில்
கலேவலாப் பகுதியின் கரைபுனல் முனையில்
ஆங்கிருண் டியைந்திடும் ஆழத்து நீரில்
விரிந்து படர்ந்து செறிந்தநீர திலே
யொவுகோ நாட்டின் உறுநதி யனைத்திலும்
லாப்பு லாந்தின் வளைகுடாக் கரைகளில்.
உறுபல் லினமீன் பெரிதும் பிடித்தனன்
அகல்புனல் நிறைந்த அனைத்தையும் பிடித்தனன்
தேடுமீன் மட்டும்கை கூடவே யில்லை
இதயத் திருந்தமீன் எதிர்ப்பட வில்லை
வெல்ல மோவின் விரிபுனல் மங்கை
அஹ்தோ பெற்ற அழகிய பிள்ளை.

முதிய வைனா மொயினன் அதன்பின்
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
தொப்பியைச் சற்றுத் தொடுபுறம் சாய்த்து

இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"ஓகோ, நானொரு உயர்பைத் தியந்தான்
ஆண்மைக் கேற்ற அறிவற் றவன்நான்
முன்னொரு நாள்மனம் என்னிட மிருந்தது
அந்த மனமெலாம் சிந்தனா சக்தியே
உயர்ந்தசிந் தனைகள் நிறைந்து கிடந்த
அதுவெலாம் முன்னர் அன்றொரு நாளில்;
எனினும் இன்றைக் கிந்த நாட்களில்
இன்னல் நிறைந்த இன்றைய நாட்களில்
வயதும் வலிமையும் வாடியநாட் களிலே
சிந்தனை யனைத்துமே சீரழிந் தொழிந்தன
உள்ளுணர் வதன்தரம் உடைந்துகாண் கிறது
எல்லாம் எதிர்மா றியங்குகின் றனவே.

பல்லாண் டவட்காய்ப் பார்த்துநான் இருந்தேன்
வாழ்க்கையிற் பாதிநாள் வளர்விருப் புற்றேன்
வெல்ல மோவின் நற்புனல் மங்கை
கடைசியிற் புனல்தரு கவினுறு நங்கை
என்றுமே தோழியாய் எனக்கினி யவளாய்
வாழ்நாள் முழுவதும் மனையாள் ஆக
போட்டஎன் தூண்டிலைப் பார்த்துவந் தெடுத்தாள்
தோணியில் எனக்காய்த் துள்ளிவந் தமர்ந்தாள்;
அவளைவைத் திருக்கும் அறம்தெரிந் திலன்யான்
எடுத்தில் லடைந்திட இயலவே யில்லை
ஆனதால் மீண்டும் அவள்நீ ரடைந்தாள்
அலைகளின் ஆழத் தடிமிசை சென்றாள்."

*** *** ***

சிறுதூரம் அப்படியே சென்றான் அவன்பயணம்
துயரநெடு மூச்சோடும் சோர்ந்து நடந்துவந்தான்
அதன்பின் அவன்வீடு அதுநோக்கி வந்திட்டான்
வரும்போது இவ்வாறு வாஞ்சையொடு கூறிவந்தான்:
"குயிலினங்கள் முன்நாளில் கூடிவந்து கூவுமிங்கு
அந்நாள் அவைஎனது அகமகிழ்ச்சிக் காய்க்கூவும்
முன்னர் அவைகூவும் முழுக்காலை மாலையிலும்
நண்பகல் வேளையிலும் நன்கொருகால் கூவிடுமே,
எதற்காய் இனியகுரல் இன்றுவளம் மாறியது?
எழிலார் குயிலின்று எவ்வண்ணம் மாறியது?
இடர்வந் தழித்ததுவே இனிமைதரும் நற்குரலை
துயர்வந்து தீய்த்ததுவே தோய்ந்தநறை இன்குரலை
ஆனதினால் கூவுவதே இல்லையவை இப்போது
கதிரவன் சாய்பொழுதும் கண்டுஅவை கூவவில்லை
மாலை யிலேவந்து மகிழ்விப்ப தில்லையென்னை
காலை யிலேவந்து களிசேர்ப்ப தில்லையவை.

இதன்மேலே சிந்திக்க எனக்கெதுவு மில்லையந்தோ
எவ்வண் இருப்பதுவோ எவ்விதம்யான் வாழ்வதுவோ
வாழ்க்கைதான் இவ்வுலகில் வாகாய் நடப்பதெல்லாம்
இந்நாட்டின் நற்பயணம் இயல்பாய் நடக்கையிலே;

இப்போ துயிரோடு என்தாய் இருப்பாளேல்
என்னைப் பயந்தவள்தான் தன்னுணர்வோ டிங்கிருந்தால்
இயலும் அவளாலே எடுத்துண்மை தான்சொல்ல
எவ்வாறு தாங்கி இவ்வுலகில் வாழ்வதென்று
இன்னலுற்றுப் போயுடைந்த இதயம் தனையின்று
துயரமுற்றுத் தீய்ந்து தொலைந்த அதைஎன்று
இடுக்கண் மிகவுடைய இத்தகைய நாட்களிலே
இடும்பைவந் துற்ற இத்தகைய போழ்தினிலே."

அன்னையிதைக் கல்லறைக்குள் ஆங்கிருந்து கேட்டனளே
மென்திரையின் கீழிருந்து விடையதனைத் தந்தாளே:
"உன்னன்னை இன்னும் உயிரோடே தானுள்ளாள்
உன்னையே ஈன்றெடுத்தாள் உள்ளாள் விழிப்போடு
இதுதான் அவள்உனக்கு எடுத்துகந்து சொல்லுவது
எங்ஙனம்தான் தாங்குவது இந்தத் துயரையென்று
இன்னலுற்றுப் போயுடைந்த இதயம் தனையின்று
துயரமுற்றுத் தீய்ந்து தொலைந்த அதைஎன்று
இடுக்கண் மிகவுடைய இத்தகைய நாட்களிலே
இடும்பைவந் துற்ற இத்தகைய போழ்தினிலே;
வடபால் மகளிர் வாழிடத்து நீசெல்வாய்
அங்கே மகளிர் அழகில் மிகச்சிறந்தார்
அங்கே இருமடங்கு அழகுடைய நங்கையராம்
உயிர்ப்பு ஐந்தாறு உயர்மடங்கு உள்ளவராம்
யொவுகோவின் சோம்பல் நாரியர்போல் இல்லையவர்
*லாப்லாந்தின் பாங்கறியாப் பிள்ளைகளே அல்லர்அவர்.

என்மகனே அங்கே எடுப்பாய் மனையாளை
வடபால் எழில்சிறந்த மங்கையர்கள் தம்மிடையே
அழகு நயனம் அமைந்தவளை நீயடைவாய்
பார்வைக் கழகுப் பேரழகி யோர்பெண்ணை
கடுகதியில் செல்லும் கால்கள் உடையாளை
சுறுசுறுப்பு என்றும் தொடுசெயலில் சேர்ந்தாளை."

கலேவலா

பாடல் 6 - சகோதரனின் பழிவாங்கல்

அடிகள் 1-78 : வைனாமொயினனில் வெறுப்புற்ற யொவுகாஹைனன் வைனாமொயினனின் வடநாட்டுப் பயணத்தின்போது வழியில் காத்திருக்கிறான்.

அடிகள் 79-182 : வைனாமொயினன் வரும்பொழுது யொவுகாஹைனன் அம்பு எய்கிறான்; ஆனால் குதிரை மட்டுமே இறக்கிறது.

அடிகள் 183-234 : வைனாமொயினன் நீரில் விழுந்து கடலுக்குள் அடித்துச் செல்லப்படுகிறான். வைனாமொயினனை எய்ததற்காக யொவுகாஹைனன் மகிழ்ச்சியடைகிறான்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
ஒருபய ணம்செய உடன்முடி வெடுத்தான்
கிளர்குளிர் நிறைந்த கிராமம் அதற்கு
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே.

வழுது **நிறப்பொலிப் புரவியை எடுத்தான்
பயற்றம் **தண்டுப் பதநிறக் குதிரையை
வாயிலே பொற்கடி வாளமும் மாட்டி
தலையிலே வெள்ளியின் தலையணி சூட்டி
வியன்முது கேறி மெதுவா யமர்ந்து
அகற்றிப் பரப்பி அவன்கால் போட்டு
ஆரம்ப மானது அரியதோர் பயணம்
மெதுவாய்ப் பயணம் மிகநீண் டதுவாம்
வழுது நிறத்து வான்பொலிப் பரியில்
பயற்றம் தண்டுப் பதநிறக் குதிரை.

படர்ந்தான் வைனோ பரந்த நிலத்திடை
கலேவலாப் பகுதிக் கடும்புதர்ப் பாதை
நிமிர்பரி விரைந்தது நீண்டது பயணம்
வீடுபின் தங்க மிகுவழி குறுக.
கடல்கள் யாவையும் கடந்தே சென்று
வெட்ட வெளிகளில் விரைந்திட லானான்
எழுபரிக் குளம்பில் ஈரம் படாமல்
அதன்கால் நீரில் அமிழ்ந்துபோ காமல்.

இளைஞன் யொவுகா ஹைனன் என்பவன்
லாப்பு லாந்தினன் இளைத்த இளைஞன்
நெஞ்சிலே வன்மம் நெடுநாள் வைத்து
அவனுளம் நிறைய அழுக்கா றுற்றான்
முதிய வைனா மொயினன் மீது
படர்புகழ் நிலைபெறும் பாடகன் மீது.

மிகுகனக் குறுக்கு வில்லொன் றியற்றி
அதற்கென அமைத்தான் அழகுறும் அம்பு ;
உரம்பெறும் இரும்பில் உறுசரம் செய்தான்

செம்பிலாம் தகட்டினைச் சேர்த்துமேற் பதித்தான்
பொன்னால் அதையலங் காரமே புனைந்தான்
வெள்ளியை உருக்கி வேலைகள் புரிந்தான்.

தேவை நாணொன்று தேடல்எங் ஙனமோ
சிலைக்குநாண் எங்குதான் சென்றுபெற் றிடலாம்?
**அரக்கராம் விலங்கதன் நரம்புகள் எடுத்தான்
**பிசாசமாம் செடியதன் நாரிலே தொடுத்தான்.

வில்லின் வேலை விரைவாய் முடிந்தது
குறுக்குவில் நிறைவைக் கொண்டிட லானது
பார்வைக்கு வில்லும் பகட்டாய் இருந்தது
செலவுக்கு ஏற்பச் செம்மையாய்த் தெரிந்தது.
வில்லின் முதுகில் விறற்பரி** நின்றது
பரியின் குட்டியோ பாய்ந்தது அடியில்
சிலையின் வளைவிலே சேயிழை உறங்கினள்
பதுங்கியே முதுகில் படுத்திருந் ததுமுயல்.

கணைகளைக் கொஞ்சம் கவனமாய்ச் செய்தான்
அம்புகள் அனைத்திலும் அமைந்தமுச் சிறகுகள்
அடிப்புறம் சிந்துர மரத்தினால் ஆனது
முனைகள் **மரப்பிசி னாலே முடிந்தன
வாளிகள் இங்ஙனம் வடிவாய் முடிந்ததும்
கட்டினான் இறகுகள் கணைகளின் மீது
**தூக்கணங் குருவியின் தோகை கொஞ்சமாம்
**சிட்டுக் குருவியின் சிறகுகள் கொஞ்சமாம்.

வாளிகள் அனைத்தையும் வயிர மாக்கினான்
கணைகள் யாவையும் கடுங்கூ ராக்கினான்
ஊரும் பிராணியின் காரிருள் நஞ்சுடன்
உரகத்து நச்சு உதிரம் பூசினன்.
மொட்டையம் புகளை முழுத்தயா ராக்கினன்
வளைத்து இழுக்கவில் வலுதயா ரானது
வைனா மொயினனின் வழிபார்த் திருந்தான்
**அமைதிநீர் மனிதனை அங்கெதிர் பார்த்தான்
மாலையில் பார்த்தான் காலையில் பார்த்தான்
பார்த்தான் நண்பகல் நேரத் தொருமுறை.

பார்த்தான் வைனா மொயினனைப் பலகால்
பலகால் களைப்பே இன்றிப் பார்த்தான்
பலகணி யிருந்தும் பலதிசை பார்த்தான்
சின்னாள் இருந்தான் சிறுகுடிற் பின்புறம்
தெருவழி வந்தே செவிகொடு கேட்டான்
வயற்புறம் வந்து வறிதுகாத் திருந்தான்
முதுகினில் அம்புறைத் தூணிமொய்த் திருந்தது
நல்வில் தயாராய் நற்புயத் திருந்தது.

இன்னமும் இன்னமும் எதிர்பார்த் திருந்தான்
பக்கத்து வீட்டின் பக்கலில் நின்றான்
நின்றனன் மேட்டின் நிமிர்முடி யேறி

நின்றான் வளைவிலே நிலத்து முனையினில்
நின்றான் நுரைத்தநீர் வீழ்ச்சியின் அருகில்
நின்றான் புனித நதியின் கீழ்ப்புறம்.

பலநாள் கழிந்து ஒருநாள் நடந்தது
பலவிடி வகன்று ஒருவிடி வியன்றது
வடமேற் கவன்விழி வைத்தவே ளையிலே
செங்கதி ரோன்கீழ் சென்னியைத் திருப்பினன்
கரும்புள்ளி யொன்று கடலில் தெரிந்தது
நிமிர்நுரை திரைமேல் நீலமாய்த் தெரிந்தது;
"கிழக்கே தெரிவது கிளர்கார்க் கூட்டமா
வடகீழ்க் கரையிலே வருகதிர் உதயமா?"

கிழக்கே தெரிவது கிளர்கார் அல்லவே
வடகீழ்க் கரையிலே வருகதிர் அல்லவே
வந்தவன் முதிய வைனா மொயினன்
என்றுமே நிலைத்த இசைப்பா டகனவன்
விரிவட பால்நிலம் விரைந்து செல்பவன்
காரிருள் புவிக்குக் கடுகிச் செல்பவன்
**வழுது நிறப்பொலிப் புறவியிற் சென்றான்
பயற்றம் தண்டுப் பதநிறக் குதிரையில்.

பின்னர் இளைஞன் யொவுகா ஹைனன்
லாப்பு லாந்தின் இளைத்த இளைஞன்
செய்தனன் தயார்நிலை தீயுமிழ் வில்லினை
தேர்ந்து எடுத்தனன் சிறந்த கணையினை
வைனா மொயினனின் வன்தலை நோக்கி
அமைதிநீர் மனிதனை அழிப்பதற் காக.

விரைந்து வந்து வினவினள் அன்னை
விரைந்தாள் பெற்றவள் விசாரணை செய்தாள்:
"குறுக்கு வில்லதன் இலக்கு எவர்க்கு
இரும்பு வில்லினை எடுத்தது எதற்கு?"

அப்பொழு திளைஞன் யொவுகா ஹைனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"குறுக்கு வில்லதன் இலக்கு அவனே
இரும்பு வில்லினை எடுத்ததும் இதற்கே
வைனா மொயினன் அவன்வன் தலைக்கு
அமைதிநீர் மனிதனை அழிப்பதற் காக;
முதிய வைனா மொயினனை எய்வேன்
என்றுமே நிலைத்த இசைப்பா டகனை
இதயத் தூடாய் ஈரலின் ஊடாய்
தோள்தசை ஊடாய்த் துளைப்பதற் காக".

தாயார் எய்வதைத் தடுத்து நின்றனள்
இங்ஙனம் தடுத்தவள் இயம்பினள் மீண்டும்:
"வைனா மொயினனை வாளிகொண் டெய்யேல்
கலேவலா மனிதனைக் கனன்றுகொல் லாதே
வைனோ என்பவன் மாபெரும் உறவினன்

மைத்துனன் சோதரி மைந்தனே **யாவான்.

வைனா மொயினனை வாளிகொண் டெய்தால்
கலேவலா மனிதனைக் கணையால் வீழ்த்தினால்
இன்பம் உலகத் திருந்தே ஒழியும்
பாடல்கள் அழியும் பாரினில் இருந்தே
இன்பமே உலகின் இணையற் றதுவாம்
பாடல்கள் பார்மிசைப் பயனுள தாகும்
**இறந்தோர் உலகில் இருப்பதைப் பார்க்கிலும்
**செத்தோர் உலகினில் செறிந்ததைப் பார்க்கிலும்."

அப்போ திளைஞன் யொவுகா ஹைனன்
சிறிது நேரம் சிந்தனை செய்தான்
கொஞ்ச நேரம் நின்றுயோ சித்தான்
செங்கரம் எய்தலைச் செய்யச் சொன்னது
ஒருகை எடுத்தது மறுகை தடுத்தது
உந்துதல் செய்தன உறுவிரல் நரம்புகள்.

முடிவினில் இவ்விதம் மொழியத் தொடங்கினன்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"தொல்லையில் இருதரம் தொலைந்தது போலவே
உலகில்எம் இன்பமே ஒழிந்து போகட்டும்
பாடல்கள் யாவும்இப் பாரைநீங் கட்டும்
எய்வது நிச்சயம் எய்தலைத் தவிரேன்."

பெரிதாய்ப் பயங்கரப் பேர்வில் வளைத்து
செப்பின் சிலையைச் சிறிதே இழுத்து
இடமுழங் காலில் எடுத்துமேல் வைத்து
வலது பாதத்தின் வலுவடித் தாங்கி
அம்புறு தூணியில் அம்பொன் றெடுத்தான்
பொற்சிறை மூன்று பொருந்திய கணையை
விரைந்து செல்லும் விறல்வெங் கணையை
கடுங்கூர் மிகுந்த கணையை எடுத்து
சிலையின் பள்ளம் திணிப்புற வைத்து
நாணுடன் கணையை நன்றாய்ச் சேர்த்தான்.

பின்னர் பயங்கரப் பெருஞ்சிலை தூக்கி
வலது தோளில் வலுவுடன் வைத்து
வசதியாய் வில்லை வளைத்திட நின்றான்
வைனா மொயினனை வதைப்பதற் காக,
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"மாய்ப்பாய், மிலாறு மரத்தின் முனையே!
தைப்பாய், தேவ தாருவின் தண்டே!
அறைவாய், பிசாசுச் செடியின் நாணே!
தழுவுமென் கரங்கள் தாழ்ந்தநே ரத்தில்
உறுசரம் எழுந்து உயர்ந்துபோ கட்டும்,
உந்துமென் கரங்கள் உயர்ந்த வேளையில்
சரிந்து கணைகள் தாழ்ந்துபோ கட்டும்!"

விரல்களை வில்லின் விசையினில் வைத்தான்

அவனும் முதற்கணை அதனை ஏவினான்
உயரப் பறந்தெழுந் துடன்அது சென்றது
சிரசின் மேலே திகழ்வான் நோக்கி
முகிலை முட்டி மோதிச் சென்றது
சிதறிய முகிலில் சென்றதே சுழன்று.

அங்ஙனம் எய்தனன் அதுபணிந் திலதால்
இன்னொரு கணையை எடுத்துச் செலுத்தினன்
தாவிய கணைமிகத் தாழ்ந்தே சென்றது
கிளர்மண் தாயின் கீழாய்ச் சென்றது
அன்னை பூமியோ அழிவின் பக்கம்
பெருமண் மேடெலாம் பிளக்கப் பார்த்தன.

மீண்டும் எய்தனன் மூன்றாங் கணையை
மூன்றாம் தடவை முழுநேர்ப் பாய்ச்சல்
**நீல மாட்டின் தோளைத் துளைத்து
முதிய வைனா மொயினனின் கீழே;
வழுது நிறப்பொலிப் புரவியை எய்தான்
பயற்றம் தண்டுப் பதநிறக் குதிரையை
தோளின் கீழே தொடுதிசைப் பகுதி
இடது பக்கத்து இயல்முன் காலில்.

முதிய வைனா மொயினனப் போது
விரல்கள் தாழ்ந்து விரிபுனல் நனைய
கைகள் திரும்பி கடல்அலை தோய
முட்டி நுரையில் மூழ்கிட வீழ்ந்தான்
நீல மாட்டின் நிமிர்முது கிருந்து
பயற்றந் தண்டுப் பரிமிசை இருந்து.
அப்பொழு தொருபெரும் அடர்காற் றெழுந்தது
கடல்மிசைக் கொடியதோர் கருந்திரை யெழுந்தது
வைனா மொயினனை வளமாய்த் தாங்கி
கரையிருந் துதைத்துக் கடலுட் சென்றது
அகன்று பரந்த அந்நீர்ப் பரப்பில்
திறந்து பரந்த திகழ்நீர்ப் பரப்பில்.

அத்துடன் இளைஞன் யொவுகா ஹைனன்
பெருமையாய் நாவை அசைத்துப் பேசினன்:
"ஓ,நீ இல்லை வைனா மொயினன்
ஒளிர்விழி யுடனே உயிரோ டில்லை
வளருமிவ் வுலகின் வாழ்நாள் என்றும்
பொன்னிலாத் திகழும் பொற்பொழு தெல்லாம்
வைனோ நிலத்து வன்பரப் பேகுவாய்
கலேவலா எனும்புதர்க் கவின்சம வெளி.

அங்கே ஆறு ஆண்டுகள் உழல்வாய்
அலைந்து உழல்வாய் அருமேழ் கோடைகள்
எட்டு ஆண்டுகள் இன்னலை அடைவாய்
அகன்று பரந்த அகல்நீர்ப் பரப்பில்
இந்த அகன்ற இருநீர்ப் பரப்பில்
ஆறு ஆண்டுகள் அலைவாய் மரம்போல்

தேவ தாருபோல் ஏழாண் டிருப்பாய்
எட்டாண் டிறுமரக் கட்டைபோல் ஆவாய்!"

அதற்கு பின்னர் அவன்இல் சென்றான்
அங்கே அன்னை அவனிடம் கேட்டாள்:
"வைனா மொயினனை எய்தது உண்டா
கலேவா மைந்தனைக் கொலைசெய் தாயா?"

நன்றென இளைஞன் யொவுகா ஹைனன்
மறுமொழி யாக வழங்கினன் ஒருசொல்:
"வைனா மொயினனை எய்ததும் உண்டு
கலேவா மனிதனைக் கவிழ்த்ததும் உண்டு
ஆழ்கடல் பெருக்க அவனை அனுப்பினேன்
அலைகளைக் கூட்ட அவனை அனுப்பினேன்;

திரைநுரை நிறைந்த திகழ்பெருங் கடலில்
அலையெழுந் தெறியும் ஆழக் கடலில்
முதியமா னிடன்தன் முழுவிரல் தாழ்த்தி
கரங்களைத் திருப்பிக் கடல்நீர் அமிழ்ந்து
பக்கமாய் நகர்ந்து புக்கினான் புதைந்தே
முதுகினில் தங்கி மூழ்கினான் ஆழம்
அலைகளின் மேலே உழலுவான் அங்கே
ஒதுங்குவான் அங்கே உயர்நுரைத் திரைகளில்."

ஆயினும் இவ்விதம் அன்னையும் சொன்னாள்:
"சிறுபே தாய்நீ செய்தது தீவினை
இங்ஙனம் வைனா மொயினனை எய்தது
வழங்கிய கலேவா மனிதனை அழித்தது
உயர்வுறும் அமைதிநீர் ஒருதனி மனிதனை
கலேவலா பெற்றநற் கவின்திறல் வீரனை."

கலேவலா

பாடல் 7 - வைனாமொயினனும் லொவ்ஹியும்

அடிகள் 1 - 88 : வைனாமொயினன் பல நாட்கள் கடலிலே மிதக்கிறான்.

அடிகள் 89 - 274 : முன்னொரு காலத்தில் வைனாமொயினன் காட்டை அழித்தபொழுது கழுகு வந்து அமர்வதற்காக ஒரு மரத்தை மட்டும் விட்டிருந்தான். நன்றியுள்ள அந்த கழுகு வைனாமொயினனைத் தனது சிறகில் சுமந்து சென்று வடநாட்டில் சேர்க்கிறது. வடநாட்டுத் தலைவி அவனைத் தனது வசிப்பிடத்துக்கு அழைத்துச் சென்று ஆறுதல் தருகிறாள்.

அடிகள் 275 - 322 : வைனாமொயினன் தனது சொந்த நாட்டுக்குச் செல்ல விரும்புகிறான். அவன் சம்போவைச் செய்து தந்தால், சொந்த நாட்டுக்கு அனுப்புவதோடு தனது மகளையும் விவாகம் செய்து தருவதாக வடநாட்டுத் தலைவி கூறுகிறாள்.

அடிகள் 323 - 368 : வைனாமொயினன் தான் சொந்த நாட்டுக்குச் சென்றதும் சம்போவைச் செய்வதற்குக் கொல்ல வேலைக் கலைஞன் இல்மரினனை அனுப்புவதாக வாக்களிக்கிறான். வடநாட்டுத் தலைவியிடம் ஒரு குதிரையையும் வண்டியையும் பெற்றுச் சொந்த நாட்டுக்குப் புறப்படுகிறான்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நீண்ட கடலிடை நீந்திச் சென்றனன்
உழுத்த மரமென உடலசைத் தேகினன்
திரிந்தனன் உழுத்த தேவதா(ரு) மரம்போல்
கோடையாம் காலக் கொளும்அறு நாட்களாய்
அடுத்து வந்தூர்ந்த ஆறு இரவுகள்
அவனுக்கு முன்னால் அகன்ற நீர்ப்பரப்பு
அவனின் பின்னே தெளிந்தநல் வானம்.
இரவுகள் மீண்டும் இரண்டு நீந்தினான்
நீந்தினான் இரண்டு நீண்ட பகலிலும்
நீந்தினான் ஒன்பதாம் நிசிபுலர் வரையிலும்
அவ்விதம் எட்டாம் அப்பகல் கழிந்ததும்
வந்ததே உடலின் வாதைகள் பெரிதாய்
வாதையும் வளர்ந்து வேதனை தந்தது
ஏனெனில் கால்களில் இல்லையாம் நகங்கள்
பொலிவுறு கைவிரற் பொருத்துகள் இல்லை.

முதிய வைனா மொயினன் பின்னர்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"துயரப் பிறவிநான் துர்ப்பாக் கியவான்
திணிவுறும் துன்பத் தீதுகொள் சென்மம்
உரிமைகொள் நாடகன் றொதுங்கிச் செல்கிறேன்
வாழ்ந்தநல் நாட்டினை வலுவில் இழக்கிறேன்
வாழ்நாள் முழுவதும் வானதன் கீழே
தினகரன் திங்களின் திறந்த வெளியிலே
வெங்கால் எங்ஙணும் விரட்டிய நிலையிலே
தொடுதிரை திரண்டு துரத்தும் தன்மையில்

அகன்று பரந்த அந்நீர்ப் பரப்பில்
விரிந்து பரந்த வியன்கடல் மடியில்;
குளிரில் விறைத்துக் கொடுகிக் கிடக்கிறேன்
விதிர்ப்பு வந்ததால் வியாகுலம் வந்தது
பொழுதெலாம் எறியும் பொங்கலை வசித்தலால்
தண்ணீர்ப் பரப்பிலே தவித்திருப் பதனால்.

எதுவும் தெரியவும் இல்லை எனக்கு
எப்படி இருப்பது எங்ஙனம் வாழ்வது
தீமைகள் நிறைந்தஇத் தீயநாட் களிலே
காலம் கரையும்இக் காலகட் டத்தில்.
காற்றிலே எனக்குக் கட்டவா ஓர்குடில்
வாரியில் எனக்கொரு வசிப்பிடம் அமைக்கவா?

காற்றிலே எனக்குக் கட்டினால் ஓர்குடில்
ஆதாரம் காற்றில் அதற்கென இல்லையே
வாரியில் எனக்கொர் வசிப்பிடம் அமைத்தால்
வாரியும் வீட்டை வாரிச் செல்லுமே."

லாப்பிருந்து ஒருபுள் எழுந்தூர்ந்து இவர்ந்தது
வடகிழக் கிருந்து வந்ததோர் கழுகு
அதன்அள வதுபெரி தானது மல்ல
ஆனால் அதுசிறி தானது மல்ல
ஒற்றை இறகதால் உளநீர் துடைத்தது
மற்றோர் இறகினால் வான்பெருக் கிற்று
பறவையின் வாலது பரவையில் தங்கிட
அலகது குன்றிலும் அதியுயர்ந் திருந்தது.

பறவை பறந்தது, பறவை கிளர்ந்தது
பார்த்துத் திரும்பிப் பறவை சுழன்றது;
பறவையும் வைனா மொயினனைப் பார்த்தது
நீல நிறத்து நீள்கடற் பரப்பில்:
"எதற்கு மனிதா இக்கடல் உள்ளாய்
வீரனே அலைகளில் மிதக்கிறாய் எதற்கு?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"கடலில்நான் வந்ததன் காரணம் இதுதான்
அலைகளின் நடுவே ஆடவன் வந்துளேன்
வந்தனன் தேடியே வடபுல வனிதையை
நாடினேன் நாரியை நனியிருட் பூமியில்.

விரைந்தே பயணம் மேற்கொள லானேன்
உருகா திருந்த ஒளிர்கட லதன்மேல்
பலபகற் பொழுதில் ஒருபகற் பொழுது
பலநாட் காலையில் ஒருநாட் காலை
**தொல்தீ வமைந்த துரவினை அடைந்தேன்
அழகிய **யொவுகா ஆற்றினை அடைந்தேன்
எனக்குக் கீழே எழிற்பரி எய்தனன்
எனக்கு விடுகணை ஏறிய ததன்மேல்.

இங்ஙன மாய்நான் இருங்கடல் வீழ்ந்தேன்
விரல்கள் முன்னர் விழுந்தன அலையில்
காற்றுவந் தென்னை கடத்திச் சென்றது
அலைகள் எழுந்தெனை அடித்துச் சென்றன.

வடமேற் கிருந்தொரு வாடை வந்தது
கிழக்கிருந் தொருபெருங் கிளர்காற் றூர்ந்தது
வாடை இழுத்து வலுதொலை சென்றது
கரையிலே இருந்து காற்றெடுத் தூர்ந்தது;
பற்பல பகலெலாம் படுபோ ராடினேன்
நீந்திநான் சென்றேன் நெடுநிசி பற்பல
இந்த அகன்ற இருநீர்ப் பரப்பிலே
திறந்து பரந்த திகழ்நீர்ப் பரப்பில்;
எதுவும் தெரியவே யில்லை எனக்கு
சிந்தனை யில்லைத் தெளிவுமே யில்லை
இறுதியில் எங்ஙனம் இறப்பேன் என்று
எவ்வகை மரணம் எனக்குறு மென்று
வளர்பசி எனக்கு மரணம் தருமோ
அல்லது கடலில் ஆழ்வதால் வருமோ?"

காற்றினைச் சேர்ந்த கழுகு சொன்னது:
"வளர்வே தனையால் வருந்துதல் வேண்டாம்
எழுந்திரு எழுந்தென் இகல்முது கமர்வாய்
எழுந்திரு இறகின் இயல்முனை யமர்வாய்
கடலிருந் துன்னைக் கடிதுகொண் டீர்வேன்
உன்மனத் துள்ள உறைவிடம் செல்வேன்
இன்னமும் அந்நாள் என்நினை வுளது
இனியஅந் நாட்களை இன்னும் நினைக்கிறேன்
கலேவலாக் காடுகள் கடிதுநீ அழித்துழி
ஒஸ்மோ நிலவனம் ஒருங்குநீ வெட்டுழி
மிலாறெனும் ஒருமரம் விட்டாய் வளர
அழகிய ஒருமரம் ஆங்குற விடுத்தாய்
பறவைகள் வந்து பாங்குறத் தங்க
நானே வந்து நன்றாய் அமர."

முதிய வைனா மொயினன் பின்னர்
தண்ணீ ரிருந்து தலையைத் தூக்கினன்
மாகட லிருந்து மனிதன் எழுந்தனன்
விரிதிரை யிருந்த வீரன் உயர்ந்தான்
சிறகுகள் மீது ஏறி யமர்ந்தான்
கழுகதன் இறகின் கவின்முனை யமர்ந்தான்.

காற்றின் பறவைஅக் கழுகதன் பின்னர்
முதிய வைனா மொயினனைச் சுமந்து
தூக்கிச் சென்றது தொடர்வாய்வு இடையே
பவனப் பாதையில் பறந்து சென்றது
எழில்வட பால்நிலத் தெல்லையை நோக்கி
புகார்படி *சரியொலாப் புகுநிலப் பரப்பில்;
வைனா மொயினனை மகிழ்ந்தாங் கிறக்கி

விண்ணில் ஏறி விரைந்து மறைந்தது.

அங்கே வைனா மொயினன் அழுதனன்
அங்கே அவனும் அழுது புலம்பினன்
கடலின் விரிந்த கரையதில் நின்று
அறிபெயர் தெரியா அவ்விடத் திருந்து
நுறுகா யங்கள் நொந்தரு கிருந்தன
ஆயிரம் புயல்கள் அடித்து வீசின
அசிங்கமாய்த் தாடியும் அமைந்தாங் கிருந்தது
சிகையும் சேர்ந்து சிக்கலாய் இருந்தது.

இரண்டு மூன்று இரவுகள் அழுதான்
அழுதான் பகலின் அத்தனை பொழுதிலும்
போக்கிடம் எதுவெனப் புலப்பட வில்லை
அன்னிய னாதலின் அவன்வழி தெரிந்திலன்
வீட்டினை நோக்கி மீண்டும் சென்றிட
பழகிய இடங்களைப் பார்த்துச் செல்ல
பிறந்த இடத்தை அறிந்தவன் செல்ல
வாழ்ந்தநாட் டிற்கு மறுபடி செல்ல.

வடபுலம் சார்ந்த வளர்சிறு **நங்கை
வெண்மை நிறத்து மெல்லியள் ஒருத்தி
உயர்கதி ரோடொரு உடன்பா டுற்றவள்
தினகர னோடும் திகழ்மதி யோடும்
ஒன்றாய் இவைகள் உதிப்பது என்றும்
ஒன்றாய் இவைகள் எழுவது என்றும்
இவைகளின் முன்னர் எழுந்திருப் பவளவள்
சூரிய சந்திரர் தோன்றிடு முன்னர்
சேவற் கோழியின் கூவலின் முன்னர்
கோழிக் குஞ்சுதன் பாடலின் முன்னர்.

ஆட்டுரோ மங்கள் ஐந்தை எடுப்பாள்
ஆடுகள் ஆறிருந் தவற்றை எடுப்பாள்
இணைப்பாள் ரோமம் இயல்கைத் தறியில்
அவற்றில் ஆடைகள் அழகுற நெய்வாள்
ஆதவன் உதயம் ஆவதன் முன்னர்
வண்ணநற் கதிரொளி வருவதன் முன்னர்.

மேலும் அடுத்துநீள் மேசையைக் கழுவி
படர்ந்த நிலத்துப் பரப்பினைப் பெருக்குவள்
சிறுசிறு குச்சியில் செய்ததூ ரிகையால்
இலைதழை கட்டிய இயைதுடைப் பத்தால்;
குப்பைகள் யாவையும் கூட்டி யெடுத்து
செப்பினாற் செய்த பெட்டியிற் சேர்த்து
கதவம் வழியே கடிதெடுத் தேகினள்
முன்றிற் பக்க முதுதோட் டத்திட
தோட்டத் தாங்கே தூரத் தொலைவில்
வேலியோ ரத்து வெட்ட வெளியினில்;
குப்பைமே டதிலே சற்றுநிற் கையிலே
என்னவோ கேட்டது பின்னாய்த் திரும்பினள்

அழுகுரல் கேட்டது ஆழியில் இருந்து
ஆற்றினூ டாகவும் அக்குரல் கேட்டது.

ஓடி நடந்து உடன்மீண் டேகினள்
விரைந்தவள் நின்றாள் வீட்டின் கூடம்
நின்றவள் வெளியே நேர்ந்ததைக் கூறினள்
சென்றதும் அவ்விடம் செப்பினள் இங்ஙனம்:
"ஆழியில் இருந்தோர் அழுகுரல் கேட்டேன்
ஆற்றினூ டாகவும் அக்குரல் கேட்டேன்."

*லொவ்ஹி என்பவள் வடநிலத் தலைவி
நீக்கல் எயிறுள நீள்வட முதுபெண்
விரைந்துதோட் டத்து வெளிக்குச் சென்றனள்
வந்து வேலியின் வாயிலில் நின்றனள்;
காதைக் கொடுத்துக் கவனமாய்க் கேட்டாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"இதுவோ குழந்தையின் அழுகைபோ லில்லை
பூவையர் புலம்பல் போலவும் இல்லை
தாடி வைத்த தலைவனின் அழுகை
தாடையில் தாடி தரித்தவர் அழுகை."

நீள்பட கொன்றினை நீரிலே தள்ளினள்
அலையில்முப் பலகையின் படகைத் தள்ளினள்
தோணியை வலிக்கத் தொடங்கினள் தானே
வலித்து வலித்து விரைந்துமுன் னேறினள்
அடைந்தாள் வைனா மொயினனின் அருகை
புலம்பிய தலைவன் புக்கிடம் போயினள்.

வைனா மெயினன் வறிதாங் கழுதான்
அமைதிநீர் மனிதன் அங்கே புலம்பினன்
அலரிக் கொடுஞ்செடி அமைபுனல் ஓரம்
**சிறுபழச் செடியதன் குறுபுதர்ப் பக்கம்.
தாடி தளர்ந்தது தனிவாய் அசைந்தது
தாடையோ சற்றும் தளர்ந்தசைந் திலது.

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
பின்வரு மாறுபேச் சுரை யாடினாள்:
"ஓ,நீ, அதிட்டம் ஒன்றிலா முதியோய்!
அன்னிய நாட்டில் அமர்ந்தீங் குள்ளாய்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
தலையை தூக்கிச் சற்றுமேற் பார்த்து
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இப்போழு தியானே இதுதெரிந் துணர்வேன்
அன்னிய நாட்டிலே அமர்ந்திருக் கின்றேன்
சிறிதும் முன்னர் அறியா இடம்தான்
நான்சொந்த நாட்டில் நற்சீ ருற்றவன்
சொந்தவீட் டில்நான் தொல்சிறப் புற்றவன்."

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி

உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"ஒன்றையிப் போது உனக்குச் சொல்லவா
உன்னிடம் கேட்க உண்டா அனுமதி
எந்த இனத்தை இயைந்தவன் நீதான்
வீரனே யாயினும் எவ்வகை வீரன்?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நன்று, எனையே நன்றாய் அறிவார்,
முன்னொரு நாளில் முழுப்புகழ் உற்றவன்
மாலை வேளையில் மகிழ்வோ டிருப்பவன்
எல்லா இடத்திலும் இனியபா டகனாய்
வைனோ என்னும் வளமுறு றாட்டில்
கலேவலா எனும்புதர்க் கவின்சம வெளியில்
ஆயின்இன் றெவ்வள வாகநான் தாழ்ந்தேன்
எனக்கே தெரிந்தில தென்னை யாரென்று."

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"இரும்சே றகன்று எழுவாய் மனிதா
தேடுக விறலோய் செழும்புதுப் பாதை
புகலுக நினக்குப் புணர்துன் பத்தை
நடந்த கதையை நயம்படக் கூறு."

அழுகையை இங்ஙனம் அவள்புகன் றடக்கினள்
வீரனின் புலம்பலிவ் விதம்தடுத் தகற்றினள்
தன்னுடைத் தோணியில் தான்கொணர்ந் தேற்றினள்
தோணியின் தட்டிலே துணிந்திருப் பாட்டினள்
துடுப்பினைத் தானெடுத் துறுபுன லிட்டனள்
வளமதாய் அமர்ந்தவள் வலிக்கவும் தொடங்கினள்
வடபுல நிலமிசை மற்றவள் சென்றனள்
அன்னியன் தன்னையே அகத்திடைச் சேர்த்தனள்.

அவன்பசிக் குணவினை அமைவுறக் கொடுத்தனள்
நனைந்த அம்மனிதனை நன்குலர் வாக்கினள்
நீள்பொழு தவனுடல் நிலைபெறத் தேய்த்தனள்
உடலினைத் தேய்த்து உயர்சூ டேற்றினள்
மனிதனை மீண்டும்நல் வயநிலைக் காக்கினள்
வீரனை மேலும் சீருறச் செய்தனள்
விசாரணை செய்தாள் விரிவாய்க் கேட்டாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"வைனா மொயினனே மனமடி வெதற்கு
*அமைதிநீர் மனிதனே அழுதது எதற்கு
இன்னல் நிறைந்தவவ் விகல்தீ திடத்திலே
கடலினோ ரத்துக் கரையதன் மேலே?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஏங்கி யழவெனக் கேதுக் கள்ளுள
கவலைப் படற்குக் காரணம் உண்டு

நெடும்பொழு தாழியில் நீந்தித் திரிந்தேன்
எற்றலை நடுவே எறிபட் டுழன்றேன்
அகன்று பரந்த அந்நீர்ப் பரப்பில்
திறந்து பரந்த திகழ்நீர்ப் பரப்பில்.

இதற்காய் வாழ்நாள் எல்லாம் அழுவேன்
வாழ்க்கை முழுவதும் மனமடி வுறுவேன்
சொந்தநா டகன்று தொடர்ந்து நீந்தினேன்
பழகிய இடமாம் பதிபிரிந் தெழுந்தேன்
முன்னறி யாதஇம் முதுமுன் வழிக்கு
அன்னிய மானஇவ் வருவா யிலுக்கு;
இங்குள்ள மரங்கள் எனைக்கடிக் கின்றன
தாருவின் குச்சிகள் தாம்அடிக் கின்றன
மிலாறுவின் தடிகள் மிகவறை கின்றன
இன்னொன் றின்னலை எடுத்தளிக் கின்றது;
பயில்கால் மட்டுமே பழக்கப் பட்டது
கதிரையும் முன்னர் கண்ட துண்டுயான்
அன்னிய மானஇவ் வகல்நாட் டினிலே
பழக்கப் படாதஇப் படர்புது வாயிலில்."

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி
பின்வரும் சொற்களில் பின்அவள் சொன்னாள்:
"வைனா மொயினா, வறிதழ வேண்டாம்!
அமைதிநீர் மனிதா, அழுதிரங் கிடற்க!
இங்கு நீ வந்தது இனியநற் செய்கை
தரிப்பது இங்குநீ தரமிகும் செய்கை
உண்ணலாம் தட்டிலே உயர்வஞ் சிரமீன்
அத்துடன் பன்றி இறைச்சியை அயிரலாம்."

முதிய வைனா மொயினன் பின்னர்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"அன்னிய உணவில் ஆக்கமே இல்லை
சிறப்பாக இருப்பினும் பிறிதொரு வீட்டில்.
சிறப்புமா னிடர்க்குத் திகழ்தாய் நாடே
உயர்வா யிருக்கும் உரியவீ டதுதான்;
இரக்கமிக் கிறையே, இரங்குவாய் எனக்கு!
கருணையின் கர்த்தா, கதிதா எனக்கு!
சொந்தநா டடையத் தூயோய், அருள்வாய்!
நான்வாழ்ந் திருந்த நாட்டையந் நாட்டை!
உரியநாட் டிருப்பதே உயரிய **சிறப்பு
மிலாறுக் காலணி மிதிதட நீரு(ண்)ணல்
அன்னிய தேசத் தந்நாட் டருந்தும்
தேங்குபொற் குவளைத் தேனதைக் காட்டிலும்."

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்;
"அப்படி யாஎனக் களிப்பது யாதுநீ
உடையநா டதையே அடையச் செய்திடில்
வயல்உன் னுடையதில் வாழ்ந்திடச் செய்தால்
நின்சவு னாவை நீபெறச் செய்தால்?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"என்னப்பா கேட்கிறாய் என்னிட மிருந்து
என்றன் நாட்டுக் கெனையனுப் புதற்கு
சொந்த வயல்களில் நன்குசேர்ப் பதற்கு
கொஞ்சுமென் குயிலின் கூவலைக் கேட்க
சொந்தப் பறவையின் சிந்தினைக் கேட்க
தொப்பிகொள் பொற்பண மிப்போ தேற்பையா
தொப்பி நிறைந்திடும் பற்பல வெள்ளிகள்."

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்;
"ஓ,உயர் ஞான வைனா மொயின!
நிலைபெறும் மாய நெறியறி முதல்வ!
கிளர்பொற் காசுநான் கேட்கவு மில்லை
வெள்ளிகள் எனக்கு வேண்டிய தில்லை.
பொற்பணம் சிறுவரின் பொருள்விளை யாட்டில்
வெள்ளியும் புரவியின் வெறும் அலங்காரம்
*சம்போவை உன்னால் சமைக்க முடிந்தால்
**முதிர்ஒளி நிறங்களில் மூடியும் செய்தால்
அன்னத் தோகையின் அணிமுனை யிருந்து
மலட்டு மாட்டின் மடிப்பா லிருந்து
ஒற்றைப் பார்லி ஒளிர்மணி யிருந்து
ஒற்றை ஆட்டின் உரோமத் திருந்து
அப்போ துனக்கோர் அரிவையைத் தருவேன்
ஊதிய மாயோர் உயர்மகள் தருவேன்
சொந்த நாட்டைநீ சார்ந்திடச் செய்வேன்
உன்றன் பறவையின் உயர்குரல் கேட்க
சொந்தக் குயிலின் தொல்லிசை கேட்க
மீண்டும் உனது மிளிர்வயல் வெளியில்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"சம்போ எனக்குச் சமைக்க இயலா
அவிரொளி மூடியை அடிப்பதும் அரிது
ஆயினும் சொந்தநா டதில்எனைச் சேர்ப்பாய்
இங்ஙனுப் பிடுவேன் கொல்லன்*இல் மரினனை
அவன் சம்போவை ஆக்குவான் உனக்கு
அவிரொளி மூடியை அமைப்பான் உனக்கு
உன்றன் பெண்ணை உவகைப் படுத்த
உன்றன் மகளின் உளமகிழ் விக்க.

"அவனொரு கைவினை யாளன்நற் கொல்லன்
கலைத்திறன் படைத்த கைவினைக் கலைஞன்
விண்ணைச் செய்த வினைவலான் அவனே
அவனே சுவர்க்க மூடியை அடித்தோன்
ஆயினும் சுத்தியல் அடிச்சுவ டில்லை
கருவிகள் படுத்திய கறைஅதில் இல்லை.

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி

உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"அவனுக் களிப்பேன் அரியஎன் மகளை
எனதுபெண் அவனுக் கென்றே யுரைப்பேன்
அரிய சம்போவை அமைப்பவ னுக்கு
அவிரொளி மூடியை அடிப்பவ னுக்கு
அன்னத் தோகையின் அணிமுனை யிருந்து
மலட்டு மாட்டின் மடிப்பா லிருந்து
ஒற்றைப் பார்லி ஒளிர்மணி யிருந்து
ஒற்றை ஆட்டின் உரோமத் திருந்து."

படர்ஏற் காலில் பரியினைப் பூட்டினள்
மண்ணிறப் புரவியை வண்டியின் கட்டினள்
முதிய வைனா மொயினனை ஏற்றினள்
அவனைப் பொலிப்பரி வண்டியில் அமர்த்தினள்
பின்வரும் சொற்களில் பின்அவள் சொன்னாள்
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"உயரத் தலையை உயர்த்தலும் வேண்டாம்
உயர்த்திப் பார்த்தலும் வேண்டாம் உச்சியை.
பொலிப்பரி சிறிதும் களைக்கா திருந்தால்
மாலை வேளையும் வராது இருந்தால்;
உயரத் தலையை உயர்த்துதல் செய்தால்
உயர்த்தி உச்சியை நோக்குதல் செய்தால்
அழிவு வந்தே அடைந்திடும் உன்னை
தீய காலமும் தேடியே வந்திடும்."

முதிய வைனா மொயினன் பின்னர்
உயர்பரி அடித்து ஓடச் செய்தனன்
விரையச் செய்தனன் பிடர்மயிர்ப் புரவி
ஒலியெழும் பயணம் பொலிவுறச் செய்தனன்
நீளிருள் வடபால் நிலத்திடை யிருந்து
மருண்ட சரியோலா மண்ணிடை யிருந்து.

கலேவலா

பாடல் 8 - வைனாமொயினனின் காயம்

அடிகள் 1 - 50 : பயணத்தின் போது வழியில் வைனாமொயினன் அழகாக உடையணிந்த வடநில மங்கையைக் கண்டு தனக்கு மனைவியாகும்படி கேட்கிறான்.

அடிகள் 51 - 132 : கடைசியில் வடநில மங்கை தனது தறிச் சட்டத்தில் சிந்திய துகள்களில் ஒரு தோணியைச் செய்து அதைத் தொடாமல் நீரில் விட்டால் அவனுடைய விருப்பத்திற்கு இணங்குவதாகக் கூறுகிறாள்.

அடிகள் 133 - 204 : வைனாமொயினன் தோணியைச் செய்யும் பொழுது, கோடரி முழங்காலில் தாக்கியதால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கை நிறுத்த முடியவில்லை.

அடிகள் 205 - 282 : வைனாமொயி நிறுத்துவதாகக் கூறும் ஒரு முதியவனைச் சந்திக்கிறான்.

வனப்புறும் வனிதை **வடபுல நங்கை
நிலத்திடைக் கீர்த்தி நீரிலும் சிறந்தோள்
வானத்து வளைவில் வனப்பா யிருந்தாள்
விண்ணக வில்லின் மின்னலா யொளிர்ந்தாள்
தூயநல் லாடை சுத்தமா யணிந்து
வெண்ணிற உடையில் வண்ணமா யிருந்தாள்.
பொன்னிழை ஆடையைப் பின்னி யெடுக்கிறாள்
வெள்ளியில் சோடனை வேலைகள் செய்கிறாள்
தங்கத் தானது தறியில்நெய் கருவி
வெள்ளியில் ஆனது நல்லச் சுக்கோல்.

அவளது பிடியிலே அசைந்தது கருவி
சுழன்றது அச்சவள் சுந்தரக் கரத்தில்
செப்பின் சட்டம் சத்தம் எழுப்பின
வெள்ளியின் அச்சிலே மிகுஒலி எழுந்தது
ஆடையை நங்கையும் அழகுற நெய்கையில்
ஆடையை வெள்ளியில் ஆக்கிய போதினில்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
செய்தான் பயணம் திகழுதன் வழியில்
இருள்நிறை வடபால் இயைநிலத் திருந்து
புகார்படி சரியொலாப் புகுநிலத் திருந்து.
சிறுதொலை பயணம் செய்தவப் பொழுது
கொஞ்சத் தூரம் குறுகிய நேரம்
கைத்தறி அசைந்த காற்றொலி கேட்டது
உயரத் தலைமேல் ஒலியது கேட்டது.
அப்போ தலையை அவன்மேல் தூக்கினன்
படர்வான் நோக்கிப் பார்வையை விட்டனன்:
வானத் தொருவில் வனப்பா யிருந்தது
வில்லில் இருந்தனள் மெல்லியள் ஒருத்தி
ஆடைகள் செய்கிறாள் அவள்தங் கத்தில்
வெள்ளியில் ஓசை விளைக்கிறாள் அவளும்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிறுத்தினன் பரியை நேராய் அக்கணம்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்:
"வருவாய் பெண்ணே எனதுவண் டிக்கு
எனது வண்டியுள் இறங்கி வருவாய்."

இந்தச் சொற்களில் இயம்பினள் அரிவை
இவ்விதம் அவளே இயம்பிக் கேட்டனள்:
"வனிதை உனது வண்டியில் எதற்கு
வண்டியுள் வனிதை வருவது எதற்கு?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நன்று என்று நயமாய்ச் சொன்னான்:
"வனிதை எனது வண்டியில் இதற்கே
வண்டியுள் வனிதை வருவதும் இதற்கே
தேனில் ரொட்டிகள் செய்வதற் காக
பானம் வடிப்பதை பார்லியில் அறிய
இருக்கையில் அமர்ந்து இசைப்பதற் காக
சாளர வாயிலில் தனிமகிழ் வடைய
வைனோ நாட்டின் வளர்கா வெளிகளில்
கலேவலா வென்னும் கவின்பெரு விடங்களில்."

இந்தச் சொற்களில் இயம்பினள் அரிவை
உரைத்தே அவள்தான் உரைசெய லாயினள்:
"நான்புற் படுக்கையில் நடந்த பொழுதிலே
மஞ்சள் புற்றரைப் பவனியில் வந்துழி
நேரம் கடந்த நேற்றைய மாலையில்
தகிகதிர் வானில் சாய்ந்துசெல் பொழுதில்
சோலையில் இருந்தொரு தூயபுள் இசைத்தது
எழில்வயற் **பறவையின் இன்னிசை மாந்தினேன்
மகளிரின் வயமெழு மனவுணர் விசைத்தது
எழில்மரு மகள்மன இயல்புமாங் கிசைத்ததே.

பறவையை நோக்கிப் படிநின் றுரைத்தேன்
பின்வரும் வார்த்தையில் பிறிதொன் றுசாவினேன்:
'பறவையே, பறவையே, சிறுவயற் பறவையே!
பாடுவாய் செவிகளில் பாடலைக் கேட்க:
இரண்டிலே சிறந்தது எதுவெனப் புகல்வாய்
உயர்வெவர் வாழ்வென ஒருமொழி சொல்வாய்
தந்தையர் இல்லிடைத் தையலர் வாழ்க்கையா
கணவரின் வீட்டகக் காரிகை வாழ்க்கையா?'

சிறியபுள் ஆங்கே சீருறும் சொல்லில்
தண்வயற் பறவையும் தந்ததோர் விளக்கம்:
'வேனிற் பொழுதெலாம் மிகமிக ஒளிரும்
அதைவிட ஒளிரும் அரிவையின் இயல்பு;
உறைபனி இரும்பு உறுகுளி ரடையும்
மருமகள் நிலைமையோ மற்றதிற் **குளிராம்;

தந்தையார் வீட்டில் தரிக்கும் தையலோ
நன்னிலம் தந்த நற்சிறு பழமாம்;
மணப்பவன் வீட்டில் மருமகள் என்பவள்
சங்கிலி பூட்டிய தனிநாய் போன்றவள்;
அடிமைக் கின்பம் அரிதாய் வந்துறும்
என்றும் மருமகட் கில்லையிந் நிலையே.' "

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"பறவை சொன்னது பயனிலாக் கூற்று
வயற்புட் கூற்று வாய்வழிக் கத்தல்
வீட்டிலே மகளிர் வெறுங்குழந் தைகளாம்
மங்கையாய் மலர்வது மணம்பெறும் போதே
வருவாய் எனது வண்டியில் மங்காய்
எனது வண்டியுள் இறங்கிநீ வருவாய்
மதிப்பே யற்ற மனித னல்லயான்
ஏனைய வீரர்க் கிளைத்தவ னல்லயான்."

கூறினள் காரிகை கூர்மையாய் ஒருமொழி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"உனையொரு மனிதனென் றுரைத்திடு வன்யான்
நாயகன் என்று நானுனை மதிப்பேன்
கிளர்பரி மயிரைநீ கிழிக்க முடியுமா
முழுக்கூர் மையிலா மொட்டைக் கத்தியால்
முடிச்சு ஒன்றினுள் முட்டைவைப் பாயா
பார்த்தால் முடிச்சுப் பாங்குதோன் றாமால்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
கிளர்பரி மயிரைக் கிழித்துக் காட்டினன்
முழுக்கூர் மையிலா மொட்டைக் கத்தியால்
முற்றிலும் முனையிலா மொட்டைக் கத்தியால்;
முடிச்சு ஒன்றினுள் முட்டையை வைத்தனன்
பார்க்க முடிச்சுப் பாங்குதோன் றாமால்.
வனிதையை வண்டியுள் வருமா றியம்பினன்
தனது வண்டியுள் தையலை யழைத்தான்.

கூறினள் காரிகை கூர்மையாய் ஒருமொழி:
"நன்று உன்னிடம் நான்வரு வேன்எனின்
கல்லதன் தோலைக் கடிதுரித் தெடுத்தால்
கம்பங் கள்பனிக் கட்டியில் வெட்டினால்
சிறுதுண் டேனும் சிதறி விடாமல்
சிறுநுண் துகளும் சிந்துதல் இன்றி."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
சிறிது கூடச் சிரமமில் லாமல்
கல்லின் தோலை கடிதுரித் தெடுத்தான்
கம்பங் கள்பனிக் கட்டியில் வெட்டினான்
சிறுதுண் டேனும் சிதறி விடாமல்
சிறுநுண் துகளும் சிந்தி விடாமல்.
வனிதையை வண்டியுள் வருமா றுரைத்தான்

தனதுவண் டியுனுள் தையலை அழைத்தான்.

கூறினள் காரிகை கூர்மையாய் ஒருமொழி
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்:
"நன்றுநான் எவனை நாடுவேன் தெரியுமோ?
எனக்கொரு படகை இயற்றுவோன் தன்னை,
என்தறி மரத்தில் இழிந்த துகள்களில்
தறியின் சட்டத் துண்டுகள் தம்மில்,
படகை நீரிற் படுத்துவோன் தன்னை
புதுப்பட கலையிற் புணர்த்துவோன் தன்னை,
முழங்கால் படகில் முட்டுதல் கூடா
படகில் முட்டிகள் படுதலும் கூடா
திகழ்புயம் எங்ஙணும் திரும்புதல் கூடா
வயத்தோள் முன்னே வருதலும் கூடா."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இல்லையெந் நாட்டும் இல்லையெப் புவியும்
இவ்வா னின்கீழ் எங்ஙணும் இல்லை
படகைக் கட்டும் பணித்திறன் உள்ளோன்
என்னைப் போலொரு எழிற்பட கமைப்போன்."

தறிமரம் சிந்திய தனித்துகள் எடுத்தான்
பகுதறிச் சட்டப் பலகைகள் சேர்த்தான்
படகு ஒன்றினைப் படைக்கத் தொடங்கினான்
பலகைகள் நுறு பதிக்கும் படகினை
உருக்கினால் ஆன உயர்மலை முடியில்
இரும்பினால் ஆன இகல்மலை முனையில்.

திறனாய்ச் செய்தான் செறிபட கொன்று
பலகையால் மாண்பொடு படகைச் செய்தான்
கட்டினான் முதல்நாள் கட்டினான் மறுநாள்
கட்டினான் மூன்றாம் நாளும் கடுகதி
முதுமலை கோடரி முட்டிய தில்லை
தொல்குன் றலகு தொட்டது மில்லை.

மூன்றா வதுநாள் முடிந்த வேளையில்
கோடரிப் பிடியைக் **கூளி அசைத்தது
**அலகை கோடரி அலகை இழுத்தது
கொடிய சக்தியால் பிடிவழு வியது:
பாறையிற் கோடரி பட்டுத் தெறித்தது
கூர்முனை தவறிக் குன்றிற் பாய்ந்தது
பாறையில் பட்ட கோடரி திரும்பி
புகுந்தது தசையில் புதைந்து கொண்டது
இளைஞன் முழங்கால் இரிந்துட் சென்றது
வைனா மொயினன் வன்கால் விரலுள்;
அவனது தசைக்குள் **அலகை அறைந்தது
புதைந்தது **பிசாசு புணர்நரம் பூடே
சோரி பொங்கிச் சுரந்து வழிந்தது
நீரூற் றெனவே நில்லா திழிந்தது.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே
உரைத்தே இவ்விதம் உரைசெய லாயினன்:
"அலகு வளைந்த அடர்கோ டரியே
கோடரி யதனின் கூரிய அலகே
மரத்தை மோதி விழுத்தும் நினைப்போ
**ஊசி மரத்தை யழிக்கும் உன்னலோ
தேவ தாருவைச் சிதைப்பதாய்க் கருத்தோ
பெரும்பூர்ச் சமரம் பிளப்பதாய் உணர்வோ
எனது தசைக்குள் ஏறிய வேளையில்
எனது நரம்பினுள் இறங்கிய போதினில்?"

மந்திரச் சொற்களை வழங்கத் தொடங்கினான்
மனத்திலே உன்னி மந்திரம் கூறினான்
மூலமாம் மொழிகளை ஆழமாய்க் கூறினான்
ஓதினான் அடுக்காய் ஒழுங்காய் உரைத்தான்
ஆயினும் நெஞ்சில் அவையிலா தொழிந்தன
இரும்புமூ லத்தின் சிறந்தநற் சொற்கள்,
சட்டமாய் நின்று கட்டும் திறத்தன
வன்பூட் டாகும் மந்திரச் சொற்கள்,
இரும்பினா லான இரணம் காக்க
நீலவாய் அலகின் காயம் போக்க.

குருதி நதிபோற் குமுறிப் பாய்ந்தது
நீள்நுரை ததும்பிநீர் வீழ்ச்சிபோல் வந்தது;
பழச்செடி தரையில் படிந்திடப் பாய்ந்தது
புற்றரைச் செடிகளில் பற்றையில் பாய்ந்தது
ஆங்குமண் மேடெதும் **அமைந்திட வில்லை
முகிழும் சோரிநீர் மூழ்கா நிலையில்
தடையில் குருதியில் தாழா நிலையில்
வருபுனல் ஆறென வழிந்தசெங் குருதி
முதுபுகழ் வீரன் முழங்கா லிருந்து
வைனா மொயினன் வன்கால் விரலால்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
பாறை யிருந்துசில் பாசிகள் பிடுங்கி
பாசிகள் சதுப்புப் படிவிலும் சேர்த்து
மண்ணிலே யுளமண் மேட்டிலும் எடுத்தான்
அகல்குரு திப்பொந் தடைப்பதற் கெண்ணி
தீயதாம் சக்தியின் வாயிலை மூட;
ஆயினும் பயனெதும் அதனால் இலது
சிறிதும் அச்செயல் சித்தித் திலது.

வருத்தம் வளர்ந்து வாதையைத் தந்தது
துன்பம் தொடர்ந்து தொந்தர வானது.
நிலைபெறும் முதிய வைனா மொயினன்
கண்ணீர் விட்டுக் கதறிய முதான்;
புரவியைச் சேணம் பூட்டினன் பின்னர்

மண்ணிறப் புரவி வண்டிமுன் நின்றது
வண்டியில் தானே வலுவிரை வேறினன்
அமர்ந்து கொண்டனன் அவ்வண் டியினுள்.
சவுக்கைச் சுழற்றிச் சாடினன் பரியை
மணிமுனைச் சாட்டை வான்பரி அறைந்தான்
பறந்தது புரவி பயணம் விரைந்தது
வண்டி உருண்டது வருதொலை குறைந்தது.
காணவோர் சிற்றூர் கண்ணில் தெரிந்தது
மூன்று தெருவின்முற் சந்தியும் வந்தது.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
வருதாழ் தெருவில் வண்டியைச் செலுத்தினன்
தாழ்ந்த தெருவின் தாழ்ந்தவீட் டுக்கு.
இல்ல வாயிலில் இவ்வா றுசாவினன்:
"இந்த வீட்டிலே எவரெனு முளரோ
இரும்பினால் விளைந்த இரணம தாற்ற
வீரன் அடைந்த வெந்துயர் மாற்ற
இன்னலை யாக்கும் இரணம் போக்க?"

ஆங்கொரு குழந்தை அகலத் திருந்தது
அடுப்பின் அருகில் அமர்ந்தொரு சிறுவன்
இவ்வுரை யப்போ திவ்வித மொழிந்தான்:
"இந்த வீட்டிலே எவருமே யில்லை
இரும்பினால் விளைந்த இரணம தாற்ற
வீரன் அடைந்த வெந்துயர் மாற்ற
காயத்தால் வந்த கடுநோ தீர்க்க
இன்னலை ஆக்கும் இரணம் போக்க;
அடுத்த வீட்டில் ஆரும் இருப்பர்
அங்ஙனம் செல்வாய் அடுத்தவீட் டுக்கு."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
சவுக்கைச் சுழற்றி சாடினன் பரியை
திரும்பி வண்டி சென்றது பறந்தது.
தூரம் சிறிது தொலைந்தபின் அங்ஙனம்
வந்தது ஒருதெரு வழியின் மத்தியில்
வீதியின் மத்தியில் வீடொன் றிருந்தது.
வந்தில் வாயிலில் வருமா றுசாவினன்
இரந்தவன் கேட்டான் இற்பல கணிவழி:
"இந்த வீட்டில் எவரெனு முளரோ
இரும்பினால் விளைந்த இரணம தாற்ற
இரத்த மழையைத் தடுத்து நிறுத்த
அறுநரம் பதிலொழு கருவியைத் தடுக்க?"

முதிர்ந்தபெண் ஒருத்தி முழுநீள் அங்கியில்
அடுக்களை மணையில் அமர்ந்தே உளறுவாய்
வயதுறும் மாது வருமா றுரைத்தாள்
மூன்றுபல் தெரிய மொழிந்தனள் ஆங்கு:
"இந்த வீட்டிலே எவருமே யில்லை
இரும்பினால் விளைந்த இரணம தாற்ற
செந்நீர் மூலம் தெரிந்தவ ரில்லை

காயத் தால்வரு கடுநோ தீர்க்க
அடுத்த வீட்டில் ஆரும் இருப்பர்
அங்ஙனம் செல்வாய் அடுத்தவீட் டுக்கு."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
சவுக்கைச் சுழற்றி சாடினன் பரியை
திரும்பி வண்டி சென்றது பறந்தது.
தூரம் சிறிது தொலைந்தபின் அங்ஙனம்
பாதையின் உயரம் படியுயர் வீதி
வீடுகள் நடுவண் மிகவுயர் வீடு
வந்தில் வாயிலில் வருமா றுசாவினன்
கூரை மரப்பின் குறுகிநின் றுசாவினன்:
"இந்த வீட்டில் எவரெனு முளரோ
இரும்பினால் விளைந்த இரணம தாற்ற
இரத்தவெள் ளத்துக் கிடுதற் கொருஅணை
இரத்தப் பெருக்கைத் தடையிட் டடைக்க?"

ஆன வயதோன் அடுப்பரு கிருந்தான்
வளர்நரைத் தாடியில் மணையிலே இருந்தான்
உறுமினான் கிழவன் உறும்அடுப் பருகில்
கடுநரைத் தாடியன் கத்தினான் கண்டதும்:
"உயர்ந்த பொருட்கள் உடன்மூ டுண்டன
சிறந்த பொருட்கள் தினம்தோற் றிட்டன
படைத்தவன் பகர்ந்த படிமுச் சொற்களால்
மூலத்து ஆழம் மூண்ட நியதியால்:
எழில்நதி வாயிலும் ஏரிகள் தலையிலும்
பயங்கர அருவிகள் பாயும் கழுத்திலும்
வளைகுடாப் பகுதிமேல் வருநில முனையிலும்
ஒடுங்கிய பூமி உடன்தொடு கரையிலும்."

கலேவலா

பாடல் 9 - இரும்பின் மூலக்கதை

அடிகள் 1-266 வைனாமொயினன் இரும்பின் மூலத்தை முதியவனுக்குச் சொல்லுகிறான்.

அடிகள் 267-416 : முதியவன் இரும்பை நிந்தித்து இரத்தப் பெருக்கை நிறுத்த மந்திர உச்சாடனம் செய்கிறான்.

அடிகள் 417-586 : முதியவன் தனது மகன் மூலம் ஒரு மருந்து தயாரித்துக் காயத்துக்குப் பூசிக் கட்டுவிக்கிறான். வைனாமொயினன் குணமடைந்து, கடவுளின் கருணையை நினைத்துக் கடவுளுக்கு நன்றி கூறுகிறான்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
வண்டியி லிருந்து வந்துகீ ழிறங்கினன்
தானே துயர்ப்படாத் தகவில் இறங்கினன்
உதவிக ளின்றி உடன்தா னிறங்கினன்
வீட்டின் உள்ளே விரைந்து சென்றனன்
கூரையின் கீழ்நடை கொண்டே சென்றனன்.

குடுக்கை வெள்ளியில் கொணரப் பட்டது
கொளும்பொன் கிண்ணமும் கொணரப் பட்டது.
கொள்கலன் கொஞ்சமும் கொள்ளவு மில்லை
ஒருதுளி தானும் உட்செல வில்லை
முதிய வைனா மொயினனின் குருதி
வீரன் பாத மிகுபொங் கிரத்தம்.

உறுமினன் கிழவன் உறும்அடுப் பருகில்
கடுநரைத் தாடியன் கத்தினான் கண்டதும்:
"எவ்வகை மனித இனத்தினன் நீதான்
வீரனே யாயினும் எவ்வகை வீரன்?
ஏழு தோணிகள் எலாம்நிறை குருதி
எட்டுத் தொட்டிகள் முட்டிய இரத்தம்
படுமுழங் காலால் பாக்கிய மற்றோய்,
பாய்ந்து தரையில் பரந்துபோ கின்றது;
எனக்கு நினைவுள தேனைய மந்திரம்
ஆயினும் பழையது அறநினை வில்லை
முதல்இரும் புதித்த மூலத் தொடக்கம்
தொடக்கத் தின்பின் தொடர்ந்ததன் வளர்ச்சி."

முதிய வைனா மொயினன் பின்னர்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இரும்பின் பிறப்பு எனக்குத் தெரியும்
உருக்கின்உற் பத்தி உணர்வேன் நானும்
தாய்களின் முதலவள் தவழ்காற் றாகும்
சலமே மூத்தவன் சகோதரர் களிலே
இரும்புடன் **பிறப்பில் எல்லாம் இளையவன்
மத்தியில் அமைந்ததே வளர்நெருப் பாகும்.

மானிட முதல்வன், மாபெருந் தேவன்,
விண்ணில் உள்ள மேலவன் அவனே,
நீர்பிரிந் ததுவாம் நீள்வாய் விருந்து

நீரில் இருந்தே நிலமும் வந்தது
ஏழ்மை இரும்புக் கில்லைப் பிறப்பு
பிறந்ததும் இல்லை வளர்ந்ததும் இல்லை.
மானிட முதல்வன், வானகத் திறைவன்,
அகங்கை இரண்டை அழுத்தித் தேய்த்தான்
இரண்டையும் ஒன்றாய் இணைத்து அழுத்தினான்
இடமுழங் காலில் இயைந்த முட்டியில்
அதிலே பிறந்தனர் அரிவையர் மூவர்
மூவரும் இயற்கை முதல்தாய் மகளிர்
துருவுடை இரும்பின் தொல்தா யாக
நீலவா யுருக்கின் நெடுவளர்ப் பன்னையாய்.

நங்கையர் நடந்தனர் நல்லுலாப் போந்தனர்
வானத்துக் காரின் வளர்விளிம் பெல்லையில்
பூரித்து மலர்ந்த பூத்த மார்புடன்
மார்பின் காம்பில் வந்துற்ற நோவுடன்;
பாலைக் கறந்து படிமிசைப் பாய்ச்சினர்
மார்பகம் நிறைந்து பீரிட்டுப் பாய்ந்தது;
தாழ்நிலம் தோய்ந்து சகதியில் பாய்ந்தது
அமைதியாய் இருந்த அகல்புனல் கலந்தது.

கறந்தனள் ஒருத்தி கருநிறப் பாலாம்
மூவர்மங் கையரில் மூத்தவள் அவளே;
மற்றவள் கறந்தது மதிவெண் ணிறப்பால்
மங்கையர் மூவரில் மத்தியில் உள்ளவள்;
சிவப்பாய் கறந்தனள் திகழ்மூன் றாமவள்
மங்கையர் மூவரில் வளர்இளை யவளே.

கருமைப் பாலைக் கறந்தவள் எவளோ
அவளால் பிறந்தது அருமெல் இரும்பு;
கவின்வெண் ணிறப்பால் கறந்தவள் எவளோ
அவளால் பிறந்தது அரும்உருக் கென்பது;
கனிசெந் நிறப்பால் கறந்தவள் எவளோ
அவளால் பிறந்தது அடுகன இரும்பு.

காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
தானே இரும்பது சந்திக்க விரும்பி
அன்புடை மூத்த அண்ணன் சகோதரன்
படர்செந் நெருப்பொடு பழக நினைத்தது.

கனலது தீய குணம்சற் றுடையது
ஆங்கா ரத்தொடு ஆவேச மானது;
பாக்கிய மற்ற பாவியை எரித்தது
இரும்பாம் பேதைத் தம்பியை எரித்தது.

ஓடி இரும்பு ஒளியப் பார்த்தது

ஒளிந்து தன்னைக் காக்கவுள் ளியது
கனன்ற கனலின் கரங்களி லிருந்து
சினந்த தீயின் செவ்வா யிருந்து.
அபயம் பெற்றது அதன்பின் இரும்பு
இனிதொளி **வபயம் இரண்டையும் பெற்றது
தனிநகர்ந் தசைந்த சகதிச் சேற்றினில்
கிளைத்துப் பாய்ந்த கிளர்நீ ரூற்றில்
தடம்திறந் தகன்ற சதுப்பு நிலத்தில்
கடினமாய்க் கிடந்த கடுங்குன் றுச்சியில்
அன்னம் முட்டை யிடும்அயல் இடங்களில்
வாத்துக் குஞ்சைப் பொரிக்குமால் பதிகளில்.

இரும்பு சேற்றில் இருந்தது ஒளிந்து
சதுப்பின் அடியில் தலைநிமிர்ந் திருந்தது
ஓராண் டொளித்தது ஈராண் டிருந்தது
மூன்றாம் ஆண்டும் முயன்றொளித் திருந்தது
இரண்டடி மரத்தின் இடைநடு வினிலே
முதுபூர்ச் சமர மூன்றுவே ரடியில்.
ஆயினும் தப்பிய தில்லையவ் விரும்பு
கொடிய நெருப்பின் கொல்கரத் திருந்து;
மீண்டொரு முறைவர வேண்டி யிருந்தது
தீயின் வசிப்பிடத் திருவா யிலுக்கு
படைக்கல அலகாய் படைக்கப் படற்கு
வாளின் அலகாய் மாற்றப் படற்கு.

ஓடிய **தோநாய் ஒன்றுறை சேற்றில்
செறிபுத ரிடையே திரிந்ததோர் கரடி
ஓநாய் **அடியில் உறுசேறு ஊர்ந்தது
கரடியின் கால்களில் காடு கலைந்தது.
கனிந்தாங் கெழுந்தது கடினவல் இரும்பு
உருக்கின் துண்டாங் குருவம் கொண்டது
ஓநாய் பாதம் ஊன்றிய இடத்தில்
கரடியின் குதிகள் கல்லிய இடத்தில்.

இல்மரி னன்எனும் கொல்லன் பிறந்தான்
பிறந்ததும் வளர்ந்ததும் இரண்டும் நிகழ்ந்தன
நிலத்தவன் பிறந்தது நிலக்கரிக் குன்றிலே
நிலத்தவன் வளர்ந்தது நிலக்கரிப் பரப்பிலே
செப்பின் சுத்தியல் செங்கரத் திருந்தது
சிறியதோர் குறடும் சேர்ந்தே இருந்தது.

இல்மரி னன்பிறப் பிரவுநே ரத்திலாம்
கொல்லவே லைத்தளம் எல்பகல் செய்தனன்
ஓர்இடம் பெற்றனன் உயர்தொழில் தளம்உற
ஊதுலைத் துருத்தியை ஓர்இடம் நிறுவிட
சேற்று நிலத்தொரு சிற்றிடம் கண்டனன்
ஈரமாய் அச்சிறு இடமதே யானதாம்
சென்றனன் அவ்விடம் செம்மையாய்ப் பார்த்திட
அண்மையில் நின்றவன் ஆய்வினைச் செய்யவே
அவ்விடம் ஊதுலைத் துருத்தியை அமைத்தவன்

உலைக்களம் ஒன்றினை உருப்பெறச் செய்தனன்.

ஓநாய்ச் சுவட்டை ஒற்றியே போனான்
கரடியின் அடியையும் கவனித் தேகினன்;
கண்டனன் அவ்விடம் கடினநல் இரும்பு
உருக்கதன் துண்டுகள் இருப்பதும் கண்டான்
ஓநாய்ச் சுவடுகள் உள்ளவவ் விடத்தில்
கரடியின் குதிக்கால் பதிவுகாண் பதியில்.

இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்:
'ஐயகோ, ஏழைநீ யானகார் இரும்பே
இருக்கிறாய் கேவல மானவிவ் விடத்தில்
தாழ்ந்தவாழ் விடத்தில் தான்வாழ் கின்றாய்
ஓநாய்ச் சுவட்டில் உறுசேற் றுநிலம்
கரடியின் பாதம் பதிந்துகாண் பதியில்!'

சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்:
'உன்னுடை விளைவு என்னவாய் இருக்கும்
தீயில் உன்னைத் தோய்த்துக் காய்ச்சினால்
உலைக்களத் தினிலே உன்னையிட் டாக்கால்?'

இதைக்கேட் டேழை இரும்பு அதிர்ந்தது
அதிர்ந்தல மந்து அச்சம் கொண்டது
கனலின் சொல்லைக் காதில் கேட்டதும்
பெருங்கன லுடைய பேச்சு வந்ததும்.

இல்மரி னன்எனும் கொல்லன் கூறினன்:
'வருத்தப் படற்கு வகையேது மில்லை
தெரிந்தோரை நெருப்புத் தீய்ப்பதே யில்லை
சுற்றத்தை நெருப்புச் சுடுவதும் இல்லை.
கொதிகன லோனுடைக் கூடத் திருந்தால்
கொழுந்துவிட் டெரியும் கோட்டையில் வந்தால்
அழகுறும் உருவாங் கடைவதே யியல்பு
வனப்பொடு வண்ணமும் வருவதே யுண்டு
ஆண்களுக் குரிய அழகுறும் வாளாய்
பாவையர் இடுப்பின் பட்டிப் பட்டமாய்.'

அங்ஙனம் அந்தநாள் அன்று முடிந்ததும்
இரும்பைச் சதுப்பில் இருந்தே எடுத்து
சேற்று நிலத்தில் செறிந்ததை மீட்டு
கொல்லன் உலைக்குக் கொணரப் பட்டது.

கொல்லன் இரும்பைக் கொடுங்கனல் தள்ளினன்
இரும்பை உலையிடை இட்டனன் கொல்லன்
ஒருமுறை ஊதினான் இருமுறை ஊதினான்
மூன்றாம் முறையும் மீண்டும் ஊதினான்
குழைந்து இரும்பு குழம்பாய் வந்தது
கடின இரும்பு கனிந்தே வந்தது
கொண்டது வடிவம் கோதுமைக் களிபோல்
தானிய அடைக்குச் சரிப்படும் பசையாய்

கொல்லன் உலையில் கொதித்த தீயதில்
கொழுந்துவிட் டெரியும் கொதிகனற் சக்தியில்.

அப்பொழு தேழை இரும்பழுது உரைத்தது:
'ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
இங்கிருந் தென்னை எடுப்பாய் வெளியே
வருத்தும் சென்னிற வளர்கன லிருந்து!'

கொல்லன்இல் மரினன் கூறினன் இங்ஙனம்:
'ஒளிர்கன லிருந்து உனைநான் எடுத்தால்
கோரமாய் ஓர்உரு கொள்ளுவாய் நீயே
கொடுமை நிறைந்த கருமம் செய்வாய்
தாக்கவும் கூடும்நின் சகோதர னையே
இன்னலைத் தருவைநின் அன்னையின் சேய்க்கே.'

ஏழை யிரும்பப் போத(ா)ணை யிட்டது
சுத்தமாய் உண்மையாய்ச் சத்தியம் செய்தது
ஆணை உலைமேல் ஆணைகொல் களம்மேல்
ஆணைசுத்தி யல்மேல் ஆணைகட் டையின்மேல்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னது
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தது:
'கடித்து விழுங்கக் கனமர முண்டு
உண்ணவும் கல்லின் உள்ளங்க ளுண்டு
தாக்கவும் மாட்டேன் சகோதரன் தனைநான்
அன்னையின் பிள்ளைக் கின்னலும் செய்யேன்.
எனக்குச் சிறந்தது அழியாது இருப்பதே
என்றுமே வாழ்ந்து இருப்பதே மிகநலம்
தோழரோ டிணைந்து துணையாய் இருப்பது
தொழிலாள ராயுதத் தொன்றா யிருப்பது
சொந்த உறவினை உண்பதைப் பார்க்கிலும்
ஆனஎன் உறவினை அழிப்பதைப் பார்க்கிலும்.'

அப்போ கொல்லன் அவன்இல் மரினன்
கவினழி வில்லாக் கைவினைக் கலைஞன்
இரும்பை அனலில் இருந்தே எடுத்தான்
அதனைப் பட்டடை அதன்மேல் வைத்தான்
அதனை மென்மையாய் அடித்தே எடுத்தான்
கருவிகள் கூர்மையாய்க் கவினுறச் செய்தான்
ஈட்டிகள் கோடரி எல்லாம் செய்தான்
பல்வகை யான படைக்கலம் செய்தான்.

ஆயினும் குறைபா டதிலெதோ விருந்தது
ஏழை இரும்பில் இடர்ப்பா டிருந்தது
இரும்பின் நாக்கு இளகா திருந்தது
உருக்கின் வாயே உருவாக வில்லை
இரும்பிலே சிறிதும் இல்லையே வலிமை
அதனை நீரிலே அமிழ்த்தாத போது.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
சிறிது தானே சிந்தனை செய்தான்:

சாம்பலை ஒன்றாய்த் தான்சிறி தெடுத்து
காரநீர் கொஞ்சம் கலந்துசற் றிணைத்து
உருக்கை உருக்கும் ஒருபசை யாக்கி
செய்தனன் இரும்பை இளக்கும் திரவம்.

நாவினால் திரவம் நக்கிப் பார்த்து
சுவைத்தான் நினைத்தது தோன்றிற் றோவென
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
'இவைகள் உகந்ததாய் இன்னமும் இல்லை
திரவம் உருக்கைச் செய்யுமா றில்லை
இரும்பில் பொருட்கள் இயற்றுமா றில்லை.'

நிலத்தி லிருந்தொரு நெடுவண் டெழுந்தது
நீலச் சிறகுடன் நேர்புல் திடலால்
அசைந்தது நகர்ந்தது அசைந்து படர்ந்தது
கொல்லுலை வேலைக்கு உளகளம் சுற்றி.

இங்ஙனம் அப்போ தியம்பினன் கொல்லன்:
'வண்டே, நிறைகுறை மனிதனே, ஓஓ!
தேனை உனது சிறகில் சுமந்துவா!
திகழுமுன் நாவிலே தேன்அதை ஏந்திவா!
அறுவகைப் பூக்களின் அலர்முடி யிருந்து
எழுவகைப் புல்லின் எழில்மடி யிருந்து
உருக்குப் பொருட்களை உருவாக் குதற்கு
இரும்பிற் பொருட்களை இயற்றுவ தற்கு.'

குளவியொன் றப்போ கூளியின் குருவி
அங்கே பார்த்து அதனைக் கேட்டது
குந்திப் பார்த்தது கூரைக் கோடியில்
பார்த்தது **மிலாறுப் பட்டைகீழ் இருந்து
உருக்குப் பொருட்கள் உருவம் ஆவதை
இரும்பில் பொருட்கள் இயற்றப் படுவதை.

பறந்தது ரீங்காரம் இட்டுஅது சுழன்றது
பரப்பி வந்தது பேயின் பயங்கரம்
திரிந்தது சுமந்து செறிஅரா நஞ்சம்
விரிகருங் கிருமி விடத்துடன் வந்தது
எறும்பதன் அரிக்கும் எரிதிர வத்தொடு
வந்தது தவளையின் மர்மநஞ் சுடனே
ஊட்டவே ஆலம் உருக்குப் பொருள்களில்
கூட்டவே இரும்பு பதஞ்செயும் திரவம்.

அவனே கொல்லன் அவ்வில் மரினன்
நித்திய வாழ்வுடை நேரிய கொல்லன்
எண்ணம் கொண்டான் இனிதுசிந் தித்தான்
தேன்உண் வண்டு திரும்பி வந்தது
தேவைக் குரிய தேனுடன் வந்தது
தேனைச் சுமந்து திரும்பி வந்தது
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
'எனக்கு நல்லது இவைகள் இருப்பது

செவ்வுருக் காக்கும் திரவம் சமைக்க
இரும்பின் பொருட்களை விரும்பி அமைக்க.'
அடுத்து உருக்கை அவன்கை எடுத்து
ஏழை இரும்பையும் எடுத்தான் ஒன்றாய்
நெருப்பில் இருந்ததை நேர்கைக் கொண்டு
உலையில் இருந்ததை ஒன்றாய் எடுத்தான்.

தீக்குணம் கொண்டது செவ்வுருக் கப்போ
இரும்புக் கடங்காப் பெருஞ்சினம் வந்தது
அதுதீக் குணத்தால் ஆணையை மீறி
வறுநாய் போல மாண்பை இழந்தது;
இழிந்துசோ தரனை எற்றிக் கடித்தது
உற்றசுற் றத்தை உறுவாய் கொண்டது
குருதியை ஆறாய்ப் பெருக வைத்தது
படர்நீ ரூற்றாய்ப் பாய வைத்தது."

உறுமினான் கிழவன் உறும்அடுப் பருகில்
தாடி அசைந்தது தலைகுலுங் கிற்று:
"இரும்பதன் பிறப்பு எனக்குத் தெரியும்
உருக்கதன் தீய வழக்கமும் தெரியும்.
ஓ,நீ ஏழை, ஏழை இரும்பு,
ஏழை இரும்பு, பயனிலா இரும்பு,
உருக்கு அடுத்தது ஒருசூ னியப்பொருள்
நீயும் பிறந்த நிலையிப் படியா
தீயவை செய்யத் தினம்வளர்ந் திட்டது
தோற்றம் கொண்டது தொடர்பெரும் பொருட்களாய்?

முன்ஒரு கால்நீ முழுப்பெரி தல்லை
பெரியையு மல்லை சிறியையு மல்லை
அத்தனை அழகு அமைந்தது மில்லை
தீமைஅவ் வளவு திகழ்ந்தது மில்லை
நீபால் ஆக நிலைத்தவே ளையிலே
சுவையுறும் பாலாய் சுரந்தபோ தினிலே
இளமைப் பெண்ணின் எழில்மார் பகத்தில்
வனிதையின் கைகளில் வளர்ந்தநே ரத்தில்
விண்ணக மேக விளிம்பின் எல்லையில்
வளர்ந்து பரந்த வானதன் கீழே.

அப்போது நீயோ பெரியையும் அல்லை
பெரியையும் அல்லைச் சிறியையும் அல்லை
ஊற்றுச் சேற்றில் ஒளிந்த வேளையில்
தெளிந்த நீராய்த் திகழ்ந்த போதினில்
சதுப்பு நிலத்தின் தான்அகல் வாய்தனில்
கடினப் பாறைக் கற்குன் றுச்சியில்
மண்ணின் சேற்றுள் மாறிய வேளையில்
செந்துரு மண்ணாய்த் தேறிய வேளையில்.

அப்போது நீயோ பெரியையும் அல்லை
பெரியையும் அல்லைச் சிறியையும் அல்லை
**காட்டே றுன்னைச் சேற்றுறுத் துகையில்

**புல்வாய் மேட்டில் போட்டு மிதிக்கையில்
கால்களால் ஓனாய் கடிதழுத் துகையில்
கரடியின் பாதம் கடந்தவே ளையிலே.

அப்போது நீயோ பெரியையும் அல்லை
பெரியையும் அல்லைச் சிறியையும் அல்லை
சேற்றினில் இருந்துனை மீட்டவே ளையிலே
சதுப்புப் பூமியில் பெறப்படும் போதினில்
கொல்லன் தளத்துக் கொணர்ந்தநே ரத்தில்
இல்மரி னன்உலைக் களத்துறும் வேளையில்.

அப்போது நீயோ பெரியையும் அல்லை
பெரியையும் அல்லைச் சிறியையும் அல்லை
கடும்இரும் பாயாங் குறுமிய வேளையில்
அடிவெந் நீர்உனை அமுக்கிய போதினில்
உலைத்தீ அதிலே அழுத்திய நேரம்
சத்தியம் உண்மையாய்த் தான்செய்த வேளை
கொல்களம் மீதிலும் கொளும்உலை மீதிலும்
சுத்தியல் மீதிலும் தொடுகட்டை மீதிலும்
கொல்லனின் வேலை கொள்கள மீதிலும்
உலைத்தரை மீதிலும் உரைத்த(ா)ணை யிடுகையில்.

பேருரு இப்போ பெற்றுவிட் டாயா?
உனக்கு ஆத்திரம் உதித்தே விட்டதா
இழிந்தோய், உன்ஆணை இன்றுடைந் திட்டதா?
நாய்போல் மதிப்பு நாசமா கிற்றா?
இன்னல் உனது இனத்துக் கிழைத்தனை
வறியஉன் கேளிரை வாயில் கொண்டனை.

தீய செயல்உனைச் செயத்தூண் டியதார்?
கொடுந்தொழில் செயவுனைக் கூறிய தெவர்கொல்?
உனைப்பயந் தவளா? உன்னுடைத் தந்தையா?
அல்லது மூத்தஉன் அருஞ்சகோ தரனா?
அல்லது இளையஉன் அருஞ்சகோ தரியா?
அல்லது யாரெனும் அரும்உற வினரா?

உந்தையும் அல்ல உன்தாய் அல்ல
மூத்த சகோதரன் முதல்எவ ரும்மிலர்
இளைய சகோதரி எவருமே அல்ல
உரிய உறவினர் ஒருவரும் அல்ல;
நீயாய்த் தானே நிகழ்த்தினை தீத்தொழில்
நெடும்பெரும் பிழையை நிகழ்த்தினை நீயே.

உணர்வாய் வந்து உன்தவறு இப்போ(து)
தீச்செய லுக்குச் செய்பரி காரம்
உனது தாயிடம் உரைப்பதன் முன்னர்
முறைப்பாடு செய்வதன் முன்பெற் றோரிடம்
அளவிலா வேலைகள் அன்னைக் குண்டு
பெரிய தொல்லைகள் பெற்றோர்க் குண்டு
தனையன் ஒருவன் தான்பிழை செய்கையில்

பிள்ளை ஒன்று பெருந்தவ றிழைக்கையில்.

இரத்தமே உனது பெருக்கை நிறுத்து!
உயர்சோரி ஆறே ஓட்டம் நிறுத்து!
பாய்வதை நிறுத்து பார்த்துஎன் தலையில்!
படர்ந்தென் நெஞ்சிற் பாய்வதை நிறுத்து!
இரத்தமே நில்முன் எதிர்சுவ ரைப்போல்!
மிகுசோரி ஆறே வேலியைப் போல்நில்!
ஆழியில் நிற்கும் **வாளென நிற்பாய்!
கொழுஞ்சே றெழுந்த கோரைப் புல்லென!
வயலிலே உள்ள வரம்பினைப் போல்நில்!
நீர்வீச்சி யில்உறு நெடுங்கல் எனநில்!

ஒருமனம் அப்படி உனக்கு இருந்தால்
வேகமாய் ஓடிப் பாயவேண் டுமென
தசைகள் ஊடே தான்செறிந் தோடு
எலும்பின் வழியே இனிப்பரந் தோடு
உடம்பின் உள்ளிடம் உனக்குச் சிறந்தது
தோலின் கீழே தொடர்தல்மிக் குகந்தது
நல்லது பாய்வதும் நரம்புக ளூடாய்
எலும்புகள் வழியாய்ப் பரம்பலும் நன்று
படிமிசை வீணாய்ப் பாய்வதைக் காட்டிலும்
அழுக்கிலே சிந்தி அகல்வதைக் காட்டிலும்.

பாலே மண்மேல் பரந்துசெல் லாதே
களங்கமில் குருதியே கடும்புல்புக் காதே
மனிதரின் சிறப்பே வளர்புல் ஏகேல்
வீரர்பொற் றுணையே மேடுசெல் லாதே
இருப்பிடம் உனக்கு இதயத் துள்ளது
சுவாசப் பைகளின் தொடர்கீழ் அறைகளில்;
பகருமவ் விடங்களில் பரவுக விரைவாய்
விளங்குமவ் விடங்களில் வேகமாய்ப் பாய்வாய்!
ஓடிட நீயொரு உயர்நதி யல்லை
பெருகிட நீயொரு பெருவாவி யல்ல
சிந்திடச் சதுப்புச் செழுநில மல்லைநீ
மரக்கலம் மோதித் தெறிக்குநீ ரல்லைநீ.

ஆனதால் அன்பே அறச்செய் பெருக்கினை
உலர்ந்துபோ அங்ஙனம் உடன்செய் யாவிடில்!
வரண்டதும் உண்டுமுன் வளர் *துர்யா வீழ்ச்சியும்
*துவோனலா நதியும் சேர்ந்துலர்ந் துள்ளது
கடலும் விண்ணும் காய்ந்தது வரண்டது
வரட்சிமுன் பெரிதாய் வந்தநே ரத்தில்
கொடுந்தீ பற்றிக் கொண்டநே ரத்தில்.

இதற்குநீ இன்னும் பணியா திருந்தால்
நினைவினில் உளவே நேர்பிற வழிகள்
புகல்வேன் அறிந்து புதிய மந்திரம்
அலகை யிடத்தொரு கலயம் கேட்பேன்
குருதியை அதனுள் கொதிக்கவும் வைப்பேன்

மூண்டசெங் குருதி முழுதையும் ஆங்கே
ஒருதுளி தானும் பெருநிலம் விழாமல்
சிவந்த இரத்தம் சிந்தப் படாமல்
பெருநிலத் திரத்தம் பெருக விடாமல்
மென்மேற் குருதி மிகுந்துபா யாமல்.

எனக்கிலை மனித சக்தியே என்றால்
மானிட முதல்வன் மகனல்ல என்றால்
இரத்தப் பெருக்கைத் தடுத்து நிறுத்த
நரம்பில் பாய்வதை வரம்பிட் டணைக்க
விண்ணிலே உள்ளார் விண்ணகத் தந்தை
எழில்முகில் களின்மேல் இருக்கும் இறைவன்
மனிதர்கட் கெல்லாம் மாபெரும் சக்தி
வீரர்கட் கெல்லாம் மிகப்பெரும் வீரன்
இரத்தத் தின்வாய் அடைத்து நிறுத்த
வெளிவரும் குருதியை முழுதாய் நிறுத்த.

மானிட முதல்வா, மாபெரும் கர்த்தா!
விண்ணுல கத்தே நண்ணிவாழ் இறைவா!
தேவையாம் தருணம் தெரிந்திங் கெழுக
வருவாய் அழைக்கும் தருணத் திங்கே
திணிப்பாய் நினது திருமாண் கரங்கள்
அழுத்துவாய் நினது அருவிறற் பெருவிரல்
காயத் துவாரம் கடிதடைத் திறுக்க
தீய கதவைத் திண்ணமாய் அடைக்க;
மென்மை இலைஅதன் மீதே பரப்பு
**தங்கநீ ராம்பலால் தடுத்ததை மூடு
குருதியின் வழிக்குக் கொள்தடை யொன்றிட
வெளிப்படும் பெருக்கை முழுப்படி நிறுத்த
குருதிஎன் தாடியில் கொட்டா திருக்க
ஓடா திருக்கஎன் உடுகந் தையிலே."

அங்ஙனம் இரத்த அகல்வா யடைத்தான்
அங்ஙனம் இரத்த அதர்வழி யடைத்தான்.

அனுப்பினான் மகனை அவன்தொழில் தலத்தே
பூசுமோர் மருந்து புண்ணுக் கியற்ற
புல்லில் இருக்கும் புணர்தா ளிருந்து
ஆயிரம் தலைகொள் மூலிகை யிருந்து
தரையிலே வடியும் தண்நறை யிருந்து
சொட்டும் இனியதேன் துளியிலே யிருந்து.

வேலைத் தலத்தே விரைந்தான் பையன்
பூச்சு மருந்தை வீச்சொடே சமைக்க
சிந்துர மரத்தைச் செல்வழி கண்டான்
இவ்விதம் கேட்டான் இகல்சிந் துரத்தை:
"உன்கிளை களிலே உண்டோ தேறல்
பட்டையின் உள்ளே படிதேன் உளதோ?"

சிந்துர மரமும் செப்பிய தொருமொழி:

"நேற்றே நேற்று நிகழ்பகல் வேளையில்
தேன்சொட் டியதென் செறிகிளை களிலே
தேன்மூடி நின்றதென் செழும்பசும் உச்சியில்
முகிலிலே யிருந்து முகிழ்ந்து வடிந்ததேன்
முகிலின் ஆவியில் முகிழ்ந்ததேன் அதுவே."

ஒடித்தான் சிந்துர ஒளிர்மரச் சுள்ளிகள்
எடுத்தான் மரத்திலே இருந்துஉகு துகள்களை
சிறந்த புல்லில் சிற்சில எடுத்தான்
பல்வகை மூலிகை பலவுமே எடுத்தான்
இவைகளைக் காணொணா திந்நாட் டினிலே
எல்லா இடத்திலும் இவைவளர்ந் திலவாம்.

கலயம் எடுத்து கனலிலே வைத்தான்
அதனுள் கலவையை அவன்கொதிப் பித்தான்
நிறைத்தான் சிந்துர நிமிர்மரப் பட்டைகள்
சேர்த்தான் சிறப்பாய்த் தேர்ந்த புற்களை.

கலகல ஒலியொடே கலயம் கொதித்தது
மூன்று இரவுகள் முழுதும் கொதித்தது
வசந்தத்து மூன்று வருபகல் கொதித்தது
பூச்சு மருந்தினைப் பார்த்தான் பின்னர்
பயன்படுத் தத்தகு பதமா மருந்தென
உகந்ததா மந்திரம் உறுமருந் தென்று.

ஆயினும் தகுந்ததாய் அம்மருந் தில்லை
உறுமந் திரமருந் துகந்ததா யில்லை;
சேர்த்தான் மேலும் சிலவகைப் புற்களை
பல்வகை மூலிகை பலதையும் சேர்த்தான்
பல்வே றிடங்களில் பாங்குறப் பெற்றவை
அவைசதப் **பயண அரும்வழி சேர்த்தவை
தந்தவை ஒன்பது மந்திர வாதிகள்
எண்மர் வைத்தியம் அறிந்தவர் ஈந்தவை.

கொதிக்க வைத்தான் அடுத்துமூன் றிரவுகள்
இறுதியாய் ஒன்பது இரவுகள் வைத்தனன்
அடுப்பினில் இருந்து எடுத்தான் கலயம்
பூச்சு மருந்தினைப் பார்த்தான் மீண்டும்
பயன்படுத் தத்தகு பதமா மருந்தென
உகந்ததா மந்திரம் உறுமருந் தென்று.

கிளைபல செறிந்த **வளவர சொன்று
வயலின் ஓரம் மறுகரை நின்றது
கொலைத் தொழிற் பையன் கூர்ந்ததை உடைத்து
இரண்டே இரண்டு பாகமாய்க் கிழித்தான்;
பூச்சு மருந்தைப் பூசினான் அதனில்
வைத்தியம் செய்தான் மருந்தத னாலே
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"மருந்து இதி லொரு மகிமை இருந்தால்
புண்களின் மீது பூசலாம் என்றால்

பூசிக் காயம் போக்கலாம் என்றால்
அரசே முழுமையாய் அமைந்துநன் கெழுவாய்
சிறந்துமுன் னரிலும் செழுமையாய் எழுவாய்!"

அரசு முழுமையாய் அமைந்துநன் கெழுந்தது
சிறந்துமுன் னரிலும் செழுமையாய் எழுந்தது
முடிவரை வளர்ந்து வடிவாய் நின்றது
அடிமரம் இன்னும் அமைந்துநன் கிருந்தது.

பின்னரும் மருந்தை நன்குசோ தித்தான்
பயனுடன் மருந்தின் பரிகரிப் புணர்ந்தான்
தேய்த்தான் உடைந்து சிதறிய கற்களில்
பகுபட வெடித்த பாறையில் தேய்த்தான்;
கற்கள் கற்களாய் கடும்பலத் தொன்றின
பாறைகள் இணைந்து பாங்காய்ப் பொருந்தின.
வேலைத் தலத்தினால் மீண்டான் பையன்
பூச்சு மருந்தினை ஆக்கலில் இருந்து
கலவை மருந்தினைக் கலப்பதில் இருந்து
முதியோன் கரங்களில் அதைஅவன் வைத்தான்:
"இதோநம் பிக்கைக் கேற்றநல் மருந்து
சித்தி வாய்ந்த சிறப்புறு மருந்து
மலைகளை இணைக்க வல்லது ஒன்றாய்
அனைத்துப் பாறையும் இணைத்திட வல்லது."

நாக்கினால் கிழவன் நன்குசோ தித்தான்
இனிய வாயால் நனிசுவைத் திட்டான்
பயன்பரி காரம் பாங்கா யுணர்ந்தான்
சித்தியும் சிறப்பும் தேர்ந்தறிந் திட்டான்.

வைனா மொயினனில் மருந்தைப் பூசினன்
நோயடைந் தோனை நுவல்சுக மாக்கினன்
மேற்புறம் பூசினன் கீழ்ப்புறம் பூசினன்
பூசினன் மத்திய பாகமும் பூர்த்தியாய்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"எனது தசையினால் இதைப்போக் கிலன்யான்
கர்த்தரின் தசையால் கடிதுபோக் குகிறேன்
எனது சக்தியால் இதுசெய் திலன்யான்
சர்வவல் லவனின் சக்தியால் செய்கிறேன்
எனது வாயினால் நான் பேசவில்லை
இறைவனின் வாயினால் நான்பேசு கின்றேன்;
எனது வாயே இனியது என்றால்
இறைவனின் வாயே இனியது அதனிலும்
எனது கரங்கள் சிறந்தவை என்றால்
இறைவனின் கரங்கள் அதனினும் சிறந்தவை."

பூச்சு மருந்தைப் பூசிய பொழுது
சிறப்புறு மருந்தைத் தேய்த்தபோ தினிலே
நினைவின் சக்தியில் பாதியை நீக்கி
வைனா மொயினனை மயங்கச் செய்தது;

அறைந்தான் இப்புறம் அறைந்தான் அப்புறம்
அமைதி அற்றனன் ஆறுதல் அற்றனன்.

ஓட்டினன் கிழவன் உறுநோய் இங்ஙனம்
துன்பம் தருநோய் தூரவிலக் கினான்
**நோவின் குன்றில் நோவை ஏற்றினான்
நோவின் மலையின் நுவல்முடி யேற்றினான்
**சிலையிடை நோவைத் திணித்தனன் அங்கே
தந்தனன் பாறைகள் பிளக்கத் தகுதுயர்.

எடுத்தனன் ஒருபிடி இயல்பட் டுத்துணி
நீளத் துண்டுகள் நிலைபெற வெட்டினன்
சிறுசிறு துண்டுகள் சிதையக் கிழித்தனன்
உருட்டிச் சுற்றுத் துணிஉரு வாக்கினன்;
கட்டினன் உருட்டிய பட்டுத் துணியினால்
கட்டினன் அழகுறு பட்டுத் துணியினால்
மனிதனின் முழங்கால் வருரணம் சுற்றினன்
வைனா மொயினன் வல்விரல் சுற்றினன்.

இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"ஆண்டவன் பட்டுத் துணிஇது ஆகுக
ஆகுக சுற்றுத் துணிஇறை ஆடையே
நலமுறும் இந்த நன்முழங் காற்கு
தூய்மை யுறுங்கால் தொடுபெரு விரற்கு
இப்பொழு தருள்மிகும் இறைவனே, பாரீர்!
மாபெரும் கர்த்தரே, வந்துகாப் பளியும்!
அருள்வீர் துன்பம் அணுகா தெதுவும்
தீதெதும் தொடரா திருந்துகாப் பீரே!"

முதிய வைனா மொயினன் பின்னர்
உதவி வந்ததை உணரப் பெற்றான்
வாய்த்தது நலமும் வந்தே விரைவில்
வளர்ந்து தசைகள் வளமும் பெற்றன
பெற்றனன் கீழ்ப்புறம் பெருமநலம் சுகமும்
மறைந்தன நோவும் நோயும் மத்தியில்
போனது பக்கத் திருந்த புணர்நோ
அழிந்தது மேற்புறத் தமைந்த காயமும்
முன்னரைக் காட்டிலும் முழுப்பலம் பெற்றான்
நலம்மிகப் பெற்றான் நாடுமுன் நாளிலும்
நடக்க முடிந்தது நன்குஇப் பொழுதவன்
முழங்கால் மடக்க முடிந்தது நிறுத்த,
அடியொடு நோயும் நோவும் அற்றன
துளியும் இல்லை தொடர்வதை வருத்தம்.

முதிய வைனா மொயினனப் போது
விழிகளைத் திருப்பி மேலே நோக்கி
ஆங்கு பார்வையை அழகாய்ச் செலுத்தினன்
சிரசின் மேலே தெரிவிண் உலகு
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்

இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"கருணையாங் கிருந்து கணந்தொறும் பெருகும்
அன்பும் அபயமும் அனுதினம் கிடைக்கும்
வானத்தில் விண்ணின் மறுஉல கிருந்து
எல்லாம் வல்ல இறையிட மிருந்து.

இறைவனே, நன்றி இப்போ புகல்வோம்,
இறைநின் புகழே இசைப்போம் கர்த்தரே!
இந்த உதவியைத் தந்தமைக் கெனக்கு
அன்புடை அபயம் அளித்தமைக் கெனக்கு
கொடுயதாய் வந்த இடும்பையி லிருந்து
இரும்பின் கூரிய இன்னலி லிருந்து!"

முதிய வைனா மொயினனப் போது
பின்வரும் பொழிகளில் பேசினன் பின்னும்:
"இனிவரும் மக்களே இதுஅற வேண்டாம்
வேண்டாமெப் போதும் மிகுவளர் மக்காள்
வீம்புவார்த தைக்கு மிளிர்பட கமைத்தல்
படைத்தலும் வேண்டாம் படகுக் கைமரம்;
மன்னுயிர் போம்வழி வகுத்தவன் இறைவன்
பயணத் தெல்லையைப் பகர்ந்தவன் கர்த்தன்
மனித தீரத்தில் வயமேது மில்லை
வீரனின் சக்தியில் விளைவேது மில்லை."

கலேவலா

பாடல் 10 - சம்போவைச் செய்தல்

அடிகள் 1 - 100 : வைனாமொயினன் வீட்டுக்கு வந்து, இல்மரினனை வட பகுதிக்குச் சென்று சம்போவைச் செய்து வடநில மங்கையைப் பெறும்படி கூறுகிறான்.

அடிகள் 101 - 200 : இல்மரினன் வடபகுதிக்குச் செல்ல மறுக்கிறான். வைனாமொயினன் வேறு வழிகளைக் கையாண்டு அவனை வடபகுதிக்கு அனுப்புகிறான்.

அடிகள் 201 - 280 : இல்மரினன் வடபகுதிக்கு வருகிறான். அங்கு அவன் நன்கு வரவேற்கப்பட்டுச் சம்போவைச் செய்வதாக வாக்கு அளிக்கிறான்.

அடிகள் 281 - 432 : இல்மரினன் சம்போவைச் செய்து முடித்ததும் வடநிலத் தலைவி அதை வடக்கே மலைப் பாறைகளில் வைக்கிறாள்.

அடிகள் 433 - 462 : இல்மரினன் தனது வேலைக்கு ஊதியமாக வடநில மங்கையைக் கேட்கிறான். அவள் தான் இன்னமும் வீட்டை விட்டுப் புறப்படக்கூடிய நிலையில் என்கிறாள்.

அடிகள் 463 - 510 : இல்மரினன் ஒரு படகைப் பெற்று வீட்டுக்குத் திரும்பி, தான் வட பகுதியில் சம்போவைச் செய்துவிட்டதாக வைனாமொயினனுக்குக் கூறுகிறான்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
எடுத்தான் **பழுப்பு இகல்பொலிப் புரவி
புரவியைச் சேணம் பூட்டினன் பின்னர்
மண்ணிறப் புரவி வண்டிமுன் நின்றது
வண்டியில் தானே வலுவிரை வேறினன்
அமர்ந்து கொண்டனன் அவ்வண் டியினுள்.
சவுக்கைச் சுழற்றிச் சாடினன் பரியை
மணிமுனைச் சாட்டையால் வான்பரி அறைந்தனன்
பறந்தது புரவி பயணம் விரைந்தது
வண்டி உருண்டது வருதொலை குறைந்தது
மிலாறுவின் சட்டம் மிகச்சல சலக்க
**பேரியின் ஏர்க்கால் பின்கட கடத்தது.

அதன்பின் தொடர்ந்து அவன்பய ணித்தான்
நாட்டின் பரப்பிலும் நகர்நிலச் சதுப்பிலும்
திறந்து கிடந்த செறிவன வெளியிலும்.
ஒருநாள் சென்றான் இருநாள் சென்றான்
சென்றான் அங்ஙனம் மூன்றாம் நாளிலும்
வந்தான் பாலம் வருநீள் முடிவில்.

கலேவலா விருந்த கவின்பெரு விடங்களில்
வந்தான் ஒஸ்மோ வயல்களின் எல்லையில்.
பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்
உரைத்தே அவன்தான் உரைசெய லாயினன்:
"ஓநாய், உணவுகொள், கனவுகாண் பவரை,
லாப்லாந் தியரை இங்குகொல், நோயே,

'நான்இல் செல்லேன்' என்றவர் நவின்றார்
மேலும் 'வாழேன் விழியோ' டென்றார்
'இனிஇவ் வுலகில் இல்லைநான்' என்றார்
பொன்னிலாத் திகழும் பொற்பொழு தெல்லாம்
வைனோ என்னும் வளமுறு நாட்டில்
கலேவலா எனும்புதர்க் கவின்சம வெளியில்."

முதிய வைனா மொயினன் பின்னர்
பாடினான் மந்திரப் பாடலைப் பயின்றான்
பாடினான் தேவ தாருயர்ந் தலர்ந்தது
மலருடன் பொன்னிலை வளர்ந்து செழித்தது
எட்டிநின் றதுஅதன் எழில்முடி வானை
தவழ்முகில் களின்மேல் தழைத்து நின்றது
படர்கிளை வானில் பரப்பி நின்றது
திகழ்வான் எங்கும் செறிந்து நின்றது.

பாடினான் மந்திரப் பாடலைப் பயின்றான்
திங்களின் நிலவு திகழப் பாடினன்
பொன்முடித் தாரு பொலியப் பாடினன்
கவின்கிளைத் **தாரகைக் கணத்தைப் பாடினன்
அதன்பின் தொடர்ந்து பயணம் செய்தனன்
நச்சிய வசிப்பிடம் புக்கச் சென்றனன்
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
தொய்ந்து சரிந்த தொப்பியை அணிந்து,
அவனே கொல்லன் அவ்வில் மரினனை
கவினழி வில்லாத கைவினைக் கலைஞன்
வழியனுப் புவதாய் வாக்களித் தானே
தன்தலை போயினும் தருவதாய்ச் சொன்னான்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
புகார்படி *சரியொலாப் புகுநிலப் பரப்பில்.

நிமிர்பொலிப் பரியை நிறுத்தினன் முடிவில்
ஒஸ்மோ வின்புது உயர்வய லருகில்
முதிய வைனா மொயினன் அதன்பின்
வண்டியில் இருந்தே வன்தலை தூக்கி
வேலைத் தலத்தின் மிகுஒலி கேட்டனன்
நிலக்கரிக் குடிசையின் **கலக்கொலி கேட்டனன்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
வேலைத் தலத்தில் தானே நுழைந்தனன்
இருந்தனன் அங்கே கொல்லன்இல் மரினன்
வியன்சுத் தியலால் வேலைசெய் தவனாய்.
கொல்லன்இல் மரினன் கூறினன் இங்ஙனம்:
"வருவாய் முதிய வைனா மொயினனே
இந்நீள் நாட்கள் எங்கே சென்றனை
எங்கே இருந்தனை இத்தனை காலமும்?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"அங்கே சென்றேன் அந்தநீள் நாட்கள்

அங்கே இருந்தேன் அத்தனை காலமும்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
புகார்படி சரியொலாப் புகுநிலப் பரப்பில்
லாப்பின் பனியிலே வழுக்கிச் சென்றேன்
மந்திர அறிஞரின் வன்புலத் திருந்தேன்."

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓகோ, முதிய வைனா மொயின!
நிலைபெறும் மாய நெறியறி முதல்வ!
பார்த்தது என்ன பயணப் போதிலே
வந்தாய் நின்இல் வழங்குக விபரம்"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"சங்கதி எ(வ்)வளவோ சாற்றுதற் குண்டு
வடக்கே வாழ்கிறாள் வனிதை ஒருத்தி
குளிர்மிகும் கிராமக் குமரி ஒருத்தி
வாழ்வின் துணைவனை வரிக்கிறாள் இல்லை
நலமிகும் கணவரை நாடுவாள் இல்லை
வடநிலப் பாதி புகழ்கிற தவளை
அழகில் நிகரே அற்றவள் என்று:
விழியின் புருவத் தொளிரும் சந்திரன்
சூரியன் அவளின் மார்பிலே மிளிரும்
தோள்களில் துள்ளும் **தாரகைக் கூட்டம்
ஏழு தாரகை எழில்முது கொளிரும்.

இப்போது கொல்லன் இல்மரி னன்நீ,
கவின்அழி வில்லாக் கொல்வினைக் கலைஞ!
செல்வாய், அந்தச் சேயிழை அடைவாய்,
மின்னும் கூந்தலின் பொன்தலை காண்பாய்
சம்போ என்னும் சாதனம் செய்தால்
பாங்குடன் ஒளிரும் மூடியும் படைத்தால்
அரிவையை ஊதிய மாகநீ அடைவாய்
அழகியைத் தொழிற்குப் பலனாய் அடைவாய்."

கொல்லன்இல் மரினன் கூறினன் இங்ஙனம்:
"ஓகோ, முதிய வைனா மொயினனே!
வாக்களித் தனையோ மற்றெனைத் தரலாய்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
உன்தலை காத்தற் குறுதுணை யாக
உனக்கு விடுதலை தனைப்பெறற் காக?
என்நீள் வாழ்நாள் என்றுமே செய்யேன்
பொன்னிலாத் திகழும் பொற்பொழு தெல்லாம்
வடபால் நிலத்து வசிப்பிடம் போகேன்
சரியோ லாப்புறத் துறுகுடில் செல்லேன்
மனிதரை உண்ணும் மருண்டபூ மிக்கு
இகல்வலார் அழிக்கும் ஏழ்மைநாட் டுக்கு."

முதிய வைனா மொயினன் பின்னர்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:

"இன்னோர் அற்புதம் இருக்கிற தங்கே
மலர்முடித் தேவ தாரொரு மரமுள
மலர்முடி யோடு வளர்பொன் இலைகள்
ஆங்குஒஸ் மோவின் அகல்வயல் எல்லையில்
உச்சியில் திங்களின் உயர்நிலா வொளிரும்
கவின்கிளைத் தாரகைக் கணங்கள் இருக்கும்."

கொல்லன்இல் மரினன் கூறினன் இங்ஙனம்:
"நம்புதற் கில்லைநீ நவிலும்இக் கூற்றைநான்
நேரிலே போயதைப் பார்வைகொள் வரையிலும்
எனதுகண் களால்அதை எதிர்கொளும் வரையிலும்!"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"நம்புதல் உனக்கு நன்கிலை யென்பதால்
நேரிலே சென்றுநாம் நிகழ்வதைப் பார்க்கலாம்
உணரலாம் பொய்யா உண்மையா என்பதை."

ஏகினர் பார்த்திட இருவரும் நேரில்
மலர்களால் மூடிய வளர்முடி மரத்தை
முதிய வைனா மொயினன் முதலில்
கொல்லன்இல் மரினன் கூடும் அடுத்தவன்.
அங்கே இருவரும் அடைந்தநே ரத்தில்
ஒஸ்மோ வயலில் ஒருப்படும் எல்லையில்
நிறுத்தினன் நடையை நின்றனன் கொல்லன்
திகைத்தனன் கண்டு தேவ தாருவை
கிளர்தா ரகைக்கணம் கிளையில் இருந்தது
மரத்தின் முடியினில் வளர்நிலா இருந்தது.

முதிய வைனா மொயினனு மாங்கே
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இப்போநீ கொல்ல, இனியசோ தரனே!
மரத்தில் ஏறுவாய் மதியினை எடுக்க
கைகளில் தாரகைக் கணத்தினைக் கொள்ள
உச்சியைப் பொன்னிலே உடைய மரத்திலே!"

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
ஏறினன் உயரத் தெழில்மரம் மேலே
விண்வரை உயர விரைந்துயர் வேறினன்
கவினுறு திங்களைக் கைகொள வேறினன்
எடுத்திட ஏறினன் இனியதா ரகைக்குழாம்
திகழ்பொன் முடியுடைத் தேவதா ருவிலே.

பொன்மலர் முடியொடு பொலிந்த தாரது
அகன்ற தலையுடை அருந்தரு மொழிந்தது:
"ஐயகோ, சித்தம் அற்றபேய் மனிதா,
அனுபவம் அற்ற அப்பாவி மனிதா,
வேடிக்கை மனிதனே விரிகிளை ஏறினாய்
வந்தனை குழந்தைத் தனமாய் முடிவரை
திங்களின் சாயையைச் சீராய்ப் பெறற்காய்
பொய்யாம் உடுக்களைப் புக்கெடுப் பதற்காய்!"

முதிய வைனா மொயினனப் போது
பதமென் குரலால் பாடத் தொடங்கினன்
தொடர்காற் றெழுந்து சுழலப் பாடினன்
கொடுங்காற் றகோரம் கொள்ளப் பாடினன்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"சுழல்கால் இவனையுன் தோணியிற் கொள்வாய்
பவனமே உனது படகினில் பெறுவாய்
கொண்டுநீ சேர்ப்பாய் கொடுந்தொலை நாட்டில்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே!"

காற்றுச் சுழன்று கடுகதி எழுந்தது
வாயு ஆங்கார மதுகொண் டெழுந்தது
கொல்லன்இல் மரினனைக் கொண்டு சென்றது
தூர தேசத்துத் தூக்கிச் சென்றது
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
புகார்படி சரியொலாப் புகுநிலப் பரப்பில்.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
சென்றான் தொடர்ந்து செய்தான் பயணம்
காற்று வீசிய கடுவழி சென்றான்
வாயு வீசிய வழியினிற் சென்றான்
திங்களின் மேலும் செங்கதிர்க் கீழும்
தாரகைக் கணத்தின் தயங்குதோள் மீதும்;
வடபால் முற்றம் வரையிலும் சென்றான்
சரியொலா சவுனா தம்தெரு சென்றான்
அவனை நாய்களோ அறியவே யில்லை
கடுங்குரை நாய்கள் கவனிக்க வில்லை.

லொவ்ஹி என்பவள் வடநிலத் தலைவி
நீக்கல் எயிறுள நீள்வட முதுபெண்
வந்துமுற் றத்தில் வனப்பொடு நின்றாள்
இவ்விதம் தானே இயம்பிட லானாள்:
"எவ்வகை மனித இனத்தினன் நீதான்
வீரனே யாயினும் எவ்வகை வீரன்
பவனம் வீசும் பாதையில் வந்தாய்
வந்தாய் வாயுவின் வழியின் தடத்திலே
ஆயினும் நாய்கள் அவைகுரைத் திலவே
சடைவால் நாய்கள் சத்தமிட் டிலவே."

கொல்லன்இல் மரினன் கூறினன் இங்ஙனம்:
"நானும் இங்கு நண்ணிய துண்மையாய்
கிராமத்து நாய்கள் கிளர்ந்தெழ அல்ல
செறிசடை வால்நாய் சினப்பதற் கல்ல
அன்னிய மானஇவ் வகல்கடை வாயிலில்
அறிமுக மற்றஇவ் வகல்வாய் வழியினில்."

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
உறுநவ அதிதியை உசாவினாள் இப்படி:

"அறிந்ததுண் டோநீ, அறிமுகம் உண்டோ?
உண்டோ கேட்டது உனக்குத் தெரியுமோ?
இல்மரினன் எனும் வல்லஅக் கொல்லனை
கைவினை வல்லோன் கவின்மிகும் கலைஞன்?
எதிர்பார்த் தவனை இருந்தோம் பலநாள்
இருந்தோம் வருவான் இங்கென வெகுநாள்
இந்த வடபால் இயைநிலப் பகுதியில்
சம்போ புதியாய்ச் சமைப்பதற் காக."

அவனே கொல்லன் அவ்வில் மரினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அறிவேன் என்றும் சொல்லலாம் அவனை
வல்லஇல் மரினன் எனுமக் கொல்லனை
ஏனெனில் நான்இல் மரினன்என் பான்தான்
கவினழி வில்லாக் கலைஞனும் நானே."

லொவ்ஹி என்பவள் வடநிலத் தலைவி
நீக்கல் எயிறுள நீள்வட முதுபெண்
வீட்டினுக் குள்ளே விரைந்து சென்றனள்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்:
"எனது செல்வியே, இளமென் மங்கையே,
பிள்ளைகள் அனைத்திலும் பெரும்இகல் பிள்ளாய்,
அணிவாய் ஆடைகள் அனைத்திலும் சிறந்ததை
வெண்மையாய் உள்ளதை மேனியில் தரிப்பாய்
மென்மையாய் இருப்பதை மிலைவாய் மார்பில்
நேர்த்தியாய் இருப்பதை நெஞ்சிலே அணிவாய்
சிறந்த அணிகளைச் செழுங்கழுத் தேற்றி
தரிப்பாய் நல்லதைத் தண்ணுதற் புருவம்
கன்னம் செந்நிறக் கவினுற மாற்றி
அலங்கா ரிப்பாய் அழகாய் வதனம்
இப்போ கொல்லன்இல் மரினன் என்பவன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
சம்போ செய்யத் தானிங் குற்றான்
திகழ்ஒளி மூடியும் செய்வான் அதற்கே."

வடபால் நிலத்து வளமுறு நங்கை
நீரிலும் நிலத்திலும் நெடும்புகழ் பெற்றவள்
ஆடைகள் அனைத்திலும் அரியதை எடுத்தாள்
சுத்தமா யிருந்த சுடருடை எடுத்தாள்
ஆடைகள் அணிந்தாள் அலங்கரித் திட்டாள்
தலையணி ஆடை நலஒழுங் கமைத்தாள்
செப்பினால் பட்டியை செறித்தனள் இடையில்
பொன்னிலாம் மின்னரைக் கச்சினைப் பூட்டினள்.

வீட்டினி லிருந்து விரைந்தனள் கூடம்
முற்றத்தில் மெல்லடி வைத்துநின் றிட்டாள்
பேரொளி அவளது பெருவிழித் தெரிந்தது
காதுகள் உயர்ந்து கவினுற விளங்கின
முகத்திலே அழகது முழுமையா யிருந்தது
செழுமையாய் மிளிர்ந்தன சிவந்தகன் னங்கள்

பொன்னணி மின்னின பொலிந்துமார் பினிலே
மின்னின சென்னியில் வெள்ளிநல் அணிகள்.

அவளே வடநிலத் தலைவியப் போது
கொல்லன்இல் மரினனைக் கூட்டிச் சென்று
வடபால் நிலத்து மாடங்கள் காட்டி
கூடம் சரியொலா எங்கும் காட்டினள்.
அங்கே அவனுக் கருவிருந் தளித்து
பானம் நிறையப் பாங்காய்க் கொடுத்து
மனம்நிறைந் தவனை உபசரித் திட்டாள்
தானே இவ்விதம் சாற்றத் தொடங்கினள்
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞ!
சம்போ உன்னால் சமைக்க முடிந்தால்
முதிர்ஒளி நிறங்களில் மூடியும் செய்தால்
அன்னத் திறகின் அணிமுனை யிருந்து
மலட்டுப் பசுவின் மடிப்பா லிருந்து
ஒருசிறு பார்லி ஒளிர்மணி யிருந்து
கோடை ஆட்டின் குறுமயி ரிருந்து
அரிவையைப் பெறுவாய் அதற்கூ தியமாய்
அப்பணிக் கேற்ப அழகியைப் பெறுவாய்."

அப்போ கொல்லன் அவன்இல் மரினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"என்னால் சம்போ இயற்றிட முடியும்
முதிர்ஒளி நிறங்களில் மூடியும் செய்வேன்
அன்னத் திறகின் அணிமுனை யிருந்து
மலட்டுப் பசுவின் மடிப்பா லிருந்து
ஒருசிறு பார்லி ஒளிர்மணி யிருந்து
கோடை ஆட்டின் குறுமயி ரிருந்து
ஏனெனில் விண்ணை இயற்றியோன் நானே
வானக மூடியை வனைந்தவன் நானே
ஒன்றுமே யில்லா ஒன்றினி லிருந்து
அடிப்படை எதுவுமே அற்றதி லிருந்து."

அவன்சம் போசெய ஆயத்த மானான்
முதிர்ஒளி நிறங்களில் மூடியும் செய்ய
வேலைத் தலமாய் வேண்டினன் ஓரிடம்
கேட்டான் வேண்டிய கருவிவே லைக்கு;
ஆயினும் வேலைக் கங்கிட மில்லை
தொடர்தொழில் தலமும் துருத்தியும் இல்லை
இல்லை உலைக்களம் இல்லைப் பட்டடை
இல்லை சம்மட்டி இல்லைக் கைப்பிடி.

அப்போ கொல்லன் அவன்இல் மரினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"தளர்முது பெண்கள் சந்தே கிப்பர்
சிறுமன மாந்தர் செய்வர் குறைத்தொழில்
இழிந்தவன் கூடஆண் இதுசெய மாட்டான்
சோம்புறு மனிதனும் வீம்பெதும் செய்யான்."

ஓரிடம் தேடினன் உலைக்களம் வைக்க
பார்த்தனன் ஒருதடம் பட்டடை அமைக்க
அவ்வட நாட்டின் அகல்பரப் பினிலே
வடநிலத் தமைந்த வயற்பரப் பினிலே.

ஒருநாள் தேடினன் மறுநாள் தேடினன்
மூன்றாம் நாளும் முடிவாய்த் தேடினன்
கடைசியில் மின்னுமோர் கல்லினைக் கண்டான்
கண்டான் கனத்துச் செறிந்தகற் பாறை.
தேடலை நிறுத்தித் தேர்ந்தஅவ் விடத்தில்
கொழுங்கன லாங்கே கொல்லன் மூட்டினன்
அங்கே பட்டடை அமைத்தான் முதல்நாள்
மறுநாள் உலைக்களம் மகிழ்ந்தொன் றமைத்தான்.
அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
உறுபொருட் களையவ் வுலையினில் வைத்து
உலையின் அடியில் உயர்தொழில் தொடங்கினன்
அடிமைகள் கொண்டான் அவ்வுலை ஊத
இயக்கினர் துருத்தியை இடைநின் றடிமைகள்.

ஊதினர் அடிமைகள் உலையினை நின்று
துருத்தியை இயக்கித் தொடர்தொழில் செய்தனர்
கோடைகா லத்துக் கொள்பகல் மூன்றிலும்
கோடைகா லத்துக் குளிர்நிசி மூன்றிலும்
கற்கள் குதிகாற் களின்கீழ் வளர்ந்தன
எழுந்தன பாறைகள் இகல்பெரு விரலடி.

அவ்விதம் வந்து அணைமுத லாம்நாள்
அவனே கொல்லன் அவன்இல் மரினன்
இருந்து குனிந்துள் எட்டிப் பார்த்தான்
அவனது உலைக்கள அடிப்புறம் தன்னில்
என்ன வருவது என்பதை அறிய
தீயினி லிருந்து செருகன லிருந்து.

உலையில் குறுக்குவில் ஒன்றிருந் தெழுந்தது
விளங்குபொன் தனுவது வெப்பத் திருந்து
முனையது வெள்ளியம் முழுவில் தங்கம்
செப்பின் ஒளியொடே திகழ்விற் கைப்பிடி.
சிலையது பார்க்கச் சிறப்புறு தோற்றம்
ஆயினும் தீச்செயல் அதன்கண் ஆனது
கேட்டது நாள்தொறும் கிளர்வில் ஓர்தலை
இருதலை கேட்டது இயையும் நல்நாள்.

அவனே கொல்லன் அவன்இல் மரினன்
நெஞ்சத் ததனால் நிறைவே இல்லை
வேறிரு துண்டாய் வில்லை முறித்தான்
மீண்டும் போட்டான் வெங்கனல் மீதே
ஊதினர் அடிமைகள் உடன்நின் றுலையை
துருத்தியை இயக்கித் தொழிலதை ஆற்றினர்.

அந்தநாள் முடிந்து அடுத்தநாள் வந்தது
கொல்லன்இல் மரினன் குறிப்பாய்த் தானே
இருந்து குனிந்துள் எட்டிப் பார்த்தனன்
அவனது உலைக்கள அடிப்புறம் தன்னில்
உலையில் இருந்து உதித்ததோர் படகு
செந்நிறப் படகு செறிகன லிருந்து
முன்முனைப் படகு பொன்னில் மிளிர்ந்தது
**மிண்டுக் குவடு மிளிர்ந்தன செப்பால்.

பார்க்க நன்றாய்ப் படகு இருந்தது
ஆயினும் தீச்செயல் அதன்கண் ஆனது
காரண மின்றிப் போருக் கெழுந்தது
ஆதார மின்றி அதுபோர் கேட்டது.

அந்தக் கொல்லன் அவன்இல் மரினன்
நெஞ்சத் ததனால் நிறைவே இல்லை
துண்ட துண்டமாய்த் துணித்தான் படகை
அனலிலே மீண்டும் அதையிட் டிட்டான்
ஊதினர் அடிமைகள் உடன்நின் றுலையை
துருத்தியை இயக்கித் தொழிலதை ஆற்றினர்.

முடிந்தது அந்நாள் மூன்றாம் நாள்வர
கொல்லன்இல் மரினன் குறிப்பாய்த் தானே
இருந்து குனிந்துள் எட்டிப் பார்த்தனன்
அவனது உலைக்கள அடிப்புறம் தன்னில்
கன்னிஆ வொன்று கனலுலை எழுந்தது
பொன்னின் கொம்புடன் பொருகன லிருந்து
தாரகைக் கணம்அதன் தனிநுதல் இருந்தது
தலையினில் சூரிய சக்கரம் இருந்தது.

பார்க்க நன்றாய்ப் பசுவும் இருந்தது
ஆயினும் தீச்செயல் அதன்கண் ஆனது
படர்வனம் பொழுதெலாம் படுத்துக் கிடந்தது
பாலைவீ ணாகப் படியிற் கறந்தது.

அந்தக் கொல்லன் அவன்இல் மரினன்
நெஞ்சத் ததனால் நிறைவே இல்லை
துண்ட துண்டமாய்த் துணித்தான் பசுவை
அனலிலே மீண்டும் அதையிட் டிட்டான்
ஊதினர் அடிமைகள் உடன்நின் றுலையை
துருத்தியை இயக்கித் தொழிலதை ஆற்றினர்.

நடந்தது அந்நாள் நான்காம் நாள்வர
அவனே கொல்லன் அவன்இல் மரினன்
இருந்து குனிந்துள் எட்டிப் பார்த்தனன்
அவனது உலைக்கள அடிப்புறம் தன்னில்
உழுபடை ஒன்று உலையில் எழுந்தது
பொன்னின் கொழுவுடன் புணர்கன லிருந்து
செம்பொன் கொழுவது செப்பிற் கைமரம்

வெள்ளியிற் கைப்பிடி மேற்புறம் ஆனது.
பார்க்கநன் றாயுழு படையோ இருந்தது
ஆயினும் தீச்செயல் அதன்கண் ஆனது
கலப்பை கிராமக் கனவயல் உழுதது
ஊரவர் நிலங்களை உழுபடை உழுதது.

அந்தக் கொல்லன் அவன்இல் மரினன்
நெஞ்சத் ததனால் நிறைவே இல்லை
ஓரிரு துண்டாய் உழுபடை முறித்து
அனலிலே மீண்டும் அதையிட் டிட்டான்
உலையிற் காற்றை ஊதச் செய்தனன்
வேகமாய் வாயுவை ஊதச் செய்தனன்.

வெங்கால் எழுந்து வேகம் கொண்டது
கீழ்மேல் காற்றுகள் கிளர்ந்து வீசின
தென்காற் றின்னும் சினந்துவீ சிற்று
வடகாற் றுக்கிர மாகவீ சிற்று.
வீசின ஒருநாள் வீசின மறுநாள்
வீசின விரைந்து மிகமூன் றாம்நாள்
சாளரம் தன்னில் தணலெரி மூண்டது
கதவுகள் எல்லாம் கனற்பொறி கக்கின
விரைந்தன தூசுகள் விண்ணினை நோக்கி
புகையெலாம் திரண்டு முகில்களாய் மாறின.

அந்தக் கொல்லன் அவன்இல் மரினன்
முடிந்தஅந் நாள்பின் மூன்றுநாள் முடிவில்
இருந்து குனிந்துள் எட்டிப் பார்த்தனன்
அவனது உலைக்கள அடிப்புறம் தன்னில்.
கண்டான் சம்போ கனிந்துட் பிறந்ததை
ஒளிரும் மூடியும் வளர்வதைக் கண்டான்.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
தகுசுத் தியலால் தட்டினன் தட்டினன்
அடித்துமென் மேலும் அடித்து அறைந்தனன்
திறமையின் பயனாய்ச் செய்தான் சம்போ;
சம்போ ஒருபுறம் தானிய ஆலை
இன்னொரு பக்கம் இலவண ஆலை
மூன்றாம் பக்கம் முழுப்பண ஆலை.

அரைக்கத் தொடங்கிய தப்புதுச் சம்போ
சுடர்மிகும் மூடியும் சுழன்றே வந்தது
அந்தியில் கொள்கலம் ஆர்ந்திட அரைத்தது,
ஒருகலம் நிறைய உணவுக் கரைத்தது
விற்பனைக் கொன்றை விரைந்தே அரைத்தது
அரைத்தமூன் றாவது அகச்சே மிப்பாம்.

வடநில முதியவள் மகிழ்ச்சியில் மிதந்தாள்
வந்துபெற் றேகினள் மாபெரும் சம்போ
வடநிலக் குன்றதன் மணிமுக டதன்மேல்

செப்பினால் இயைந்தசெம் மலைகளுக் குள்ளே
பூட்டினள் ஒன்பது பூட்டுகள் போட்டு;
இறங்கின சூழ்ந்ததை இகல்வல் வேர்கள்
ஒன்பது மடங்கிலோர் **ஆறடி ஆழம்;
அன்னையாம் புவியில் அதிலொன் றிறங்க
மற்றவோ் நீர்க்கரை வழியரு கிறங்க
மூன்றாம் வேர்முது மனைமலைச் சென்றது.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
பெண்ணைப் பெறற்குப் பெருமையோ டெழுந்தான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இப்போ மங்கை எனக்குத் தானே
சம்போ இயற்றிச் சரியாய் முடித்ததால்
ஒளிரும் அழகுறும் ஒருமூ டியுடன்?"

வடக்கின் அழகிய மங்கையப் போது
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"ஆரப்பா இனிவரும் அடுத்த ஆண்டினிலே
ஆரப்பா மூன்றாம் அடர்கோ டையதில்
குயிலை இங்கேக் கூவச் செய்வது
பறவைகள் அனைத்தையும் பாட வைப்பது
இன்னொரு நாடுநான் ஏகுவ தானால்
அந்நிய நாட்டிலோர் அருஞ்சிறு பழம்போல்?

இந்தக் கோழி இல்லா தொழிந்தால்
இந்த வாத்தும் எங்கும் அலைந்தால்
வழிமாறி அன்னையின் வம்சமும் போனால்
**செந்நிறப் பழமும் சீர்கெட் டழிந்தால்
இன்குயில் அனைத்தும் இல்லா தொழியும்
மகிழ்வுறும் பறவைகள் மறைந்தே போகும்
இந்த மலையின் எழில்முடி யிருந்து
இந்த மேட்டு எழில்நிலத் திருந்து.

அதுவிலா தெனக்கோ அவகா சமி(ல்)லை
கன்னிஎன் பருவம் கடக்கவு மில்லை
இந்தவே லைகளை இயற்றவும் வேண்டும்
அலர்கோ டைப்பொழு தவசர நாட்களில்:
படிமிசை சிறுபழம் பறிபடா திருக்கும்
நீர்க்கரைப் பாடல்கள் நிகழா திருக்கும்
உயர்மேட் டினிலம் உலாவற் றிருக்கும்
அழகுதோப் பெலாம்நான் ஆடா திருக்கும்."

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
தொய்ந்து சரிந்த தொப்பியை அணிந்து
சிறிதுசித் தத்தே சிந்திக்க லானான்
நீண்ட நேரமாய் நிகழ்த்தினன் யோசனை
இல்லகப் பயணம் எப்படிச் செய்வது
பழகிய நாடு படர்வது எங்ஙனம்

இருள்நிறை வடபால் இயைநிலத் திருந்து
புகார்படி சரியொலாப் புகுநிலத் திருந்து.

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
சோர்ந்து மனமது துயரம் கொண்டதேன்
சரிந்து தொப்பியும் சாய்ந்து வந்ததேன்
பயணம் செய்வது பற்றிய எண்ணமா
வாழ்ந்தமுன் னிடத்து மீள்வது பற்றியா?"

கொல்லன்இல் மரினன் கூறினன் இங்ஙனம்:
"எனது எண்ணம் ஏகுவ தங்கே
எனதுவீட் டிற்கு இறந்துபோ தற்கு
எனதுநாட் டிற்கு இளைத்தே குதற்கு."

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
மனிதனுக் குணவும் பானமும் வழங்கி
படகுபின் தட்டில் பாங்குற அமர்த்தினள்
படகின் துடுப்போ படர்செப் பானது
காற்றினை வீசக் கட்டளை யிட்டனள்
வடக்குக் காற்றினை வளர்கதி வீச.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
நுவல்சுய நாட்டினை நோக்கிச் சென்றனன்
நீலக் கடலின் நீண்ட பரப்பிலே.
பயணம் ஒருநாள் பயணம் இருநாள்
சென்றான் அங்ஙனம் மூன்றாம் நாளிலும்
கொல்லன்இப் போது கூடும்இல் அடைந்தான்
பிறந்து வளர்ந்த பேரிடம் அடைந்தான்.

முதிய வைனா மொயினன் கேட்டனன்
இல்மரி னன்எனும் கொல்ல னிடத்தே:
"சகோதர, கொல்ல தகைஇல் மரின!
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞ!
புதிய சம்போ புனைந்து முடிந்ததா
திகழ்ஒளி மூடியும் செய்து முடிந்ததா?"

கொல்லன்இல் மரினன் கூறினன் இங்ஙனம்:
தானாய் ஒருபதில் தகுதியாய் உரைத்தான்:
"அரைத்திடு கின்றது அதிநவச் சம்போ
சுழன்றிடு கின்றது சுடர்மூ டியதும்
அந்தியில் கொள்கலம் ஆர்ந்திட அரைக்கும்
அரைக்குமோர் கொள்கலம் அதுஉண வுக்காம்
விற்பனைக் கரைக்கும் வேறொரு கொள்கலம்
சேமிக்க அரைக்கும் திரும்ப மூன்றாவதை."

கலேவலா

பாடல் 11 - லெம்மின்கைனனின் விவாகம்

அடிகள் 1-110 : லெம்மின்கைனன் தீவின் உயர் குலப் பெண்களில் ஒரு மனைவியைப் பெறப் புறப்பட்டுப் போகிறான்.

அடிகள் 111-156 : அந்தத் தீவின் பெண்கள் முதலில் அவனை ஏளனம் செய்கிறார்கள்; பின்னர் நட்பாகப் பழகுகிறார்கள்.

அடிகள் 157-222 : அவன் தேடி வந்த குயிலிக்கி அவனுடைய எண்ணத்துக்கு இணங்கவில்லை; அதனால் அவன் குயிலிக்கியைப் பலவந்தமாக வண்டியில் ஏற்றிக் கடத்திச் செல்கிறான்.

அடிகள் 223-314 : குயிலிக்கி அழுகிறாள்; குறிப்பாக லெம்மின்கைனன் போருக்குச் செல்வதை அவள் விரும்பவில்லை. அதனால் லெம்மின்கைனன் தான் இனிமேல் போருக்குச் செல்வதில்லை என்றும் குயிலிக்கி இனிமேல் கிராமத்துக்கு நடனம் ஆடச் செல்வதில்லை என்றும் ஒருவருக்கொருவர் சத்தியம் செய்து கொடுக்கிறார்கள்.

அடிகள் 315-402 : லெம்மின்கைனனின் தாய் தனது மருமகளைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறாள்.

*அஹ்தியைப் பற்றியிஃ தறிந்துசொல் தருணம்
போக்கிரி அவன்நிலை புகன்றிடும் நேரம்
தீவினில் வசித்துத் திகழுமிவ் வஹ்தி
*லெம்பியின் குறும்புடை அம்புவி மைந்தன்
வானுயர் இல்லில் வளர்ந்தவன் அவனே
அன்புமிக் கன்னையின் அருகினில் வளர்ந்தோன்
படர்ந்தகல் வளைகுடாப் பகுதியின் முடிவில்
காண்தொலைக் குடாவதன் கைவளைப் பரப்பில்.

*தூரநெஞ் சினனவன் மீனயின் றுயர்ந்தான்
ஒருவகை **மீனயின் றுயர்ந்தனன் அஹ்தி
மனிதரில் சிறந்தவோர் வல்லவ னானான்
சிவந்தநற் குருதிபோல் திகழ்ந்தவா லிபனாம்
தரமுடன் அமைந்தது தலைஅவ னுக்கே
தீரமும் திறமையும் திகழ்ந்தன துணையாய்;
ஆயினும் சிறுகுறை அவனில் இருந்தது
தனித்தவன் நடத்தையில் தரம்குறைந் திருந்தது:
பூவைய ரோடுதன் பொழுதெலாம் கழிப்பான்
அலைந்திரா முழுவதும் அவன்திரிந் திடுவான்
மங்கையர் தம்மையே மகிழவைத் திடுவான்
குழலியர் தம்முடன் குலவிக் களிப்பான்.

தீவக மடந்தையாய்த் திகழ்பவள் *குயிலி
தீவக மடந்தை தீவின் மலரவள்
வானுயர் வீட்டில் வளர்ந்தாள் அவளே
எழிலாய் அழகாய் இனிதாய் வளர்ந்தாள்
தந்தையின் இல்லில் சதாஅமர்ந் திருப்பவள்
அழகுயர் சாய்மணை ஆசனப் பலகையில்.

நெடிதாய் வளர்ந்தவள் நீள்பெரும் சீர்த்தியள்
தூரதே சத்தால் துணைவர்கள் வந்தனர்
மிகமிகப் புகழுடை மெல்லியள் இல்லம்
சிறந்ததோட் டத்துச் சீர்சால் பகுதி.

அவளைத் தன்மகற் கருக்கன் கேட்டனன்
அவள்புக வில்லை அருக்கனின் நாடு,
அருக்கனின் அருகே அவள்ஒளி வீசி
கோடையிற் காயக் கொண்டிலள் விருப்பே.

சந்திரன் கேட்டான் தன்மகற் கவளை
சந்திர நாடு தான்புக் கிலளாம்,
சந்திர னருகில் தண்ணொளி வீசி
வானம் சுற்றி வரும்விருப் பிலளே.

தாரகை கேட்டது தன்மகற் கவளை
தாரகை நாடு தான்புக் கிலளாம்,
நீண்ட இரவுகள் நேத்திரம் சிமிட்டி
குளிர்வான் இருக்கக் கொண்டிலள் விருப்பே.

*எஸ்த்தோனி யாவிருந் தேகினர் வரன்மார்
*இங்கிரி யாவிருந் தெழுந்தனர் பிறசிலர்
அங்கெலாம் பாவை அவள்புக் கிலளாம்
அவளே அளித்தாள் அதற்கோர் மறுமொழி:
"விரயமா கிறது வீணாய் நும்பொன்
வெள்ளியும் வீணாய் விரைந்தழி கிறது
நாடுஎஸ்த் தோனியா நான்புக மாட்டேன்
போவதே யில்லைநான் போகவே மாட்டேன்
எஸ்த்தோனி(ய) நீரில் எழிற்பட கோட்டேன்
தீவினில் பகடையாய் தினந்தொறும் மாறேன்
எஸ்த்தோனி யாமீன் எடுத்துண மாட்டேன்
எஸ்த்தோனி யா**ரசம் எடுத்துநான் குடியேன்.

இங்கிரி யாவும் ஏகநான் மாட்டேன்
அதன்நீர்க் கரைக்கும் அயல்மேல் நிலத்தும்
பசியுள தாங்கு பலதும் குறைவு
மரக்**குச் சியொடு மரங்களும் பஞ்சம்
குடிநீர்ப் பஞ்சம் கோதுமைப் பஞ்சம்
உறுதா னியத்து ரொட்டியும் பஞ்சம்."

குறும்பன் லெம்மின் கைனனப் போது
அழகிய தூர நெஞ்சினன் அவன்தான்
செய்தான் முடிவு செய்திடப் பயணம்
தீவதன் மலரைத் திருமணம் செய்ய
தனித்துவம் வாய்ந்த மணப்பெண் அவளை
அழகிய கூந்தல் அமைந்த பாவையை.

ஆயினும் சொன்னாள் அன்னையோர் தடையே
வயோதிப மாது வந்தெச் சரித்தாள்:
"செல்வஎன் மகனே சென்றிட வேண்டாம்

உன்னிலும் பார்க்க உயர்விடம் நோக்கி
அங்கே உன்னை அவர்கள் ஏற்றிடார்
உயரிய தீவின் உறவினர் மத்தியில்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"என்இல் சிறந்ததே இல்லையா யிடினும்
என்னினம் சிறந்ததே இல்லையா யிடினும்
காரியம் என்உடற் கவினால் ஆகும்
நேர்பிற சிறப்பால் நினைத்தது நடக்கும்."

அன்னை தடையாய் இன்னும் நின்றாள்
லெம்மின் கைனன் செய்பய ணத்து
தீவில் வாழ்ந்த சிறப்பினத் துக்கு
உயர்வாய் வாழ்ந்த உறுகுடி யினரிடம்:
"ஏளனம் செய்வராங் கிருக்கும் மகளிர்
பாவையர் உன்னைப் பார்த்துச் சிரிப்பர்."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"அரிவையர் சிரிப்பைநான் அடக்குவேன், ஆமாம்,
நிறுத்துவேன் மகளிர் நிகழ்த்தும் சிரிப்பை
வழங்குவேன் பையனை மார்பினில் சுமக்க
தருவேன் குழந்தையைத் தளிர்க்கர மணைக்க
அப்போ தேளனம் அவர்கள் செய்திடார்
இகழ்ச்சியாய் என்னை எதுவுமே சொல்லார்."

இந்தச் சொற்களில் இயம்பினள் அன்னை:
"அடடா, பேதைநான் ஆகினேன் வாழ்வில்,
தீவின் மகளிரைச் செய்தால் கேவலம்
அவமானம் தூய மகளிர்க் களித்தால்
அதனால் நீயோ அடைவது கலகம்
பெரும்போர் தொடர்வது பிறிதொரு உண்மை
அனைத்துத் தீவின் அருமண வாளரும்
வாளொடு நூறென வந்திடு வார்கள்
பேதை மகனே பெரிதுனைத் தாக்குவர்
சுற்றித் தனியாய்ச் சூழ்ந்து வளைப்பர்."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
தாயினைச் சரிக்கை தனையும் இகழ்ந்தான்
எடுத்தான் சிறந்த எழிற்பொலிப் புரவி
ஏர்க்காற் பூட்டினன் இகல்தெரி புரவி
புறப்பட் டெழுந்து போனான் பயணம்
தீவின் போர்பெறும் திருவூ ரதற்கு
தீவதன் மலரைத் திருமணம் செய்ய
தீவின் தனித்துவச் செல்வியாம் மகளை.

நங்கையர் லெம்மின் கைனனை நகைத்தனர்
மங்கையர் கேலி வலுவாய்ச் செய்தனர்
பாதையில் வினோதமாய்ப் படர்ந்தபோ தினிலே

தோட்டத்து வினோதத் தொடர்பய ணத்திலே,
வண்டியை அதுகவிழ் வரையும் ஓட்டினன்
உருட்டி வாயிலில் உடனதை வீழ்த்தினன்.

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
தன்வாய் கோணித் தலையைத் திருப்பி
கறுத்தத் தாடியைக் கையால் முறுக்கி
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இதுபோல் கண்டதே இல்லைமுன் னாளில்
இல்லையே கண்டதும் இல்லையே கேட்டதும்
என்னைப் பார்த்தொரு பெண்சிரிப் பதனை
ஏளனம் மகளிர் என்னைச் செய்வதை."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"விரும்புமித் தீவில் வெற்றிடம் உண்டா
இடமெது முண்டா இந்நில மேட்டில்
என்விளை யாட்டை இனிவிளை யாட
நிலமெதும் உண்டா நிகழ்த்துவதற் காடல்
தீவக மகளிரைச் செறிகளிப் பூட்ட
கூந்தலார் பெண்களைக் கூடிநன் காட?"

தீவுப் பெண்கள் செப்பினர் இப்படி
கடல்முனைக் கன்னியர் கள்விடை கூறினர்:
"ஆமாம், தீவிலே அகல்வெற் றிடமுள
தீவின் மேட்டிலே திகழிட முளது
உன்விளை யாட்டை உயர்வாய் நிகழ்த்த
ஆடலைச் செய்ய அகல்நில முண்டு
ஆயனுக் கேற்ற அமைவெறும் பூமி
எரித்த காடு இடையனுக் குண்டு
தீவுப் பிள்ளைகள் தேகம் மெலிந்தவர்
ஆயினும் கொழுத்தவை அணிபரிக் குட்டிகள்."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
தொழிலொன் றிடையனாய்த் துணிவுடன் பெற்றான்
மந்தை மேய்த்தலை வளர்பகல் செய்தான்
இரவில் மகளிரின் இனிமையில் களித்தான்
அங்குள பெண்களோ டாடி மகிழ்ந்தான்
**கூந்தலார் பெண்களைக் கூடிநன் காடினான்.

குறும்பன் லெம்மின் கைனனிவ் வாறு
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
அரிவையர் நகைப்புக் கமைத்தான் முடிவு
ஏளனப் பேச்சை இல்லா தொழித்தான்;
அந்த இடத்திலோர் அரிவையும் இல்லை
தூய்மையா னவளும் சொல்லவாங் கில்லை
அவன்தொடாப் பெண்ணென அறுதியிட் டுரைக்க
அவன்அரு கேதுயில் அயராப் பெண்ணென.

எல்லோர் நடுவிலும் இருந்தாள் ஒருகுமர்

தீவின் உயர்ந்த செழுங்குடி மரபாள்
ஏற்கா திருந்தாள் எம்மண மகனையும்
நினையா திருந்தாள் நேரிய கணவனை
குயிலிக்கி அழகிய குமரியே அவளாம்
தீவிலே மலர்ந்த செழும்எழில் மலரவள்.

குறும்பன் லெம்மின் கைன னப்போது
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
அணிந்து காலணி அழித்தான் நூறு
துடுப்புகள் வலித்துத் தொடர்ந்துநூ றழித்தான்
பெண்ணவள் தேடும் பெரும்வே லையிலே
அக்குயி லிக்கியை அடையுமெ ண்ணத்தில்.

குயிலிக்கி என்னும் கொழுமெழில் மங்கை
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"எளிய மனிதா எதற்கா யலைகிறாய்?
கரைநிலப் புள்போல் கடிதூர்ந் தலைகிறாய்?
இங்குள பெண்டிரை ஏன்கேட் டலைகிறாய்?
**ஈயநெஞ் சினரை ஏன்விசா ரிக்கிறாய்?
இங்கிதற் கெனக்கு இலையவ காசம்
திரிகைக் கல்லைச் சேர்த்தரைக் கும்வரை
உலக்கையை இடித்து உறத்தேய்க் கும்வரை
உரலை இடித்தணு உருவாக் கும்வரை.
மதியேன் நான்சிறு மதிபடைத் தோரை
சபலம் சிறுமதி தாம்உடை யோரை,
உரம்பெறும் தரமுடை உடல்தான் வேண்டும்
உரமும் தரமும் உடையஎன் உடற்கு,
அழகும் எழிலும் அமையுருத் தேவை
எழிலார் அழகுடை எனதுரு வதற்கு,
வடிவுடைக் கவினார் வதனமே தேவை
வடிவும் கவினும் வாய்ந்தஎன் முகத்துக்(கு)."

காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
அரிதாய் மாதத் தரைக்கூ றழிந்தது
பலநாள் சென்று ஒருநாள் வந்தது
பலமாலை களிலே ஒருமாலை வேளை
விளையாட் டினிலே மின்னார் மூழ்கினர்
அழகுறும் அரிவையர் ஆடலில் ஆழ்ந்தனர்
இரகசிய மாக இருந்தவூர்த் தோப்பில்
புல்தரைப் பக்கமாய்ப் புணர்வெளி ஒன்றிலே
எல்லோர்க் கும்**மேல் இருந்தனள் குயிலி(க்கி)
தீவதன் சிறப்புடைச் செறிபுகழ் மலரவள்.

வந்தனன் போக்கிரி மன்னுசெங் கதுப்பினன்
குறும்பன் லெம்மின் கைனன் விரைந்தனன்
தனக்கே உரிய தனிப்பொலிப் புரவியில்
தேர்ந்தே எடுத்த சிறப்புறும் குதிரையில்
விளையாட் டயரும் வியன்நில மத்தியில்
அழகிய மாதர் ஆடிய இடத்தில்;
குயிலிக்கி அவளைக் குறுகியே பற்றினன்

ஏற்றினான் பெண்ணை இயைந்ததன் வண்டி
அமர்த்தினன் தனதுதோ லாசனத் தவளை
வண்டியின் அடியில் வைத்தனன் அவளை.
சவுக்கினால் பரியைச் சாடினான் ஓங்கி
சாட்டை சுழற்றிச் சாற்றினன் கறைந்தான்
அவனது பயணம் அவ்வா றெழுந்தது
புறப்படும் போதே புகன்றனன் இவ்விதம்:
"ஒருக்கால்(உம்) வேண்டாம் ஓ,இள மடவீர்!
நடந்த கதையினை நவிலவும் வேண்டாம்
மற்றுநான் இங்கே வந்தது பற்றியும்
செல்வியைக் கடத்திச் சென்றது பற்றியும்.
பகருமிம் மொழிக்குப் பணியா விடிலே
கொடிய சம்பவம் கூடுமுங் களுக்கு
பாடுவேன் போர்க்களம் படரநும் துணைவர்
பாடுவேன் வாளிற் படநும் இளைஞர்
என்றுமே அவர்தம் செய்திகள் கேட்கீர்
வாழ்நாள் என்றுமே மற்றவர் காணீர்
பாதையில் அவர்கள் படர்ந்துசெல் வதையும்
வண்டியிற் செல்வதும் வயலிடைக் காணீர்."

மெய்குயி லிக்கி மேல்முறை யிட்டாள்
தீவின் மலரவள் தேம்பி அழுதாள்:
"இங்கிருந் தென்னை ஏகிட விடுவாய்
பிள்ளை சுதந்திரம் பெறவிடு விப்பாய்
திரும்பியே வீடு சென்றிட விடுவாய்
அழுது புலம்பும் அன்னையின் அருகில்,
எனைச்சுதந் திரமாய் ஏக விடாயேல்
வீட்டுக்குச் செல்ல விடாதுபோ னாலோ
இன்னும் சோதரர் இருக்கிறார் ஐவர்
எழுவர் மாமனின் மக்கள் இருக்கிறார்
முயலைத் தொடர்ந்து முன்னோடி வருவர்
கன்னியின் தலையைக் காத்திட வருவர்."

அவட்கு விடுதலை அமையா நிலையில்
கண்மடை திறந்து கண்ணீர் பெருக்கினள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"பேதைநான் வீணாய்ப் பிறந்தேன் உலகில்
வீணாய்ப் பிறந்தேன் வீணாய் வளர்ந்தேன்
வாழ்நாள் முழுக்க வாழ்ந்தேன் வீணாய்
பெறுமதி யற்ற பிறன்கைப் பட்டேன்
மதிப்பெது மில்லா மனிதனைச் சேர்ந்தேன்
போரிடும் ஒருவன் புறம்வந் தணைந்தேன்
ஓய்விலாப் போர்செயும் ஒருவனைச் சார்ந்தேன்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழில்மிகு தூர நெஞ்சினன் இயம்பினன்:
"கண்ணே, குயிலி(க்கி), கனிவன் புளமே!
எனது சிறிய இனியநற் பழமே!
எதற்கும் துன்பம் இவ்வா றுறாதே
உனைநான் வருத்தேன் ஒருபொழு தேனும்

அணைப்பினில் இருப்பாய் அடி,நான் உண்கையில்,
கரங்களில் இருப்பாய் கனி,நான் நடக்கையில்,
அருகினில் இருப்பாய் அயல்நான் நிற்கையில்,
பக்கத் திருப்பாய் படுக்கும் பொழுதே.

எனவே நீயும் எதற்கு வருந்தல்?
நெடுமூச் செறியும் நீள்துயர் எதற்கு?
இதற்கா வருந்தி இடர்நீ படுகிறாய்
இதற்கா நெடுமூச் செறிந்து அழுகிறாய்
பஞ்சம் பசுக்கள், பஞ்சம் ரொட்டி,
எல்லாம் குறைவு என்றே எண்ணமா?

எதற்கும் வருந்தல் இப்போ வேண்டாம்
பசுக்களும் என்னிடம் பலப்பல உண்டு
கறக்கும் பசுக்களும் கணக்கிலா துள்ளன
முதலில் சதுப்பு நிலத்து **'மூ ரிக்கி'
அடுத்துக் குன்றில் அலையு(ம்) **'மன் ஸிக்கி'
**'புவோலுக் கா'எரி காட்டின்மூன் றாவது
உண்ணா மலேஅவை உரமாய் உள்ளன
கவனிப் பின்றியே கனசிறப் புற்றன;
மாலையில் கட்டி வைப்பது மில்லை
காலையில் அவிழ்த்துக் கலைப்பது மில்லை
அவைக்கு வைக்கோல் அளிப்பது மில்லை
உப்பில் உணவில் பஞ்சமொன் றில்லை.

அல்லது இதற்கா உள்வருந் துகிறாய்?
நெடுமூச் சிதற்கா நீயெறி கின்றாய்?
உயர்உற வினர்எனக் குற்றிலர் என்றா?
எனக்குச் சிறந்தவீ டில்லையே என்றா?

உயருற வினரெனக் குற்றிலர் எனினும்
எனக்குச் சிறந்தவீ டில்லையே எனினும்
என்னிட முளதொரு இகல்மகத் துவவாள்
ஒளிவிடும் அலகொடு ஒருவாள் உண்டு
அதுவே எனக்கு அதியுயர் உறவு
அதுவே எனக்கு ஆம்சீர்க் குடும்பம்
அலகைகள் அமைத்து அருளிய வாளது
கடவுளர் தீட்டிக் கைத்தரும் வாளது
எனது உறவினை இவ்வா றுயர்த்தினேன்
என்குடும் பத்தை இயல்சிறப் பாக்கினேன்
கூர்மை மிக்கஅக் கொடுவாள் அதனால்
அலகுமின் எறிக்கும் அந்தவாள் அதனால்."

பேதைப் பெண்ணாள் பெருமூச் செறிந்தாள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"ஓகோ, அஹ்தி, லெம்பியின் புதல்வா!
ஒருபெண் என்போல் உனக்குவேண் டுமெனின்
துணைவாழ் நாளெலாம் தொடரவேண் டுமெனின்
கோழிஉன் அணைப்பில் கொள்ளவேண் டுமெனின்
அகலா நிரந்தர ஆணையொன் றுரைப்பாய்

போருக்கு இனிமேல் போகேன் என்று
பொன்பெற நேரினும் போகேன் என்று
வெள்ளியின் ஆசையால் விலகேன் என்று."

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"அழியாச் சத்தியம் அளிக்கிறேன் நான்இதோ
போருக்கு இனிமேல் போகவே மாட்டேன்
பொன்தேவைப் படினும் போகவே மாட்டேன்
வெள்ளியை விரும்பியும் விலகவே மாட்டேன்;
நீயொரு சத்தியம் நிகழ்த்துவாய் இப்போ
போகாய் உன்ஊர்ப் புறம்நீ என்று
விருப்புடன் துள்ளி விளையாட் டயர
ஆசையாய் நடனம் ஆடிக் களித்திட."

அப்போ(து) இருவரும் அளித்தனர் சத்தியம்
ஒப்பந்தம் என்றும் உரைத்தனர் நிலைபெற
எனைவரும் உணர்ந்திடும் இறைவனின் முன்நிலை
சர்வவல் லோனது தண்முகத் தின்கீழ்
போகேன் அஹ்தி போருக்கு என்று
குயிலிக்கி ஊர்ப்புறம் குறுகேன் என்று.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
ஓங்கி அடித்தான் உறுபரி சவுக்கால்
பொலிப்பரி யதனைப் புடைத்தான் சவுக்கால்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"தீவின்புற் றிடரே, செலவிடை பெறுகிறேன்,
ஊசிமர வேரே, உயர்தா ரடியே,
நற்கோ டையில்நான் நடந்த தடங்களில்
குளிர்கா லத்துயான் உலாவிய இடங்களில்
மேகமூ டிராநட மாடிய விடங்களில்
சீறிய காற்றிலே போயொதுங் கிடங்களில்
இக்கான் கோழியை இனிதுதே டுகையிலே
இந்தவாத் தினைத்துரத் திட்டநே ரத்திலே."

பயணம் தொடர்ந்து பாங்காய் நடந்தது
வீடு கண்ணில் விரைந்து தெரிந்தது
இந்தச் சொற்களில் இயம்பினள் அரிவை
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"அங்கோர் வசிப்பிடம் அதோ தெரிகிறது
சிறிதாய் வறிதாய்த் தெரிகின் றதது
அந்தக் குடிசை ஆருக் குரியது
உரியது யார்க்கப் பொலிவிலா இல்லம்?"

குறும்பன் லெம்மின் கைனன் அவனே
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"வசிப்பிடம் பற்றி வருந்தவும் வேண்டாம்
குடிசைக் காய்ப்பெரு மூச்சதும் வேண்டாம்
வேறு வசிப்பிடம் விரைந்துகட் டப்படும்
மிகவும் சிறந்தவை அவைநிறு வப்படும்

பலமிகச் சிறந்த பலகை யவற்றால்
சிறப்பு மிகுந்த மரங்கள் அவற்றினால்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
விரைந்து வந்து வீட்டை அடைந்தான்
அருமை அன்னை அருகை அடைந்தான்
மதிப்புடைப் பெற்றவர் வயமருங் கணைந்தான்
இந்தச் சொற்களில் இயம்பினள் அன்னை
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"காணவே யிலையுனைக் கனநாள் மகனே,
வெகுநாள் அந்நிய நாட்டில்வே றிருந்தாய்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அவமா னம்அவ் வரிவையர்க் கமைத்தேன்
பதிலடி தூய பாவையர்க் களித்தேன்
பார்த்தெனை அவர்கள் பழித்ததற் காக
நன்கெனை அவர்கள் நகைத்ததற் காக;
வண்டியில் சிறந்ததோர் வனிதையைக் கொணர்ந்தேன்
அவள்தோ லிருக்கையில் அமரவைத் திட்டேன்
வண்டிப் பீடம் வைத்தேன் அவளை
தூயகம் பளியில் சுற்றி யெடுத்தேன்
கோதையர் நகைக்குக் கொடுத்தேன் பதிலடி
ஏந்திழை யாரின் ஏளன உரைக்கு.

அன்னையே, தாயே, எனைச்சுமந் தவளே!
என்னுடை அம்மா, எனைவளர்த் தவளே!
எதற்கே கினனோ அதனைப் பெற்றேன்
தேடிய தெதுவோ நாடியஃ துற்றேன்;
சிறந்ததோர் மெத்தையைத் தெரிந்து விரிப்பாய்
தருவாய் மென்மைத் தலையணை யினிதே
சொந்தஎன் நாட்டில் சுகத்துடன் படுக்க
என்னுயிர்க் கினிய இளமைப் பெண்ணுடன்."

இந்தச் சொற்களில் இயம்பினள் அன்னை
உரைத்தே அவள்தான் உரைசெய லாயினள்:
"இறைவனே, உனக்கு இயம்பினேன் நன்றி,
கர்த்தனே, நின்புகழ் கனிந்தே இசைத்தேன்,
எனக்கொரு மருமகள் ஈந்ததற் காக
நல்லதீ ஊத நல்லவள் ஒருத்தியை
துணிநெய்யச் சிறந்த துடியிடை ஒருத்தியை
நல்லுடை பின்ன வல்லவள் ஒருத்தியை
துணிமணி தோய்த்துப் பணிசெயு மொருத்தியை
துணிமணி வெளுக்கத் துணைதந் ததற்காய்.

நீபெற்ற பேற்றை நினைத்துநீ நன்றிசொல்
நல்லதே பெற்றாய் நல்லதே யடைந்தாய்
நல்லதைக் கர்த்தர் நயந்துதந் ததற்காய்
அருங்கரு ணைக் கடல் அளித்தநன் மைக்கு.
பனித்திண்மப் **பறவை பரிசுத்த மானது

அதனிலும் தூய்மை அரியஉன் துணைவி
நுவல்கடல் அலையும் நுரையே வெண்மை
அதனிலும் வெண்மைநீ அரிதுபெற் றவளாம்
கடலிடை வாத்து கவின்வனப் புடையது
அதனிலும் வனப்புநீ அரிதுகொணர்ந் தவள்
உயர்வான் தாரகை ஒளிமய மானது
அதனிலும் ஒளிர்பவள் அரியஉன் மணப்பெண்.

கூடத்தின் தரையைக் கூட்டி **அகற்று
பயன்மிகு பெரிய பலகணி கொணர்வாய்
பொற்சுவ ரெல்லாம் புதிதாய் நிறுத்து
வசிப்பிட மனைத்தையும் மாற்று சிறப்புற
கட்டு கூடங்கள் கடிமனைக் கெதிரே
பூட்டு கூடத்தில் புதிய கதவுகள்
இளம்பெண் ஒருத்தியை இன்றுநீ பெற்றதால்
நேர்எழில் பெண்ணை நீபார்த் ததனால்
உன்னிலும் மேலாம் உயர்சிறப் பொருத்தியை
உன்னினத் தோரிலும் உயர்ந்தவள் ஒருத்தியை."

கலேவலா

பாடல் 12 - சத்தியம் தவறுதல்

அடிகள் 1 - 128 : குயிலிக்கி சத்தியத்தை மறந்து கிராமத்துக்குப் போகிறாள். அதனால் சினமடைந்த லெம்மின்கைனன் அவளை விலக்கிவிட்டு வடபகுதி மங்கையிடம் புறப்படுகிறான்.

அடிகள் 129 - 212 : லெம்மின்கைனனின் தாய் அவன் அங்கே கொல்லப்படலாம் என்று தடுக்கிறாள். தலை வாரிக் கொண்டிருந்த லெம்மின்கைனன் தனக்கு கெடுதி நேர்ந்தால் அந்தச் சீப்பில் இருந்து இரத்தம் பெருகும் என்று உரைக்கிறான்.

அடிகள் 213 - 504 : அவன் புறப்பட்டு வட நாட்டுக்கு வருகிறான். அங்கே மந்திரப் பாடலைப் பாடி எல்லா அறிஞர்களையும் வீட்டிலிருந்து வெளியேற்றுகிறான், ஒரேயொரு கொடிய இடையனைத் தவிர.

அதன்பின் அஹ்தி லெம்மின் கைனன்
அவன்தான் அழகிய தூர நாட்டினன்
எல்லாக் காலமும் இனிதே வாழ்ந்தான்
இளமைப் பருவ ஏந்திழை தன்னுடன்;
போருக் கேயவன் போனதும் இல்லை
குயிலிக்கி கிராமம் குறுகவு மில்லை.

போயின பலநாள் புலர்ந்தது ஒருநாள்
காலைகள் கழிந்தொரு காலையும் வந்தது
அவன்தான் அஹ்தி லெம்மின் கைனன்
மீன்சினைக் கின்றதோர் வியனிட மடைந்தான்
மாலையில் வீடு வந்தனன் இல்லை
அடுத்தநாள் இரவும் அவன்இல் வந்திலன்
குயிலிக்கி அதனால் குறுகினள் கிராமம்
அங்குள மகளிரோ டாடிடப் போனாள்.

இந்தச் செய்தியை எவர்கொண் டேகுவர்
இப்புதி னத்தை எவர்போய்ச் சொல்வார்?
அஹ்தியின் சகோதரி அவள்*ஐ னிக்கி
செய்தியை அவளே தெரிந்தெடுத் தேகினள்.
செய்தியைச் சுமந்து சென்றாள் அவளே:
"அன்பே, அஹ்தி, அரியஎன் சோதரா,
குயிலிக்கி எழுந்து குறுகினள் கிராமம்
அந்நியர் வாயில்போய் அடைந்தனள் அவளே
சென்றனள் கிராமப் பெண்டிரோ டாட
நறுங்குழ லாருடன் நடமிடச் சென்றாள்."

அஹ்திப் பையன் அவன்நிக ரில்லான்
அவன்தான் குறும்பன் லெம்மின் கைனன்
கோபம் கொண்டான் குரோதம் கொண்டான்
நீண்ட நேரமாய் நெடுஞ்சினங் கொண்டான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே
"ஓ,என் அன்னையே, உயர்வய தினளே!
என்மே லாடையை எடுத்துநீ கழுவினால்

கறுத்தப் பாம்பின் கடுங்கொடு நஞ்சிலே,
உடன்அதை விரைவாய் உலரப் பண்ணினால்,
போருக்கு நானும் புறப்பட் டிடுவேன்
வடபால் இளைஞர் வளர்தீத் தடத்தே
லாப்பு மைந்தர் இருப்பிடம் அதற்கு
குயிலிக்கி கிராமம் குறுகியே விட்டாள்
அந்நியர் வாயிலை அடைந்தே விட்டாள்
அந்தப் பெண்களோ டவள்விளை யாட
நறுங்குழ லாருடன் நடனமா டற்கு."

குயிலிக்கி இப்போ கூறினள் ஆமாம்
முதலில் பெண்ணவள் மொழியமுன் வந்தாள்:
"அன்பே, இனியஎன் அஹ்தியே, கேளாய்!
போருக்கு நீயும் புறப்பட வேண்டாம்
துயிலும் பொழுது தோன்றிய தோர்கனா
அமைதியாய் உறங்கும் அப்போ கண்டேன்:
உலைக்களம் போல ஒருநெருப் பெழுந்தது
சுவாலையாய் எழுந்து சுடர்விட் டெரிந்தது
சாளரத் தின்கீழ் சரியாய் வந்தது
பின்சுவர்ப் பக்கமாய்ப் பெரிதாய்ச் சென்றது
உடன்சுழன் றங்கிருந் துள்ளே நுழைந்தது
உக்கிரம் கொண்டது உயர்நீர் வீழ்ச்சிபோல்
தரையிலே இருந்து தாவிக் கூரை
பலகணி பலகணி பரவிச் சென்றது."

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"பெண்களின் கனவைநான் நம்புவ தில்லை
மனைவியர் சத்திய வாக்கும்நான் நம்பேன்
அன்னையே, தாயே, எனைச் சுமந்தவளே!
எனதுபோ ராடையை இங்கே கொணர்க!
எனதுபோ ருடைகளை ஏந்திவந் திடுக!
உள்ளுணர் வென்னுள் ஓ,விழிக் கின்றது
போருக் கானதாம் **பானம் பருக
போருக் குரியநற் புதுநறை நுகர."

இவ்வா றப்போ தியம்பினள் அன்னை:
"ஓ,என் அஹ்தி, உயர்ந்தஎன் மகனே!
போருக்கு நீயும் புறப்பட வேண்டாம்!
பானம்எம் வீட்டில் பருகிடற் குளது
**மரப்பீப் பாக்களில் மதுமிக வுளது
சிந்துர மரத்தில் செய்தமூ டியின்பின்;
உனக்கு அருந்தயான் உடனே கொணர்வேன்
வரும்நாள் முழுக்க மனம்போல் அருந்தலாம்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"வேண்டேன் வடித்த வீட்டுப் பானம்
அதற்குமுன் பாக ஆற்றுநீர் குடிப்பேன்
வலிக்கும் சுக்கான் வல்லல கேந்தி;
ஏந்துமந் நீரெனக் கினிமையா யிருக்கும்

இல்லிலே வடித்த இனியபா னத்திலும்,
எனதுபோ ராடையை இங்கே கொணர்வாய்!
எனதுபோ ருடைகளை ஏந்திவந் திடுக!
வடபால் நிலத்து வசிப்பிடம் போகிறேன்
லாப்பு மைந்தரின் இருப்பிடம் போகிறேன்
பெரும்பொன் கேட்டுப் பெறற்குப் போகிறேன்
வெள்ளி கோரிமிகப் பெறப் போகிறேன்."

கூறினள் லெம்மின் கைனன் அன்னை:
"ஓ,என் அஹ்தி, உயர்ந்தஎன் மகனே!
இல்லிலே நிறைய நல்லபொன் உளது
வெள்ளியும் கூடம் மிகநிறைந் துளது
சரியாய் நேற்றுஇச் சம்பவம் நடந்தது
வைகறைப் பொழுதும் மலர்ந்திடும் நேரம்
விரியன் வயல்களை அடிமை உழுதனன்
இகல்அரா நிறைந்த இடத்தைப் புரட்டினன்
உழுமுனை பெட்டக மூடியொன் றுயர்த்த
உழுமுனைப் பின்புறம் ஒரு**கா சிருந்தது
நுழைந்துள் இருந்தவை நூறு நூறாகும்
அதிற்புக் கிருந்தவை ஆயிர மாயிரம்
பெட்டகம் களஞ்சியப் பெரும்அறைக் கொணர்ந்து
அறையின் மேல்தட் டதனைவைத் திட்டேன்.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"வீட்டுச் செல்வம் வேண்டேன் எதுவும்
போருக்குச் சென்றொரு **மார்க்குப் பெறினும்
அதையே சிறந்ததாய் அகம்நான் கருதுவன்
இல்லிலே உள்ள எல்லாப் பொன்னிலும்
உழுமுனை தூக்கிய உயர்வெள் ளியிலும்;
எனதுபோ ராடையை இங்கே கொணர்வாய்!
எனதுபோ ருடைகளை ஏந்திவந் திடுக!
போகிறேன் வடபால் நிலம்போ ருக்கு
லாப்பின் மைந்தரோ டேகிறேன் போர்க்கு.
உள்ளுணர் வென்னுள் உடன்விழிக் கிறது
எண்ணம் உயிர்பெற் றெழுகின் றனஆம்
என்செவி தாமாய் இதமுறக் கேட்க
என்விழி தாமாய் இனிமையாய்ப் பார்க்க
ஒருபெண் வடக்கிலே உள்ளனள் என்பதை
இருண்ட பூமியில் ஏந்திழை உள்ளதை
மணாளர் தம்மையே வரித்திடா மங்கை
அரியநற் கணவரை அடைந்திலா நங்கை."

கூறினள் லெம்மின் கைனனின் அன்னை:
"ஓ,என் அஹ்தி, உயர்ந்தஎன் மகனே!
இல்லில் குயிலி(க்கி) இருக்கிறாள் உனக்கு
உயர்குடிப் பிறந்த உத்தம மனையாள்;
இரண்டு பெண்கள் இருப்பது கொடுமை
மனிதன் ஒருவனின் மலர்மஞ் சத்தே."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:

"குயிலிக்கி என்பவள் குறுகுவோள் கிராமம்
ஆட்டம் அனைத்திலும் அவள்கலந் திடட்டும்
பலவீட் டினிலும் படுத்தெழுந் திடட்டும்
ஊர்ப்பெண் களையெலாம் உவகையூட் டட்டும்
நளிர்குழ லாருடன் நடனமா டட்டும்."

தாயும் அவனைத் தடுக்க முயன்றாள்
எச்சரித் தனளவ் வெழில்முது மாது :
"ஆயினும் வேண்டாம் அரியஎன் மகனே,
வடபால் நிலத்து வசிப்பிடம் போவது
மந்திர சக்தியின் வளரறி வின்றி
அறிவுடன் ஆழ்ந்த ஆற்றல்இல் லாமல்
வடபால் இளைஞரின் வளர்தீத் தடத்தில்
லாப்பு மைந்தரின் இருப்பிடம் நோக்கி!
லாப்பியர் மந்திரப் பாடலை இசைப்பர்
அங்கே *துர்யா ஆடவர் திணிப்பர்
உன்வாய் கரியிலும் உன்தலை சேற்றிலும்,
முன்கரம் புழுதியிலும் முழுதும் அமுக்குவர்
புதைப்பர் உன்முட்டியைப் புணர்சுடு சாம்பலில்
எரிந்தெழும் அடுப்பின் இயல்கல் நடுவில்."

லெம்மின் கைனன் அப்போ தியம்பினன்:
"மந்திர காரர்கள் மாயம்முன் செய்தனர்
மாயம் செய்தனர் **வல்அராச் சபித்தன
லாப்பியர் மூவர் என்னுடன் மோதினர்
கோடை காலக் குளிர்இர வொன்றில்
நிர்வாண மாயொரு நெடும்பா றையிலே
ஆடையும் இடுப்புப் பட்டியும் அகன்று
என்னுடல் சிறுதுணி இல்லா நிலையில்;
இதுதான் அவர்கள் என்னிடம் பெற்றது
இழிந்த மனிதர் இதுதான் பெற்றனர்
பாறையில் மோதிய கோடரி போல
குன்றிலே பாய்ந்த நுண்துளைக் **கோல்போல்
பனித்திடர் வழுக்கிய தனிமரக் கட்டைபோல்
வெற்று வீட்டில் விளைமர ணம்போல்.

ஒருவழி நிலைமை உறுமச் சுறுத்தலாய்
வேறு விதமதாய் மாறியே வந்தது,
எனைவென் றிடற்கே எலாம்முயன் றார்கள்
அமிழ்த்தி விடுவதாய் அச்சுறுத் திட்டனர்
சதுப்பு நிலமதன் தனிநடை பாதையாய்
அழுக்கு நிலத்திலே குறுக்குப் பலகையாய்
செய்யஎன் தாடையைச் சேற்றிலே தாழ்த்தி
அழுக்கிலே தாடியை அமிழ்த்தவும் நினைத்தனர்
ஆயினும் நானொரு அத்தகு மனிதனே
அஞ்சிட வில்லைநான் அதற்கெலாம் பெரிதாய்
மாறினேன் நானொரு மந்திர வாதியாய்
அறிந்தவன் ஆயினேன் அரியமந் திரங்கள்
கணையுடன் பாடினேன் சூனியக் காரரை
எய்யவந் தோரை எறிபடைக் கலத்தொடும்

எதிர்மா யாவிகள் இரும்புவா ளுடனும்
உயர்அறி வுடையரை உருக்குடன் சேர்த்தும்
வீழ்த்தினேன் பயங்கர வீழ்ச்சியாம் துவோனி
திரண்ட கொடிய திரைநுரை நடுவில்
உயரப் பாயும் உறுமரு விக்கீழ்
அனைத்திலும் கொடிய அடிநீர்ச் சுழியில்
மந்திர வாதிகள் அங்குதுஞ் சட்டும்
பொறாமைக் காரர்கள் போய்த் துயிலட்டும்
புற்கள் முளைத்து புறமெழும் வரைக்கும்
தொப்பியின் ஊடாய் தொடுந்தலை ஊடாய்
சூனியக் காரரின் தோள்மூட் டூடாய்
தோளின் தசையைத் துளைத்துக் கொண்டு,
சூனியக் காரர் தூங்கும் இடத்தில்
பொறாமை பிடித்தோர் போய்த்துயி லிடத்தில்."

இன்னமும் அவனின் அன்னை தடுத்தாள்
லெம்மின் கைனன் நிகழ்த்தும் பயணம்
தாயவள் தடுத்தாள் தன்னுடை மகனை
மாது அந்த மனிதனைத் தடுத்தாள்:
"அங்கே செல்வதை அடியொடே நிறுத்து
குளிருடைக் கிராமக் கொடும்பகு திக்கு
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே!
அழிவு நிச்சயம் அணுகிடும் உன்னை
எழுச்சிகொள் மகர்க்கு ஏற்படும் வீழ்ச்சி
துயரம் குறும்பன் லெ(ம்)மின்கை னற்கு;
நூறு வாயினால் நுவன்ற போதிலும்
நம்புதற் கில்லை நான்உனை இன்னும்
உனக்குள் மந்திரப் பாடகன் உறைந்திலன்
வடக்குமைந் தர்க்கு வருமீ டிணையாய்
நீஓர்ந்த தில்லை நெடிய*துர் யாமொழி
லாப்பியர் பாடலும் ஏதும்நீ அறிந்திலை."

குறும்பன் லெம்மின் கைனன் அப்போது
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
வாரத் தொடங்கினன் வாகாய்த் தன்தலை
சீவத் தொடங்கினன் சீராய்த் தலைமயிர்
எடுத்துச் சுவரில் எறிந்தனன் சீப்பை
தூணில் எறிந்தனன் தொடுமயிர்க் **கோதியை
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்
உரைத்தே அவன்தான் உரைசெய லாயினன்:
"அப்போ லெ(ம்)மின்கை னனையழி வணுகும்
எழுச்சி மகற்கு வீழ்ச்சியேற் படுகையில்
மயிர்க்கோ தியினால் வழிந்திடும் குருதி
சீப்பினி லிருந்து செந்நீர் பெருகிடும்."

குறும்பன் லெம்மின் கைனன் சென்றனன்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
தாயார் அவனைத் தடுத்த போதிலும்
பெற்றவள் எச்சரித் திட்ட போதிலும்.

இடுப்பில் பட்டியை இட்டுப் பூட்டினான்
இருப்பு மேலாடை எடுத்தே அணிந்தான்
கொளுக்கியை உருக்குப் பட்டியில் கொளுவினான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"ஆயுதம் மனிதருக் கானதோர் காப்பு
இரும்பு மேலாடை இதனிலும் காப்பு
உருக்குப் பட்டி உயர்ந்தது சக்தியில்
மந்திர வாதிகள் மத்தியில் அவர்க்கு
தீயோர் பற்றிச் சிறிதி(ல்)லைக் கவலை
அஞ்சுதல் நல்லவர் ஆயினும் இல்லை."

கையிலே சொந்தக் கதிர்வாள் எடுத்தான்
தீயுமிழ் அலகைச் செங்கர மெடுத்தான்
அலகைகள் தட்டி அமைத்தநல் வாளது
தெய்வமே தீட்டித் திருத்திய வாளது
வாளைக் கட்டினான் வலியதன் பக்கம்
செருகினான் உறையுள் செருந்திறல் வாளை.

இருப்பது கவனமாய் எங்கே மனிதன்?
காப்பது எங்கே கருமவீ ரன்த(ன்)னை?
இங்கே கவனமாய் இருந்தனன் கொஞ்சம்
தன்னை இங்கே தற்காப் பாக்கினன்:
உத்தரத் தின்கீழ் உயர்கடை வாயிலில்
வசிப்பிடம் அதனின் வருகடை நிலையில்
முன்றிலின் நல்வழி முன்தொடக் கத்தில்
இறுதி வரைக்கும் எழில்வாய் அனைத்திலும்.

அங்ஙனம் மனிதன் அருங்காப் பியற்றினன்
பெண்கள் இனத்தின் பெரும்எதிர்ப் பெதிராய்
ஆயினம் காவல் அவைபலம் அல்ல
பயனுள தல்ல பாதுகாப் பணிகள்
தன்னை மீண்டும் தற்காப் பாக்கினன்
ஆண்கள் இனத்தின் அரும்எதிர்ப் பெதிராய்
இரண்டு வழிகள் இணைபிரி இடத்தில்
நீல மலையின் நீடுயர் உச்சியில்
நகர்ந்து திரிந்திடும் நளிர்சேற் றிடங்களில்
நீர்நிறைந் தோடும் நீரூற் றுக்களில்
வேகமாய்ப் பாயும் வியன்நீர் வீழ்ச்சியில்
பலமாய்ப் பெருகும் பல்நீர்ச் சுழிப்பினில்.
குறும்பன் லெம்மின் கைனன் அங்கே
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்:
"எழுவீர், புவியிருந் தெதிர்வாள் மனிதர்காள்!
வியன்நில வயதுகொள் வீரர்கள், எழுவீர்!
எழுவீர், கிணற்றிருந் திகல்வல் மறவர்காள்!
எழுவீர், ஆற்றிருந் திகல்வில் வீரர்காள்!
அடவியே, எழுகநின் ஆட்களோ டிங்கே!
வனங்க ளெலாநும் மக்கள் தம்முடன்,
மலைகளின் முதல்வ,நின் வன்சக் தியுடன்,
நீரின் சக்தியே, நின்பயங் கரத்துடன்,
நீரின் தலைவியே, நினது பலத்துடன்,

நீர்முதி யோளே, நினது வலியுடன்,
பாவையீர், ஒவ்வொரு பள்ளத் திருந்தும்,
எழில்உடை அணிந்தோர் இருஞ்சேற் றிருந்தும்,
ஒப்பிலா மனிதனின் உதவிக்கு வருக!
நற்புகழ் மனிதனின் நட்புக்கு வருக!
சூனியக் காரரின் சுடுகணை தவிர்க்க,
மந்திர வாதிகள் வல்லுருக் காயுதம்
இகல்மா யாவிகள் இரும்புக் கத்திகள்
வில்லவர் படைக்கலம் வல்லியக் கொழிய!

இதுவும் போதா தின்னமு மென்றால்
இன்னும் ஒருவழி என்நினை வுள்ளது
நேர்மேற் பார்த்து மெடுமுச் செறிவேன்
அங்கே விண்ணுறை அருமுதல் வனுக்கு
எல்லா முகிலையும் இருந்தாள் வோற்கு
ஆவிநீ ரனைத்தின் அரசகா வலர்க்கு.

ஓ,மானுட முதல்வனே, உயர்மா தெய்வமே!
வானகம் வதியும் மாமுது தந்தையே!
முகில்களின் ஊடாய் மொழிந்திடு வோனே!
வாயுவின் வழியாய் வாக்குரைப் பவனே!
தீயுமிழ் ஒருவாள் தேர்ந்தெனக் கருள்வாய்!
உமிழ்தீ வாளுறை ஒன்றினில் வைத்து
அதனால் தடைகளை அடியேன் நொறுக்குவேன்
அதனால் நானும் அழிவை அகற்றுவேன்
தொல்புவிச் சூனியக் காரரைப் புரட்டுவேன்
நீர்மா யாவியை நெடிததால் வெல்வேன்
எனக்கு முன்வந் தெதிர்த்திடும் பகைவரை
எனக்குப் பின்னே இருந்தெழும் தெவ்வரை
தலைக்கு மேலும் தழுவென் பக்கமும்
என்விலாப் பக்கம் இரண்டிலு மாக
அழிப்பேன் மாய ஆவிகள் அம்புடன்
இரும்புக் கத்தியோ டிகல்சூ னியரை
உருக்கா யுதத்துடன் உறுமாந் திரிகரை
தீயவல் மாந்தரைச் செறுமவர் வாளுடன்!"

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
பற்றையில் நின்ற பரிதனை அழைத்தனன்
புல்லில் நின்றபொன் பிடர்மயிர்ப் புரவியை
அதன்பின் புரவிக் கணிகலன் பூட்டினன்
தீநிறக் குதிரையை ஏர்க்காற் பூட்டினன்
அவனே ஏறி அமர்ந்தனன் வண்டியில்
வண்டியில் ஏறி வசதியா யமர்ந்தனன்
சவுக்கைச் சுழற்றிச் சாடினன் பரியை
சாட்டையால் குதிரையை சாடியே ஏவினன்;
பரியும் பறந்தது பயணம் தொடர்ந்தது
வண்டியும் உருண்டது வழித்தொலை குறைந்தது
வெள்ளிமண் சிதறி வேகமாய்ப் பரவின
பொன்னிறப் புதர்கள் புத்தொலி யெழுப்பின.

ஒருநாள் சென்றான் இருநாள் சென்றான்
மூன்றாம் நாளும் முன்விரைந் தேகினான்
மூன்றாவ தாக முகிழ்த்தஅந் நாளில்
அவன்ஒரு கிராமம் அடைந்திட லானான்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
பாதையில் தனது பயணம் தொடர்ந்தான்
தொலையில் இருந்த தொடர்வழி ஒன்றின்
தூரத்தில் இருந்த வீடு ஒன்றுக்கு;
இல்லின் கூடத் திங்ஙனம் கேட்டனன்
கூரை மரப்பின் குறுகிநின் றுசாவினன்:
"இந்த வீட்டிலே எவரும் உளரோ
படியும்என் மார்புப் பட்டியை அவிழ்க்க
எனதேர்க் காலை இறக்கக் கீழே
கழுத்துப் பட்டியைக் கழற்றி விடற்கு?"

பெருநிலத் திருந்தொரு பிள்ளை சொன்னது
பகுவாய்ப் புறத்தொரு பையன் இயம்பினன்:
"இந்தஇல் லத்தே எவருமே இல்லை
படியும்உன் மார்புப் பட்டியே அவிழ்க்க
உனதேர்க் காலை உடன்கீழ் இறக்க
கழுத்துப் பட்டியைக் கழற்றி விடற்கு."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
சவுக்கைச் சுழற்றிச் சாடினன் பரியை
மணிமுனைச் சவுக்கால் வாகாய் அறைந்தான்
பாதையில் தனது பயணம் தொடர்ந்தான்
மத்தியில் இருந்த வழியொன் றினிலே
வீதி மத்தியில் வீடொன் றுக்கு;
இல்லின் கூடத் திங்ஙனம் கேட்டான்
கூரை மரப்பின் குறுகிநின் றுசாவினன்:
"இந்த வீட்டில் எவரும் உளரோ
பரிக்கடி வாளம் பற்றிக் கழற்ற
படியும்என் மார்புப் பட்டியை அவிழ்க்க
கடிவாள வாரைக் கைப்பிடித் திழுக்க?"

அடுப்புக் கல்லின் அருகிலோர் முதுமகள்
அடுப்பா சனத்தில் அமர்ந்தவள் அரற்றினாள்:
"ஆமாம், இந்த அகத்திலே உள்ளனர்
பரிக்கடி வாளம் பற்றிக் கழற்ற
படியும்உன் மார்புப் பட்டியை அவிழ்க்க
எடுத்துன் ஏர்க்கால் இறக்கக் கீழே
உளரப் பாஇங் உயர்பல **பதின்மர்
நூற்றுக் கணக்கிலும் ஏற்கலாம் விரும்பின்
பயண வண்டியும் பார்த்துனக் கருளுவர்
சவாரிக் குதிரையும் தந்தே உதவுவர்
உனது வீடுபோய் உறற்குக் கள்வனே
உனது நாடுபோய் உறற்குத் தீயோய்
உனதுதெச மானனின் உறைவிடத் துக்கு

உனதெச மானி உற்றுவா ழிடத்து
நின்சகோ தரனின் நீள்நுழை வாயில்
நின்சகோ தரியின் நெடும்இற் கூடம்
இந்தப் பகற்பொழு திதுமுடி தற்குள்
சூரியன் கீழே சோர்ந்துசாய் வதற்குள்."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
**"சுடப்பட வேண்டியோள், தொல்கிழ விநீ!
நொருக்கவேண் டியது வளைந்தநின் தாடை."
அதன்பின் குதிரையை அவன்விரைந் தோட்டினன்
தொடர்ந்து செய்தனன் துணிந்துதன் பயணம்
அனைத்து வழியிலும் அதிஉயர் பாதையின்
உள்ளவீ டனைத்திலும் உயர்ந்தவீட் டுக்கு.

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
அந்த வீட்டின் அருகிற் சென்றதும்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"பிசாசே, குரைக்கும் பெருவாய் மூடு!
நாயின் அலகை மூடிடு பேயே!
வாயின் முன்னொரு வன்தடை போடு
பற்களின் இடையிலோர் நற்பூட் டையிடு
அதன்வாய்ச் சத்தம் அற்றே இருக்க
அவ்வழி மனிதன் அகன்றுபோம் வரையில்."

முற்றத் திவ்விதம் முன்வந் துற்றான்
சாட்டையால் நிலமிசைச் சாற்றினான் ஓங்கி
சாட்டையின் திசையிலோர் சார்புகார் எழுந்தது
புகாரின் நடுவொரு புதுச்சிறு மனிதன்
மார்புப் பட்டியை வந்தவிழ்த் தவனவன்
ஏர்க்கால் கீழே இறக்கியோன் அவனே.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
தனது செவிகளால் தானே கேட்டான்
ஒருவரும் அவனை உடன்கவ னித்திலர்
அவதா னிப்போர் ஆங்கெவ ரும்மிலர்;
வெளியே இருந்தவன் வியன்கவி கேட்டனன்
**பாசியில் இருந்து பலசொல் கேட்டனன்
கனசுவர் வழியாய்க் கலைஞர் இசையையும்
பலகணி வழியாய்ப் பாடலும் கேட்டனன்.

அங்கிருந் தில்லுள் அவனும் பார்த்தனன்
இரகசிய மாக எட்டிப் பார்த்தனன்
அறையில் நிறைய அறிஞர் இருந்தனர்
பல்லா சனத்தும் பாடகர் இருந்தனர்
இருஞ்சுவர்ப் பக்கம் இசைவல் லார்கள்
கதவு வாயிலில் கனநுண் ஞானிகள்
வகுத்தபின் ஆசனம் மந்திர வாதிகள்
புகைபோக்கி மூலையில் சூனியக் காரர்கள்;

லாப்பின் பாடலை இசைத்தனர் அவர்கள்
பலபேய்க் கதைகளைப் பாடினர் அவர்கள்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
வாய்த்ததன் உருவை மாற்ற எண்ணினன்
இன்னொரு வேடமாய்த் தன்னை மாற்றினன்
மூலையில் இருந்து முனைந்தறை சென்றான்
சுவர்இடுக் கிருந்து துணிந்துட் சென்றான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"முடிவிலே பாடல்கள் மூட்டும் இன்பமே
சிறப்பு வாய்நதவை சீர்க்குறுங் கவிகள்
நினைந்துதம் பாடலை நிறுத்துதல் நல்லது
நடுவில் புகுந்ததை நாம்தடுப் பதிலும்."

அவளே வடநிலத் தலைவியப் போது
எழுந்து நடந்து எழில்தரை நின்று
அறையின் மத்திய அமைவிடம் மடைந்து
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"இங்கே முன்பு இருந்தது ஒருநாய்
இரும்புச் சடையோ டெதிர்கொளும் நீசநாய்
இறைச்சியை அயின்று எலும்பைக் கடிப்பது
புதிதாய் வருவோர் குருதி குடிப்பது.
எவ்வகை மனித இனத்தினன் நீதான்
வீரனே யாயினும் எவ்வகை வீரன்
இவ்வறை யுள்ளே எளிதாய் நுழைந்தாய்
இவ்வில் உட்புறம் இனிதே வந்தாய்
கிளர்ந்தெழு நாயுனைக் கேட்கவு மில்லை
குரைக்கும் நாயுனைக் குறிகொள்ள வில்லை."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"உண்மையாய் நானிங் குற்றிட வில்லை
திறமையும் அற்றுத் திகழ்அறி வற்று
வீரமும் அற்று ஞானமும் அற்று
தந்தையின் மந்திர சக்தியு மற்று
பயந்தபெற் றோரின் பாதுகாப் பற்று
உங்கள் நாய்கள் உண்பதற் காக
குரைக்கும் நாய்கள் கிழிப்பதற் காக.

எனது அன்னை என்னைக் கழுவினாள்
கழுவினள் சிறுவனாம் காலத் தினிலே
கோடை நிசியில் கூடுமுத் தடவை
இலையுதிர் காலத் திரவொன் பதுமுறை
அறிஞனாய் ஒவ்வொரு துறையிலும் ஆகென
சீர்த்தியோ டொவ்வொரு நாட்டிலும் திகழென
இருக்கஎன் வீட்டிலோர் இசைப்பா டகனாய்
சிறக்கநுண் அறிஞனாய்ச் சேர்பிற நாடெலாம்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
மாறினான் மந்திர வாதியே யாக

பாடுவோன் ஆயினான் மந்திரப் பாடல்கள்
தீப்பொறி மேலுடைத் திகழ்மடிப் பெழுந்தது
அவனது கண்கள் அனலைச் சிந்தின
லெம்மின் கைனன் நின்றுபா டுகையில்
மந்திரம் செபிக்கையில் வருபாட் டிசைக்கையில்.

வெகுதிறற் பாடகர் மீதே பாடினான்
படிமிகத் தாழ்ந்த பாடகர் ஆக்கினான்
அவர்களின் வாய்களில் அவன்கல் திணித்தான்
பக்கங் களிலெலாம் பாறையுண் டாக்கினான்
மிகுசிறப் புற்ற வியன்பா டகற்கு
தேர்ச்சிமிக் குயர்ந்து திகழ்கவி ஞர்க்கு.

இவ்விதம் பாடினான் இத்தகு மனிதரை
ஒருவரை இங்கும் ஒருவரை அங்குமாய்
மரம் செடியற்ற மலட்டு நிலத்தே
உழப் படாவெற்று உலர்நிலத் துக்கு
மீன்களே யற்ற வெறும்நீர் நிலைக்கு
நன்னீர் **மீனினம் நாடாப் புலத்து
பயங்கர *உறுத்தியாப் படர்நீர் வீழ்ச்சியில்
இரைந்து விரையும் இகல்நீர்ச் சுழிகளில்
நுரைத்தெழும் நதியின் அடிப்பா றைகளில்
நீர்வீழ்ச் சிகளின் நேர்நடுக் குன்றில்
நெருப்பென எரிந்து நீறா வதற்கு
தீப்பொறி யாகிச் சிந்தியே குதற்கு.
குறும்பன் லெம்மின் கைனன் அங்கே
பாடினான் வாளுடைப் பலமுறு மனிதரை
பாடினான் படைக்கல முடையபல் வீரரை
பாடினான் இளைஞரைப் பாடினான் முதியரை
பாடினான் நடுவய துடையபன் மக்களை
ஒருவனை மட்டுமே உருத்தவன் பாடிலன்
அவனொரு கொடியவன் ஆநிரை மேய்ப்பவன்
பார்வையே அற்றவன் படுகிழ வயோதிபன்.

*நனைந்த தொப்பியன் நன்னிரை மேய்ப்பவன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"லெம்பியின் மைந்தா நீ,ஓ, குறும்பா!
பாடினாய் இளைஞரைப் பாடினாய் முதியரை
பாடினாய் நடுவய துடையபன் மக்களை
என்னைச் சபித்து எதற்குப் பாடிலை?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"உன்னைத் தொடாமல் ஒதுக்கிய திதற்கே
பார்க்கநீ இழிந்த பண்பினன் ஆனதால்,
கிளர்ந்துநான் தொடாமலே கீழ்மகன் ஆனவன்;
இளைஞன் ஆகநீ இருந்தவந் நாட்களில்
இடையர்க ளிடையோர் இழிந்தவ னாகினை
மாசுறுத் தினைநின் மாதா பிள்ளையை
உடன்பிறந் தவளின் உயர்கற் பழித்தனை
திகழ்பரி அனைத்தையும் சேர்த்தே அழித்தனை

குதிரைக் குட்டிகள் கொன்றே ஒழித்தனை
திறந்த சதுப்பில் சேர்தரை நடுவில்
சேற்று நீரோடும் திணிநிலப் பரப்பில்."

நனைந்த தொப்பியன் நன்னிரை மேய்ப்பவன்
கோபம் கொண்டான் கொடுஞ்சின முற்றான்
கதவின் வாயில் கடந்தே சென்றான்
முற்றம் கடந்து முன்வய லடைந்தான்
துவோனலா நதியின் தொலைபார்த் தோடினான்
போனான் அருவியின் புனிதநீர்ச் சுழிக்கு
தூரநெஞ் சினனை தொடர்ந்தெதிர் பார்த்தான்
லெம்மின் கைனனை நெடிதுகாத் திருந்தான்
வடநா டிருந்து வழிதிரும் புகையில்
வீடு நோக்கி விரைந்தஅப் பாதையில்.

கலேவலா

பாடல் 13 - பிசாசின் காட்டெருது

அடிகள் 1 - 30 : லெம்மின்கைனன் வடபகுதித் தலைவியிடம் அவளுடைய மகளைத் தனக்கு மனைவியாக்கும்படி கேட்கிறான்.வடபகுதித் தலைவி, பனிக்கட்டிச் சறுக்கணிகளில் சென்று பிசாசின் காட்டெருதைப் பிடித்தால் தனது மகளைத் தருவதாகக்
கூறுகிறாள்.

அடிகள் 31 - 270 : லெம்மின்கைனன் செருக்குடன் காட்டெருதைப் பிடிக்கப் புறப்படுகிறான். ஆனால் காட்டெருது தப்பிவிடுகிறது; அவனுடைய பனிக் காலணிகளும் ஈட்டியும் உடைகின்றன.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
முதிய வடபால் முதல்விக் குரைத்தான்:
"தகுமுதி யவளே தருகநின் மகளிர்
இங்கே கொணர்கநின் எழில்மங் கையரை
அனைத்து அணங்கிலும் அதிசிறந் தவளை
அரிவையர் குழாத்தில் அதிஉயர்ந் தவளை!"

அந்த வடநிலத் தலைவியப் போது
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"தருவதற் கில்லை தகுமென் பெண்கள்
அளிப்பதற் கில்லை அரியஎன் மகளிர்
சிறந்தவ ளாயினும் சிறப்பிலள் ஆயினும்
உயர்ந்தவ ளாயினும் உயர்விலள் ஆயினும்
உனக்கேற் கனவே உள்ளாள் இல்லாள்
நிலைபெறும் மனையாள் நினக்குமுன் உள்ளாள்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"பெயர்குயி லிக்கியைப் பிணைப்பேன் கிராமம்
படர்ஊர்க் கூடப் படிகளில் வைப்பேன்
வளர்வெளி அந்நிய வாயிலில் வைப்பேன்
இங்கே சிறந்தவோர் அணங்கினைப் பெறுவேன்
இப்பொழு துன்பெண் இங்கே கொணர்வாய்
எல்லாப் பெண்ணிலும் இயல்சிறப் பொருத்தியை
அனைத்து அணங்கிலும் அழகுறும் ஒருத்தியை!"

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"கொடுக்கவே மாட்டேன் கொணர்ந்தென் பெண்ணை
பெறுமதி யற்ற நரர்எவ ருக்கும்
வருபய னற்ற மானுடர் எவர்க்கும்.
ஆயினும் நீயென் அரிவையைக் கேட்கலாம்
தலையில்பூச் சூடிய தையலைக் கேட்கலாம்
பிசாசுகாட் டெருதைப் பிடித்தால் **சறுக்கி
பேயின் வயலின் பெருவெளிக் கப்பால்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்

தனது ஈட்டியில் முனைகள் பொருத்தினன்
குறுக்கு வில்லில் முறுக்குநாண் கட்டினன்
கணைகளின் தலைப்பில் கடுங்கூர் பூட்டினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இப்போ தீட்டியில் இகல்முனை பொருத்தினேன்
அம்புகள் அனைத்தும் ஆயத்த மாயின
குறுக்கு வில்லில் முறுக்குநாண் கட்டினேன்
உந்திச் சென்றிட இ(ல்)லைஇடச் **சறுக்கணி
வளமாய் முந்திட **வலதணி இலது."

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
எங்கே பெறலாம் எழிற்பனி மழைஅணி
சறுக்கும் பாதணி பெறப்படல் எங்ஙனம்?

*கௌப்பியின் தோட்டக் கவின்இல் சென்றான்
*லூலிக்கி வேலைத் தளத்தினில் நின்றான்:
"வடநாட் டவரே, திடநுண் மதியரே!
எழிலுறும் கௌப்பியே, லாப்புலாந் தியரே!
பயனுள சறுக்கணி படைப்பீர் எனக்காய்,
அழகிய சறுக்கணி அமைப்பீர் சிறப்பாய்,
பேய்க் காட்டெருதைப் பிடித்திடச் செல்ல,
பிசாசின் வயலின் பெருவெளிக் கப்பால்."

லூலிக்கி என்பவன் உரைத்தான் ஒருசொல்
நாவினால் கௌப்பி நவின்றான் இப்படி:
"லெம்மின் கைனனே நீவீண் போகிறாய்
பேய்க்காட் டெருதின் பெருவேட் டைக்கு
உழுத்த மரத்துண் டொன்றுதான் பெறுவாய்
அதுவும் துன்பம் அதிகம் பெற்றபின்."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"செய்வாய் உந்திச் செல்ல இடதணி
வலதையும் செய்வாய் வலிதே முன்செல
எருத்து வேட்டைக் கிதோபுறப் பட்டேன்
பேயின் வயலின் பெருவெளிக் கப்பால்."

திகழ்இடச் சறுக்கணி செ(ய்)யும்லூ லிக்கி
திடவலச் சறுக்கணி செய்யும் கௌப்பி
இலையுதிர் காலத் திடதணி செய்தான்
வளர்குளிர் காலம் வலதணி செய்தான்
**தண்டுகள் அணிக்குச் சமைத்தான் ஒருநாள்
தண்டுக்கு **வளையம் சமைத்தான் மறுநாள்.

இதமாய் உந்த இடதணி கிடைத்தது
வளமாய் முந்த வலதணி வந்தது
அணிகளின் தண்டுகள் ஆயத்த மாயின
பொருத்தப் பட்டன புதுஅணி வளையம்
ஈந்தான் தண்டுக் கீடுநீர் **நாய்த்தோல்

வளையத் தின்விலை பழுப்பு நரித்தோல்.

வெண்ணெய் சறுக்கணி மேலெலாம் பூசி
கலைமான் கொழுப்பையும் கலந்துடன் தேய்த்தான்
சிந்தனை பின்னர் செய்தான் அவனே
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்:
"இளைஞர்கூட் டத்துள் எவருமிங் குளரோ
உண்டோ எவருமிங் குளவளர் வோர்களில்
எனதிடச் சறுக்கணி இதனைமுன் தள்ள
வலதணி உதைக்க வலியதன் குதியால்?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
சென்னிறக் கன்னப் போக்கிரி செப்பினன்:
"இளைஞர்கூட் டத்துள் எவரோ இங்குளர்
வளர்ந்திடு வோரில் மற்றெவ ரோஉளர்
எனதிடச் சறுக்கணி இதனைமுன் தள்ள
வலதணி உதைக்க வலியதன் குதியால்."

அம்புறைக் கூட்டை அவன்முது கிட்டனன்
தோளில் புதியதோர் தொடுவில் கட்டினன்
தண்டைக் கையிலே சரியாய்ப் பிடித்தனன்
இடச்சறுக் கணியை எடுத்துமுன் தள்ளினன்
உந்தி வலதணி உதைத்தான் குதியால்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இல்லை இறைவனின் இந்தக் காற்றினில்
வானம் இதனின் வளைவதன் கீழே
எதுவுமே வனத்தில் இல்லைவேட் டைக்கு
நான்கு கால்களில் பாய்ந்திடும் பிராணி
வென்றிட முடியா வேறெதோ வொன்று
இலகுவாய்க் (கைப்)பற்ற இயலாத தொன்று
கலேவா மைந்தன் காற்சறுக் கணியால்
லெம்மின் கைனனின் நேர்ச்சறுக் கணிகளால்."

அலகைகள் இதனை அறிந்திட நேர்ந்தது
**தீய சக்திகள் தெரிந்திட நேர்ந்தது
பேய்கள்காட் டெருதை ஆக்கத் தொடங்கின
படைத்தன கலைமான் பலதீச் **சக்திகள்
தலையை உழுத்த கட்டையில் சமைத்தன
**சிறுமரக் கிளைகளில் சேர்கொம் பியற்றின
பாதம் சுள்ளிகள் கொண்டு படைத்தன
கால்களைச் சேற்றுக் கம்பினால் செய்தன
வேலித் தம்பத்தால் விரிமுது கியற்றின
வாடிய புற்களால் வைத்தன நரம்புகள்
நீராம்பல் முகைகளால் நேத்திரம் அமைத்தன
நீராம்பல் இதழ்களில் நெடுஞ்செவி நிமிர்த்தின
தேவதா ருரியிலே செய்தன தோலினை
பதன்கெடு மரங்களில் படைத்தன தசையினை.

எருத்துக் குயோசனை இருண்டபேய் சொன்னது
மானுக்கு இங்ஙனம் வாயினால் சொன்னது:

"இரும்பேய் எருதே, இப்போ தோடு!
தாவுநின் கால்களால் சாந்தப் பிறவியே!
ஓடிடு மானே, உன்சினைப் பிடத்தே!
லாப்பு மைந்தரின் எழில்புல் வெளிக்கு
சறுக்குணி மனிதரைக் களைப்புறச் செய்வாய்
குறிப்பாய் லெம்மின் கைனனைச் செய்வாய்!"

மிகுபேய் எருது விரைந்தோ டியது
காட்டுக் கலைமான் கடுகதி விரைந்தது
வடக்கினில் அமைந்த அடைப்புகள் வழியாய்
லாப்பு மைந்தரின் இளம்புல் வெளிகளில்
உதைத்தது சமையற் கூடத் தொட்டியை
உருட்டிற் றதுகீழ் நெருப்பெழு கலயம்
சாம்பரில் இறைச்சியைத் தள்ளிப் போட்டது
அடுப்படி இரசம் அதுசிந் திற்று.

அப்போ தெழுந்தது அங்கே கூச்சல்
லாப்பு மைந்தரின் இளம்புல் வெளியில்
லாப்பு நாட்டின் இகல்நாய் குரைத்தன
லாப்பு நாட்டின் இளஞ்சிறார் அழுதனர்
லாப்பு நாட்டின் ஏந்திழை சிரித்தனர்
மற்றும் சிலரோ சற்றே முனகினர்.

குறும்பன் லெம்மின் கைனன் அவன்தான்
எருதின் பின்னே சறுக்கிச் சென்றான்
சறுக்கிச் சேற்றிலும் தரையிலும் சறுக்கினன்
திறந்த வெளியிலும் சென்றான் சறுக்கி
சறுக்கணி தன்னில் தகிநெருப் பெழுந்தது
தண்டின் நுனியில் தழற்புகை பறந்தது
ஆயினும் எருதை அவனோ கண்டிலன்
இல்லைக் கண்டதும் இல்லைக் கேட்டதும்.

நாட்டிலும் சென்றான் நகரிலும் சென்றான்
தண்கடற் பின்னால் தரையிலும் சென்றான்
அலகையின் தோப்புகள் அனைத்திலும் சென்றான்
*இடுகாட் டாவியின் **ஏற்றமும் சென்றான்
மரண வாயில் வழிவரை சென்றான்
இடுகாட் டின்பின் இயல்கா டடைந்தான்;
மரணம் தனது வாயைத் திறந்தது
இடுகாட் டாவி எடுத்தது தலையை
மனிதனை உள்ளே வரவிடு தற்கு
லெம்மின் கைனனை நேராய் விழுங்க
ஆயினும் உண்மையில் அவனைப் பெற்றில(து)
கடுகதி கொண்டு கைக்கொண் டிலது.

அவன் சென்றிலனே அனைத்திடத் துக்கும்
தொடாத பகுதியோர் தொல்புற மிருந்தது
வடபால் நிலத்து மறுகோ டியிலே
லாப்பு நாட்டின் அகல்நிலை வெளிகளில்
அந்த இடத்துக் கவன்புறப் பட்டான்

அதனையும் தொட்டு அறிந்திட நினைத்தான்.

அந்த இடத்தை அவன்போ யடைந்ததும்
அங்கொரு கூச்சலை அவனும் கேட்டான்
வடபால் நிலத்து மறுகரை யதனில்
லாப்பு மைந்தரின் நிலப்புல் வெளிகளில்
லாப்பு நாய்களின் குரைப்புக் கேட்டது
லாப்புச் சிறாரின் அழுகுரல் கேட்டது
லாப்பு மகளிரின் சிரிப்பொலி கேட்டது
மற்றும் சிலரோ சற்றே முனகினர்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
சறுக்கினன் உடனே சார்ந்தப் பக்கமாய்
நாய்கள் குரைத்தஅந் நாட்டின் பக்கமாய்
லாப்பின் மைந்தரின் நிலப்புல் வெளிக்கு.

அங்ஙகவ னடைந்தது மிங்ஙனம் மொழிந்தான்
வந்து சேர்ந்ததும் வருமா றுசாவினன்:
"ஏந்திழை யர்இங் கெதற்காய்ச் சிரித்தனர்
பாவையர் சிரித்ததும் பிள்ளைகள் அழுததும்
முதிய மனிதர்கள் முனகலும் எதற்கு
நரைநிற நாய்கள் குரைத்ததும் எவரை?"

"ஏந்திழை யர்இங் கிதற்காய்ச் சிரித்தனர்
பாவையர் சிரித்தனர் பிள்ளைகள் அழுதனர்
முதிய மனிதர்கள் முனகிய திதற்கு
நரைநிற நாய்களும் குரைத்தது இதற்கு:
இருட்பேய் எருது இங்கிருந் தோடிய(து)
மென்மைக் குளம்பால் முன்பாய் தோடிய(து)
உதைத்தது சமையற் கூடத் தொட்டியை
உருட்டிற் றதுகீழ் நெருப்பெழு கலயம்
கஞ்சியை உதைத்துக் கவிழ்த்தது கீழ்மேல்
அடுப்படி இரசம் அதுசிந் திற்று."

சென்னிறக் கன்னப் போக்கிரி அதன்பின்
குறும்பன் லெம்மின் கைனனப் போது
பனியில் இடது பாதணி தள்ளினான்
செறிபுற் றரையின் விரியன் பாம்பென,
தேவதா ரணியைச் செலுத்தினான் முன்னே
உயிர்ப்பாம் பசைந்து ஊர்வது போலே,
செல்லும் போதினில் செப்பினன் இவ்விதம்
தண்டைக் கையில் கொண்டவ னிசைத்தான்:
"லாப்பிலே வாழும் எல்லா மனிதரும்
எருதைச் சுமந்து எடுத்துவந் திடட்டும்,
லாப்பிலே வாழும் ஏந்திழை யாரெலாம்
சட்டி கழுவத் தாம் தொடங் கட்டும்;
லாப்பிலே வாழும் இளம்சிறார் அனைவரும்
தீப்படும் சுள்ளிகள் சேர்த்து வரட்டும்;
லாப்பிலே இருக்கும் எல்லாக் கலயமும்
எருதைச் சமைக்க எழட்டும் தயாராய்!"

விரைவாய்ச் சென்றனன் மிகுபலம் கொண்டனன்
உதைத்துப் போயினன் உந்திச் சென்றனன்
முதல்முறை உந்தி முன்செல் கையிலே
ஒருவர் விழியிலும் தெரிபடா தேகினன்
அடுத்த தடவை அவன்போ கையிலே
ஒருவர் காதிலும் ஒலிவிழா தேகினன்
மூன்றாம் முறையவன் முன்பாய் கையிலே
தடிப்பேய் எருதின் தடத்தை அடைந்தனன்.

**'மாப்பிள்' மரத்தின் வன்கயி றெடுத்தான்
மிலாறுவின் முறுக்கிய வெங்கொடி எடுத்தான்
பேய்க்காட் டெருதைப் பிடித்துக் கட்டினான்
சிந்துர மரத்தாற் செறிஅடைப் புக்குள்:
"பேய்க்காட் டெருதே பிணைப்புண் டிங்குநில்
காட்டுக் கலையே கேட்டிங் குலவுக."

முயன்றவ் விலங்கின் முதுகைத் தடவினான்
தட்டினான் விலங்கின் தடித்ததோ லதனில்:
"எனக்குவப் பான இடமே இதுவே
இதுவே படுக்கைக் கேற்றநல் இடமாம்
ஒளிரிளம் பருவ ஒருத்தி தன்னுடன்
வளரும் பருவத் திளங்கோ ழியுடன்."

அப்போ பேய்எரு ததுசினந் தெழுந்தது
கலைமான் அதிர்ந்து கனன்றுதைத் தெழுந்தது
பின்னர் அதுவே பேசியது இங்ஙனம்:
"பேய்உனக் குதவி பெரிதுசெய் யட்டும்
இளம்பரு வத்து மகளிரோ டுறங்க
நாள்தொறும் நல்ல நங்கையோ டுலாவ!"

உரங்கொண் டெழுந்தது உடன்கிளர்ந் தெழுந்தது
மிலாறுவின் கொடியை வெகுண்டறுத் தெறிந்தது
**'மாப்பிளி'ன் கயிற்றை ஆர்த்தறுத் தெறிந்தது
சிந்துர அடைப்பை சினந்துடைத் தழித்தது;
ஓடத் தொடங்கிய துடன்முன் வேகமாய்
நழுவி விரைந்தது நவில்காட் டெருது
தரையையும் சேற்றுத் தலத்தையும் நோக்கி
கொழும்புதர் நிறைந்த குன்றுகள் நோக்கி
ஒருவர் விழியிலும் தெரிபடா தகன்றது
ஒருவர் காதிலும் விழாதுசென் றிட்டது.

சென்னிறக் கன்னப் போக்கிரி அதன்பின்
நிமிர்சினங் கொண்டான் நிதான மிழந்தான்
கொடுங்கோ பத்தோடு கொண்டான் சினமிக
சறுக்கிச் சென்றான் தாவும் கலைபின்;
அவ்வா றொருதரம் அவனுந் துகையில்
இடது சறுக்கணி வெடித்தது நுனியில்
சறுக்கணி பாதத் தட்டில் உடைந்தது
வலதணி உடைந்தது வருகுதிப் பக்கம்

விழுந்தது ஈட்டியின் மேல்முனை உடைந்து
தண்டு வளையத் தடியில் உடைந்தது
பேய்க்காட் டெருது போயிற் றோடி
தலைதெரி யாமல் தாவி மறைந்தது.

குறும்பன் லெம்மின் கைனன் அங்கே
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
வெறித்துப் பார்த்தான் உடைந்த பொருட்களை
இனிவரும் சொற்களில் இயம்பினன் அவனே:
"வேண்டாம் வாழ்நாள் என்றும் வேண்டாம்
இன்னொரு மனிதன் ஏகவே வேண்டாம்
வேட்டையை நாடிக் காட்டிடைப் போதல்
தேடிச் சறுக்கிச் செல்லல்காட் டெருதை
பாக்கியம் அற்றஇப் பாவியைப் போல
தரமிகு சறுக்கணி தம்மை அழித்தேன்
அழகிய தண்டுகள் அவற்றையு மிழந்தேன்
ஈட்டிக் கம்பில் இழந்தேன் உயரந்ததை."

கலேவலா

பாடல் 14 - லெம்மின்கைனனின் மரணம்

அடிகள் 1 - 270 : லெம்மின்கைனன் வன தேவதைகளை வணங்கி, முடிவில் காட்டெருதைப் பிடித்து வடபகுதித் தோட்டத்துக்குக்கொண்டு வருகிறான்.

அடிகள் 271 - 372 : அவனுக்கு இன்னொரு வேலை தரப்படுகிறது; அதன்படி அவன் அனல் கக்கும் குதிரையைப் பிடித்துக் கொண்டு வருகிறான்.

அடிகள் 373 - 460 : துவோனலா ஆற்றில் ஓர் அன்னத்தைக் கொல்லும்படி அவனுக்கு மூன்றாவது வேலையும் தரப்படுகிறது. அவன் ஆற்றுக்கு வரும் வழியில் காத்திருந்த 'நனைந்த தொப்பியன்' என்ற இடையன், லெம்மின்கைனனைக் கொன்று துவோனியின் நீர்வீழ்ச்சியில் எறிகிறான்; துவோனியின் மைந்தன் அவனது உடலைத் துண்டுகளாக்கி ஆற்றில் எறிகிறான்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
எந்தப் பாதையில் ஏகலாம் என்று
எங்கே காலடி இடலாம் என்று:
பேய்க்காட் டெருது பிடிப்பதை விட்டு
வீட்டை நோக்கி விரைவதா தானாய்
அல்லது மேலும் அச்செயல் ஏற்று
மெதுவாய்ச் சறுக்கி மிகமுன் செல்வதா
செறிகான் தலைவியைத் திருப்தி செய்தற்கு
தோட்ட மகளிரைத் தோய்மகிழ் வுறுத்த.

இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"ஓ,மனு முதல்வனே, உயர்மா தெய்வமே!
விண்ணிலே உறையும் மேல்வகைத் தந்தையே!
நேராம் சறுக்கணி நீர்எமக் கமைப்பீர்
கனமே இல்லாக் காற்சறுக் கணிகள்
சுலபமாய் சறுக்கித் தொடர்ந்தவற் றேக
சதுப்பு நிலத்திலும் சமதரை மீதிலும்
பிசாசுகள் வாழும் பெருநில மீதும்
வடபால் நிலத்து வளர்புற் தரையிலும்
பேய்க்காட் டெருது பெரிதுலா விடத்து(க்கு)
காட்டுக் கலைமான் கலைதிரி தடத்து(க்கு).

மனிதரைப் பிரிந்து வனம்ஏ குகிறேன்
வீரரை விலகி வெளிக்களம் போகிறேன்
*தப்பியோ லாவின் தனிவழி யூடாய்
*தப்பியோ வாழும் தரிப்பகத் தூடாய்.
வாழ்க மலைகளே, வாழ்ககுன் றுகளே!
வாழிய எதிரொலி வருதா ருகளே!
வாழிய வெண்பசும் மரஅர சுகளே!
வாழிய நும்மை வாழ்த்துவோர் அனைவரும்!
அன்புகாட் டுங்கள், அடவிகாள், வனங்காள்!
மேன்மைகொள் தப்பியோ, மிக்கருள் கூர்வீர்!

மனிதனைத் தீவகம் வந்தெடுத் தகல்வீர்!
**உச்சவன் அடைய உடன்வழி நடத்துவீர்!
நிறைவேட் டைத்தொழில் நிகழ்விடத் துக்கு!
பயன்மிக விளையுமப் படர்தடத் துக்கு!

தப்பியோ மைந்தனே, தகை*நுயீ ரிக்கியே!
தூய்மைகொள் மனித,செந் தொப்பியை யுடையோய்!
கணவாய்க ளமைப்பாய் கவின்நீள் நிலத்தில்!
வரைகளின் வழிகளில் வழித்தடம் அமைப்பாய்
மடையன் எனக்கு வழிதெரி தற்காய்
அந்நியன் முற்றிலும் அறியப் பாதைநான்
தேடும் பாதைநான் தெரிந்துகொள் ளற்கு
நாடும் ஆடலை நான்அடை தற்காய்.

வனத்தின் தலைவியே, வளர்*மியெ லிக்கியே!
தூய்மைப் பெண்ணே, சுடர்அழ குடையளே!
பசும்பொன் வழியில் பயணிக்க வைப்பாய்
வெள்ளியை வைப்பாய் வெளிநகர்ந் துலவ
தேடும் மனிதனின் திருமுன் பாக
நாடும் மனிதனின் நல்லடிச் சுவட்டில்.

திறவுகோல் பொன்னால் செய்ததை எடுப்பாய்
வயத்தொடை இருக்கும் வளையத் திருந்து
தப்பியோ களஞ்சியத் தரிப்பிடம் திறப்பாய்
திறந்துவைத் திருப்பாய் உறுகான் கோட்டையை
நான்வேட்டை யாடும் நல்லஅந் நாட்களில்
நான்இரை தேடும் நல்லஇவ் வேளையில்.

உனக்குச் சிரமம் ஒன்றி(ல்)லை யானால்
உனது மகளிரை உடனே அழைப்பாய்
ஊதிய மகளிர்க் கொருசொல் உரைப்பாய்
கட்டளை யிடுவாய் கட்டளை ஏற்போர்க்(கு)!
சத்தியம் நீஒரு தலைவியே யல்ல
ஏவற் பெண்கள் இல்லை உனக்கெனில்,
ஒருநூறு நங்கையர் உனக்கிலை யென்றால்,
ஆணையை ஏற்போர் ஆயிரம் பேரும்
உனது உடைமையை ஊர்ந்துகாப் பவரும்
இரும்பொருள் காப்போர் எவரு மிலையெனில்.

சின்னஞ் சிறிய செறிகான் மகளே!
தண்தேன் இதழுடைத் தப்பியோ மகளே!
நறைபோன் றினிய நற்குழல் ஊது
இசைப்பாய் தேனென இனிய குழலினை
மூளுமன் புடைநின் முதல்வியின் செவிகளில்
கவினார் நினது கானகத் தலைவிக்(கு)
அவ்விசை விரைந்து அவள்கேட் கட்டும்
வீழ்துயில் அமளியை விட்டே எழட்டும்
ஏனெனில் அவளோ இப்போ கேட்டிலள்
இருந்துயில் அகன்று எழுந்தனள் இல்லை
இப்போ திங்குநான் இரந்தே நிற்கையில்

பசும்பொன் நாவினால் பரிந்துநின் றிருக்கையில்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
நேரம் முழுதும் தேடிப் பெறாமல்
சதுப்பு நிலத்திலும் தரையிலும் சறுக்கி
முரட்டுக் காட்டிலும் சறுக்கிச் சென்றான்
கடவுளின் எரிந்த காமரக் குன்றிலும்
வெம்பேய் நிலக்கரி மேட்டிலும் சறுக்கினன்.

ஒருநாள் சறுக்கினான் இருநாள் சறுக்கினான்
மூன்றாம் நாளும் முடிவாய்ச் சறுக்கினான்
உயர்ந்து மலையில் உரம்பெற் றேறினான்
பருத்துக் கிடந்த பாறையில் ஏறினான்
பார்வையை வடமேற் பக்கம் செலுத்தினான்
வளர்சதுப் பூடாய் வடக்கே பார்த்தான்:
தப்பியோ வீடு தவழ்விழிப் பட்டது
கனகம் ஒளிரும் கதவுகள் இருந்தன
வளர்சதுப் பதனின் வடதிசைப் பக்கமாய்
குறுங்கா டார்ந்த குன்றதன் கீழே.

குறும்பன் லெம்மின் கைனனப் போது
அந்த இடத்தை அடைந்தான் உடனே
அந்த இடத்திற் கண்மிச் சென்றான்
தப்பியோ வீட்டின் சாளரத் தின்கீழ்;
குனிந்து முன்னால் கூர்ந்துட் பார்த்தான்
ஆறாம் சாளரம் அதன்ஊ டாக
வழங்குவோர் அங்கே வாசம் செய்தனர்
**வேட்டை வயோதிப மெல்லார் கிடந்தனர்
தொழிலுடை அணிந்து தோற்றம் தந்தனர்
அழுக்குக் கந்தை ஆடையில் இருந்தனர்.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"எழில்வனத் தலைவீ, எக்கா ரணத்தால்
வன்தொழில் உடைகளில் வாசம் செய்கிறாய்?
அழுக்குக் கந்தல் ஆடைகள் அணிகிறாய்?
காட்சியில் மிகவும் கறுப்பாய் இருக்கிறாய்?
பார்க்கப் பயங்கரப் பண்போ டிருக்கிறாய்?
தயங்குநின் மார்புகள் தருவது விரக்தி
வயங்குநின் உருவால் வருவது குரூபம்!

நான்முன் காட்டில் நடந்த வேளையில்
காட்டிலே இருந்தன கோட்டைகள் மூன்று
ஒன்று மரத்தினால் இன்னொன் றெலும்பினால்
மூன்றாம் கோட்டை மூண்டது கல்லினால்
ஆறுசா ளரங்கள் **அமைந்தன பொன்னால்
முழுக்கோட் டையதும் மூலையில் இருந்தன;
நன்கவற் றூடாய் நான்உட் பார்த்தேன்
நற்சுவ ரின்கீழ் நான்நிற் கையிலே:
தப்பியோ வீட்டின் தலைவன் அவனொடு
தப்பியோ வீட்டின் தலைவியும் கண்டேன்

*தெல்லெர்வோ என்னும் செல்வி தப்பியோ
மற்றம் தப்பியோ மனிதரும் இருந்தனர்
அனைவரும் பொன்னில் ஆர்ந்தே இருந்தனர்
அனைவரும் வெள்ளியில் ஆழ்ந்தே இருந்தனர்;
அடவியின் தலைவி அவளும் கூட
கருணை மிக்க காட்டுத் தலைவியின்
கரங்களில் இருந்தன காப்புகள் பொன்னில்
விரல்களில் இருந்தன விரலணி பொன்னில்
சிரசினில் இருந்தன சிரசணி பொன்னில்
மலர்குழல் இருந்தன வளையங்கள் பொன்னில்
கர்ணத் திருந்தன காதணி பொன்னில்
நன்மணி அவளது நளிர்கழுத் திருந்தன.

காட்டின் தலைவி, கருணைமிக் கோய்,ஓ!
வனத்தின் இனிய வயோதிபப் பெண்ணே!
வைக்கோற் காலணி வைப்பாய் கழற்றி
பட்டைப் **பூர்ச்சம் பாதணி கழற்று
அழுக்குக் கந்தல் ஆடைக ளகற்று
தொழிலுக் குரிய தொல்லுடை அவிழ்ப்பாய்
செல்வம் செழிக்கும் சிறப்புடை அணிவாய்
ஆடலுக் கானமேல் ஆடையை அணிவாய்
மிகும்என் வனத்து வேட்டை நாட்களில்
இரையைத் தேடும் எனதுநே ரத்தில்;

எனக்கு வந்தது ஏதோ சோர்பு
சோர்பு வந்ததித் தொடர்புறு வழிகளில்
வெற்று நேரத்தில் விளைந்ததிச் சோர்பு
வேட்டையே இல்லா வேளையாம் இதிலே
ஏனெனில் நீதர வில்லைஎப் போதும்
அரிதினும் நீயெனை ஆதரித்தா யிலை
மகிழ்வுறும் மாலை மனஞ்சோர் வானது
நீள்பகற் போது நிர்ப்பய னானது.

கான்நரைத் தாடி கடுமுது மனிதா!
தளிரிலைத் தொப்பி **தரிபா சாடையோய்!
மென்மைத் துணிகளால் வியன்கா டுடுத்துவாய்
அகன்ற துணிகளால் அலங்கரி கானகம்
அரசுக் கணிவாய் அருநரை நிறவுடை
**'அல்டர்' மரங்களை அழகிய உடையால்
தேவ தாருவை திகழ்வெள்ளி உடையால்
பொன்னால் வேறு **மரத்தைப் புனைவாய்
செம்புப் பட்டியால் திகழ்முது **தாருவை
வெள்ளிப் பட்டியால் வேறொரு **தாருவை

பொன்னின் மலர்களால் பூர்ச்ச மரத்தை
புனைவிப் பாயடி மரங்களைப் பொன்னணி
அலங்கரிப் பாய்அவை அந்நாள் அமைதல்போல்
உனது சிறந்தஅவ் வுயர்நாள் களைப்போல்:
செறி**மரக் கிளைகளில் திங்கள் திகழ்தல்போல்
திகழ்**தா ருச்சியில் தினகரன் சுடர்போல்

வனத்தில்தே னார்ந்து மணத்ததைப் போல
நீல்நிறக் கான்நறை நிலைத்ததைப் போல
அடல்எரிக் கானக மதன்மா வூறல்போல்
உறுசேற் றுநிலம் உருகிய வெண்ணெய் போல்.

வனத்தின் வனிதையே, மனமுவந் தவளே!
*தூலிக்கி யே,தப்பி யோவின் மகளே!
வேட்டையைத் வெம்மலைச் சரிவுகட் கனுப்பு
வேட்டையைத் திறந்தபுல் வெளிகளுக் கனுப்பு;
ஓடிநீ ஏக உளதெனில் சிரமம்
விரைந்து நீசெல்ல விளையுமேல் சோம்பல்
எடுப்பாய் பற்றையில் இருந்தொரு சாட்டை
ஒடிப்பாய் மிலாறுவில் உடன்ஒரு சுள்ளி
கூச்சம் இடுப்பதன் குறிக்கீழ் கூட்ட
உணர்ச்சியைக் கால்களின் இடையே ஊட்ட;
தானே விரைந்து தனிச்செல விடுவாய்
விடுவாய் விரைந்து விரைந் தேகிடவே
தேடியே வந்து செலுமா னிடன்முன்
வேட்டைக்கு வந்தோன் வியனடிச் சுவட்டில்.

வழிச்சுவ டதிலே வருகையில் வேட்டை
வேட்டையைக் கொணர்வாய் வீரனின் முன்னே
உனதிரு கரங்களும் உறமுன் வைத்து
வழிநடத் துகநீ வருமிரு பக்கமும்
வேட்டைஎன் னிடத்து விலகா திருக்க
அகலா திருக்க அதுவழித் தடத்தே
வேட்டைஎன் னிடத்து விலகிப் போயிடில்
அகன்று வழித்தடம் அப்பால் போனால்
வழிநடத் துகஅதன் வன்செவி பற்றி
கொம்பைப் பற்றிக் கொணர்வாய் வழிக்கு.

குறுக்கே மரத்துக் குற்றியொன் றிருந்தால்
அதனைப் பாதையின் அக்கரைத் தள்ளுக
பாதையின் நடுவண் பன்மர மிருந்தால்
இரண்டாய் உடைத்து எறிவாய் அவற்றை.

உனக்குக் குறுக்கே வேலியொன் றுற்றால்
வேலியை மோதி மிதித்தழித் திடுவாய்
தம்பம் ஐந்து தவிர்த்துய ரத்தே
தம்பம் ஏழைத் தவிர்த்தக லத்தில்.

ஒருநதி உன்னெதிர் ஓடியே வந்தால்
பாதையின் குறுக்கே படர்ந்தால் சிறுநதி
பட்டினா லேயொரு பாலமங் கமைத்து
சிவப்பு துணியினால் அமைப்பாய் படிகள்
வெளிக்கால் வாயால் வேட்டையைக் கொணர்ந்து
வருவாய் இழுத்து மலிநீர்க் குறுக்காய்
ஓடும் வடநாட் டுயர்நதி யூடாய்
நுரைத்தநீர் வீழ்ச்சிப் பரப்பதன் மேலாய்.

தப்பியோ வீட்டின் தகமைத் தலைவா!
தப்பியோ வீட்டின் தண்ணளித் தலைவி!
கான்நரைத் தாடிக் கனமுது மனிதா!
கானக மதனின் கனமன் னவனே!
*மிமெர்க்கியே, காட்டின் விந்தைத் தலைவியே!
அன்புடை வனத்தின் ஆடலின் காவலீர்!
நீல்உடை அணிந்த சோலையின் மங்கையே!
சிவப்புக்கா லுறையணி சதுப்புலத் தலைவியே!
வருவாய் இப்போ வழங்கிடப் பொன்னே
வருவாய் இப்போ வழங்கிட வெள்ளி
சந்திரன் வயதுகொள் தங்கமென் னிடமுள
சூரியன் வயதுகொள் சுத்தவெள் ளியுமுள
பெரும்போர் வெற்றியால் பெற்றவை அவைகள்
வீரரை மோதிநான் வென்றவை அவைகள்;
வெறுமனே பையில் மிகக்கா சுள்ளன
கிடக்கின் றனவீண் பணப்பைக் காசுகள்
அரும்பொ(ன்)னாய் மாற்ற ஆருமில் லாஇடம்
எழில்வெள்ளி மாற்ற எவருமில் லாவிடம். "

குறும்பன் லெம்மின் கைனன் இவ்விதம்
சாலநீள் நேரம் சறுக்கிச் சென்றனன்
பற்றைகள் வழியே பாடினன் பாடல்கள்
பாடல்கள் மூன்று பாடினான் புதரில்
காட்டின் தலைவியை கனமகிழ் வூட்டினான்
அங்ஙனம் செய்தான் அடர்கான் தலைவனை
அரிவையெல் லோரையும் அவன்களிப் பூட்டினான்
தப்பியோ மகளிரைத் தன்வச மாக்கினான்.

அவர்கள் துரத்தினர் அதனை விரட்டினர்
வன்பேய் எருதை மறைவிடத் திருந்து
தப்பியோ குன்றின் பின்புற மிருந்து
காட்டெருத் ததன்உட் கோட்டையி லிருந்து
தேடிவந் திட்ட திண்மா னுடன்முன்
மந்திரப் பாடகன் வசதியாய்ப் பிடிக்க.

குறும்பன் லெம்மின் கைனன் அவன்தான்
சருக்குக் கண்ணியைச் சுழற்றி எறிந்தான்
பிசாச எருத்தின் பெருந்தோள் மீது
ஒட்டகம் போன்று உறும்அதன் கழுத்தில்
அதுவே அவனை உதையா திருக்க
அதன்முது கதனை அவன்தட வுகையில்.

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
இந்தச் சொற்களில் இயம்பினான் அவனே:
"வனத்தின் தலைவ, நிலத்ததி பதியே!
அழகொளிர் பவனே **அம்பசும் புற்புதர்!
கவின்மிய லிக்கியே, காட்டின் தலைவியே!
அருவனத் தாடலின் அன்புக் காவல!
இப்போ வருவீர், எழிற்பொன் பெறற்கு!
வெள்ளியைத் தெரிய விரைந்திங் குறுக

விரிப்பீர் நிலத்தில் மிகநும் துணியை
சிறப்புறும் துணியைப் பரப்புக நிலத்தில்
மின்னி ஒளிரும் பொன்னதன் கீழே
பிரகாச முடைய பெருவெள் ளியின்கீழ்
நிலத்திலே அவற்றை நீடுபோ டாமல்
அழுக்கிலே அவற்றை அறச் சிந்தாமல்."

அதன்பின் வடக்கே அவன்பய ணித்தான்
வந்து சேர்ந்ததும் வருமா றுரைத்தான்:
"பேய்எரு துக்காய்ப் போனேன் சறுக்கி
பிசாசின் வயலின் பெருவெளி யிருந்து
வயோதிப மாதுஉன் மகளைத் தருவாய்
இளம்மணப் பெண்ணை எனக்குத் தருவாய்!"

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி
அதற்கு இவ்விதம் அளித்தாள் மறுமொழி:
"நான்என் மகளை நல்குவேன் உனக்கு
இளம்மணப் பெண்ணை ஈவேன் உனக்கு
வீரிய மொடுக்கிய விறல்விலங் கடக்கினால்
பழுப்புப் பேய்நிறப் பரியினைப் பிடித்தால்
பிசாசின் நுரைவாய்ப் புரவியைப் பிடித்தால்
பிசாசின் புல்வெளிப் பெருநிலத் தப்பால்."

குறும்பன் லெம்மின் கைனனப் போது
கனகத் தமைந்த கடிவ(ா)ள மெடுத்தான்
வெள்ளிவாய்ப் பட்டியை விறற்கரம் எடுத்தான்
புரவியைத் தேடிப் புறப்பட் டேகினான்
புற்சடைப் புரவி போனான் நாடி
பிசாசின் புல்வெளிப் பெருநிலத் தப்பால்.

புறப்பட் டுஅவன் போனான் விரைவாய்
தன்பய ணத்தைச் சரியாய்த் தொடர்ந்தான்
புணர்ஒரு பசுமைப் புல்வெளி நோக்கி
புனிதம் நிறைந்தவோர் புல்வயல் வெளிக்கு
தேடிப் பார்த்தான் திகழ்பரி ஆங்கு
செவிமடுத் திட்டான் செறிசடைப் பரிக்கு
இடுப்புப் பட்டியில் அடக்குவார் இருந்தது
குதிரையின் கடிவ(ா)ளம் கொழுந்தோள் இருந்தது.

ஒருநாள் தேடினான் மறுநாள் தேடினான்
மூன்றாம் நாளும் முனைந்தவன் தேடினான்
பெருமலை ஒன்றிலே பின்அவன் ஏறினான்
பாரிய பாறைப் பகுதிமேல் ஏறினான்
பார்வையைக் கீழ்த்திசை படரச் செலுத்தினான்
செங்கதி ரோன்கீழ் சென்னியைத் திருப்பினான்
மணல்மேற் கண்டவன் வலியஅப் புரவி
தாருவின் நடுபுற் சடையது நின்றது
அதன்உரோ மத்தினால் அனல்பறந் திட்டது
புற்சடை யிருந்திரும் புகைஎழுந் திட்டது.

லெம்மின் கைனன் இயம்பினன் இவ்விதம்:
"ஓ,மனு முதல்வனே, உயர்மா தெய்வமே!
மானிட முதல்வனே, மழைமுகிற் காவலா!
நீராவி அனைத்தையும் நிதமாள் பவனே!

விண்ணுல கத்தின் வியன்வாய் திறப்பாய்
அகல்வான் சாளரம் அனைத்தையும் திறப்பாய்
இரும்புக் கற்களை இனிக்கீழ்ப் பொழிவாய்
கிளர்பனித் துண்டுகள் கீழே வீழ்த்துவாய்
நல்ல குதிரையின் நளிர்சடை மயிர்மேல்
பிசாசக் குதிரையின் பெருங்கன லுடல்மேல்."

மானிட முதல்வன்அம் மாவுயர் கர்த்தன்
மழைமுகில் களின்மேல் வாழ்ந்திடும் இறைவன்
கந்தை கந்தையாய்க் கனன்றுவிண் கிழித்தார்
இரண்டாய்ப் பிளந்தார் இகல்விண் மூடியை
பனிக்கட் டியொடு பனிக்கூழ் பொழிந்தார்
இரும்புக் கட்டியாய் எழும்மழை பொழிந்தார்
குதிரைத் தலையிலும் சிறியதக் கட்டிகள்
மனிதத் தலையிலும் பெரியதக் கட்டிகள்
நல்ல குதிரையின் நளிர்சடை மயிர்மேல்
பிசாசக் குதிரையின் பெருங்கன லுடல்மேல்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
அதனைப் பார்க்க அங்கே சென்றான்
அவதா னிக்க அருகில் சென்றான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"பிசாச தேசத்துப் பேரெழிற் புரவியே!
வரையிடை வாழும் நுரைவாய்ப் பரியே!
உன்பொன் வாயை உடன்நீ தருவாய்
வெள்ளித் தலையை விரும்பித் திணிப்பாய்
மணிப்பொன் வனைந்த **வளையத் துள்ளே
வெள்ளியில் அமைந்த வியன்மணி **நடுவே!
கொடுமையாய் உன்னைக் கொண்டுநான் நடத்தேன்
கடுமையாய்ச் சவாரி கடுகிநான் செய்யேன்
சிறிய தூரமே சவாரிநான் செய்வேன்
அதுவும் சிறிய அதர்களின் வழியாய்
வடக்கின் ஆங்கே வசிப்பிடங் களுக்கு
ஆணவம் கொண்ட மாமியார் அருகே;
கயிற்றுப் பட்டியைக் கடிது(ன்)னில் வீசின்
விசையதைக் கொண்டு விரைந்துனைச் செலுத்தின்
பட்டினால் அமைந்த பட்டியால் வீசுவேன்
செலுத்துவேன் துணியால் செய்தமென் விசையால்."

பிசாசின் பழுப்புப் பெருநிறக் குதிரை
பிசாசின் நுரைவாய்ப் பிடர்மயிர்க் குதிரை
பொன்வாய் உள்ளே புகத்திணித் திட்டது
வெள்ளியி லான சென்னியும் வைத்தது
தங்கத் தியைந்த தளைவளை யத்துள்
வெள்ளியில் செய்த வியன்மணி நடுவே.

குறும்பன் லெம்மின் கைனன் இவ்விதம்
வீரிய மடக்கிய விறற்பரி கட்டி
கனகநல் வாய்க்குக் கடிவ(ா)ள மிட்டு
பிடிவார் வெள்ளிப் பெருந்தலை கட்டி
நல்ல விலங்கதன் நடுமுது கேறி
எரியுடற் குதிரையில் இனிதே யிருந்தான்.

சவுக்கால் ஓங்கிச் சாடினான் பரியை
அலரித் தடியால் அடித்தான் ஓங்கி
சிறிது தூரம் செய்தான் பயணம்
பலமலை யூடாய்ப் பயணம் செய்து
வந்தான் மலையின் வடக்குப் பக்கம்
உயர்பனி மழைவீழ் உச்சியின் மேலே
வடபால் நிலத்து வசிப்பிடங் களுக்கு
முற்றத் திருந்து முன்உட் சென்றான்
வந்து சேர்ந்ததும் வருமா றுரைத்தான்
வடபால் நிலத்தே வந்து சேர்ந்ததும்:
"கடிவ(ா)ள மிட்டேன் கனநல மடிபரி
பிடித்துக் கட்டினேன் பிசாசின் குதிரை
பசுமை மிகுமொரு படர்புல் வெளியில்
புனித முறுமொரு புல்வயல் வெளியில்
பிசாசெரு துக்கும் பின்நான் சறுக்கினேன்
பிசாசின் வயல்களின் பெருவெளி யிருந்து
வயோதிப மாதுன் மகளைத் தருவாய்
இளம்மணப் பெண்ணை எனக்குத் தருவாய்!"

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"எனது மகளை ஈவேன் உனக்கு
இளமை மணப் பெண்ணை ஈவேன் உனக்கு
ஆற்றிலே இருக்கும் **அன்னமஃ தெய்தால்
அருவியில் வாழும் பறவையைச் சுட்டால்
அங்கே துவோனியின் அடர்கரு நதியில்
புனித நதியின் புணர்நீர்ச் சுழியில்
எய்தலும் வேண்டும் எழும்ஒரே முயற்சியில்
எய்தலும் வேண்டும் இனிதொரே அம்பால்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
அன்னம் ஒலிசெயும் அகலிடம் சென்றான்
கழுத்துநீள் பறவையைக் காணுதற் காக
துவோனியின் கறுப்புத் தொடர்நிற நதியில்
படுமாய் வுலகின் பள்ளத் தாக்கில்.

அவன் தன்வழியே அசைந்து சென்றனன்
தன்வழி யேஅவன் தனிநடை கொண்டனன்
தொடர்தாங் கிருந்த துவோனியின் நதிக்கு
புனித நதியின் புகுநீர்ச் சுழிக்கு
குறுக்கு வில்லைக் கொழுந்தோள் தாங்கி

அம்புக் கூட்டை அவன்முது கேந்தி.

நனைந்த தொப்பியன் நன்னிரை மேய்ப்பவன்
வடநிலக் குருடன் வயோதிப மனிதன்
துவோனியின் நதியின் தொடரயல் நின்றான்
புனித நதியின் புகுநீர்ச் சுழியில்;
**பார்த்தனன் அங்கு, பார்த்தனன் திரும்பி,
லெம்மின் கைனன் நேர்வர வாங்கே.

பலநாள் சென்று ஒருநாள் வந்ததும்
குறும்பன் லெம்மின் கைனனைக் கண்டான்
கண்டான் வருவதைக் கடுகிவந் தணைவதை
அந்தத் துவோனியின் அருநதிக் காங்கே
பயங்கர மான பக்கநீர் வீழ்ச்சி
புனிதம் மிக்க புணர்நீர்ச் சுழிக்கு.

நீரில் இருந்தொரு நீர்ப்பாம் பெடுத்தான்
**நீர்க்குழல் போன்றதை நெடுந்திரை யிருந்து
ஏற்றினன் மனிதனின் இதயத் தூடாய்
லெம்மின் கைனனின் ஈரலின் ஊடாய்
இடதுபக் கத்துக் கக்கத் தூடாய்
பலமிகு வலதுதோட் பட்டையி னுள்ளே.

குறும்பன் லெம்மின் கைனனப் போது
வாதை கொடிதாய் வருதல் உணர்ந்தான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அதுவே நான்புரி அரும்பிழை வேலை
கேட்க ஞாபகம் கெட்டுப் போனது
எனது தாயிடம் எனைச்சுமந் தவளிடம்
மந்திர வேலையின் மற்றிரு சொற்களை
அதிகமாய் மூன்றுசொல் அங்ஙன மிருக்கும்
எப்படி இருப்பது எங்ஙனம் வாழ்வது
இடுக்கண் நிறைந்த இத்தகை நாட்களில்
நீர்அராக் கொடுமையை நிசம்நான் அறிந்திலன்
நீர்க்குழல் போன்றதன் தீண்டலும் அறிந்திலன்.

எனதுமா தாவே, எனைச்சுமந் தவளே!
துன்பந் தாங்கித் தோள்வளர்த் தவளே!
தெரியுமா உனக்குத் தெரிந்திட முடியுமா,
அபாக்கிய மானஉன் அருமகன் எங்கென?
நிச்சயம் தெரிந்தால் நீயிவண் வருவாய்
விரைந்தெனக் குதவ விரும்பியிங் குறுவாய்
அபாக்கிய மகனை அகற்றிட வருவாய்
இம்மர ணத்தின் எதிர்வழி யிருந்து
உறுமிள வயதின் உறக்கத் திருந்து
**அரத்தச் செழிப்புடன் அழிவினி லிருந்து.

அதன்பின் கண்ணிலா அகல்வட நாட்டவன்
நனைந்த தொப்பியன் நன்னிரை மேய்ப்பவன்
குறும்பன் லெம்மின் கைனனைச் செலுத்தினன்

வீழ்த்தினன் கலேவலா வியன்குல மைந்தனை
துவோனியின் கறுப்பு தொடர்நிற நதியில்
நிலைகொடி தான நீர்ச்சுழி தன்னில்;
குறும்பன் லெம்மின் கைனன் சென்றான்
ஆர்த்திரை கின்ற அந்நீர் வீழ்ச்சியுள்
ஒளிர்ந்து பாய்ந்திடும் நளிர்அரு வியினுள்
துவோன லாவின் தொல்வசிப் பிடத்தே.

இரத்தக் கறையுள *மரணத் தின்மகன்
மனிதனை ஓங்கி வாளால் அறைந்தான்
குறுவாள் கொண்டே குத்தி அவனை
ஒளிர்ந்தே தெறிக்க ஓங்கி அடித்து
ஐந்து பங்குகள் ஆக்கி மனிதனை
அட்ட துண்டுகள் ஆக்கியே அவனை
துவோனலா ஆற்றில் தூக்கி யெறிந்தான்
மரண உலகின் வல்லாற் றெறிந்தான்;
"என்றுமே என்றும் இருப்பாய் ஆங்கே
குறுக்கு வில்லுடன் கூரிய அம்புடன்
ஆற்றிலே அன்னம் அதனையெய் தவனாய்
கரைநீர்ப் பறவை கடிதெய் தவனாய்."
அதுவே லெம்மின் கைனனின் அழிவு
நற்சுறு சுறுப்பு நாயகன் மரணம்
துவோனியின் கறுப்புத் தொடர்நிற ஆற்றில்
படுமாய் வுலகின் பள்ளத் தாக்கில்.

கலேவலா

பாடல் 15 - லெம்மின்கைனன் உயிர்த்தெழுதல்

அடிகள் 1 - 62 : ஒருநாள் லெம்மின்கைனனின் வீட்டில் அவன் விட்டுச் சென்ற சீப்பிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்ட அவனுடைய தாய், லெம்மின்கைனனுக்கு மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்பதை உணர்கிறாள்; அவள் வடநாட்டுக்கு விரைந்து சென்று வடநாட்டுத் தலைவியிடம் லெம்மின்கைனனுக்கு நிகழ்ந்தது என்ன என்று வினவுகிறாள்.

அடிகள் 63 - 194 : லெம்மின்கைனனைத் தான் அனுப்பிய செய்தியை வடநாட்டுத் தலைவியும், அவனுக்கு மரணம் சம்பவித்த விபரங்களைச் சூரியனும் கூறுகிறார்கள்.

அடிகள் 195 - 554 : லெம்மின்கைனனின் தாய் ஒரு நீண்ட குப்பை வாரியுடன் மரண நீர்வீழ்ச்சிக்குச் சென்று நீர்வீழ்ச்சியை வாரி அவனுடைய உடலின் துண்டுகள் அனைத்தையும் எடுத்து அவற்றை ஒன்று சேர்த்துத் தனது மந்திர சக்தியினால் உயிர்பிக்கிறாள்.

அடிகள் 555 - 650 : உயிர்த்தெழுந்த லெம்மின்கைனன் துவோனலா ஆற்றில் தான் இறந்த விபரங்களைக் கூறித் தாயுடன் வீட்டுக்குத் திரும்புகின்றான்.

குறும்பன் லெம்மின் கைனனின் அன்னை
சிந்தனை வீட்டில்எந் நேரமும் செய்தாள்:
"எங்கே ஏகினன் லெம்மின் கைனன்?
எங்ஙனம் மறைந்தான் தூர நெஞ்சினன்?
அவனின் வரவையிட் டறிந்திலேன் எதுவும்
பாரகம் சுற்றும் பயணத் திருந்து!"

அன்னைதுர்ப் பாக்கியவள் அறியவு மில்லை
அவனைச் சுமந்தவள் உணரவு மில்லை
தன்தசை நடமிடும் தகவலைப் பற்றி
இரத்தத்தின் இரத்த இயக்கம் பற்றி,
பசுமை செறிமலைப் பக்கஏ கினனோ!
புற்றரை மேட்டு புறநிலத் தினிலோ!
அல்லது கடற்பரப் பவனின் பயணமோ!
அடர்நுரை வீசும் அலைகளின் மீதோ!
அல்லதே தேனும் அரியபோர் தனிலோ!

அல்லதே தேதோ அச்சுறல் யுத்தமோ!
இயல்கணைக் காலில் இரத்தம் வடியுமோ!
அல்லது முழங்கால் ஆனதோ செந்நிறம்!

குயிலிக்கி என்பாள் கொழும்எழுல் மங்கை
பார்த்தனள் அங்கு, பார்த்தனள் திரும்பி,
குறும்பன் லெம்மின் கைனனின் வீட்டில்
தூர நெஞ்சினன் தோட்டத்து வெளியில்
பார்த்தாள் சீப்பைப் படர்மா லையிலே
தூரிகை அதையும் காலையில் பார்த்தாள்;
போயின பலநாள் புலர்ந்தது ஒருநாள்

காலைகள் கழிந்தொரு காலையும் வந்தது
சீப்பினி லிருந்து சிந்திய(து) இரத்தம்
தூரிகை அதனில் துளிர்த்தது குருதி.

குயிலிக்கி என்பாள் கொழும்எழுல் மங்கை
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:30
"என்னிட மிருந்து என்னவன் ஏகினான்
அழகிய தூர நெஞ்சினன் அகன்றான்
வாழ்விட மின்றி வளர்பய ணத்தே
முன்ன றியாத வன்பா தைகளில்
சீப்பினி லிருந்து சிந்துதே குருதி
தூரிகை அதனில் துளிர்க்கிற திரத்தம்!"
பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
சீப்பினை வந்து நோக்கினள் அவளே
கவலை யடைந்தாள் கண்ணீர் விட்டாள்:
"ஐயகோ, அதிர்ஷ்டம் அற்றஇந் நாளில்நான்
எனது காலத்தில் இன்னல் அடைந்தவள்
இப்போ பாக்கிய மில்லா என்மகன்
பாக்கிய மற்றஎன் பாவவம் சத்தினன்
நலமிலாத் தீயதாம் நாட்களைப் பெற்றனன்
ஈடிலாப் புதல்வனைச் சீரழி வடுத்தது
குறும்பன் லெம்மின் கைனனின் வீழ்ச்சி
சீப்பினி லிருந்து சிந்துதே குருதி
தூரிகை அதனில் துளிர்க்கிற திரத்தம்!"

கைத்தலத் தெடுத்தாள் கடிதுதன் உடைகளை
கரங்களில் பற்றினாள் கடிதுதன் துணிகளை
மிகநீள் தூரம் விரைந்தே ஓடினாள்
ஓட்டமா யோடி உடன்விரைந் தேகினாள்;
அகல்கையில் மலையெலாம் அதிர்ந்தொலி யெழுப்பின
தாழ்நிலம் உயரந்தது மேல்நிலம் தாழ்ந்தது
மேட்டு நிலங்கள் மிகக்கீழ்ப் போயின
தாழ்ந்த நிலங்கள் தடித்துமே லுயர்ந்தன.

வடக்கு நாட்டின் வசிப்பிடம் வந்தாள்
வியன்மகன் பற்றிய விபரம் கேட்டாள்
இவ்விதம் அவளே இயம்பிக் கேட்டனள்:
"ஓ,நீ வடபால் உயர்நிலத் தலைவியே!
லெம்மின் கைனனை எங்கே அனுப்பினை?
எனதுநன் மகனை எங்கே அனுப்பினை?"

லொவ்ஹி என்பவள் வடபுலத் தலைவி
அதற்கு இவ்விதம் அளித்தாள் மறுமொழி:
"உன்மகன் பற்றி ஒன்றுமே அறியேன்
மற்றெங் கவன்போய் மறைந்தான் என்பதை;
அணிபரி வண்டியில் அவனை அமர்த்தினேன்
பொருகொடும் குதிரை பூட்டிய வண்டியில்,
உருகும் பனிமழை யுற்றாழ்ந் தனனோ?
உறைபனிக் கடலில் இறுகி விட்டானோ?
ஓநாய் வாயில் உறவீழ்ந் தானோ?

அல்லது கரடியின் அகல்கொடு வாயிலோ?

கூறினள் லெம்மின் கைனனின் அன்னை:
"நிச்சயம் உன்சொல் நேரிய பொய்யே
ஓநாய் எனது உறவை உண்ணாது
லெம்மின் கைனனை நிசம்தொடா கரடி
வெறியோ நாய்களை விரலால் அழிப்பான்
கரடியைத் தனது கைகளால் ஒழிப்பான்;
உண்மையில் நீயும் உரையா விட்டால்
லெம்மின் கைனனை நீபோக் கிடத்தை
காண்புதுக் களஞ்சியக் கதவை நொருக்குவேன்
சம்போ இணைப்பைச் சாடி உடைப்பேன்."

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"உண்ண அவனுக் குணவு கொடுத்தேன்
அருந்தப் பானம் அவனுக் களித்தேன்
சோரும் வரையுப சாரம் செய்தேன்
இருத்தினேன் தோணி இயல்பின் புறத்தடம்
அதிர்நீர் வீழ்ச்சியால் அவனை அனுப்பினேன்
ஆயினும் எனக்கு அதுபுரிந் திலது
எளியவன் எங்கே ஏகினான் என்று,
நெடுநுரை பாயும் நீர்வீழ்ச் சியிலோ
அல்லது சுழலும் அருவியில் தானோ?"

கூறினள் லெம்மின் கைனன் அன்னை:
"நிச்சயம் உன்சொல் நேரிய பொய்யே
சரியாய் இப்போ சாற்றுவாய் உண்மை
இனிப்பொய் புகல்வது இதுவே கடைசி
லெம்மின் கைனனை எங்கே அனுப்பினை
மறைத்தது எங்கே கலேவலா மனிதனை
அல்லது உன்னை அணுகும் இறப்பு
உடனே மரணம் உன்னைச் சேரும்."

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"உனக்கு உண்மையை உரைக்கலாம் இப்போ
எருத்தினைத் தேடிச் சறுக்குதற் கனுப்பினேன்
மிகுவலி **விலங்கின் வேட்டைக் கனுப்பினேன்
வீரிய மொடுக்கிய விறற்பரிக் கனுப்பினேன்
புரவியை ஏர்க்கால் பூட்டிடக் கூறினேன்
அன்னத்தைத் தேட அவனை அனுப்பினேன்
போக்கினேன் புனிதப் புள்வேட் டைக்கு
இப்போ விளங்கவே இல்லை எனக்கு
எங்ஙனம் இயைந்தது இவ்வழி வென்று
எதிர்ப்பு வந்தது எவ்விதம் என்று
அவன்மீண் டிடுவதை அறிந்ததே யில்லை
மணமகள் ஒருத்தியை வரிப்பதற் காக
எனதுபெண் அவளை ஏற்பதற் காக."

மறைந்த மைந்தனை மாதா தேடினள்
இழந்த பையனை ஈன்றோள் தேடினள்

ஓடினாள் சேற்றிலே ஓநாய் போல
கரடிபோல் தீய்ந்த காட்டிலே திரிந்தாள்
**நீர்நாய் போல நீரில் நீந்தினாள்
நிலத்திலே அலைந்தாள் **வளைக்கர டியைப்போல்
**குளவிபோல் வந்தாள் குரைகடல் முனையில்
ஏரிக் கரைகளில் ஏகினாள் முயல்போல்;
பாறைக் கற்களைப் பக்கம் தள்ளினாள்
மரக்குற் றிகளை மண்கீழ் வீழ்த்தினாள்
தெருவின் கரைகளில் சேர்த்தாள் சுள்ளிகள்
வழிகளி லிருந்து கிளைகளை ஒதுக்கினாள்.

தொலைந்தவன் தனைநாள் தோறும் தேடினாள்
காணவே யில்லை கனநாள் தேடியும்
மைந்தனைப் பற்றி மரங்களைக் கேட்டாள்
தொலைந்தவ னுக்காய்த் துயர்மிகத் கொண்டாள்
தருவொன் றுரைத்தது தாருநெட் டுயிர்த்தது
சிந்துர மரமும் செம்மையாய்ச் சொன்னது:
"சுயமாய் எனக்கே துயர்கள் உள்ளன
கவனித்த திலைநின் காதற் புதல்வனை
பெருந்துயர் படவே பிறப்பெடுத் தேன்நான்
இங்கே இருக்கிறேன் என்கொடுங் காலம்
பெருந்துண் டுகளாய்ப் பிளக்கப் படற்கு
விறகுக ளாக வெட்டப் படற்கு
சூளையில் கிடந்து தொடர்தழி தற்கு
அல்லது வெட்டி அடுப்பெரிப் பதற்கு."

தொலைந்தவன் தனைநாள் தோறும் தேடினாள்
காணவே யில்லை கனநாள் தேடியும்
ஒருசிறு பாதையை உடன்வந் தடைந்தாள்
அந்தப் பாதைக் கவள்சிரம் தாழ்த்தினாள்:
"ஓ,சிறு பாதையே, உயர்இறை படைப்பே!
காதல்என் மகனைக் கண்டது இல்லையா,
அரும்பொன் ஆனஎன் அப்பிள் பழத்தை,
வெள்ளியில் செய்தஎன் மென்கைத் தடியை?"

பாதை அவளிடம் பாங்காய்ச் சொன்னது
அவளுடன் பேசி அதுவிடை யிறுத்தது:
"சுயமாய் எனக்கே துயர்கள் உள்ளன
கவனித்த திலைநின் காதற் புதல்வனை
பெருந்துயர் படவே பிறப்பெடுத் தேன்நான்
இங்கே இருக்கிறேன் என்கொடுங் காலம்
ஒவ்வொரு நாயும் ஓடுதற் காக
வன்பரிச் சவாரி மனிதர்கள் செய்ய
கடினகா லணிகள் கவினுற நடக்க
ஒவ்வொரு குதியும் உராய்ந்துதேய்ப் பதற்காய்."

தொலைந்தவன் தனைநாள் தோறும் தேடினாள்
காணவே யில்லை கனநாள் தேடியும்
வளர்சந் திரனை வழியிலே கண்டாள்
தாழ்த்தினாள் தலையைச் சந்திரனுக்கு:

"எழிற்பொன் நிலவே, இறைவன் படைப்பே!
காதல்என் மகனைக் கண்டது இல்லையா
அரும்பொன் ஆனஎன் அப்பிள் பழத்தை
வெள்ளியில் செய்தஎன் மென்கைத் தடியை?"

எழிற்பொன் நிலவு இறைவன் படைப்பு
இவ்விதம் செவ்விதாய் இறுத்தது விடையே:
"சுயமாய் எனக்கே துயர்கள் உள்ளன
கவனித்த திலைநின் காதற் புதல்வனை
பெருந்துயர் படவே பிறப்பெடுத் தேன்நான்
இங்கே இருக்கிறேன் என்கொடுங் காலம்
பனிஇராப் பயணம் தனியே செய்கிறேன்
உயர்பனிப் புகாரிலும் ஒளியைத் தருகிறேன்
காவல் குளிர்கா லத்திலும் செய்கிறேன்
கோடையில் தேய்ந்து குறுகிப் போகிறேன்."

தொலைந்தவன் தனைநாள் தோறும் தேடினாள்
காணவே யில்லை கனநாள் தேடியும்
வரும்சூ ரியனை வழியிலே கண்டாள்
செங்கதி ரோற்குச் சிரசைத் தாழ்த்தினாள்:
"ஓ,நீ கதிரே, உயர்இறைப் படைப்பே!
காதல்என் மகனைக் கண்டது இல்லையா
அரும்பொன் ஆனஎன் அப்பிள் பழத்தை
வெள்ளியில் செய்தஎன் மென்கைத் தடியை?"

செங்கதி ரோற்குத் தெரியும் என்னவோ
பரிதிஇப் போது பதிலாய்ச் சொன்னது:
"பாங்குறும் உன்மகன் பாக்கிய மற்றவன்
தொலைந்தே போனான் சோர்கொலை யுண்டான்
துவோனியின் கறுப்புத் தொடர்நிற நதியில்
அகலமாய் வுலகில் அழிவிலா நீரில்
பாய்நீர் வீழ்ச்சியில் பயணம் சென்றனன்
ஓடும் அருவியில் உள்ஆழ்ந் தேகினன்
அங்கே துவோனி ஆற்றின் அடியில்
படுமாய் வுலகின் பள்ளத் தாக்கில்."

பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
அவள்தான் அழுது அங்கணீர் உகுத்தாள்
கொல்லன் வேலைக் கொள்களம் சென்றாள்:
"ஓ,நற் கொல்ல உயர்இல் மரின!
முன்னரும் நேற்றும் முனைந்தே செய்தனை
இன்றைக்கும் ஒன்று இயற்றுவாய் அங்ஙனம்
செப்புப் பிடியுடன் செய்வாய் வாரியை
முட்களை அதற்கு மூட்டுவாய் இரும்பில்
அதன்முன் நீளம் **அறுநூ றடியாம்
அதன்கைப் பிடியோ **ஐந்நூ றாறடி."

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
கவினழி வில்லாக் கைவினைக் கலைஞன்
செப்பிலே பிடியுடன் செய்தான் வாரியை

அதற்கு முட்களை அமைத்தான் இரும்பி
அதன்முன் நீளம் அறுநூ றடியாம்
அதன்கைப் பிடியோ ஐந்நூ றாறடி.

அவளே லெம்மின் கைனனின் அன்னை
வல்லிரும் பியைந்த வாரியைப் பெற்றாள்
துவோனலா ஆறு துரிதமாய்ப் போனாள்
வணங்கிக் கதிரினை வருமாறு இசைத்தாள்:
"ஓ,நீ கதிரே, உயர்இறைப் படைப்பே!
கர்த்தரின் படைப்பே, காலுமெம் ஒளியே!
ஒருகண நேரம் ஒளிர்வாய் மிகவே
இரண்டாம் வேளை எரிவாய் மங்கலாய்
மூன்றில் முழுமைச் சக்தியோ டொளிர்வாய்
தீய இனத்தைச் செலுத்துக துயிலில்
மாய்புவிச் சக்தியைத் தேய்ந்திடச் செய்வாய்
துவோனியின் சக்தியைத் தூர்ந்திளைத் திடச்செய்."

அந்தக் கதிரவன் ஆண்டவன் படைப்பு
கர்த்தரின் படைப்பு கதிரோன் அப்போ
வளைந்த மிலாறு மரத்தை யடைந்தது
வளைந்த பூர்ச்ச மரக்கிளை யிருந்தது
ஒருகண நேரம் ஒளிர்ந்தது மிகவும்
இரண்டாம் வேளை எரிந்தது மங்கலாய்
மூன்றிலே முழுமைச் சக்தியோ டொளிர்ந்தது
தீய இனத்தைச் செலுத்திய துறங்க
மாய்புவிச் சக்தியைத் தேய்ந்திடச் செய்தது
உளஇள மனிதர்கள் உறங்கினர் வாளுடன்
காண்முது மனிதர்கள் கைத்தடி தம்முடன்
இகல்நடு வயதினர் ஈட்டிகள் தம்முடன்
அதுபின் உயரத் தாங்கே சென்றது
உயரச் சுவர்க்கத் துச்சி அடைந்தது
இதன்முன் இருந்த இடத்தை அடைந்தது
தனது பழைய தங்கிட மடைந்தது.

பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
வல்லிரும் பியைந்த வாரியை எடுத்தாள்
மைந்தனைத் தேடி வாரிட லானாள்
ஆரவா ரிக்கும் அந்நீர் வீழ்ச்சியுள்
பாய்ந்து பெருகிப் படர்அரு வியினுள்
வாரிய போதிலும் வந்தவன் கிடைத்திலன்.

மேலும் நீரதன் ஆழத் திறங்கினாள்
அவ்வழி சென்றனள் ஆழியின் வரையும்
காலுறை வரைக்கும் ஆழத் தேகினள்
இடுப்பு வரைக்கும் இறங்கினள் நீரில்.

மைந்தனைத் தேடி வாரிட லானாள்
துவோனலா ஆற்றுத் தொடர்நீள் வழியினில்
வாரித் தேடினாள் வளர்அரு வியினுள்
ஒருமுறை வாரினாள் இருமுறை வாரினாள்

மைந்தனின் ஒருமேற் சட்டைவந் திட்டது
சட்டை வந்ததால் தாங்கொணா மனத்துயர்
வாரியால் மீண்டும் வாரினாள் ஒருமுறை
கிடைத்தது காலுறை கிடைத்தது தொப்பியும்
காலுறை கண்டதும் கடுந்துயர் வந்தது
தொப்பியைக் கண்டதும் துயர்மனத் துயர்ந்தது.

மேலும் இறங்கினாள் விரியும் அருவியுள்
படுமாய் வுலகின் பள்ளத் தாக்கிலே
ஒருமுறை வாரினாள் உறுநீள் நீரினுள்
இரண்டாம் முறையும் எதிர்த்தே நீரினை
மூன்றாம் முறையும் முழுநீர் அடியிலே;
இப்போ திந்த இயல்மூன் றாம்முறை
உடல்தசைத் தொகுப்பு ஒன்றுமுன் வந்தது
இரும்பு வாரியின் இகல்முனை யினிலே.

அதுவுடல் தசைத்தொகுப் பானதே யல்ல
குறும்பன் லெம்மின் கைனன்அஃ தப்பா
அதுவே அழகிய தூர நெஞ்சினன்
வாரியின் முட்களில் வந்தகப் பட்டனன்
கொள்மோ திரவிரல் கொளுவி இருந்தனன்
வல்இடக் கால்விரல் மாட்டி இருந்தனன்.

குறும்பன் லெம்மின் கைனன் எழுந்தான்
கலேவாவின் மைந்தன் கரைமேல் வந்தான்
சேர்ந்தே செப்பினால் செய்த வாரியில்
வந்தான் தெளிந்த வளர்நீர் மேற்புறம்
ஆயினும் சிறிது அங்கிலா திருந்தது
தனதுகை ஒன்று தலையிலே பாதி
இன்னும் சிறுசிறு இணைந்த பகுதிகள்
அதன்மேல் அவனது ஆவியும் இல்லை.

அப்போ தவனது அன்னை எண்ணினாள்
அவளே அழுது அரற்றினள் இவ்விதம்:
"இனிஇதில் இருந்தொரு மனிதன் எழுவானா
உருவா குவனா ஒருபுது வீரன்?"

**அண்டங் காகமொன் றதனைக் கேட்டது
அதுஇவ் விதமாய் அளித்தது ஓர் பதில்:
"உட்சென் றவர்களில் ஒருமனி தருமிலர்
ஒன்றும்வந் தவைகளால் உருப்படல் இல்லை
கண்களை வெண்மீன் கடித்தயின் றிட்டன
கோலாச்சி மீன்கள் தோள்களைப் பிளந்தன
**வாரியுள் மனிதனை ஏகவே விடுவாய்
துவோனலா ஆற்றில் துணிந்துதள் ளிடுவாய்
ஒரு**மீ னாயவன் உருவம் பெறலாம்
அல்லது திமிங்கல மாகவும் மாறலாம்."

பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
தனயனை நீரில் தள்ளவு மில்லை

வாரினாள் நீரை மற்றொரு முறையே
செம்மையாய் செப்பால் செய்தவா ரியினால்
துவோனலா ஆற்றுத் தொல்நீள் வழியினில்
வாரினாள் நீளமாய் வாரினாள் குறுக்காய்
தனிக்கை கிடைத்தது தலையும் கிடைத்தது
பருமுது கெலும்பின் பாதியும் கிடைத்தது
மார்பு எலும்பின் மற்றொரு பாதியும்
வேறுபல் துண்டுகள் மீண்டே வந்தன;
மகனைச் சேர்த்தனள் மற்றிவற் றிருந்து
குறும்பன் லெம்மின் கைனனை ஆக்கினள்.

தசையை எடுத்துத் தசையோ டிணைத்தனள்
எலும்பை எடுத்து எலும்பொடு சேர்த்தனள்
உறுப்புகள் அனைத்தையும் ஒன்றாய்ப் பொருத்தினள்
நரம்பை எடுத்து நரம்பொடு வைத்தனள்.

உளநரம் பனைத்தையும் ஒன்றாய்க் கட்டி
நரம்பு முனைகளை நனிதைத் திணைத்து
தைத்த நுல்களைத் தான்பார்த் துரைத்தாள்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்:
"அமைநரம் புகளின் அழகிய பெண்ணே!
நரம்பு மகளே, நலலெழில் நங்கையே!
நேர்நரம் பிணைத்து நெசவுசெய் மகளே!
கவின்நிறைந் திட்ட கைத்தறி யுடனே
கனசெப் பியன்ற கைத்தறித் தண்டுடன்
தனிஇரும் பியைந்த சக்கரத் துடனே,
தேவையாம் நேரம் தெரிந் கெழுக
கூவி யழைக்கையில் குறைநீக் கிடவா
உனது கரங்களில் ஒருங்கிணை நரம்புகள்
உனதுகை களிலே உறுப்பின் உருண்டைகள்
நரம்பினை இணைத்து நன்குகட் டுதற்காய்
நரம்பின் நுனிகளை நன்குதைப் பதற்காய்
திறந்து விரிந்து திகழ்ரண மீது
புறம்பிளந் துள்ள புண்களின் மீது.

இதுவும் போதா தின்னமு மென்றால்
வானிலே இருக்கிறாள் வனிதை யொருத்தி
செப்பினால் செய்த திகழ்பட கொன்றில்
உயர்செந் நிறத்து ஓடம் ஒன்றிலே;
வானத்தை விட்டு வருகநீ பெண்ணே!
சுவர்க்கத் திருந்து துணிந்துவா கன்னியே!
நரம்புகள் மீதுன் நற்பட கோட்டு
உறுப்புகள் மீது உடன்நீ நகர்ந்திடு
எலும்பின் இடையில் இணைந்தசைந் தேகு
உறுப்புள் உடைவின் ஊடாய்ச் செல்லு!

அவ்வவ் விடங்களில் அமைத்துவை நரம்பை
உறுசரி இடங்களில் ஒழுங்காய் வைப்பாய்
நரம்பில் பெரியதை நன்நேர் வைத்து
பிரதான நரம்பை பிடித்தெதிர் வைப்பாய்

இரட்டிப் பாய்நல் இகல்நரம் பமைப்பாய்
இணைப்பய் நரம்பின் இயைசிறு முனைகளை.

சிறிய ஊசியைத் தேர்ந்துபின் எடுத்து
பட்டினால் இயைந்த பதநூல் கோர்த்து
சிறந்த ஊசியால் செய்வாய் தையலை
தகரத் தூசியால் தையலைச் செய்வாய்
நரம்பின் முனைகளை நனியுறப் பின்னி
பட்டினால் செய்த பட்டியால் கட்டு.

இதுவும் போதா தின்னமு மென்றால்
எழில்வான் வாழும் இறைவா, நீரே,
வல்லநின் பரிகளை வண்டியில் பூட்டி
அரியநின் பரிகளை சரித்தயார் செய்வீர்
சிறந்தநின் வண்டியைச் செலுத்தி வருவீர்
எலும்பு நரம்புகள் என்பன ஊடாய்
ஒழுங்கு மாறிய ஊன்தசை ஊடாய்
நழுவி வழுக்கும் நரம்புகள் ஊடாய்;
எலும்புகள் அனைத்தையும் இணைப்பாய் தசைகளில்
நரம்பின் நுனியை நரம்பின் நுனியொடு
மிகும்எலும் புடைவில் வெள்ளியைப் பூசி
நரம்பின் வெடிப்பில் நற்பொன் பூசுவீர்.

தோற்சவ் வெங்கே தொய்நது கிழிந்ததோ
அங்கே தோற்சவ் வதைவளர்த் திடுவீர்
அமைநரம் பெங்கே அறுந்து போனதோ
அங்கே நரம்பை அமைவுறத் தைப்பீர்
எங்கே குருதி வெளியே றியதோ
அங்கே ஓட அதைவைத் திடுவீர்
ஒள்ளெலும் பெங்கே உடைந்து போனதோ
அங்கே எலும்பை அமைப்பீர் பொருத்தி
தசைகள் எங்கே தளர்ந்து போனதோ
அங்கே தசையை அமைப்பீர் இறுக
ஆசியோ டமைப்பீர் அவ்வவ் விடங்களில்
உரிய இடங்களில் ஒழுங்காய் வைப்பீர்
எலும்பை எலும்புடன் இயல்தசை தசையுடன்
உறுப்பை உறுப்போ டொன்றாய் வைப்பீர்."

பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
ஆக்கினள் மனிதனை அமைத்தாள் வீரனை
உயிருடன் முன்னர் ஒருங்கிருந் ததுபோல
உயிருடன் முன்உள உருவத் தோடே.
தரிநரம் பனைத்தும் தைக்கப் பட்டன
நுனிநரம் பெல்லாம் நுட்பமோ டிணைந்தன
ஆயினும் மனிதன் வாய்கதைத் திலது
பிள்ளைக் கின்னும் பேச்சுவந் திலது.

பின்வரும் சொற்களில் பின்அவள் சொன்னாள்
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"பூச்சு மருந்தைப் போய்எவண் பெறலாம்

எங்கே சிறிது தேன்துளி கிடைக்கும்
இளைத்தவன் மீது எடுத்துப் பூசிட
குறைநோ யாளியைக் குணமாக் கிடற்கு
மீண்டும் பேசத் தூண்டிட மனிதனை
பாடலை மீண்டும் பாடவைத் தற்கு?

ஓ,எம் வண்டே, உயர்ந்த பறவையே!
காட்டு மலர்களின் கவினுறும் அரசே!
தேனை இப்போ சென்றே கொணர்வாய்
தேனைஎங் கேனும் சென்றே பெறுவாய்
களிப்பு நிறைந்த காட்டு வெளிகளில்
தனிக்கவ னம்நிறை தப்பியோ இடங்களில்
பலவிதமான மலர்களின் இதழ்களில்
பலவித மான பனிப்புல் மடல்களில்
புலர்நோ யாளியின் பூச்சு மருந்தாய்
குறைநோ யாளியைக் குணமாக் கற்கு."

சுறுசுறுப் பான பறவையவ் வண்டு
பறந்து சென்று பயணம் செய்தது
களிப்பு நிறைந்த காட்டு வெளிகளில்
தனிக்கவ னம்நிறை தப்பியோ இடங்களில்
வன்மேல் நிலத்து மலர்களில் எடுத்தது
சிறியதன் நாவில் தேனைச் சேர்த்தது
ஆறு மலர்களின் அலர்நுனி யிருந்து
நூறு புற்களின் நுண்மட லிருந்து;
தேனளி மெதுவாய்த் திரும்பி வந்தது
விரைந்து பின்னர் பறந்து வந்தது
சிறகுகள் முழுதிலும் தேனே இருந்தது
இறக்கைகள் மீது இனியதேன் வடிந்தது.

லெம்மின் கைனனின் அன்னை அவளே
பூச்சு மருந்தினைப் பூக்கரத் தெடுத்து
இளைத்தவன் மீது இனிதே தடவினள்
நலமற் றோன்மேல் நன்றாய்ப் பூசினள்;
ஆயினும் குணமதால் ஆகிட வில்லை
மனிதன் வாயிலே வரவிலைச் சொல்லே.

பின்வரும் சொற்களில் பின்அவள் சொன்னாள்!
"வண்டே, எனது மன்சிறு பறவையே!
பறப்பாய் வேறு பக்கமாய் அங்கே
கடல்ஒன் பதினைக் கடந்தே செல்வாய்
செறிந்து பரந்தநீர்த் தீவுக் கேகுவாய்
தேன்நிறைந் திட்ட திருநிலம் செல்வாய்
*தூரியின் புதிய தொடர்வீ டடைவாய்
வணங்குதற் குரிய மாமே லோனவன்.
அங்கே சிறப்புறும் அரியதேன் உளது
அங்கே தரமிகும் அருமருந் துளது
நரம்புகட் கேற்ற நல்மருந் ததுவே
உறுப்புகட் குவந்த உயர்மருந் ததுவே;
அந்த மருந்தில் கொஞ்சம் கொணர்வாய்

மந்திர மருந்தை இங்கே கொணர்வாய்
காயப் பட்டவன் மேனிமேற் பூச
ஏற்பட்ட காயத் திடங்களில் தடவ."

கரியஅவ் வண்டு கனமிலா மனிதன்
பறந்தது மீண்டும் பயணம் செய்தது
கடல்கள் ஒன்பது கடந்து சென்றது
பத்தாம் கடலிலும் பாதியைத் தாண்டி;
ஒருநாள் பறந்தது இருநாள் பறந்தது
மூன்றாம் நாளும் முன்விரைந் தேகி
அதுஎப் புல்லிலும் அமரா தகன்று
எந்த இலையிலும் இருக்கா தகன்று
சென்றது பரந்த செறிநீர்த் தீவு
தேன்நிறைந் திட்ட திருநிலம் சென்றது
விரைந்து பாய்ந்தநீர் வீழ்ச்சியின் அருகில்
புனித அருவிநீர்ப் பொழிசுழிப் பக்கம்.

தேன்உரு வாகித் திகழ்ந்தஅவ் விடத்தில்
அரியபூச் சௌடதம் ஆக்கிடப் பட்டது
சின்னஞ் சிறிய மண்சட் டிகளில்
அழகா யிருந்த கலயங் களிலே
அளவில் பெருவிரல் ஆம்கல யங்கள்
நுனிவிரல் மட்டுமே நுழையத் தக்கன.

கரியஅவ் வண்டு கனமிலா மனிதன்
செம்பூச் சௌடதம் சிறிதே எடுத்தது
காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
கணநே ரம்சில கடந்தே முடிந்தது
பறந்து வந்தது பண்ரீங் கரத்தொடு
பயணம் முடித்து பறந்து மீண்டது
ஆறுகிண் ணங்கள் அதன்கரத் திருந்தன
ஏழுகிண் ணங்கள் இருந்தன முதுகில்
அவைநிறைந் திருந்தன அரும்பூச் சௌடதம்
நிகரில்நல் தைலம் நிறைய இருந்தது.

லெம்மின் கைனனின் அன்னை அவளே
பூசினாள் அந்தப் பூச்சு மருந்தை
வல்லஒன் பதுவகை மருந்தைப் பூசினாள்
தகும்எண் வகையாம் தைலம் பூசினாள்
ஆயினும் இன்னும் அடைந்திலன் குணமே
உண்டாக வில்லை ஒருபயன் தானும்.

இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தாள்:
"கரிய வண்டே, காற்றின் பறவையே!
முனைந்தே பறப்பாய் மூன்றாம் முறையாங்(கு)
உயரும் விண்ணின் உலகம் செல்வாய்
ஒன்பது சுவர்க்கம் உடன்கடந் தேகுவை
அங்கே தேனும் அதிகமே யுண்டு
இதயம் நிறைந்த இனியதேன் உண்டு

தேவன் மந்திரம் செபித்த தேனது
இறைவன் புனிதன் இரட்சித்த தேனது
கர்த்தர் பிள்ளைகட் கதனைப் பூசினார்
கடும்தீச் சக்தியால் காயமேற் படுகையில்,
தேனிலே உனது சிறகினைத் தோய்ப்பாய்
நனைப்பாய் இறக்கை நனிகரை நறையில்
தேனைக் கொண்டு சிறகில் வருவாய்
வருவாய் ஆடையில் வளநறை சுமந்து
காயப் பட்டவன் மேனிமேற் பூச
ஏற்படு காயத் திடங்களில் தடவ."

அந்த வண்டு அன்புடைப் பறவை
இந்தச் சொற்களில் இயம்பிய ததுவே:
"அங்கே எப்படி அடியேன் செல்வது
நானோ இளைத்த நனிசிறு மனிதன்?"

"சுலபமாய்ப் போகலாம் துணிந்தாங் கேநீ
அழகுறப் பயணித் தங்கே யடையலாம்,
கதிரின் மேலே கலைநிலாக் கீழே
விண்ணில் இருக்கும் மீன்களின் நடுவே,
சிறகை அடித்து சென்றே ஒருநாள்
அடைவாய் திங்களின் அதியுயர் விளிம்பை!
அடுத்த நாளிலும் அதிவிரைந் தேகி
தாரகைக் கூட்டத் தனித்தோ ளடைவாய்,
உறுமூன் றாம்நாள் உயரப் பறந்து
ஏழு மீன்களின் எழில்முது கடைவாய்,
சிறியது அதன்பின் செய்யும் பயணம்
அடுத்து வருவது அதிகுறும் தூரம்
புனிதக் கடவுளின் பொலியும் வதிவிடம்
பேரின்ப மானவர் பெரிதுறை வீடு."

எழுந்தது வண்டு இருநிலத் திருந்து
திடரினி லிருந்து தேன்சிற கெழுந்தது
விரைந்து விரைந்து பறந்து சென்றது
சிறிய சிறகினால் பறந்தது விரைந்து
பறந்தது சந்திர வளையப் பக்கம்
பரிதியின் எல்லையில் பறந்து திரிந்தது
தாரகைக் கூட்டத் தனித்தோள் கடந்தது
ஏழு மீன்களின் எழில்முது கேகிய(து)
கர்த்தர்வாழ் கூடம் கடிதுட் பறந்தது
சென்றது சர்வ வல்லோன் திருமடம்
அங்குபூச் சௌடதம் ஆக்கப் பட்டது
தைலம் அங்கே தயார்செயப் பட்டது
வெள்ளியில் ஆன கொள்கல யத்திலும்
தங்கத் தியன்ற சட்டிகள் பலவிலும்
தேறல் கொதித்தது திகழ்நடுப் பகுதியில்
அருகிலே வெண்ணெய் உருகியே வந்தது
தெற்குக் கரையில் தேறல் இருந்தது
வடக்குக் கரையில் மலர்ந்தது தைலம்.

கரியஅவ் வண்டு காற்றின் பறவை
போதிய தேனை போந்தேற் றெடுத்தது
இதயம் நிறைய எடுத்தது தேனை
காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
வண்டு திரும்பி வந்தது மெதுவாய்
பறந்து பின்னர் விரைந்து வந்தது
**கொம்புகள் நூறு கொடுங்கைகள் நிறைய
ஆயிரம் வேறு **அடர்கட் டிருந்தன
இதிலே தேனும் இனிததில் நீரும்
இன்னு மொன்றிலே இயைசீர் மருந்தும்.

பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
சொந்தமாய்த் தனது தூயவாய் வைத்து
நாவினாற் சோதனை நன்றே செய்தாள்
நன்மனம் நிறைய நனிசுவைத் திட்டாள்:
"அந்தப் பூச்சு அருமருந் திவையே
சர்வ வல்லவன் தன்னுடை மருந்து
புனிதக் கடவுள்தாம் பூசிய மருந்து
உயர்இறை காயத் தூற்றிய மருந்து."

போய்இளைத் தவன்மேல் பூசினாள் மருந்தை
தளர்நலத் தோன்மேல் தடவினாள் மருந்தை
உடைந்த எலும்பின் ஊடாய்ப் பூசினாள்
உறுப்புகள் வெடிப்பின் ஊடாய்ப் பூசினாள்
பூசினாள் கீழும் பூசினாள் மேலும்
பூசினாள் மத்திய புறம்ஒரு முறையும்;
பின்வரும் சொற்களில் பின்அவள் சொன்னாள்
உரைத்தே அவள்தான் உரைசெய லாயினள்:
"எழுவாய் உறக்கத் திருந்துஇப் போது
கனவினி லிருந்து கண்விழிப் பாய்நீ
இந்தத் தீய இடத்தினிலிருந்து
அதிர்ஷ்ட மற்ற அமளியி லிருந்து!"

எழுந்தான் உறக்கத் திருந்தே மனிதன்
கனவினி லிருந்து கண்களை விழித்தான்
இப்போது அவனால் இயம்பிட முடிந்தது
உரியதன் நாவால் உரைத்திட முடிந்தது:
"எளியோன் நெடுநாள் இருந்தேன் துயிலில்
பாக்கிய மற்றவன் பலநாள் உறங்கினேன்
இனிய துயிலில் இருந்திட லானேன்
அமைதித் தூக்கம் ஆழ்ந்தே இருந்தேன்."

கூறினள் லெம்மின் கைனனின் அன்னை
உரைத்தே அவள்தான் உரைசெய லாயினள்:
"இன்னும் பல்லாண் டிருப்பாய் உறங்கி
பலகா லம்நீ படுக்கையில் இருப்பாய்
இல்லா விடில்உன் ஏழ்மைத் தாய்தான்
இல்லா விடில்உன் ஈனச் சுமந்தவள்.
சொல்வாய் இப்போ துர்ப்பாக் கியனே
புகல்வாய் அதனைஎன் புன்செவி கேட்க

வெம்மாய் வுலகுநீ விரைந்தது எதனால்
தண்துவோ னலாநதி தாழ்ந்தது எவரால்?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
அன்னைக் கிவ்விதம் அளித்தான் மறுமொழி:
"நனைந்த தொப்பியன் நன்னிரை மேய்ப்பவன்
*கனவுல கத்தின் கட்புல னற்றவன்
மரண உலக மனுப்பியோன் அவனே
தண்துவோ னலாநதி தள்ளியோன் அவனே
நீரி லிருந்தொரு நெடும்பாம் பெடுத்தான்
**பறவைநா கத்தை படர்திரைப் பெயர்த்தான்
என்மேல் **பாக்கியம் இல்லான் ஏவினன்
அதைதான் முன்னர் அறிந்தது மில்லை
நீர்அரா வெறுப்பை நிசம்நான் அறிந்திலேன்
நீர்க்குழல் அதனின் நெடுங்கொடும் கடியை."

கூறினள் லெம்மின் கைனனின் அன்னை:
"அடடா, நுண்ணறி வற்றவன் என்பேன்,
மாந்திரீ கனுக்கு மந்திரம் செய்வேன்
படர்லாப் பியரைப் பாடுவேன் என்றாய்,
நீர்அரா வெறுப்பை நீதெரிந் திலையே
நீர்க்குழற் கடியை நீஅறிந் திலையே!

நீர்அராப் பிறப்பது நீரின் நடுவிலே
நீர்க்குழல் பிறப்பது நீரின் அலையிலே
முன்இது **வாத்துநல் மூளையில் பிறந்தது
தண்கடற் **பறவையின் தலையுட் பிறந்தது
இதனை **அரக்கி இருநீர் உமிழ்ந்தாள்
எச்சிற் குமிழை இறக்கினாள் அலைகளில்
நீரோ அதனை நீளமாய் வளர்த்தது
வெய்யோன் அதனை மென்மையாக் கிற்று
தண்காற் றதனைத் தாலாட் டிற்று
ஆராட்டி வளர்த்தது அகல்நீ ராவி
கரைக்குச் சுமந்தது கடலலை அதனை
தரைக்குக் கொணர்ந்தது தண்திரை அதனை."

பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
அவனைத்தா னறிந்த வாறுசீ ராட்டி
அவனது முந்திய அழகுரு வாக்கி
பழையதோற் றத்தைப் பாங்குற வமைத்தனள்
இப்போ சற்றவன் இருந்தான் நலமாய்
நிலவிய முந்திய நிலையிலும் பார்க்க.
பின்னர் மகனைப் பெற்றவள் கேட்டாள்
ஏதும் குறைபா டிருக்கிற தாவென.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"எ(வ்)வளவோ குறைபா டின்னமு முள்ளது
எனதுளவேட்கை இருக்கிற தாங்கே
ஆவலும் ஆசையும் அங்கே உறங்கும்
வடபால் நிலத்து மங்கையர் மத்தியில்

அழகுறும் கூந்தல் அரிவையர் தம்மிடம்.
குமிழ்ச்செவி வடநிலக் குணமிலா மாது
தன்னுடைத் தனையைத் தருவதாய் இல்லை
வாத்தைநான் எய்து வந்தால் தவிர
அந்த அன்னத்தை அடித்தாற் தவிர
அந்தத் துவோனலா அருநதி யாங்கே
ப,னித அருவிப் பொங்குநீர்ச் சுழியில்."

கூறினள் லெம்மின் கைனனின் அன்னை
உரைத்தே அவள்தான் உசைய லாயினள்:
"எளியஅன் னத்தை இனிக்கை விடுவாய்
வாத்தினை ஆங்கே வாழ்ந்திட விடுவாய்
துவோனலா அதனின் தொல்கறுப் பாற்றில்
புகார்கள் படிந்த பொங்குநீர்ச் சுழியில்;

இல்லப் பக்கமாய் இப்போ தேகுவாய்
அகமகிழ் விழந்த அன்னை என்னுடன்
இனியுமுன் நலனுக்கு இயம்பிடு நன்றி
அனைவரும் அறிந்த ஆண்டவ னுக்கு
உண்மையாய் உனக்கு உதவிய தற்காய்
இவ்வுயி ருடன்மீட் டெழுப்பிய தற்காய்
துவோனியின் வலிய தொல்வழி யிருந்து
மரண உலகதன் வசிப்பிட மிருந்து
என்னால் முடிந்தது எதுவுமே யில்லை
எதுவும் நானே இயற்றுதற் கில்லை
கர்த்தர் அவரின் கருணை யில்லாமல்
இறைவழி நடத்தல் இல்லா விடினே."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
இல்லம் நோக்கி எழுந்திட லானான்
அன்புடைத் தனது அன்னை தன்னுடன்
மாண்புடைத் தனது மாதா தன்னுடன்.
இழக்கிறேன் துரநெஞ் சினனையாங் கிப்போ
குறும்பன் லெம்மின் கைனனை விடுகிறேன்
நீள்கா லத்தென் நெடுங்கதை யிருந்து
போகிறேன் இன்னொரு கதையின் புறமே
பாடலை வேறொரு பக்கமாய் விடுகிறேன்
அதைத்திருப் புகிறேன் அகல்புதுப் பாதையில்.

கலேவலா

பாடல் 16 - மரண உலகில் வைனாமொயினன்

அடிகள் 1 - 118 : வைனாமொயினன் ஒரு படகு செய்வதற்கு பலகைகள் கொண்டு வருமாறு சம்ஸாவைப் பணிக்கிறான்; அங்ஙனம் கிடைத்த பலகைகளில் ஒரு படகைச் செய்கிறான்; ஆனால் மூன்று மந்திரச் சொற்கள் நினைவுக்கு வரவில்லை.

அடிகள் 119 - 362 : இந்த மந்திரச் சொற்கள் கிடைக்காமல் போனதால், அவற்றைப் பெறுவதற்குத் துவோனலா என்னும் மரண உலகத்துக்குப் போகிறான். அங்கே அவன் தடுத்து வைக்கப் படுகிறான்.

அடிகள் 363 - 412 : வைனாமொயினன் அங்கிருந்து தப்பி வந்து விடுகிறான். இனிமேல் அங்கே ஒருவரும் போகக் கூடாது என்றுஎச்சரிக்கை செய்வதோடு அது தீய மக்கள் வாழும் பயங்கரமான இடம் என்றும் வர்ணிக்கிறான்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
செம்பட கொன்றைச் செய்யத் தொடங்கினான்
தொடங்கினன் புதிய தோணியொன் றியற்ற
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள தீவதன் கரையில்.
கலக்கலை ஞற்குக் கிடைத்தில துமரம்
படகுசெய் வோற்குப் பலகையாங் கில்லை.

தேவையாம் மரத்தைத் தேடுவார் யாரோ
பெருஞ்சிந் துரமரம் பெறுவர் யாரோ
வைனா மொயினன் வன்பட கியற்ற
ஓடத் தடித்தட்(டு) உடன்செயப் பாடகன்?

பெருவிளை நிலமகன் பெல்லர் வொயினன்
சம்ஸா என்னும் தனிச்சிறு வாலிபன்
அந்த மரத்தை அவனே தேடுவான்
அடர்சிந் துரமரம் அவனே பெறுவான்
வைனா மொயினன் வன்பட கியற்ற
ஓடத் தடித்தட்(டு) உடன்செயப் பாடகன்.

அவன்நடை போட்டான் அகல்தன் பாதையில்
வலம்வந் திட்டான் வடகிழக் குலகில்
ஒருகுன் றேறினான் உடன்இன் னொன்றிலும்
மூன்றாம் குன்றும் முயன்றயல் ஏகினான்
தங்கக் கோடரி தடத்திண் தோள்களில்
செப்பினால் ஆன கைப்பிடிக் கோடரி
அரச மரமொன் றருகினில் வந்தான்
அம்மரத் துயரம் அதுபதி னெட்டடி.

அரச மரத்தை அவன்தொட எண்ணினான்
தொடுகோ டரியினால் துணிக்க நினைத்தான்

அப்போ தந்த அடர்மரம் சொன்னது
தன்நா வால்அது சாற்றிய திவ்விதம்:
"என்னிடம் மனிதா என்னதான் வேண்டும்
எப்படி யாயினும் என்னநின் விருப்பம்?"
பையன் சம்ஸா பெல்லர் வொயினன்
இனிவரும் சொற்களில் இயம்பினன் அவனே:
"இதுவே உன்னிட மிருந்துவேண் டுவது
இதுவே தேடிய(து) இதுவே விரும்பிய(து)
வைனா மொயினன் வன்பட கியற்ற
பாடகன் தோணிப் பலகைகள் தேவை."

அதிசயப் பட்டு அரசும் சொன்னது
நூறுகிளை மரம் நுவல முடிந்தது:
"ஓட்டைப் படகையே உகந்தெ(ன்)னாற் பெறுவாய்
உடன்நீர் அமிழும் ஓடமே கிடைக்கும்
அடிமரம் எனது ஆனது குழல்போல்,
இந்தக் கோடையில் ஒருமுத் தடவைகள்
என்இத யத்தை இழிபுழு தின்றது
பூச்சி அரித்துப் போட்டதென் வேர்களை."

பையன் சம்ஸா பெல்லர் வொயினன்
நடந்து மேலும் நகர்ந்தே பார்த்தான்
நடந்த பொழுதே நன்குசிந் தித்தான்
வதியுமிவ் வுலகின் வடக்குப் பக்கம்
எழில்தேவ தாரவன் எதிரே வந்தது
முப்பத்தி யாறடி முழுமரத் துயரம்.
அறைந்தான் மரத்தை அவன்கோ டரியால்
கோடரிக் காம்பைக் கொண்(டு)உரத்(து) அடித்தான்
வினவினன் இவ்விதம் விளம்பினன் இவ்விதம்:
"உயர்தேவ தாருவே உன்னால் முடியுமா
வைனா மொயினன் வன்பட காக
பாடகன் தோணிப் பலகையாய் மாற?"

வியன்தேவ தாரு விரைந்தே சொன்னது
உரத்த குரலில் உடன்அதே சொன்னது:
"வராது படகுஎன் வயத்தே யிருந்து
வராது ஆறு **வங்(கக்)காற் படகு
கணுக்கள் நிறைந்த கவின்தே(வ) தாருநான்
மூன்று தடவைகள் முனைந்திக் கோடையில்
அண்டங் காகம் அசைத்தது உச்சியை
காகம் கிளைகளில் கரைந்தது இருந்து."

பையன் சம்ஸா பெல்லர் வொயினன்
நடந்துமென் மேலும் நகர்ந்தே பார்த்தான்
நடந்த பொழுதே நன்குசிந் தித்தான்
திகழுமிவ் வுலகின் தெற்குப் பக்கம்
ஒருசிந் துரமரம் ஒளிர்ந்துமுன் வந்தது
ஐம்பத்து நாலடி அதன்சுற் றளவு
பின்னர் இவ்விதம் பேசினான், கேட்டான்:
"உன்னால் முடியுமா உயர்சிந் தூரமே

வேட்டைப் படகின் வியன்உறுப் பாக
அணிபோர்ப் படகின் அடிப்புற மாக?"

சிந்துரம் சீராய்ச் செப்பிய துத்தரம்
விதையுள மரமும் மிகுதரத் துரைத்தது:
"படகு(க்கு)ப் பலகைகள் பலஎன் னிடமுள
அடிப்புற முள்ளது அகல்பட கமைக்க
கணுக்கள் விழுந்ததோர் கடைமரம் நான(ல்)ல
உள்ளே குழல்போல் உருவந் திலது
முகிழ்இக் கோடையில் மூன்று தடவைகள்
இந்தக் கோடை இயைபரு வத்தில்
நடுமரம் சுற்றி நகர்ந்தது பருதி
சந்திரன் திகழ்ந்து தரித்ததென் உச்சி(யில்)
எனது கிளைகளில் இருங்குயில் அமர்ந்தன
பறவைகள் இலைகளில் படிந்தோய் வுற்றன."

பையன் சம்ஸா பெல்லர் வொயினன்
கோடரி எடுத்தான் கொள்தோ ளிருந்து
வன்கோ டரியால் மரத்தை அறைந்தான்
வெட்டினான் அலகால் வியன்சிந் துரமரம்
விரைவாய் மரத்தை வீழ்த்த முடிந்தது
தனியெழில் மரத்தைத் தரையில் வீழ்த்தினான்.

வெட்டி உச்சியை விலக்கினான் முதலில்
துண்டுதுண் டாக்கினான் தொடர்ந்தடி மரத்தை
அதிலே யிருந்து அடிப்புறம் செய்தான்
எண்ணிலாப் பலகைகள் எடுத்துடன் சீவினான்
பாடக னுக்குப் படகுகள் செய்ய
வைனா மொயினனின் வன்பட கமைக்க.

முதிய வைனா மொயினன் பின்னர்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
தூயதன் அறிவால் தோணியைச் செய்தான்
கப்பலை மந்திரப் பாடலால் கட்டினான்
தூயசிந் தூரத் துண்டுகள் தம்மால்
சோர்ந்துடை மரத்தின் துணுக்கினி லிருந்து.

பாடிஓர் பாடல் பண்ணினான் அடிப்புறம்
பாடல்மற் றொன்றால் பக்கங்(கள்) பொருத்தினான்
பாடியே மூன்றாம் பாடலை விரைந்து
வேண்டிய துடுப்புகள் மிடுக்குடன் செய்தான்
வங்கக் கால்களை வகையுறச் செய்தான்
பொருத்துகள் அனைத்தையும் பொருத்தியொன் றாக்கினான்.

படகுக்கு வங்கக் கால்களைப் படைத்து
எல்லாப் பக்கமும் இணைத்த பின்னரும்
மூன்றுமந் திரச்சொல் வேண்டி(யே) யிருந்தன
முன்னணி விளிம்பை மொய்ம்புறப் பூட்ட
முன்பா கத்தை முற்றுப் படுத்த
கனத்தபின் அணியம் கட்டி முடிக்க.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓ,என் நாட்களில் ஒருபாக் கியமிலான்
இறக்க முடிந்தில(து) இப்பட(கு) அப்பில்
அகல்புதுத் தோணியை அலைகளின் மீது."

சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
எங்கே அச்சொல் இருந்துபெற் றிடலாம்
திருமந் திரச்சொல் தேடுவ தெங்கே
தூக்கணஞ் சிட்டின் தொடுஉச் சியிலா
அன்னக் கணத்தின் மென்தலை களிலா
வாத்துக் கூட்ட வளர்தோள் இருந்தா?

திருமந் திரச்சொல் தேடிச் சென்றான்
அன்னக் கூட்டம் அதுவொன் றழித்தான்
கொன்றான் வாத்துக் கூட்டம் ஒன்றினை
தூக்கணங் குருவிகள் சொற்கணக் கடங்கா
ஆயினும் கிடைத்தில அந்தச் சொற்கள்
இல்லைசொல் ஒன்றுமே இல்லைஓர் **அரையும்.

சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
"அச்சொல் நூறு அங்கே இருக்கலாம்
கோடை மானின் கொழுநாக் கடியில்
அரியவெண் ணிறத்து அணிலின் வாயில்."

திருமந் திரச்சொல் தேடிச் சென்றான்
மர்மச் சொற்களை வாகாய்ப் பெறற்காய்,
வெட்டித் திறந்தான் வெகுவயல் மான்களை
ஆங்கொரு பெரிய அணிலின் குழுவையும்
அதிக சொற்களை அங்கே பெற்றான்
ஆயினும் சொற்கள் அவைபய னற்றவை.

சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
"அச்சொல் நூறு அங்கே பெறுவேன்
துவோனியின் இருண்ட தொல்வதி விடத்தில்
காலங் கடந்த மாய்வுல கில்லில்."

சொற்கள் வேண்டித் துவோனியை அடைந்தான்
மந்திர மொழிக்காய் மரண உலகம்;
அமைதி யாக அடிவைத் தேகினான்
வாரமொன் றுபுதர் வழியூ டேகினான்
**சிறுபழச் செடிவழி திகழ்மறு வாரம்
மூன்றாம் வாரம் சூரைச் செடிவழி
மரணத் தீவு வந்தது கண்ணெதிர்
துவோனியின் குன்று தொடர்ந்தெதிர் ஒளிர்ந்தது.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உறுபலக் குரலில் உரத்துக் கத்தினான்

அங்கே துவோனியின் அந்தஆற் றிடையே
மரண உலகின் வலுதாழ் விடத்தில்:
*"துவோனியின் மகளே, தோணிநீ கொணர்வாய்!
மரண(த்தின்) மதலாய், வருவாய் படகொடே!
இந்தநீ ரிணையை இனிநான் கடக்க!
ஆற்றைக் கடந்து அக்கரை சேர!"

துவோனியின் குள்ளத் தொல்லுருப் பெண்ணவள்
மரண உலகின் வன்குறு மகளவள்
சலவைத் தொழிலைத் தான்செய் திருந்தாள்
அடித்துத் துணிகளை அலம்புதல் செய்தாள்
துவோனியின் கறுப்புத் தொடர்நிற ஆற்றில்
மரண உலகின் வலுதாழ் நீரில்;
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்
உரைத்தே அவள்தான் உரைசெய லாயினள்:
"இங்கிருந் தோடம் இனிக்கொண ரப்படும்
என்ன காரணம் என்பதைச் சொன்னால்
மரண உலகுநீ வந்தது எதற்கு
வருநோய் உனக்கு மரணம் தராமல்
இயற்கையாய் உனக்கு இறப்பு வராமல்
வல்விதி எதாலும் மரணம் வராமல்?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"துவோனி என்னை இங்கே கொணர்ந்தது
என்நாட் டிருந்து இழுத்தது மரணம்."

துவோனியின் குள்ளத் தொல்லுருப் பெண்ணவள்
மரண உலகின் வன்குறு மகளவள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"கண்டுகொண் டேன்யான் கள்ளன் ஒருவனை
உன்னைத் துவோனி இங்கே கொணர்ந்தால்
உன்நாட் டிருந்து உறுமிறப் பிழுத்தால்
தன்னுடன் துவோனி தான்கொணர்ந் திருக்கும்
படும்இறப் புன்னுடன் பயணித் திருக்கும்
மரணத்(தின்) தொப்பிநின் வன்தோள் வைத்து
மரணத்(தின்) கையுறை வன்கரம் தந்து
வழங்குக உண்மை(யை) வைனா மொயினனே,
மரண உலகுநீ வந்தது எதற்கு?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இவ்விதம் அதன்பின் இயம்பினன் அவனும்
"இறப்புல குக்கெனை இரும்பு கொணர்ந்தது
உருக்குத் துவோனியின் உலகிற் கொணர்ந்தது."

துவோனியின் குள்ளத் தொல்லுருப் பெண்ணவள்
மரண உலகின் வன்குறு மகளவள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"அறிந்துகொண் டேன்யான் அரியதோர் கள்ளனை
இறப்புல குக்குனை இரும்பு கொணர்ந்தால்

உருக்கே துவோனியின் உலகிடைக் கொணர்ந்தால்
இரத்தம் பெருக்கும் ஏற்றநின் ஆடை
பாயும் இரத்தம் படுரண மிருக்கும்
வழங்குக உண்மையை வைனா மொயினனே
இரண்டாம் தடவை வழங்குவாய் உண்மை."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"மரண உலகெனை வண்புனல் கொணர்ந்தது
துவோனியின் உலகெனைத் தொடர்அலை கொணர்ந்தது."

துவோனியின் குள்ளத் தொல்லுருப் பெண்ணவள்
மரண உலகின் வன்குறு மகளவள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"தெரிந்துகொண் டேன்யான் திரும்பவோர் பொய்யனை
மரண உலகுனை வண்புனல் கொணர்ந்தால்
துவோனியின் உலகுனைத் தொடர்அலை கொணர்ந்தால்
தண்ணீர் பெருக்கும் தரித்தநின் ஆடை
நீரைச் சொட்டும் நின்உடைக் கரைகள்;
உண்மையைச் சரியாய் உரைப்பாய் இப்போ(து)
மரண உலகு வந்தது எதற்கு?"

முதிய வைனா மொயினன் அங்கே
கடிதுமற் றொருமுறை களவே செய்தான்:
"மரண உலகெனை வளர்தீ கொணர்ந்தது
துவோனியின் உலகெனைச் சுடுகனல் கொணர்ந்தது."

துவோனியின் குள்ளத் தொல்லுருப் பெண்ணவள்
மரண உலகின் வன்குறு மகளவள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"உணர்ந்துகொண் டேன்யான் உயர்ந்ததோர் பொய்யனை
மரண உலகுனை வளர்தீ கொணர்ந்தால்
துவோனியின் உலகுனைச் சுடுகனல் கொணர்ந்தால்
கனத்தஉன் தலைமயிர் கருகியே யிருக்கும்
இரிந்தநின் தாடிநன் கெரிந்துபோ யிருக்கும்.

ஓ,நீ முதிய வைனா மொயினனே!
ஓடம்இங் கிருந்து உனக்குத் தேவையேல்
உண்மையைச் சரியாய் உரைப்பாய் இப்போ(து)
பொய்யே சொல்வது போய்முடி யட்டும்
மரண உலகம் வந்தது எவ்விதம்
வருநோய் உனக்கு மரணம் தராமல்
இயற்கையாய் உனக்கு இறப்பு வராமல்
வல்விதி எதாலும் மரணம் வராமல்?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"சிறுபொய் சிலநான் செப்பிய துண்டு
இரண்டாம் தடவையும் இழைத்தேன் களவு
உண்மையை இப்போ உரைப்பேன் யானே:
அமைத்தேன் படகொன்(று) அறிவின் சக்தியால்

பாடலின் தன்மையால் படகொன் றாக்கினேன்
ஒருநாள் பாடினேன் இருநாள் பாடினேன்
அங்ஙனம் பாடினேன் அடுமூன் றாம்நாள்
பாட்டெனும் வண்டி பட்டென உடைந்தது
பாடற் சொல்நடை பட்டது குழப்பம்
ஊசியொன் றினுக்காய் உற்றேன் துவோனலா
துறப்பணம் தேடி இறப்புல கடைந்தேன்
கடிதுஎன் வண்டியைக் கட்டி யமைத்திட
என்பா வண்டியை ஏற்றதாய்த் திருத்த
இங்கொரு ஓடம் இப்போ(து) கொணர்வாய்
அடுத்துன் படகொன் றாயத்த மாக்கு
இந்த நீரினையை இனிநான் கடக்க
ஆற்றைக் கடந்து அக்கரை சேர."

ஏசினாள் துவோனியின் எழில்மகள் அவனை
தகரா றிழைத்தனள் சாவுல கத்தவள்:
"நீயொரு மூடன், நீள்மடத் தனத்தோன்,
மூளைக்கோ ளாறு மூண்டுள மனிதன்,
துவோனலா காரணத் தொடர்பிலா தடைந்தாய்
நோயின்றி மரண நுண்ணுல குற்றாய்
உனக்கொரு காரியம் உகந்ததா யிருக்கும்
திரும்பிநின் நாடு செல்வதே யதுவாம்
வந்தது உண்டு மற்றிங் கனேகர்
ஆனால் திரும்பி அனேகர் சென்றிலர்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"பாதையை ஒருமுதுப் பாவைதான் மாற்றலாம்
ஆயினும் இளைத்ததோர் ஆடவன் செய்திடான்
சோம்பிய மனிதனும் துணிந்ததைச் செய்திடான்
துவோனியின் மகளே தோணியைக் கொணர்வாய்
கொணர்வாய் மாய்புலக் குழந்தையே படகினை!"

துவோனியின் மகளும் தோணியைக் கொணர்ந்தாள்
முதிய வைனா மொயினனை அதிலே
நீரிணை கடந்து நேராய்க் கொணர்ந்தாள்
ஆற்றைக் கடந்து அக்கரை வந்தாள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"வைனா மொயினநீ வந்தனை, பாவம்,
இறப்பிலா திந்த இறப்புல கடைந்தாய்
மரண மின்றியே வந்தாய் துவோனலா."

துவோனியின் மகளெனும் துணிந்தநற் தலைவி
மரணலோ கத்து மகள்முது மாது
கொஞ்சமாய்க் குடுக்கையில் கொணர்ந்தாள் 'பீர்'அது
இரண்டுகைப் பிடியுள ஏந்திய கெண்டியில்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"முதிய வைனா மொயினனே பருகுக!"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
குடுக்கையின் உள்ளே குனிந்து நோக்கினான்

சினைத்தன தவளைகள் சிறுகுடுக் கையினுள்
புரண்டுபக் கங்களில் புழுக்கள் நெளிந்தன
பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்:
"இங்குநான் வந்தது இதற்காய் அல்ல
மாய்புல(க)க் குடுக்கையில் மதுக்குடிக்(க) அல்ல
துவோனியின் கெண்டியில் தொட்டருந்(த) அல்ல
போதையே கொள்பவர் புணர்'பீர்' குடிப்போர்
சாடியில் குடிப்போர் தரையினில் வீழ்வார்."

சொன்னாள் துவோனித் தொல்புவித் தலைவி:
"ஓ,நீ முதிய வைனா மொயின!
மரண உலகம் வந்தது எதற்கு?
துவோனலாப் பயணம் தொடர்ந்தது எதற்கு?
நினைவரும் பாத நேரம் துவோனி?
அம்புவி யிருந்துசா வழைக்கா நிலையில்?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"படகு ஒன்றையான் படைத்தபோ தினிலே
புதிய தோணியைப் புனைந்தபோ தினிலே
தேவை யாயினமுத் திருமந் திரச்சொல்
முன்பா கமதை முற்றுப் படுத்த
கனப்பின் னணியம் கட்டி முடிக்க;
அவற்றை எங்குமே அடையா நிலையில்
இப்புவி அவைகள் இல்லா நிலையில்
வன்துவோ னலாயான் வரநேர்ந் ததுவே
பயணிக்க நேர்ந்தது பருமிறப் புலகு
தேவையா யிருந்த செஞ்சொல் தேடி
மந்திரச் சொற்களை வாகுறக் கற்க."

அப்போ(து) துவோனியின் அம்புவித் தலைவி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"துவோனி சொற்களைச் சொ(ல்)லித்தரற் கில்லை
பலமதை மாய்நிலம் பகிர்வதற் கில்லை
இங்கிருந்து உன்னால் இனித்திரும் பொண்ணா
என்றும்உன் வாழ்வில் இனிமுடி யாது
பயணிக்க முடியா பழகுநின் இல்லம்
செல்லவும் முடியா சொந்தநா டினிநீ."

அவள்அம் மனிதனை அணைதுயில் ஆக்கினாள்
பயணியைக் கீழே படுக்கவைத் திட்டாள்
துவோனி செய்த தோற்படுக் கையிலே;
படுத்துக் கிடந்தான் படிந்ததில் மனிதன்
உறக்கத் திருந்தான் உயர்விற லோனதில்
உடைகள்காப் பளித்தன உறங்கினன் மனிதன்.

துவோனலா விலேயொரு தொல்முது மாது
முதியவள் ஒருத்தி முன்நீள் தாடையள்
இரும்புநூல் நெசவினை இனிதுசெய் கின்றவள்
செப்பிலே யிருந்துநூல் செய்வதே வருபவள்
நூற்றுக் கணக்கிலே நூல்வலை பின்னுவாள்

ஆயிரக் கணக்கிலும் ஆக்கியே முடிப்பாள்
கோடைகா லத்துகொள்இரா ஒன்றிலே
நீரில் கிடந்ததோர் நெடியபா றையின்மேல்.

துவோனலா விலேயொரு தொல்முது மனிதன்
மூன்று விரலுறும் முதியவன் இருந்தான்
இரும்பில் வலைகளை எடுப்பவன் பின்னி
செப்பிலும் வலைகளை செய்தே எடுப்பவன்
நூற்றுக் கணக்கிலே நூல்வலை பின்னுவான்
ஆயிரக் கணக்கிலும் ஆக்கியே முடிப்பான்
கோடை காலத்துக் கொள்அதே இரவில்
நீரில் கிடந்தநீள் அதே பாறையில்.

தொடுகோ ணல்விரல் துவோனியின் மைந்தன்
கூர்இரும் பாலமை கோணிய விரலான்
நூற்றுக் கணக்கிலே நூல்வலை இழுப்பான்
துவோனியின் ஆற்றின் தொடுகுறுந் திசையில்
குறுக்குத் திசையிலும் கொள்நீள் திசையிலும்
திகழ்சாய் சரிவுத் திசையிலும் இழுப்பான்
வைனா மொயினன் வழிச்செலல் நிறுத்த
அமைதிநீர் மனிதன் அகல்வதைத் தடுக்க
வளருமிவ் வுலகின் வாழ்நாள் என்றும்
பொன்னிலாத் திகழும் பொற்பொழு தெல்லாம்
துவோனலா வதிவிடத் தொல்லிட மிருந்து
காலங் கடந்தசாக் கதிநிலத் திருந்து.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"வல்லழி வெனக்கு வந்தே விட்டதா?
இன்னற் காலம் எனக்கு வந்ததா?
துவோனலா வெனுமித் தொல்வதி விடத்தில்?
மரண உலகின் வாழ்விடம் தன்னில்?"

உடனே தனது உருவம் மாற்றினான்
விரைந்து வேறொரு வேடம் கொண்டனன்
கறுப்பு நிறத்தில் கடலிடைச் சென்றான்
கோரைப் புற்றட நீர்நாய் போலவே
இரும்புப் புழுப்போல் ஏகினான் தவழ்ந்து
நஞ்சுப் பாம்புபோல் நகர்ந்தே சென்றான்
துவோனலா ஆற்றின் தொடுகுறுக் காக
துவோனியின் வலைகளின் ஊடாய்த் துணிவொடே.

தொடுகோ ணல்விரல் துவோனியின் மைந்தன்
கூர்இரும் பாலமை கோணிய விரலான்
அங்கே சென்றான் அதிகா லையிலே
விரித்தன் வலைகளை மீண்டும் பார்க்க;
நன்னீர் மீன்கள் நன்குநூ றிருந்தன
சிறுமீன் கிளைகள் திகழ்ந்தன ஆயிரம்
வைனா மொயினன் வந்ததில் பட்டிலன்
அமைதிநீர் முதியோன் அகப்பட வில்லை.

முதிய வைனா மொயினன் அதன்பின்
துவோனலா விருந்து துணிந்தே வருகையில்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"எக்கா லத்தும் இறைவனே வேண்டாம்!
என்றும் நிகழ்த்தவும் வேண்டாம் இங்ஙனம்,
தானே மரண உலகுசார்ந் தோர்க்கு
துவோனலா நுழைந்த தூயமா னிடர்க்கு
அங்கே சென்றவர் அநேகர் உள்ளனர்
மிகவும் குறைவு மீண்டவர் அங்கிருந்(து)
துவோனலா வதிவிடத் தொல்பதி யிருந்து
காலங் கடந்தசாக் கதிநிலத் திருந்து."

பின்வரும் சொற்களில் பேசினான் இன்னும்
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்
எழுச்சிபெற் றோங்கும் இளைஞர் தமக்கும்
வளர்ந்திடும் தேசீய மக்களார் தமக்கும்:
"ஒருபோதும் வேண்டாம், உயர்மனு மக்காள்!
வளருமிவ் வுலகின் வாழ்நாள் என்றும்
குற்றமற் றோர்மேல் குற்றமேற் றாதீர்
தவறற் றோர்மேல் தவறு சாட்டாதீர்;
கடுமையாய்க் கூலி கணித்ததற் கிடப்படும்
அங்கே துவோனியின் அவ்வதி விடத்தில்;
குற்ற மிழைப்போர்க் குண்டொரு தனியிடம்
பாவிகட் கங்கே படுக்கைகள் உண்டு
கட்டில்கள் கொதிக்கும் கற்களில் உண்டு
கனல்விடும் பாளக் கற்களாங் குண்டு
புணர்அரா நஞ்சிலே போர்வைகள் உண்டு
துவோனிப் புழுக்களைத் தொடுத்தவை நெய்தவை."

கலேவலா

பாடல் 17 - வைனாமொயினனும் அந்தரோ விபுனனும்

அடிகள் 1 - 98 : அந்தரோ விபுனனிடம் மந்திரச் சொற்களைப் பெறச் சென்ற வைனாமொயினன் பூமியின் கீழ் நீண்ட தூக்கத்தில் இருந்த அவனை எழுப்புகிறான்.

அடிகள் 99 - 146 : அந்தரோ விபுனன், வைனாமொயினனை விழுங்குகிறான்; வைனாமொயினன் வயிற்றுக்குள் இருந்து அவனைச் சித்திரவதை செய்கிறான்.

அடிகள் 147 - 526 : அந்தரோ விபுனன் வைனாமொயினனை வயிற்றிலிருந்து வெளியேற்ற எல்லா வழிகளையும் கையாளுகிறான். அவனுடைய வாக்குறுதிகள், மந்திரம், மாயம், சூனியம் எதுவும் பயனளிக்கவில்லை. தனது படகை முடிப்பதற்குத் தேவையான மூன்று மந்திரச் சொற்கள் கிடைத்தால் மட்டுமே தான் வயிற்றிலிருந்து வெளியேறுவதாக வைனாமொயினன் கூறுகிறான்.

அடிகள் 527 - 628 : அந்தரோ விபுனன் தனக்குத் தெரிந்த மந்திர அறிவுப் பாடல்கள் அனைத்தையும் பாடுகிறான். வைனாமொயினன் வயிற்றிலிருந்து வெளியேறிப் படகு கட்டும் இடத்துக்கு வந்து படகைக் கட்டி முடிக்கிறான்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
கிளர்மந் திரச்சொல் கிடைக்கா நிலையில்
வளருமத் துவோனலா வதிவிட மிருந்து
அழிவிலா மரண அகலுல கிருந்து
சிந்தனை பொழுதெலாம் செய்துகொண் டிருந்தான்
நீண்ட காலம் நிகழ்த்தினான் சிந்தனை
அந்தச் சொற்களை அடைவதெங் கிருந்து
மனங்கொளும் மந்திரம் மற்றெங் கடையலாம்.

ஒருநாள் இடையன் ஒருவன் வந்தான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"அங்கே நூறு அருஞ்சொற் பெறலாம்
மந்திரச் சொற்களோ வயப்படும் ஆயிரம்
அந்தரோ விபுனன் என்பவன் வாயில்
வார்த்தைகள் நிறைந்த வயிற்றில் அவனிடம்;
ஆயினும் அங்கே அடைந்திடல் வேண்டும்
செல்லும் பாதையைத் தெரிதலும் வேண்டும்
பயணம் அதுநற் பயணமு மல்ல
ஆயினும் தீயதும் அல்லஅவ் வளவே;
ஓடுதல் வேண்டும் ஒருமுதற் கட்டம்
வனிதையர் ஊசிகள் **வாய்முனை மீது
நடத்தலும் வேண்டும் நவில்மறு கட்டம்
ஆடவர் வாள்களின் **அணிமுனை மீது
மூன்றாம் கட்டம் நீண்டடி வைத்திடல்
வீரன் ஒருவனின் கோடரி அலகில்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
திட்டமிட் டனனே செய்திடப் பயணம்

கொல்லனின் வேலை கொள்களம் நுழைந்தான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"ஓகோ, கொல்ல உயர்இல் மரின!
இரும்பினால் பாதணி இதமுறச் செய்வாய்
இரும்பினாற் செய்வாய் ஏற்றநற் கையுறை
இரும்பினால் செய்வாய் இனியநற் சட்டை
இரும்பினால் செய்வாய் இருங்கூர்த் **தண்டமும்
அவ்விதம் கூலிக்கு ஆக்குவாய் உருக்கில்
உருக்கிலே நடுத்தண்டு ஒன்றையும் செய்து
அதன்மேல் வார்ப்பாய் அழகுமெல் இரும்பு;
சிலசொற் களையான் தேடிச் செல்கிறேன்
நல்மந் திரச்சொல் நாடிச் செல்கிறேன்
அவனது வார்த்தைகள் ஆர்ந்தஅவ் வயிற்றில்
அந்தரோ விபுனன் என்பவன் வாயில்."

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"வெகுநாள் முன்பு விபுனன் இறந்தான்
அனேககா லம்முன் அந்தரோ மறைந்தான்
அவனே அமைத்த அப்பொறி யிருந்து
கடிதுஅவன் செய்த கண்ணியி லிருந்து
அங்கொரு சொல்லும் அடைந்திட மாட்டாய்
ஒருசொற் பாதியும் பெறல்உனக் கரிது."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
அதைக்கவ னிக்காது அப்பால் தொடர்ந்தனன்
சென்றான் ஒருநாள் சிறுமென் நடையில்
வனிதையர் ஊசிகள் வாய்முனை மீது
இரண்டாம் நாளும் ஏகினன் அமைதியாய்
ஆடவர் வாள்களின் அணிமுனை மீது
மூன்றில் நீண்டடி முன்வைத் தேகினன்
வீரன் ஒருவனின் கோடரி அலகில்.

நிறைந்த பாடல்கள் நிலைகொள் விபுனன்
வார்த்தைகள் பொதிந்த வன்முது மனிதன்
பாடல்க ளோடு படுத்தனன் ஓய்ந்து
மந்திரத் தோடு மல்லாந் திருந்தான்;
அவனது தோள்களில் அரசு வளர்ந்தது
கண்ணிமை மேலே கனமிலா றெழுந்தது
தாடையில் பூர்ச்சம் தண்மரம் முளைத்தது
அடர்தா டியின்மேல் அலரிப் பற்றை
புருவத்தில் தாரு பொலிந்தது அணிலுடன்
பசியநல் மரங்கள் பற்களில் இருந்தன.

வந்தான் அங்கே வைனா மொயினன்
எடுத்தான் இரும்பு இகல்வாள் உருவினன்
தோலினால் செய்த தோலுறை யிருந்து
மென்மையாய்ச் செய்த மிளிர்பட்டி யிருந்து
வீழ்த்தினான் அரசை வியன்தோ ளிருந்து
வெட்டினான் கண்ணிமை மீதுள மிலாறு

அழித்தான் தாடையின் அகன்றபூர்ச் சமரம்
அடர்தா டியின்மேல் அலரிப் பற்றையை
புருவத்துத் தாருவைப் பொருந்திய **அணிலொடே
பசியநல் மரங்களைப் பற்களி லிருந்தே.

இரும்புத் தண்டம் எடுத்துள் திணித்தான்
அந்தரோ விபுனன் என்பவன் வாய்க்குள்
முன்இளி அவனது முரசுகள் உள்ளே
இறுகிய அலகினுள் இறுக்கித் திணித்தான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"எழுவாய், மனித இனத்தின் அடிமையே!
நிலத்தின் கீழே நேர்துயி லிருந்து!
நீண்ட கால நெடுந்துயி லிருந்து!"

நிறைந்த பாடல்கள் நிலைகொள் விபுனன்
உடனே தூக்கம் உதறிவிட் டெழுந்தான்
கடுமையாய் தன்னைத் தொடுவதை உணர்ந்தான்
வன்கொடும் நோவும் வருவதை அறிந்தான்
தனியிரும் பியைந்த தண்டம் கடித்தான்
இருந்தமேல் மென்மை இரும்பையும் கடித்தான்
ஆயினும் முடிந்தில(து) அவன்உருக்(கு) கடித்தல்
இரும்பின் நடுத்தண்(டு) ஏற்றுண்ண முடிந்தில(து).

முதிய வைனா மொயினன் அங்கே
வாயின் அருகில் வந்துநின் றிருந்தான்
அவனது ஒருகால் அதுசறுக் கியது
இடதுகால் வழுக்கி இறங்கி ஏகியது
அந்தரோ விபுனனின் அகல்வா யுள்ளே
அவனது அலகின் அகல்இடை நடுவில்.

உடனே பாடல்கள் உள்நிறை விபுனன்
விரித்துப் பெரிதாய் வியன்வாய் திறந்தான்
அலகை அகட்டி அகலத் திறந்தான்
உள்ளே விழுங்கினான் உடன்வாள் மனிதனை
அவனைத் தொண்டையுள் அவனே விழுங்கினான்
முதிய வைனா மொயினன் அவனையே.

பின்னர் பாடல்கள் பெரிதார் விபுனன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"முன்னர் எதோவெலாம் முழுமையா யுண்டுளேன்
உண்டேன் வெள்ளாடு உண்டேன் செம்மறி
மலட்டுப் பசுவையும் மகிழ்வா யுண்டுளேன்
காட்டுப் பன்றியும் கனக்க உண்டுளேன்
இதுபோல் என்றும் ஏற்றுண் டிலனே
இச்சுவைக் கவளம் இனிதுண் டிலனே."

முதிய வைனா மொயினன் அதன்பின்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"எனது அழிவு இதோவரு கின்றது
துயர நாட்கள் தொடங்கு கின்றனவே

இப்பூ தத்தின் இரும்பிலத் தினிலே
இவ்விறப்(பு) ஆவியின் இழிகிடங் கினிலே."

சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
எப்படி எருப்பது எங்ஙனம் வாழ்வது;
வைனா மொயினனின் **'வார்'அதில் கத்தி
கத்தி யதிலே கணுவுறும் கைப்பிடி
அதனால் படகை அவனும் செய்தனன்
படகை மந்திர அறிவால் படைத்தனன்
படகை வலித்தனன் பாடசைந் தேகினன்
ஏகினன் நரம்புதொட்டு இயல்மறு முனைக்கு
ஒவ்வொரு இடுக்கிலும் உறவலித் தேகினன்
ஒவ்வொரு வழியிலும் உடன்றுசுற் றிட்டனன்.

பாடல்கள் நிாறந்த பழமுது விபுனன்
கண்டஇத் தனையும் கவனித்த திலனாம்
முதிய வைனா மொயினனப் போது
கொல்லனா யாக்கிக் கொண்டான் தன்னை
கொள்இரும்(பு) அடிக்கும் கொல்லனே ஆகினன்
தோள்மேற் சட்டையைத் தொழிற்கள மாக்கினன்
உறும்அதன் மடிப்பை உலைக்கள மாக்கினன்
கம்பளி ஆடையில் கட்டினன் துருத்தி
குழல்கள்காற் சட்டை கொண்டே செய்தனன்
காலுறை யாலே கடுங்குழல் வாய்முனை
பட்டறை யாக்கினன் படர்முழங் காலினை
சுத்தியல் ஆக்கினன் தொடுமுழங் கையினை.

சுத்தியல் கொண்டு தொடர்ந்தே தட்டினன்
அடித்து அடித்து அறைந்தனன் மென்மேல்
இரவெலாம் ஓய்வு இன்றியே அடித்தான்
அடித்தான் பகல்எலாம் அவன்மூச் சின்றி
அமைவுறும் பாடல்சேர் அவனது வயிற்றில்
மந்திர அறிவு வாய்ந்தவன் நெஞ்சில்.

அப்போ(து) பாடல்கள் அவைநிறை விபுனன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"எவ்வகை மனித இனத்தினன் நீதான்
வீரனே யாயினும் எவ்வகை வீரன்
நூறுவீ ரரைநான் நொடியில் உண்டுள்ளேன்
ஆயிரம் மனிதரை அழித்ததும் உண்டு
உண்டதாய் நினைவி(ல்)லை ஒருவனை இப்படி;
வருகிற தெனது வாயிலே கரியே
நனிஎரித் தணல்என் நாவிலே யுளது
இரும்பின் கழிவுகள் எனதுதொண் டையிலே.
அதிசயப் பிராணியே, ஆகுக பயணம்!
புறப்பட்ட டேகு, புவிக்கொடும் பிராணீ!
நான்உன் அன்னையை நாடித் தேடுமுன்
உனைப்பெறு மாண்புறும் அவளைநான் நாடுமுன்
உனது தாயிடம் உடன்நான் சொன்னால்
பெற்றவ ளிடம்நான் மற்றிதை முறையிடில்

வேலை அதிகம் மிகுந்திடும் தாய்க்கு
பெற்றவ ளுக்குப் பெருகிடும் துன்பம்
அவளது மைந்தன் ஆற்றும் பிழைகளால்
முறைகெட்(டு) அவள்மகன் முயன்றிடும் போதே.

எதுவும் விளங்கிட வில்லையே எனக்கு
உனதுமூ லப்பிறப் பொன்றும் அறிந்திலன்
எங்கிருந் தொட்டினாய் என்னில்வெம் பூதமே?
எங்கிருந் திங்குவந் திழிந்தைதீப் பிராணியே?
கடித்திடு தற்கும், வதைத்திடு தற்கும்,
உண்டிடு தற்கும், உடன்மெல் தற்கும்,
கர்த்தர் படைத்த கடும்நோய் நீயா?
இறைவன் ஆக்கிய மரணமே நீயா?
வெறுமனே மனிதரால் விளைந்ததோர் செய்கையா?
யாரோ செய்து யாரோ கொணர்ந்ததா?
கூலிக் கிங்கே கொணரப் பட்டதா?
செறிகா சுக்காய்ச் செய்தஏற் பாடா?

கர்த்தர் படைத்த கடும்நோய் நீயெனில்,
இறைவன் ஆக்கிய மரணமே என்றால்,
எனது கர்த்தரை இனிநான் நம்புவேன்
எனது இறைவனை இனிநான் நோக்குவேன்
ஆண்டவர் கைவிடார் அமைந்தநல் லோரை
கர்த்தர் இழந்திடார் காணுநன் நெறியரை.

வெறுமனே செயப்படும் விழற்செயல் எனில்நீ
பிறிதெவ ரோபுனை பிரச்சினை யானால்
உன்இனம் நிச்சயம் உடன்நான் அறிவேன்
எங்குநீ பிறந்தாய் என்பதை அறிவேன்.

அங்கிருந் தேதான் அடைந்தன துயரம்
அங்கிருந் தேதான் ஆயின துன்பம்
சூனியம் கற்ற மானிடத் திருந்து
மந்திரப் பாடல்சேர் மற்றிடத் திருந்து
தீயோர் வாழும் செறிஇல் இருந்து
மந்திர வாதிகள் மானிலத் திருந்து
புன்மர ணப்புவிப் புல்வெளி யிருந்து
பூமியின் கீழுறும் புனலிடத் திருந்து
இறந்த மனிதரின் இருப்பிடத் திருந்து
மறைந்தோர் தோட்ட வளர்நிலத் திருந்து
சொரிந்து போகும் தூர்மண் ணிருந்து
குழம்பிப் போகும் வளப்புவி யிருந்து

சுழன்றுமா றும்சிறு தொடர்கற்க ளி(லி)ருந்து
சலசலக் கும்சிறு தனிமண லிருந்து
நிலைதாழ் சதுப்பு நிலத்தினி லிருந்து
திகழ்பா சியி(ல்)லாச் சேற்றினி லிருந்து
பெருகிடும் சேற்றுப் பெருநிலத் திருந்து
அடர்ந்துபாய்ந் தோடும் அருவியி லிருந்து
காட்டுப் பூதக் கடுங்குகை யிருந்து

ஐந்து மலைகளின் வெம்பிள விருந்து
செப்பு மலைகளின் செறிசரி விருந்து
செப்பு மலைகளின் உச்சியி லிருந்து
தாம்முணு முணுத்திடும் தாருவி லிருந்து
பெருமூச் செறியும் பசுமரத் திருந்து
உழுத்(த)தேவ தாருவின் உச்சியி லிருந்து
சிதைந்த தாருவின் திகழ்முடி யிருந்து
நரிகள்தாம் கத்தும் நவிலிடத் திருந்து
காட்டேறு வேட்டைக் கனதடத் திருந்து
மண்ணிறக் கரடியின் கற்குகை யிருந்து
கரடியின் பாறை வசிப்பிடத் திருந்து
வடநிலத் தூர எல்லையி லிருந்து
லாப்புவின் அகன்ற நிலப்பரப் பிருந்து
வெறும்புல் புதரிலா விரிவெளி யிருந்து
விதைக்கப் படாத விழல்நிலத் திருந்து
கடிய பெரும்போர்க் களங்களி லிருந்து
மனிதர் கொலையுறும் வல்லிடத் திருந்து
சரசரத் திடும்புல் சார்இடத் திருந்து
இரத்த மோடும் இரணங்க ளிலிருந்து
பாரிய கடல்நீர்ப் பரப்பினி லிருந்து
திறந்த கடல்அகல் செறிபரப் பிருந்து
கடலின் கருமைக் கருஞ்சேற் றிருந்து
பல்லா யிரமடி படிதாழ் விருந்து
நீடுபாய்ப் பயங்கர நீரூற் றிருந்து
புகைந்துபாய் நீர்ச்சுழிப் புதைவுக ளிருந்து
மிகுவலு உறுத்தியா வீழ்ச்சியி லிருந்து
நீடிய சக்திசேர் நீரோட்டத் தினால்
பரந்தசொர்க் கத்துமேற் பக்கத் திருந்து
நற்கவி **நிலையுறு முகில்மறு புறத்தால்
குளிர்கால் வீசிடும் நளிர்வழி யிருந்து
தொடர்முகிற் கூட்டத் தொட்டிலி லிருந்து.

நீயும்அங் கிருந்தோ நேராய் வந்தனை?
வந்தனை சித்திர வதையாங் கிருந்தோ?
ஏதமில் எனது இதயத் துள்ளுற
மறுபழு தற்றஎன் வயிற்றினுள் நுழைய
உண்ணுவ தற்கும் உறமெல் வதற்கும்
கடித்திடு வதற்கும் கிழித்திடு வதற்கும்?
பூத வேட்டைநாய், பெறுபெறு அமைதி!
நீள்மாய் வுலகின் நீசனே, நாயே!
என்னுடல் விட்டு இறங்குபோக் கிரியே!
இகக்கொடும் பிராணியே, ஈரல்விட் டிறங்கு
உண்பதை விட்டென் உட்புற இதயம்
கிடக்கும்மண் ணீரல் கிழிப்பதை விட்டு
நேரும்என் வயிறு நிறைப்பதை விட்டு
சேர்சுவா சப்பை திருகுதல் விட்டு
விரும்பித் தொப்புள் மெல்வதை விட்டு
இருக்கும் குடல்களை இறுக்குதல் விட்டு
உறுமுது கெலும்பை உடைப்பதை விட்டு
தொடும்என் பக்கம் துளைப்பதை விட்டு.

மீளா விடில்ஒரு மனிதனின் விறலில்நான்
சிறந்த முறைகளைத் தெரிந்துகை யாள்வேன்
இந்தச் சிக்கலை இனித்தீர்ப் பதற்கு
இந்தப் பயங்கர இழிதுயர் ஒழிக்க.

எழுப்புவேன் புவியிருந்(து) இகல்மண் மகளிரை
அழைப்பேன் வயலிருந்(து) அரும்எச மானரை
அனைத்து வாள்வீரரும் அகல்நிலத் திருந்து
மாபரி வீரரை மண்மிசை யிருந்து
என்பலத் துக்கும் என்சக் திக்கும்
என்பாது காப்பு என்உத விக்கும்
இப்போ(து) நான்உறும் இன்னலுக் காக
கூடிடும் இந்தக் கொடியநோ வுக்காய்.

அப்போது(ம்) இத்துயர் அகலா விட்டால்
அதனால் கொஞ்சமும் அகன்(று)மா றாவிடில்
உன்மக்க ளுடனே உடன்எழு, காடே!
சூரைச் செடிகளே தொடர்நும் சனத்துடன்
தேவதா ருவேநின் திருக்குடும் பத்துடன்
தங்கு(ம்)ஏ ரியேநின் தகுபிள் ளைகளுடன்
ஒருநூறு மனிதர்கள் ஓங்குவாள் களுடன்
ஆயிரம் இரும்பு அடல் வீரர்களும்
இப்பூ தத்தை இங்கே ஒழிக்க
**இக்கொடும் பிராணியை இங்கே நசுக்க.

அப்போது(ம்) இத்துயர் அகலா விட்டால்
அதனால் கொஞ்சமும் அகன்(று)மா றாவிடில்
நீரின் தலைவியே, நீரிலிருந் தெழு!
நீலத் தொப்பிநீர் அலையிருந் துயர்த்து
சிறந்தஆ டைகளுடன் சேற்றினி லிருந்து
ஊற்றினி லிருந்துஓ, அழகிய உருவே!
இச்சிறு வீரனின் இகல்பலத் துக்காய்
சிறியஇம் மனிதன் பெறுகாப் பாக
காரண மின்றியான் கடிது(ண்)ணப் படுகிறேன்
கொடுநோ யின்றிநான் கொல்லப் படுகிறேன்.

அப்போது(ம்) இத்துயர் அகலா விட்டால்
அதனால் கொஞ்சமும் அகன்(று)மா றாவிடில்
எழிலார் பெண்ணே, இயற்கை மங்கையே!
பொன்னின் அழகு பொலியும் நங்கையே!
முழுப்பெண் களிலும் முதிர்ந்தவள் நீயே!
அனைத்(து)அன் னையரிலும் அதிமுதிர்ந் தோள்நீ!
இப்போ(து) வந்துபார் என்துய ரத்தை
என்துயர் நாட்களைஇங்கிருந் தோட்டிட
தூரத்(து) அகற்றித் தொலைக்கஇவ் வின்னலை
வெந்நோ யிருந்துநல் விடுதலை தந்திட.

அப்போது(ம்) இத்துயர் அகலா விட்டால்
அதனால் கொஞ்சமும் அகன்(று)மா றாவிடில்

சுவர்க்கத் **துருவத்து மானிட முதல்வனே!
இடிமுகில் அதனின் எல்லையில் இருப்போய்!
தேவையாம் தருணம் தெரிந்திங் கெழுக!
அழைத்திடும் வேளையில் அரும்இவ் வழிவா!
தீயஇச் செயல்களைச் சேர்த்தே அகற்றிட
இந்தநோய்க் கொடுமையை இக்கணம் தீர்த்திட
அனல்உமிழ் அலகுறும் அரியவா ளுடன்வா
பொறிசிந்(தும்) அலகுறும் பொற்புவா ளுடன்வா.

புறப்படு அதிசயப் பிராணிஇப் போதிலே
படர்புவிக் கொடுமையே பயணம் முடிப்பாய்
இங்கே உனக்கு இடமெது மில்லை
உனக்கிட மொன்று உடன்தே வைப்படின்
இல்லம் வேறு இடத்தே மாற்றுவாய்
வசிப்பிடம் மாற்றுவாய் மற்றெங் காயினும்
உன்எச மானன் உகந்தமர் இடத்தே
நின்எச மாட்டியின் நடைநிகழ் இடத்தே.

அந்த இடத்தைநீ அடைந்திடும் பின்னர்
உனது பயணம் உடன்முடி வானபின்
உன்னைப் படைத்தவன் உள்ள இடத்திலே
உன்னை ஆக்கியோன் உறையும் இடத்திலே
அங்குவந் ததற்கோர் அடையா ளம்மிடு
சார்ந்த(தற் கி)ரகசியச் சைகையைக் காட்டு
அடையா ளம்மிடு அதிர்இடி முழக்கமாய்
மின்னலாய் மின்னி வெளியிடு சைகையை
தோட்டக் கதவைத் தொட்டுவீழ்த் துதைத்து
சாளரக் கதவைத் தான்தகர்த் தெறிந்திடு
பின்னர்அங் கிருந்து பெயர்ந்துள் நுழைவாய்
புயற்காற் றுப்போல் போய்ப்புகு வீட்டினுள்
உறுதியாய்ப் பாதம் ஊன்றுவாய் நிலத்தில்
ஊன்றியே நிற்பாய் உன்சிறு குதிக்கால்
உன்எச மானரை ஓட்டுமூ லைக்கு
எசமாட் டிகளை இயல்கடை நிறுத்து
காண்எச மான்களின் கண்களைத் தோண்டு
அடித்து நொருக்கெச மாட்டிகள் தலைகள்
வளைத்திடு எதிர்ப்புறம் வரும்அவர் விரல்களை
சென்னிகள் முறுக்கித் திருகித் திருப்பு.

செயல்இதன் விளைவு சிறிதாய் இருந்தால்
வேலாய் மாறித் தெருமிசைப் பறப்பாய்
கோழியாய் மாறிக் கொண்டுசெல் தோட்டம்
குப்பை மேட்டினைக் குறுகிடு நேராய்
தொழுவத்து நிற்கும் துரவம் துரத்து
கொம்புள விலங்கைக் கொள்தொழு விட்டு
சாணக் குவியலில் தாழ்த்திடு கொம்புகள்
வால்களைச் சிந்தி வன்தரை போடு
கோணலாய் வளைத்துக் கூர்விழி திருப்பு
கழுத்தைத் திடீரெனக் கடிதே முறித்திடு.

காற்றுக் கொணர்ந்த கடுநோய் நீயெனில்,
காற்று கொணர்ந்தால், கதிபுனற் பிறந்தால்,
வசந்தக் காற்று வழங்கி இருந்தால்,
குளிர்வா யுவொடு கூடிவந் திருந்தால்,
புறப்பட் டுச்செல் புணர்காற் றுவழி!
வசந்தக் காற்றின் வழிசறுக் கிச்செல்!
ஒருமரத் தேறி உட்கார்ந் திடாமல்,
பூர்ச்ச மரத்தில் போய்ஓய் வுறாமல்,
செப்பு மலைகளின் சிகரத் தினையடை!
செப்பு மலையின் முகட்டுக்குச் செல்!
தாலாட் டட்டும் தவழ்காற் றாங்கே
சீராட் டட்டும் செறிகுளிர் காற்றுனை.

சுவர்க்கத் திருந்துநீ தொடவந் திருந்தால்,
பாங்குயர் முகிலின் பரப்பினி லிருந்து,
சுவர்க்கம் நோக்கி தொடர்ந்தெழு மீண்டும்!
அந்தவா னத்தின் அதியுய ரம்செல்!
மழைத்துளி சொட்டும் வான்முகி லிடைச்செல்!
கண்ணைச் சிமிட்டும் விண்மீ னிடைச்செல்!
அங்கே நெருப்பாய் ஆர்ந்தே எரிந்துபோ!
பறந்துபோய் மின்னிப் பொறிகளாய்ச் சிந்து!
சூரியன் வலம்வரும் தொடர்பா தையிலே
சந்திர வட்டம் தான்சுழல் வீதியில்!

நீர்கொணர் தீமையாய் நீயே இருந்தால்,
கடலலை விரட்டிக் கலைத்ததே யென்றால்,
சிறுமையே மீண்டும் சென்றிடு நீருள்!
ஆழ்கடல் அலையின் அடித்தளம் செல்க!
சேற்றினால் கட்டிய கோட்டையுள் செல்க!
அமர்ந்திரு அலைகள் அமைத்த தோள்களில்!
அங்கே உன்னை அலையுருட் டட்டும்!
தாலாட் டட்டும் தவழ்இருள் நீர்உனை!
மாய்நிலப் புல்வெளி வழிவந் திருந்தால்,
மறைந்தோர் முற்றாய் வதிவிடத் திருந்தெனில்,
இல்லம் திரும்பநீ எடுத்திடு முயற்சி!
அம்மர ணப்புவி அகல்தோட் டவெளி!
அந்தச் சொரிந்துபோம் அகல்மண் ணுக்கு!
அந்தக் குழம்பிடும் ஆழ்பூ மிக்கு!
மக்கள்வீழ்ந் திருக்குமம் மறுஇடத் துக்கு!
அந்தமா வீரன் அழிந்தபா ழிடத்தே!

இங்கே யிருந்துவந் திடில்தீச் சக்திநீ,
கானகப் பூதக் கருங்குகை யிருந்து,
வளர்தேவ தாருவின் மறைவிடத் திருந்து,
பசுமை மரங்களின் பகுதிக ளிருந்து
அங்குனைத் துரத்தி அகற்றியே வைக்கிறேன்
கானகப் பூதக் கருங்குகை களுக்கு
பசுமை மரங்களின் பகுதிக ளுக்கு
வளர்தேவ தாருவின் மறைவிடங் களுக்கு
நீஅங் கேயே நீடுதங் கிடுக!

நிலத்துப் பலகைகள் உழுக்கும் வரையில்,
சுவரில் காளான் முளைக்கும் வரையில்
முகடு இடிந்து முன்விழும் வரையில்.

அங்குனைத் துரத்தி அகற்றியே வைக்கிறேன்
அங்குனை விரட்டுவேன் அதிதீச் சக்தியே!
கிழட்(டு)ஆண் கரடியின் கீழ்வதி விடத்தே!
பெண்கிழக் கரடியின் பெருந்தோட் டத்தே!
ஆழ்ந்த சேற்றுத் தாழ்நிலத் துக்கு!
உறைந்த சதுப்பு உவர்நிலத் துக்கு!
நகர்ந்துசெல் சேற்று நனைகிடங் குக்கு!
நெடிதுபாய்ந் தோடும் நீரரு விக்கு!
மீனே இல்லா வெறுங்குளங் களுக்கு!
நன்னீர் **மீனிலா நளிர்நீர் நிலைக்கு.
அங்கே **உனக்கிட மதுகிடைக் காவிடில்
இங்குனைத் துரத்தி இதோவிலக் குகிறேன்
அதாவது வடக்கு அருந்தொலை வெல்லைகள்!
லாப்புவின் பரந்த இடங்கள் அவைக்கு!
விரிபுல் புதரிலா வெறும்நிலங் களுக்கு!
உழுது விதைபடா துளநிலங் களுக்கு!
இரவி, சந்திரன் இலாநிலங் களுக்கு!
பகலொளி என்றும் படாஇடங் களுக்கு;
அங்குநீ வாழ அடைந்தாய் பாக்கியம்
நீஅங் கிருக்க நேர்விருப் புறுவாய்,
தொங்குகின் றனமரந் தோறும் எருதுகள்
கொலையுணப் படுவன கலைமான் ஆங்கெலாம்
பசியுறும் மனிதர் பாங்குறப் புசிக்க!
விரும்பியோர் அவற்றை விருப்பொடு கடிக்க!

அங்குனைத் துரத்தி அகற்றியே வைக்கிறேன்
அதையுனக் கியம்பி ஆணை இடுகிறேன்
உறுத்தியாப் பயங்கர உயர்வீழ்ச் சிக்கு!
நெடும்புகை கிளம்பும் நீர்ச்சுழி களுக்கு!
அவற்றில் மரங்கள் அவைவீழ்ந் திருக்கும்
தேவதா ருருண்டு திசைவரும் வேரொடு
சுழன்றுவந் திடும்பசும் அடிமரத் துண்டுகள்
சடைத்திடு (முடித்)தேவ தாருறும் முடியுடன்
கெட்டஅஞ் ஞானியே கிடந்துநீந் திடுக
நுரைத்துறப் பாய்ந்திடு நுவலுநீர் வீழ்ச்சியில்
சுற்றிச் சுழன்றகல் துரிதநீர்ப் பரப்பில்
குறுகிய நீரதன் செறிவதி விடத்தில்.

அங்கே உனக்கிடம் அதுகிடைக் காவிடில்
இங்குனைத் துரத்தி இதோவிலக் குகிறேன்
அதாவது துவோனியின் கரும்ஆற் றினிடை!
மரணத்து உலகதன் அழிவற்ற அருவிக்கு
அங்கிருந் துன்னால் அகன்றிட முடியா(து)
மிகுவாழ் நாளெலாம் வெளிவர முடியா(து)
உன்னைநா னாகவே உறவிடு(வி)க் காவிடில்,
வந்துநான் விடுதலை வழங்கா விடினே,

ஒன்பது செம்மறி உயர்கடா வுடன்வந்(து)
ஒன்பதும் ஒற்றைநன் மறியே ஈன்றது,
ஒன்பது எருத்துநல் லுயர்மாட் டுடன்வந்(து)
ஒன்பது மொற்றை உயர்பசு ஈன்றது,
ஒன்பது நல்லாண் உயர்பரி கொடுவந்(து)
ஒன்பது மொற்றைப் பெண்பரி ஈன்றது.

பயணிக்க வசதி படருநின் தேவையேல்,
பயணிக்க நல்ல பரிவேண்டு மேயெனில்,
திண்ணமாய்ப் பயண வசதிநான் செய்வேன்
பயணிக்க நானே பரியினைத் தருவேன்
பூதத் திடம்நற் புரவியொன் றுண்டு
வாய்த்தசெஞ் சடையுடன் மலையிலே உள்ளது
அதன்வா யிருந்து அக்கினி வெளிவரும்
மூக்கினி லிருந்து மூள்கனல் வெளிவரும்
அதன்குதிக் கால்கள் ஆனவை இரும்பால்
அவைகள் உருக்கினால் ஆனவை மேலும்
அதனால் முடியும் அவைமலை ஏறல்
பள்ளத் தாக்கிடைப் படரவும் முடியும்
நற்பரி வீரன் இத்தலத் திருந்தால்
திறமாய்ச் சவாரி செய்பவன் என்றால்.

இதுவும் போதா தின்னமு மென்றால்
பூதம் சறுக்கும் பொருட்களை எடுப்பாய்
பிசாசின் மரத்துச் சறுக்கணி பெறுவாய்
தடித்த சறுக்குத் தண்டும் உள்ளது
பூத நாட்டினிற் போய்ச்சறுக் கிடற்கு
பிசாசின் தோட்டம் பெரிதும் சுற்றிட
பூத நாட்டினில் புகுந்து விரைந்திட
தீயவன் இடத்தில் சென்று திரிந்திட;
பாதையின் குறுக்கே பாறையொன் றுண்டு
அதனைத் துகள்துகள் ஆகநொ ருக்கு
ஒருமரக் கட்டை யுள்ளது வழியில்
உடைத்துப் போடுஉடன் அதை இரண்டாய்
பாதை நடுவிலோர் வீரன் உள்ளனன்
அவனையோர் கரைக்கு அனுப்பி வைத்திடு.

எழுக, சோம்பலோய், இப்பொழு துன்வழி,
பொல்லா மனிதனே, போ,நகர்ந் தேகுக,
பொழுது உதித்துப் புலர்வதன் முன்னர்
விடியற் கடவுளின் விடிவின் முன்னர்
எறிகதி ரோன்மேல் எழுவதன் முன்னர்
சேவலின் கூவல் செவிப்படு முன்னர்.
இதுவே சோம்பலன் எழுந்துசெல் நேரம்
பொல்லாப் பிராணியின் புறப்படு நேரம்
நடப்பதற் குளது நற்சந் திரஒளி
வெளிச்சமும் உளது வெளிச்சென் றுலவ.

விரைந்துநீ விலகி வெளிச்செலா விட்டால்
தாயிலா நீசநீ தான்புறப் படாவிடில்

நகங்களைப் பெறுவேன் நான்ஒரு கழுகிடம்
உதிரம் குடிப்பதன் உகிர்களைப் பெறுவேன்
ஊன்அயில் பறவையின் உகிர்களைப் பெறுவேன்
பற்றித் தூக்கும் பருந்தின் அவயவம்;
இவற்றால் பற்றுவேன் எளியபோக் கிரிகளை
நிறுத்துவேன் தடுத்து நிமிர்தீச் சக்தியை
திருப்ப முடியா திருக்கும் அதுதலை
மூச்சை விடவும் முடியா திருக்கும்.

**முற்படைப் பாம்பேய் முடிவுற நேர்ந்தது
அன்னை யிலாமகற் கழிவும் வந்தது
கடவுளின் விடிவுறும் காலம் வருகையில்
கர்த்தரின் உதவி கைமேற் கிடைக்கையில்;
அன்னையின் பிறவியே அழிந்துபோ காயோ
செயற்கைப் பிராணிநின் செயல்நிறுத் தாயோ
எசமான் இலாநாய் இனிமறை யாயோ
தாயிலா நீசநீ தான்புறப் படாயோ
இம்மணித் தியாலம் இதுமுடி வதனுள்
திகழ்இச் சந்திரன் தேய்வதற் குள்ளே."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பின னப்போ(து)
"இங்கே இருப்பது எனக்கு நல்லது
இங்கே வசிப்பது இனிமை யானது
எனக்கு ரொட்டியாய் ஈரல் இருக்கும்
உண்ணக் கொழுப்பும் உண்டு அதனுடன்
உளசுவா சப்பை உண்டிட வறுத்து
கொழுப்பும் அதனுடன் கொள்இத உணவு.

எனது பட்டடையை இங்கே அமைக்கிறேன்
ஆகும்உன் இதய ஆழப் பகுதியில்
அடிப்பேன் கடுமையாய் அடர்சுத் தியலால்
இன்னும் நொந்துபோய் இருக்கு(ம்)வே றிடங்களில்
என்றுமே விடுதலை இல்லை உனக்கு
உன்வாழ் நாளில் என்றுமே யில்லை
நாடும்அச் சொற்களை நான்கேட் காவிடில்
விரும்பிய மந்திரம் பொருந்த வராவிடில்
போதிய சொற்களை நேரிற் பெறாவிடில்
மந்திரம் ஆயிரம் ஆயிரம் வராவிடில்.
மந்திரச் சொற்களை மறைத்தல்ஆ காது
பகர்மந் திரமொழி பதுக்குதல் ஆகா(து)
நிலத்துக் கடியிலே புதைத்தலும் ஆகா(து)
மந்திர வாதிகள் மறைந்துபோ னாலும்."

அப்போ(து) பாடல்கள் அகம்நிறை விபுனன்
வார்த்தைகள் நிறைந்த மாமுது மனிதன்
வாயிலே மாபெரும் மந்திர அறிவுளோன்
மார்பிலே அளவிலா மறத்திற லுடையவன்
சொற்கள் இருந்த பெட்டகம் திறந்தான்
பெருமந் திரச்சொல் பெட்டியைத் திறந்தான்

நல்ல பாடல்கள் நனிசில பாட
சிறந்த மந்திரச் செம்பா இசைக்க
பாடிடப் படைப்பின் மூலத்(து) ஆழம்
பாடிடக் காலத்(துத்) தொடக்க(த்து) மந்திரம்
இவைஎ(ல்)லாப் பிள்ளையும் இசைக்கும் பாட்ட(ல்)ல
வீரர்கள் மட்டுமே விளங்கும் பாட்டிவை
தீமைகள் நிறைந்தஇத் தீயநாட் களிலே
வாழ்வே முடிவுறும் வறுங்கடை நாட்களில்.
படைப்பின் மூலத்(து) ஆழம் பாடினான்
மந்திர சக்தியை வலுவொழுங் கிசைத்தான்
கர்த்தர் மொழிந்த கட்டளை யாலும்
அனைத்தும் வல்லோன் ஆணையி னாலும்
பெருவான் தானாய்ப் பிறந்ததைப் பாடினான்
பெருவிண் இருந்துநீர் பிரிந்தது எவ்விதம்
நிலம்வந்(த) தெவ்விதம் நீரிலே யிருந்து
நிலத்தில் சகலதும் நேர்ந்தது எவ்விதம்.
நிலவுக்(கு) உருவம் நேர்ந்ததைப் பாடினான்
படர்கதிர் நிறுவப் பட்டதைப் பாடினான்
நெடுவான் தூண்கள் நிறுத்தப் பட்டதை
நீள்விண் மீன்கள் நிறைக்கப் பட்டதை.

அதன்பின் பாடல்கள் அகம்நிறை விபுனன்
பாடினான் உண்மையாய், பாடினான் முடிந்ததை,
பார்த்ததோ கேட்டதோ என்றும்இப் படியி(ல்)லை
என்றைக்கு மேயிவ் விரும்புவி நாட்களில்
இத்தனை சிறந்ததோர் இனியநற் பாடகன்
இத்தனை திறனுடை இனியதோர் நிபுணனை;
வாயிலே யிருந்துநேர் வார்த்தைகள் கொட்டின
நாவிலே யிருந்துசொற் றொடர்நனி பெருகின
விரைபரிக் குட்டியின் வியன்கால் போலவும்
பாய்ந்திடும் குதிரையின் பாதம் போலவும்.

அந்தமில் பலநாள் அவனும் பாடினான்
அவ்விதம் இரவுகள் அனைத்தும் பாடினான்
பாடலைக் கேட்கப் பகலவன் நின்றனன்
நின்றே தங்க நிலவும் கேட்டது
அலைகள்நீர்ப் பரப்பில் அசையா நின்றன
அவ்விதம் கரையிலும் அலைகள் நின்றன
அருவிகள் ஓடா(து) அமைந்தே நின்றன
நிமிர்ந்துரை உறுத்தியா நீர்வீழ்ச்(சி) நின்றது
வுவோக் சிநீர் வீழ்ச்சிப் பாய்ச்சலும் நின்றது
அவ்விதம் *யோர்தான் ஆறதும் நின்றது.

முதிய வைனா மொயினனப் போது
மந்திரச் சொல்செவி வாங்கிய தாலும்
சொற்கள்போ தியன பெற்றத னாலும்
விரும்பிய சொற்களை அடைந்தத னாலும்
புறப்பட வெளிவரப் புந்தியில் நினைந்தான்
அந்தரோ விபுனன் அகல்வா யிருந்து
வார்த்தைகள் நிறைந்தவன் வயிற்றினி லிருந்து

மந்திர அறிஞனின் மார்பிலே யிருந்து.

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"ஐயகேள் ஓஓ, அந்தரோ விபுனனே,
வாயை இன்னும் வலுபெரி தாய்த்திற
அலகை இன்னும் அகலத் திறந்திடு
வருவேன் புவிஉன் வயிற்றினி லிருந்து
புறப்பட்டு வீட்டினை நோக்கிப் போவேன்."

அப்போது பாடல்கள் அகம்நிறை விபுனன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"உண்டதும் அனேகம் குடித்ததும் அநேகம்நான்
ஆயிரக் கணக்கில் அழித்ததும் உண்டு
ஆயினும் என்றும் அயின்றதே யில்லை
முதிய வைனா மொயினனை உ(ண்)ணல்போல்;
நீவந்த போது நேராய் நடந்தனை
சிறப்புறச் செய்கநீ செல்லும் போதே."

அப்போ(து) அந்த அந்தரோ விபுனன்
இளித்துத் தன்முர செடுத்துக் காட்டினான்
இன்னும் பெரிதாய் இரும்வாய் திறந்தான்
அலகினை மேலும் அகலமாய் வைத்தான்;
முதிய வைனா மொயினன் அவனே
மாபெரும் அறிஞன் வாய்வழி வந்தான்
வார்த்தைகள் நிறைந்தவன் வயிற்றினி லிருந்து
மந்திர அறிஞனின் மார்பிலே யிருந்து;
வாயிலே யிருந்து வந்தவன் வெளியே
நின்றான் குதித்து நெடும்புற் றரைமேல்
அம்பொனில் ஆன அணிலதைப் போல
கிளர்பொன் நெஞ்சுடன் கீரியைப் போல.

அவனும் தன்வழி அதன்பின் சென்றான்
கொல்ல வேலைக் கொள்தளம் வந்தான்;
கொல்லன் இல்மரினன் கூறினன் அங்கே:
"மந்திரச் சொற்கள் வாய்க்கப் பெற்றதா
நச்சிய மந்திரச் சொற்கள் கிடைத்ததா
படகின் பக்கம் சரிவர இணைக்க
பின்னணி யத்தைப் பிணைத்து வைத்திட
வளைவுத் தட்டினை உயர்த்திப் பொருத்திட?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இப்போது நூறு சொற்களைப் பெற்றேன்
பெற்றேன் ஆயிரம் பேசுமந் திரவிதி
மறைவிடத் திருந்து வரவெளிக் கொணர்ந்தேன்
புதைவிட மிருந்து கொணர்ந்தேன் மந்திரம்."

படகு இருந்த பக்கம் சென்றான்
மந்திரச் சொற்கள் வாய்ந்தன நிறைவாய்
தன்பட கின்தொழில் தன்னையே முடிக்க

படகின் பக்கம் சரிவர இணைத்தான்
பின்அணி யத்தைப் பிணைத்துவைத் திட்டான்
வளைவுத் தட்டை உயரப் பொருத்தினான்
செதுக்கப் படாமலோர் புதுப்பட குதித்தது
சீவப் படாமலோர் செல்கலம் வந்தது.

கலேவலா

பாடல் 18 - வைனாமொயினனும் இல்மரினனும் வடநாடு செல்லுதல்

அடிகள் 1 - 40 : வடநாட்டு மங்கையின் உறவை விரும்பி வைனாமொயினன் தனது புதிய கப்பலில் பயணமாகின்றான்.

அடிகள் 41 - 266 : இல்மரினனின் சகோதரி அவனைக் கண்டு, கரையிலிருந்து அவனுடன் பேசி, அவனுடைய நோக்கத்தை அறிந்து, விரைந்து சென்று தன் சகோதரனிடம் ஒரு போட்டியாளன் வடநாட்டு மங்கையைப் பெறுவதற்குப் புறப்பட்டுவிட்டான் என்று கூறுகிறாள்.

அடிகள் 267 - 470 : இல்மரினன் ஆயத்தமாகித் தனது சறுக்கு வண்டியில் கடற்கரை வழியாக வடநாட்டுக்குப் புறப்படுகிறான்.

அடிகள் 471 - 634 : மணவாளர்கள் வருவதைக் கண்ட வடநிலத் தலைவி, வைனாமொயினனை மணம் முடிக்கும்படி தன் மகளுக்கு ஆலோசனை கூறுகிறாள்.

அடிகள் 635 - 706 வடநில மங்கையோ சம்போவைச் செய்த இல்மரினனையே மணமுடிக்க விரும்புகின்றாள். முதலில் அங்கு வந்து சேர்ந்த வைனாமொயினனிடம் அவனை மணம் முடிக்க முடியாது என்று அவள் கூறுகிறாள்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்
ஏந்திழை உறவை ஏற்பது பற்றி
பின்னிய குழலியை நண்ணிநோக் குதற்கு
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
செறிபுகார் நாடாம் சரியோ லாவில்
வடபால் நிலத்து வளர்புகழ் மங்கையை
வடக்கின் சிறந்த மணமக ளவளை.

நீல்நிறச் சோடனை நிகழ்த்திக் கப்பல்
பக்கம் சிவப்பு பதநிறம் பூசி
அணியம் பொன்னால் அலங்கரித் ததற்கு
வெள்ளியில் சாயமும் விரும்பித் தீட்டினான்;
காலைகள் கழிந்தொரு காலையும் வந்தது
வளரும் காலை வைகறைப் பொழுதில்
படகினைத் தள்ளிப் படிநீர் விட்டான்
பலகைநூ றமைந்த பட(கு)அலை யிட்டான்
மரப்பட்(டை) உருளையின் வயமதி லிருந்து
கமழ்தேவ தாருவாம் கட்டையி லிருந்து.

பாய்மரம் உயர்த்தி பாங்குற நிமிர்த்தி
பாயையம் மரத்திற் பார்த்தே கட்டினான்
சிவப்பு நிறத்திலோர் திகழ்பாய் கட்டினான்
இன்னொரு பாயை எழில்நீல் நிறத்திலே
கப்பலின் உள்ளே காலடி வைத்து
படகின் உள்ளே பக்குவ மாயமர்ந்(து)

பயண மாயினன் பனிக்கடல் மீது
நீல்நீர்ப் பரப்பில் நிகழ்த்தினான் பயணம்.

பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்
உரைத்தே அவன்தான் உரைசெய லாயினன்:
"இப்போ(து) கப்பலுக் கிறைவனே, வாரும்!
கருணையுள் ளவரே, கப்பலுக் கெழுந்திடும்!
சிறியஇவ் வீரனின் சீரிய சக்தியாய்,
சிறியஇம் மனிதனின் திகழுமாண் பலமதாய்,
அகன்று பரந்த இந்நீர்ப் பரப்பில்
பரந்து விரிந்த படரலை களின்மேல்.

காற்றே இந்தக் கப்பலை அசைப்பாய்
அலையே கப்பலை அசைத்துச் செலுத்து
வலிக்கப் படாமல் மற்றென் விரல்களால்
குழப்பப் படாமல் கொழுநீர்ப் பரப்பு
தெளிந்த கடலதன் செறிவிரி பரப்பில்
திறந்து பரந்த திகழ்நீர்ப் பரப்பில்."

*அன்னிக்கி யென்னும் அரும்பெய ருடையாள்
வளர்இரா நங்கை வைகறை வனிதை
கடன்அதி காலை கனபொழு தியற்றுவோள்
வைகறைப் பொழுதில் வளர்துயில் எழுபவள்,
அன்றுக முவும்தொழில் அவள்செய நேர்ந்தது
உடைகளைக் கழுவி உலரப் போட்டனள்
செந்நிறப் படிக்கட் டதன்சேர் முடிவில்
அந்த அகன்ற அதேநிலப் பரப்பில்
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள தீவதன் கரையில்.

பார்த்தனள் அங்கு, பார்த்தனள் திரும்பி,
நற்கால நிலையைச் சுற்றிலும் பார்த்தனள்
வாரியதலை மேல் வானம் பார்த்தாள்
கடலின் பக்கமாய்க் கரையைப் பார்த்தாள்
சூரியன் மேலே சுடர்ந்துகொண் டிருந்தது
மினுமினுத் திட்டன விரிகீழ் அலைகள்.

கடலின் பக்கமாய்க் காரிகை பார்த்தனள்
செங்கதி ரோன்கீழ் சென்னியைத் திருப்பினள்
பின்லாந்(து) நதிவாய் தன்நோக் குறுகையில்
வைனோ நாட்டுநீர் வளர்முடி வெல்லையில்
கறுத்ததோர் புள்ளியைக் கடலில் கண்டனள்
அலையில் நீலமாய் எதையோ கண்டனள்.

உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்
உரைத்தே அவள்தான் உரைசெய லாயினள்:
"என்னநீ கறுப்பாய் இருப்பது கடலிலே
யார்நீ நீல நளிர்நிறம் அலையிலே?
நீயொரு வாத்தின் நேர்கண மானால்
இனிய வாத்தின் குழுவாய் இருந்தால்

அப்படி யானால் அசைந்தெழு பற(ந்து)போ!
உயரமாய் வானின் உறுவெளி யதனில்!

கொழுவஞ் சிரமீன் கூட்டமா யிருந்தால்
கிளர்வே றினமீன் கிளையா யிருந்தால்
தெறித்தெழு நீந்திச் செல்லப் படியெனில்
நீருக் குள்ளே நேராய் விழுந்துசெல்!

நீயொரு பாறை நெடுங்கல் லானால்
கனைநீர் மிதக்கும் கட்டையா யிருந்தால்
முகிழ்அலை உன்னை மூடிச் செல்லும்
அகல்நீர் உன்னை அடித்துச் செல்லும்."

படகு சிறிதே பக்கம் வந்தது
பயணம் வந்தது படர்புதுக் கப்பல்
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள தீவதன் கரையில்.

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
படகு வருவதைப் பார்த்தனள் இப்போ(து)
பார்த்தனள் பலகைநூ றமைபட கசைவதை
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"நீஎன் சகோதரன் நேர்பட கானால்
அல்லது தந்தையின் அகல்கல மானால்
பயணம் வீட்டுப் பக்கமாய் மாற்று
பாதையைச் சொந்தஊர்ப் பக்கமாய்த் திருப்பு!
இத்துறை நோக்கி எழுமுன் னணியம்
பிறதுறை நோக்கி உறுபின் னணியம்.

அந்நியன் கப்பலே யாகநீ யிருந்தால்
செல்லுக வேறு திசையிலே நீந்தி
வேறு துறைப்பால் விரைகமுன் னணியம்
இத்துறை நோக்கி இயைகபின் னணியம்."

அவள்வீட் டுப்பட கதுவே யல்ல
காணுமோர் அந்நியன் கப்பலு மல்ல
அதுவே வைனா மொயினனின் கப்பல்
என்றுமே நிலைத்த பாடகன் கப்பல்;
அவளின் அருகை யடைந்தது கப்பல்
உரைசெய லுக்காய் ஊர்ந்தது அண்மி
ஒருசொல் சொல்ல இருசொல் லியம்ப
உரமாய் மூன்றாம் சொல்லை யுரைக்க.

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
வளர்இரா நங்கை வைகறை வனிதை
கப்பலை நோக்கிக் கேட்கத் தொடங்கினள்:
"எங்கே எழுந்தனை வைனா மொயினனே?
அமைதிநீர் மணமகன் ஆம்செல வெவண்கொல்?
ஆயத்த மானதெங்(கு) அரியநாட் டண்ணலே?"

முதிய வைனா மொயினனப் போது
கப்பலி லிருந்து கூறினான் இவ்விதம்:
"பெருவஞ்சிர மீன் பிடித்திட எழுந்தேன்
சினைக்கும் **மீனைச் சிறைப்பிடிப் பதற்காய்
துவோனியின் கறுப்புத் தொல்லாற் றிருந்து
அகல்*மர(ண) ஆற்றின் ஆழத் திருந்து."

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"சொல்லிட வேண்டாம் தொடர்வெறும் பொய்யே
மீனின் சினைத்தலை நானும் அறிவேன்
சத்திய மாய்என் தந்தையும் முன்னர்
உண்மையாய் எனது உயர்ந்தபெற் றோரும்
பெருவஞ் சிரமீன் பிடிக்கச் சென்றனர்
பெருநன் னீர்மீன் பிடிக்க முயன்றனர்
அவர்பட கார்ந்து அகல்வலை இருந்தன
கப்பல் நிறையக் கனபொறி இருந்தன
கைவலை இப்புறம் கயிறுகள் அப்புறம்
மறுபுறம் நீரில் வலிந்தடிக் கம்புகள்
குறுக்குப் பலகைகீழ் குத்திடும் ஈட்டிகள்
பின்னணி யம்நீள் பெரியகம் பங்கள்;
எங்கே எழுந்தனை வைனா மொயினனே
அமைதிநீர் மணமகன் ஆம்செல வெவண்கொல்?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"வாத்துகள் தேடிநான் வழிபுறப் பட்டேன்
மின்னும் சிறகுறும் வியன்புள் வேட்டை(க்கு)
*சக்ஸா நீரிணைத் தன்ஆழ் பகுதியில்
திறந்து பரந்த திகழ்நீர்ப் பரப்பில்."

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"உண்மை பேசும் ஒருவனை அறிவேன்
அசத்தியம் பேசும் ஆளையும் அறிவேன்;
சத்திய மாய்என் தந்தையும் முன்னர்
உண்மையாய் எனது உயர்ந்த பெற்றோரும்
வாத்துவேட் டைக்கு வழிசெலல் உண்டு
சிவந்தவாய்ப் பறவையைத் துரத்துவ துண்டு
அவர்பெரும் குறுக்குவில் அமையும் நாணுடன் அவர்வளைத் திடும்வில் அழகுடன் இலங்கும்
கறுத்தநாய் ஒன்றாங்(கு) கட்டியே யிருக்கும்
வங்கக் காலிலே வன்கட் டமைந்திடும்
கள்ளநாய் பலதெருக் கரையெலாம் ஓடும்
பாறையில் குட்டிகள் பலவிரைந் தேகும்
வைனா மொயினனே வாய்மையைச் சொல்வாய்
எங்குநீ பயணம் இப்போ(து) செய்கிறாய்?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"இங்கே செல்கிறேன் எனில்அதால் என்ன
அந்தப் பெரிய அடும்போர்க் கென்னில்
சமமா னோருடன் தான்பொரு தற்கெனில்

திகழ்கெண் டைக்கா(லி)ல் தெறிக்கக் குருதி
இரத்தம் முழங்கால் வரைக்கும் இருக்க?"

அன்னிக்கி மீண்டும் அதையே சொன்னாள்
ஈய மார்பினள் இயம்பினள் கடிந்தே:
"அறிவேன் போருக் காய்ச்செலல் பற்றி
முன்னர் தந்தைபோய் முயன்றபல் பொழுதில்
அந்தப் பெரிய அடுபோர் களுக்கு
சமமா னோருடன் தான்பொரு வதற்கு
மனிதர் தூற்றுவர் வலிப்பராம் தண்டு
ஆயிரம் மக்கள் அருகினில் இருப்பர்
முனைப்பாய் குறுக்குவில் முன்னணி யிருக்கும்
அலகுறும் வாள்கள் ஆசனத் தருகாம்;
சொல்வாய் உண்மை சொல்வாய் வாய்மை
நேர்மையைச் சொல்வாய் நெடும்பொய் யின்றி
எங்கே எழுந்தனை வைனா மொயினனே
எங்கே அமைதிகொள் இகல்நீர் மனிதனே?"

முதிய வைனா மொயினனப் போது
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"எனதுகப் பலுக்கு எழுந்தருள் பெண்ணே
எனது படகினுள் இனிவா மங்கையே
அந்த உண்மையை அப்போ துரைப்பேன்
பொய்யில் லாமல் புகல்வேன் நேர்மை."

ஆயினும் சொன்னாள் அன்னிக்கி ஒருசொல்
ஈய மார்பினள் இயம்பினள் கடிந்தே:
"காற்று உனது கப்ப(லி)ல்வீ சட்டும்
குளிர்கால் படகில் கூடவீ சட்டும்
கவிழ்த்துப் போடுவேன் கடிதுன் கப்பல்
முன்னணி யத்தை மூழ்கடித் திடுவேன்
அந்த உண்மைநான் அறிந்துகொள் ளாவிடின்
எங்கே(க) நினைத்தாய் எனஅறி யாவிடின்
உண்மைநீ சொல்வதை உடன்கேட் காவிடின்
பொய்யின் இறுதியைப் புரிந்துகொள் ளாவிடின்."

முதிய வைனா மொயினனப் போது
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நல்லதிப் போது நவில்வேன் உண்மை
பொய்யைச் சிறிதாய்ப் புகன்றது முண்டு
நங்கை ஒருத்தியை நாடிப் போகிறேன்
கன்னி ஒருத்தியை உன்னிப் போகிறேன்
இருள்நிறை வடபால் இயைநிலத் திருந்து
செறிபுகார் நாடாம் சரியொலா விருந்து
மனிதரை உண்ணும் வறுநாட் டிருந்து
இகல்வோர்க் கவிழ்த்து ஆழ்த்திடத் திருந்து."

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
வளர்இரா நங்கை வைகறை வனிதை
அந்த உண்மையை அறிந்த போதினில்

பொய்யிலா உண்மை புரிந்து கொண்டதும்
ஆடைகள் நீரில் அலம்பா திருந்தனள்
துணிகளை நீரில் தோய்க்கா திருந்தனள்
அகன்று பரந்தஅவ் விறங்கு துறையில்
செந்நிறப் படிக்கட் டதன்சேர் முடிவிலே
துணிகளை அள்ளித் தொடுகரத் தெடுத்தாள்
பாவ(ா)டை பொறுக்கிப் பைங்கரம் சேர்த்தாள்
அவ்விட மிருந்து அவள்நடந் தேகினள்
விரைந்து ஓடி வேகமாய்ச் சென்றனள்
கொல்லனின் வீட்டைக் குறுகினள் வந்து
வேலைத் தளத்தை மிதித்தடி வைத்தனள்.

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
பெரும்இரும் பாசனப் பீடம் அமைத்தான்
வெள்ளியால் அங்ஙனம் வேறொன் றியற்றினான்
அவன்தலை ஒருயார் அளவுதூ(சி) யிருந்தது
தோளில்ஆ றடியுயர் தூட்கரி யிருந்தது.

வாச(லி)ல் அன்னிக்கி வைத்தாள் காலடி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"சகோதர, கொல்ல, தகைஇல் மரின!
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞ!
ஒருதறி **(நூ)னாழி உடன்எனக் குச்செய்
விரலுக்குச் சிறந்த விதமோ திரம்செய்
இரண்டு மூன்று இடுகா தணிசெய்
ஐந்தா றிடுப்பு அணிசங் கிலிசெய்
ஏனெனில் உனக்கு இயம்புவேன் உண்மை
பொய்யே யில்லா மெய்யதைப் புகல்வேன்."

கொல்லன்இல் மரினன் கூறினன் இவ்விதம்:
"நீநற் செய்தியை நிசமாய்ச் சொன்னால்
ஒருதறி நூனாழி உனக்குச் செய்வேன்
சிறந்தமோ திரமே செய்வேன் விரற்கு
சிலுவையை நன்கே செய்வ(ன்)மார் புக்கு
தலைக்குத் தகுந்த தலையணி செய்வேன்;
தீய செய்திநீ செப்புவ தானால்
அனைத்துப் பழைய அணிகளும் உடைப்பேன்
அனைத்துன் அணியையும் அனலிடை எறிவேன்
எனதுலைக் களத்தில் இடுவேன் அடியில்."

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
மணக்க எண்ணிய மங்கையை நினைவாய்
வாக்களிக் கப்படு வனிதையை நினக்கு(முன்)
மனையாளாய் நினக்கு வரவிருந் தவளை.

என்றும் கருத்தாய் இருக்கிறாய் தொழிலில்
சுத்தியல் வேலையில் புத்தியா யிருக்கிறாய்

குதிரைக்(குக்) காலணி கோடையில் செய்கிறாய்
இரும்பிலே தொழில்தான் எக்குளிர் காலமும்
சறுக்குவண் டியிராப் பொழுதெலாம் திருத்துவாய்
பகலிலே வண்டியின் பாகங்(கள்) செய்கிறாய்
வாழ்க்கைத் துணையினை நோக்கியே சென்றிட
வடபால் நிலத்திடைப் பயணம் செய்திட;

உன்னிலும் சிறந்தோன் முன்னே செல்கிறான்
நுண்ணறி வுடையான் உன்னைமுந் துகிறான்
உனதுரித் தவளைத் தனதாக் கற்கு
உனதன் புடையளை தானடை (வ)தற்கு
எதிர்பார்த் திருந்தாய் இரண்டாண் டவளை
விரும்பி யிருந்தனை வேறுமூன் றாண்டுகள்;
வைனா மொயினன் வழிப்புறப் பட்டான்
நீல நிறத்து நீள்கடற் பரப்பில்
பொன்முன் னணியம் பூண்டநற் படகில்
செப்பின் துடுப்புகள் திகழும் படகில்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
செறிபுகார் நாடாம் சரியோ லாவில்."

மனத்துயர் வந்தது வன்கொல் லற்கு
இரும்புத் தொழிலோன் பெருந்துய ருற்றான்
பிடியினி லிருந்து கருவிகள் நழுவின
சுத்தியல் கரத்தினால் சோர்ந்தே விழுந்தது.
கொல்லன்இல் மரினன் கூறினன் இவ்விதம்:
"அன்னிக்கி, எனது அன்புச் சகோதரி!
ஒருதறி (நூ)னாழி உனக்குச் செய்வேன்
சிறந்த மோதிரம் செய்வேன் விரற்கு
இரண்டு மூன்று காதணி இயற்றுவேன்
ஐந்தா றிடுப்புச் சங்கிலி அமைப்பேன்
இன்குளிப் பறைக்கு ஏற்றிடு வெப்பம்
தேன்நிகர் சவுனா(வில்) ஆவி வரச்செய்
சிறிதாய்த் தறித்த விறகுகள் கொண்டு
சின்னஞ் சிறிய செறிகுச் சிகளால்;
சிறிதே சாம்பர் சேர்த்தே எடுப்பாய்
சாம்பர்நீர் கலக்கித் தனியாய் எடுப்பாய்
எனது தலையினை இனிதே கழுவிட
என்னுடல் அதனை வெண்மையா யாக்க
இலையுதிர் காலத்(து) இரும்கரி யிருந்து
உலைக்களக் குளிர்ப்பொழு துழைப்பினி லிருந்து."

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
இரகசிய வெப்பம் ஏற்றினாள் சவுனா
தொடர்கால் வீழ்த்திய சுள்ளிகள் கொண்டு
முழக்கம் சிதறி விழுவிற கதனால்
கற்களை எடுத்தாள் கனநீர் வீழ்ச்சியில்
அவற்றைநீ ராவி யாக்கக் கொணர்ந்தாள்
இனிய அருவியில் இருந்துநீர் கொணர்ந்தாள்
நீர்உகும் சதுப்பு நிலத்தினி லிருந்து
ஒரு**தூ ரிகையை உடைத்தாள் பற்றையில்

இலைக்கட் டாய்ந்து எடுத்தாள் சோலையில்
இன்னிலைக் கட்டை இயற்றினாள் மென்மை
தேன்நிகர் பாறை(யில்) திகழுமோர் உச்சியில்
சாம்பலைக் குழைத்துச் சவர்க்க(ா)ரம் செய்தாள்
எலும்பின் ஊன்போல இன்சவர்க் காரம்
நுரைக்க வல்லதாய்ச் சவர்க்க(ா)ரம் செய்தாள்
நுரைக்கும் நொதிக்கும் நுண்சவர்க் காரம்
மணமகன் தலையைக் குணமுறக் கழுவ
அவனுடல் ஊற்றி அழகாய்க் கழுவ.

அவனே கொல்லன் அவ்வில் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
பூவையும் விரும்பிய பொருட்களைச் செய்தான்
அவட்குச் சிறந்த அணிகளைச் செய்தான்
குளியற் குடிசையை முழுத்தயார் படுத்தையில்
ஆயத்த மாக்கையில் அச்சவு னாவை;
அவற்றைப் பெண்ணவள் அங்கையில் திணித்தான்
இந்தச் சொற்களில் இயம்பினள் ஏந்திழை:
"இப்போ(து) வெப்பம் ஏற்றினேன் சவுனா
நீராவிக் குடிசையை நெகிழ்சூ டாக்கினேன்
குளியல் தூரிகை முழுமெது வாக்கினேன்
இனியதூ ரிகையை எழிற்சீர் செய்தேன்;
வேண்டிய வரையும் மிகக்குளி சோதரா
வேண்டிய நீரெலாம் விரும்பிநீ ஊற்று
தலையினை நன்கு சணல்போல் கழுவு
விழிகளைப் பனிபோல் வெளுக்கக் கழுவு."

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
குளிப்பதற் காகக் குறுகினன் தானே
வேண்டிய மட்டும் விரும்பிக் குளித்தான்
வெளுக்கும் வரைக்கும் கழுவி முடித்தான்
மின்னும் வரைக்கும் கண்கள் கழுவினான்
சிறக்கும் வரைக்கும் புருவம் கழுவினான்
கோழியின் முட்டைபோல் கொள்கழுத் துறும்வரை
உடல்முழு வதுமே உறவெளுக் கும்வரை;
சவுனா வி(லி)ருந்து தான்வெளி வந்தான்
அடைய(ா)ளம் காணா அவ்விதம் வந்தான்
முகமெலாம் வெளுத்து முழுஅழ கமைந்தது
கன்னங்(கள்) சிவந்து கவினுற் றிருந்தன.

பின்வரும் மொழிகளில் பின்அவன் சொன்னான்:
"அன்னிக்கி, எனது அன்புச் சகோதரி!
சணல்மேற் சட்டையை சரிஇனிக் கொணர்வாய்!
தகுந்த உடைகளைத் தான்கொணர்ந் திடுவாய்!
அவற்றால் நானும் ஆயத்தம் ஆகிறேன்
மணவாள னாம்தகு மாண்புறு கின்றேன்."

அன்னிக்கி என்னும் அரும்பெய ருடையாள்
சணல்மேற் சட்டையைத் தானே கொணர்ந்தாள்
வியர்வையில் லாத அவன்தோ லுக்கு

ஆடையில் லாத அவனுட லுக்கு
அளவுகாற் சட்டையை அவளே கொணர்ந்தாள்
அன்னை தைத்தவை அவனுக் கவைகள்
மறுவில் லாத வளர்அவன் இடைக்கு
எலும்பு தெரிகிலா தியல்அவன் உடற்கு.

மென்மைக் காலுறை பின்னர் கொணர்ந்தாள்
கன்னிக்கா லத்து அன்னைபின் னியது,
உறுதிமிக் கவனது உயர்கால் களுக்கு
அவன்கெண் டைக்கால் ஆடுத சைக்கு;
அளவாம் பாதணி அவள்பின் கொணர்ந்தாள்
நேர்த்தியிற் சிறந்த ஜோர்மன்சப் பாத்து,
மென்கா லுறைகளை மிகநனி மூட
அன்னையின் இளமையில் அன்று பின்னியது;
நீலமே லாடை நேராய்க் கொணர்ந்தாள்
ஈரல் நிறத்தில் இயைந்தது பட்டி,
சணல்மேற் சட்டையின் மேலே அணிய
அதுநற் சணலால் ஆனது முற்றும்;
**வீட்டில்(பின்) தைத்த மேலங்கி நீண்டது
அகலப் பட்டிகள் அதுநான் குடையது,
நீல நிறத்துமே லாடையை மூட
இதுவோ புத்தம் புதியதாய் இருந்தது;
**ஆயிரம் தெறிபுத் தாடைகம் பளியில்
அலங்க(ா)ரம் நூற்றுக் கணக்கில் அமைந்தது,
வீட்டில் தைத்த மேலங்கி மேலே
அகலப் பட்டிகள் அமைத்துத் தைத்தது;
இதைவிட இடுப்புக் கிடுப்புப் பட்டி
அம்பொன் மின்னும் அலங்கா ரத்தொடு,
கன்னிக் காலத்(து) அன்னைபின் னியது
**எழிற்குழல் தலையொடே இருந்தகா லத்தில்;
பின்னர்கைக் கொளிரும் மென்கை யுறைகள்
பொன்வேலை செய்தது புணர்விரல் களுக்கு
லாப்பு லாந்தின் இளஞ்சிறார் செய்தவை
அழகிய கைகளில் அணிவதற் காக;
பின்னர் உயரப் பெறுநிமிர் தொப்பி
அவனது சுருண்ட அம்பொன் முடிக்கு
அவனது தந்தை அதைவாங் கியவர்
மாப்பி(ள்)ளை யாக மலர்ந்தபோ தினிலே.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
ஆடைகள் அணிந்து அவன்தயா ராகி
உடைகள் உடுத்து உயரழ குறுத்தி
அடிமையைப் பார்த்தே அவன்இதை இயம்பினன்;
"சேணம் பூட்டு இயல்பொலிப் பரிக்கு
வண்ணமார் சறுக்கு வண்டியின் முன்னே
நானே சவாரி நடாத்துதற் காக
வடபுல நிலத்தே நான்சென் றடைய."

அடிமை இந்தச் சொற்களில் சொன்னான்:
"எம்மிட முள்ளன **இருமுக் குதிரைகள்

**தானியம் தின்று தாமே கொழுத்தவை
இவற்றில் வண்டியில் எதனைப் பூட்ட?"

கொல்லன்இல் மரினன் கூறினன் இவ்விதம்:
"அவற்றில் சிறப்புமிக் கானதைக் கொணர்ந்து
சேணம் பூட்டு இயல்பொலிப் பரிக்கு
மண்ணிறப் பரிக்கு வண்டியின் முன்னே
கட்டுக **குயிலிசைக் கவின்அறு மணிகளை
கட்டுக **நீல்புட் கவினிசை எழுமணி
ஏர்க்கால் இருந்தவை எழுப்பிட ஓசை
பாதையின் வழியெலாம் படரமெல் லிசையே
அழகுளோர் நிமிர்ந்து அவற்றைநோக் கட்டும்
நயக்கட் டும்மதை நங்கையர் பார்த்து;
எடுத்து வருவாய் இகல்கர டித்தோல்
அமர்வதற் காக அதன்மேல் நானே
தொல்கடற் **பிராணியின் தோலையும் கொணர்வாய்
வளர்ஒளிச் சறுக்கு வண்டியை மூட."

ஓய்வே யில்லா ஒருவனவ் வடிமை
காசுக்கு வாங்கிய கூலித் தொழிலோன்
சேணம் பூட்டினன் திகழ்பரி கொணர்ந்து
மண்ணிறப் பரிக்கு வண்டியின் முன்னே
குயிலிசை அறுமணி கொணர்ந்தே கட்டினன்
நீல்புள் ளிசையெழு நிமிர்மணி கட்டினன்
ஏர்க்கால் இருந்தொலி எழுப்புதற் காக
பாதையில் மெல்லிசை படருதற் காக
உயர்கர டித்தோல் ஒன்று கொணர்ந்தான்
எசமான் அதன்மேல் இருப்பதற் காக
தொல்கடற் பிராணித் தோலையும் கொணர்ந்தான்
வளர்ஒளிர் சறுக்கு வண்டியை மூட.

அவனே கொல்லன் அவ்வில் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
மானிட முதல்வனை வணங்கினன் இவ்விதம்
முழக்கத் தலைவனை முறையே தொழுதனன்:
"புதிய பனிமழை பொழிமா(னிட) முதல்வனே
கீழே இறக்கு கிளர்சீர்ப் பனிமழை
பனிமழை வண்டி பாங்குறச் சறுக்க
வண்டி நழுவிட வருபுதுப் பனிமழை."

மானிட முதல்வன் மழைப்பனி பொழிந்தான்
சிறந்த பனிமழை செகக்கீழ் இறக்கினான்
மூடிய ததுபுதர் முழுச்செடித் தண்டை
மறைத்துநின் றதுநிலப் பழச்செடித் தண்டை.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
உருக்கா சனம்தான் உகந்தே அமர்ந்து
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"என்கடி வாளத்(து) இவர்ந்துசெல் அதிர்ஷ்டமே!

இறைவனே, அமர்வீர் எனதுவண் டியிலே!
என்கடி வ(ா)ளத்தை இற்றிடா ததிர்ஷ்டம்
எனது வண்டியை இறைவன் நொருக்கார்."

கடிவா ளத்தையோர் கையிற் பிடித்தான்
சாட்டையைக் கொண்டான் தன்மறு கையில்
வீசிச் சாட்டையால் வியன்பரி யடித்தான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"வெண்புரு வப்பரி, விரைந்தே செல்வாய்!
சணற்சடைப் பரியே, சரிநிகர்ந் தேகுவாய்!"

இலகுவாய்ப் பாதையில் இவர்ந்தே சென்றனன்
பயணம் செய்தனன் பரவைத் தரைமணல்
ஒலிமிகும் புற்றரை மலிதடம் சென்றனன்
சென்றனன் பூர்ச்ச மரம்செறி குன்றிலே
சலசலத் தேகினன் தனிக்கரை யோரம்
கடற்கரை மணலில் கலகலத் தேகினன்
கூழாங் கற்கள் கூர்விழிப் பறந்தன
மார்பில் கடல்நீர் வந்து தெறித்தது.

ஒருநாள் சென்றான் இருநாள் சென்றான்
மூன்றாம் நாளும் முன்விரைந் தேகினான்
மூன்றாம் நாளில் முடிந்ததும் பயணம்
வைனா மொயினனை வழியிற் கடந்தான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்
உரைத்தே அவன்தான்உரைசெய லாயினன்:
"ஓ,நீ, முதிய வைனா மொயின!
நட்புடன் படிக்கை நாம்ஒன் றமைப்போம்
அதாவது மணத்துக் காய்நாம் பொருதிடில்,
நங்கையை அடைய நாம்போட் டியிடில்,
பெண்பல வந்தமாய் பெயர்த்தெழல் இல்லை
அவள்நசைக் கெதிர்மணம் ஆவதும் இல்லை."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"நட்புடன் படிக்கை நான்ஒன் றமைப்பேன்
பெண்பல வந்தமாய் பெயர்த்தெழல் இல்லை
அவள்நசைக் கெதிர்மணம் ஆவதும் இல்லை,
அவனுக் கேபெண் அளித்திடல் வேண்டும்
அவனுக் கேஅவள் எவனை விரும்பிலும்,
வெறுப்பில் லாமல் மிகநீள் காலம்
பல்லாண் டகவை பகையில் லாமல்."

இருவரும் அவ்வழி ஏகிட லானார்
பயணம் செய்தனர் தத்தம் பாதையில்
கப்பல்ஓ டியது கரைஎதிர் ஒலித்தது
நிமிர்பரி விரைந்து நிலம்நடுங் கியது.

காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
கணநே ரம்சில கடந்தே முடிந்தது
நரைத்த நிறத்து நாயும் குரைத்தது

கோட்டைக் காவல்நாய் குரைத்திட லானது
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
செறிபுகார் நாடாம் சரியோ லாவில்;
முதலில் அதுவும் மெதுவாய்க் குரைத்தது
இடைவெளி யிட்டு இருந்துபின் குரைத்தது
பின்புறம் வயல்விளிம் பினிலே யிருந்து,
தவழ்ந்து குழைந்த ததன்வால் நிலத்தில்.

*வடநிலத் தலைவன் வருமா றுரைத்தான்:
"போய்ப்பார் மகளே, போவாய் நீயே!
ஏன்குரைக் கிறது இகல்நரை நிறநாய்?
உறுமு கிறதேன் உயர்நெடுஞ் செவிநாய்?"

பதிலொன் றுமகள் பகர்ந்தாள் திறமாய்:
"எனக்கு நேரமே இல்லையன் பெந்தையே
தொழுவம் பெரியது சுத்தமாக் கிடவுள(து)
கால்நடைப் பெருங்கணம் கவனிக்க வுள்ளது
தடித்த அரைகல் அரைத்திட வுள்ளது
நல்ல அரைத்தமா சலிக்கவே உள்ளது:
அரைகல் தடித்தது அரைத்தமா நல்லது
ஆயினும் பலவீன மானவர் அரைப்பவர்."

கோட்டைப் பிசாசு குரைத்தது மெதுவாய்
இடைவெளி விட்டே நரைநாய் குரைத்தது
வடநிலத் தலைவன் வருமா றுரைத்தான்:
"நீபோ, போய்ப்பார், நேர்முது பெண்ணே!
இகல்நரை நிறநாய் ஏன்குரைக் கிறது
உறுமு கிறதேன் உயரிய கோட்டைநாய்?

முதியவள் இந்த மொழிகளில் சொன்னாள்:
"எனக்கு நேரமே இல்லைஅக் கறையிலை
உணவூட்ட வுள்ளது உயர்பெருங் குடும்பம்
அதிகாலை யுணவு ஆக்குதற் குள்ளது
தடிப்புறும் ரொட்டிகள் தாம்சுட வுள்ளன
மாப்பசை யைப்பத மாக்கவே யுள்ளது;
தடித்தது ரொட்டி அரைத்தமா நல்லது
ஆயினும் பலவீன மானவர் சுடுபவர்."

வடநிலத் தலைவன் வருமா றுரைத்தான்:
"அவசரம் கிழவிகட் கதுஎப் போதுமே
மகளிர்க்கு வேலை மற்றெப் போதுமே
அடுப்பிலே ரொட்டிகள் அவைசுடும் போதும்
படுக்கையில் நீட்டிப் படுத்திருக் கையிலும்
போய்ப்பார் மகனே, போவாய் நீயே!"

இந்தச் சொற்களில் இயம்பினன் மகனும்:
"எனக்கு நேரமே இலைப்போய்ப் பார்க்க
தீட்டிட உள்ளது மொட்டையாம் கோடரி
தடித்த கட்டைகள் தறிப்பதற் குள்ளன
பிளப்பதற் குள்ளது பெரும்செறி விறகு

கிழித்த விறகுகள் குவிக்கவும் உள்ளன;
தொடர்குவை பெரியது **சுள்ளிகள் நல்லன
ஆயினும் பலவீன மானவர் பிளப்பவர்."

கோட்டைநாய் தொடர்ந்து குரைத்திட லானது
கோட்டைநாய் குரைத்துக் கொண்டே யிருந்தது
கொடிய நாய்க்குட்டி குரைத்தது பலமாய்
செய்தது முறையீடு தீவின் காவல்நாய்
அகல்வாய் தொட்டது அதன்பின் புறமே
வாலோ சுருண்டு வளைந்தே இருந்தது.

வடநிலத் தலைவன் வருமா றுரைத்தான்:
"காரண மின்றிக் **கதநாய் குரையா(து)
வியன்முது மனிதர் வெறுங்கதை பேசார்
பசுமரம் பார்த்தது உறுமுவ தில்லை."

தானே எழுந்து போனான் பார்த்திட
அகல்முற் றத்தே அடிவைத் தேகினன்
வருகடை எல்லை வயல்வரை சென்றான்
தூரக் களஞ்சியத் தொடர்புறம் போனான்.

நாயின் வாய்முனை நனிநேர் நோக்கினான்
நாசி காட்டிய நேர்திசை பார்த்தான்
காற்று வீசிய மேட்டினைப் பார்த்தான்
பார்த்தான் பூர்ச்ச மரப்பணைக் குன்றம்
அவனும் இப்போ தறிந்தனன் உண்மை
நரைநிற நாய்ஏன் குரைத்தது என்று
நாட்டின் **சிறந்ததேன் உறுமிற் றென்று
சடைவால் என்ன சாற்றிய தென்று
சென்றது மிதந்தோர் சிவப்புப் படகு
காதலர் **குடாவின் கடலின் பக்கமாய்
வந்தது சறுக்கெழில் வண்டியங் கொன்று
தேன்சிந் திடுமச் செறிநிலப் பரப்பில்.

அவனே வடநிலத் தலைவனப் போது
வீட்டின் உள்ளே விரைந்தே சென்றான்
நடந்தே சென்றான் நற்கூ ரையின்கீழ்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அன்னியர் யாரோ அயல்வரு கின்றனர்
நீல நிறத்து நீள்கடற் பரப்பில்
பயணிக் கின்றனர் படரொளி வண்டியில்
தேன்சிந் திடுமச் செறிநிலப் பரப்பில்
பணைப்பெருங் கப்பலிற் பயணிக் கின்றனர்
காதலர் குடாவின் கடலின் பக்கம்."

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"அயற்சகு னங்களால் அறிவது எங்ஙனம்
வந்திடும் அன்னிய மனிதரைப் பற்றி?
ஓ,என் சிறிய ஒளிரிளம் பெண்ணே!
**பேரிச் சுள்ளியை பெருநெருப் பேயிடு

தேர்ந்தெடு விறகைத் தீயிலே போடு
அதிலே உதிரம் அதுஊற் றெடுத்தால்
போர்ஒன் றப்போ(து) பொரவரு கின்றது
அல்லாம லேநீர் அங்கூற் றெடுத்தால்
எப்போ தும்யாம் இருப்போம் அமைதியில்."

வடபுலச் சிறிய வடிவிளம் பெண்ணாள்
பணிவு மிகுமப் பணிப்பெண் ணவளே
பேரிச் சுள்ளியை பெருநெருப் பிட்டாள்
தேர்ந்த விறகைத் தீயிலே போட்டாள்;
இரத்தம் கசியவே யில்லை யதிலே
இல்லைத் தண்ணீர் இரத்தமும் இல்லை
தேன்ஊ றிற்று தெளிந்ததி லிருந்து
அதிலே யிருந்துதேன் அங்குசொட் டிற்று.

மூலையில் இருந்தொரு முதியவள் சொன்னாள்
போர்வையி னுள்ளொரு பொருமுது கிழவி:
"விறகி லிருந்துதேன் வெளிப்படல் என்றால்
தொடர்ந்ததி லிருந்துதேன் சொட்டுவ தென்றால்
வந்துகொண் டிருக்குமவ் வந்நிய ரெல்லாம்
மாபெரும் திருமண மாந்தர்தம் குழுவாம்."

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
வடபுலக் கிழவி வடபுலப் பெண்ணாள்
வந்தாள் விரைந்து வழுவிநல் முற்றம்
தோட்ட வெளியின் தொடர்வெளி நடந்தாள்
பரவையை நோக்கிப் பார்வையைச் செலுத்தினள்
செங்கதி ரோன்கீழ் சென்னியைத் திருப்பினள்;
அங்கே வருவதை அவளே கண்டாள்
வந்தது மிதந்தோர் வன்புதுக் கப்பல்
வந்தது பலகைநூ றமைந்தவன் கப்பல்
காதலர் குடாவின் கடலின் பக்கம்;
கப்பல்நீல் நிறமாய்க் கவினோ டொளிர்ந்தது
சிவப்பாய்க் கப்பலின் செறிபுற மிருந்து
பின்னணி யத்தொரு பெருஞ்சீர் மனிதன்
சுடர்செப் பமைந்த துடுப்போ டிருந்தான்;
ஒருபொலிக் குதிரை ஓடலைக் கண்டனள்
ஒருசெவ் வண்டி உடன்வரல் கண்டனள்
வளரொளிச் சறுக்கு வண்டியும் விரைந்தது
தேன்சிந் தும்புதர்த் திடலதன் மேலே
ஆறு குயில்கள் அதிலே இருந்தன
ஏர்க்கால் மேலே இருந்து ஒலித்தன,
நீலப் பறவைகள் ஏழிசை நிகர்மணி
பாதை வழியிலே பாடியே வந்தன,
பின்புற மிருந்தவன் பெருவலி மனிதன்,
கடிவ(ா)ளம் பிடித்தோன் கவின்சீர் நாயகன்.

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"உனக்கு யாரோ டுடன்செல விருப்பம்

அவர்கள் உன்னை அடையவந் திட்டால்
வாழ்நாள் முழுதும் வதியுமோர் நண்பனாய்
கையின் அணைப்பிலே காணுமோர் கோழியாய்?

பயணம் கப்பலில் படர்வோன் எவனெனில்
வருசெங் கப்பலில் வருபவன் யாரெனில்
காதலர் குடாவின் கடலின் பக்கம்
முதிய வைனா மொயினன் அவன்தான்
கப்பலில் பொருளுடன் கடிதே வருகிறான்
செறிகப் பற்தளம் திரவியம் உள்ளது.

வண்டியில் சறுக்கி வருபவன் எவனெனில்
மிகவொளிர் வண்டியில் விரைபவன் யாரெனில்
தேன்சிந் தும்புற் றிடரின் பக்கம்
கொல்லன்இல் மரினன் குறுகுவோன் அவனே
வருகிறான் வெறும்பொய் வயமாய்க் கொண்டே
வண்டி நிறைய மந்திரம் உள்ளது.

வீட்டினுள் அவர்கள் வந்து நுழைந்ததும்
குடுவை ஒன்றிலே கொண்டுவா நறுந்தேன்
சற்றே கைப்பிடி இரண்டுள சாடியில்
குடுவையை அவனது கையிலே கொடுப்பாய்
மணக்கநீ விரும்பும் மனிதனின் கையில்
வழங்குவாய் முதிய வைனோநா டற்கு
கொள்பொருள் கப்பலில் கொணருவோ னுக்கு
திரவியம் கப்பல் தளம்திகழ் பவற்கு."

அப்போ(து) வடநாட் டழகிய மங்கை
இவ்விதம் அவளால் இயம்ப முடிந்தது:
"எனைச்சுமந் தவளே, ஓ,என் அம்மா!
எனைவளர்த் தவளே, ஓ,என் அன்னாய்!
வருசெல் வந்தனை மணப்பதற் கில்லை
உயர்மா னிடஅறி வொருபொரு ளல்ல
இனிநான் மணப்பது எழில்நுத லுடையோன்
அங்கம் முழுவதும் அழகு படைத்தோன்;
இதுநாள் வரையில் ஏந்திழை யாரையும்
வியன்பொரு ளுக்காய் விற்றதே இல்லை
மங்கையைத் தானமாய் வழங்குதல் நல்லது
இகல்நற் கொல்லன் இல்மரி னனுக்கு
சம்போ எனுமோர் சாதனம் செய்து
திகழொளி மூடியும் செய்தவ னுக்கு."

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"பிள்ளையே, ஓகோ, பெருமறிக் குட்டியே!
கொல்லன்இல் மரினனைக் கோரிநீ மணந்து
நிதம்வியர் வையுடை நெற்றியைப் பேணி
வியன்கொல் லன்னவன் மேலுடை தோய்த்து
தனிக்கொல் லன்னவன் தலையையும் கழுவுவாய்."

பாவையப் போது பதிலாய்ச் சொன்னாள்

உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"வைனோ முதியனை மணப்பதற் கில்லை
பழுத்த கிழவனைப் பராமரித் தற்காய்,
வயோதிபன் மூலம் வருந்தொந் தரவே
சலிப்பே வயோதிபன் தன்னால் கிடைக்கும்."

முதிய வைனா மொயினனப் போது
முதலாம் ஆளாய் முன்வந் தடைந்தான்
சிவப்புக் கப்பலைச் செலுத்தியே வந்தான்
கடலிலே நீலக் கப்பலில் வந்தான்
உருக்கின் உருளைப் பரப்புமேல் வந்தான்
செப்புத் துறைமுகம் சேர்ந்தான் வந்தே;
கதவுகள் தள்ளி கருத்தாய்த் திறந்தான்
நடந்தே சென்றான் நற்கூ ரையின்கீழ்
தரையிலே நின்று சாற்றிட லானான்
தனிக்கத வருகில் தம்பத் தின்கீழ்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"நேரிழாய், என்னுடன் நீவரு வாயா
என்றுமே எனது இன்சினே கிதியாய்
வாழ்வின் துணையாய் வதியஎன் முழங்கால்
என்கை யணைப்பில் இருக்கக் கோழியாய்?"

அப்போ(து) வடநாட் டழகிய மங்கை
இவ்விதம் தானே இயம்பிட லானாள்:
"சிறியதோர் படகு செய்து முடிந்ததா
கவின்பெருங் கப்பல் கட்டி முடிந்ததா
என்தறி மரத்தில் சிந்திய துளிகளில்
தறியின் சட்டத் தம்துண் டுகளில்?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்
உரைத்தே அவன்தான் உரைசெய லாயினன்:
"சிறந்ததோர் கப்பலைச் செய்து முடித்தேன்
அரும்தரப் படகினை அமைத்து முடித்தேன்
கனபல மாயது காற்றிலும் இருக்கும்
திகழ்ருது நிலையிலும் திரமாய் நிற்கும்
சவாரி செய்திடத் தவழ்அலை யூடாய்
நெடிய கடலதன் நீரிலே செல்ல;
துள்ளி எழும்அது தோன்றும் குமிழிபோல்
வழுக்கிச் சென்றிடும் வன்நீ ராம்பல்போல்
வடபால் நாட்டு வளர்நீர்ப் பரப்பில்
நுரைத்தே எறியும் நுண்ணலை களின்மேல்."

அப்போ(து) வடநாட் டழகிய மங்கை
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"புகழ்வதே யிலைநான் இகல்கடல் மனிதனை
நளிர்அலைப் படரும் நாயகன் தன்னை
காற்று மனதைக் கடற்திசை திருப்பும்
குளிர்கால் மூளையைக் கொடிதே தாக்கும்;
தொடும்அத னாலுனைத் தொடர்வதற் கில்லை

உன்னோடு நானும் உறவரு தற்கிலை
என்றுமே உனது இன்சினே கிதியாய்
உனதுகை யணைப்பில் உறையக் கோழியாய்
உன்படுக் கையினை உதறிப் போட்டிட
தலையணை களையே தாமொழுங் கமைக்க."

(end of part Ib covering first 18 verses)